# அகழ்

https://akazhonline.com நவம்பர் – டிசம்பர் 2020



# அகழ்

அகழ்

aathiraipub@gmail.com

**மின்னூல் வெளியீடு :**

**http://FreeTamilEbooks.com**

உரிமை - CC-BY-SA-NC கிரியேடிவ் காமென்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/akazh_2

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guru-leninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்

1. எங்களுக்கு எதிராக அவர்கள்: ரதன் . 9
2. விதி சமைப்பவர்கள்தான் இலக்கியத்தில் இயங்க முடியும்: காலம் செல்வம் அருளானந்தம் . . . . 24
3. கதையாக மாறும் காலம் – செல்வம் அருளானந்தத்தின் நூல்களை முன்வைத்து: சுரேஷ் பிரதீப் . . . . . . . 131
4. ‘மலைகளை வரையும்’ ஆர்வத்துடன், ‘மலைகளை பேசவிடுங்கள்’ எனும் குரலாக ஒலிக்கிறது: ‘மல்லியப்பு சந்தி’: அசுரா நாதன் . . . . . . . . . . 148
5. தேவிபாரதி! ஒரு வாசக பார்வை: தி.ஜினுராஜ் . . . . . . . . . . . . . . . 232
6. நம்பிக்கையும் அழிவும்: அகில் குமாரசாமி அவர்களுடன் ஓர் உரையாடல் . . . . . . . . . . . . . . . 246
7. நாயும் நானும்: க.கலாமோகன் . . . . . . 271

8. பின்வாங்குதல்: சரத் விஜேசூரிய . . . 294
9. வெனில்லா: உமா மகேஸ்வரி . . . . . . 325
10. ‘தித்த கஹட்ட’ – தோட்டத் தொழிலாளர் வாழ்வில் ஒரு முன்னுரை: கே. சுனில்ஷாந்த . . . . . . . . . . . . . . 345
11. சிங்கள மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் சின்த்தா லக்ஷ்மி: பிரியதர்ஷினி சிவராஜா . . . . . . . . . . 363
12. பாரம்பரிய இஸ்லாம்! தூய்மைவாத அரபுப் பண்பாட்டுமயமாக்கலுக்கான எதிர்க்கருத்தியல்: ஜிஃப்ரி ஹாசன் . . 383
கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . 423

# 1. எங்களுக்கு எதிராக அவர்கள்: ரதன்

நவம்பர்/ டிசம்பர் 2020/பனுவல்கள்

BY ரதன்

1963 நவம்பர் 22ம் நாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்.எப்.கெனடி படுகொலை செய்யப்பட்டார். இவரது படுகொலைக்கான காரணங்களையும், வழக்கையும் ஆய்வு செய்கின்றது ஒலிவர் ஸ்ரோனின் JFK திரைப்படம். திரைக்கதையை எழுத முன்னர் பல ஆய்வுகளை ஒலிவர் ஸ்ரோன் மேற்கொண்டார். திரைப்படம் ஜிம் ஹறிசனின் நூலை(On the Trail of the Assassins) மையமாகக் கொண்டிருந்தாலும், ஒலிவர் Zachary Sklar உடன் இணைந்து திரைக் கதையை அமைத்திருந்தார். Zachary

Sklar ஒரு ஊடகவியலாளர். கொலம்பியா பல்கலைக் கழகத்தில் ஊடகவியல் பேராசிரியர். கொலை செய்யப்பட்ட ரெக்ஸாஸ் மாநில பத்திரிகைகளிலிருந்தும், அன்றைய காலத்தில் வெளியான சிறு செயதிகளிலிருந்தும், அதன் பின் வெளியான பல ஆய்வுகளிலிருந்தும் பெறப்பட்ட தகவல்களையும் இணைத்தே திரைக் கதை அமைக்கப்பட்டது. வேறு பல உளவு அதிகாரிகளும் படத் தயாரிப்பின்போது ஆலோசகர்களாக கடமையாற்றினார்கள். இப் படம் Costa-Gavrasன் Z திரைப்பட வடிவத்தைக் கொண்டுள்ளது. இதனை ஒலிவர் ஸ்ரோனே ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.


ஒரு சரித்திரச் சம்பவத்தை படமாக்கும் பொழுது, மிகவும் அவதானத்துடன் உண்மைகளை ஆய்வு செய்து படமாக்குகின்றார்கள். ஆனால் சரித்திரச்

சம்பவங்கள் அரசியல் நோக்கத்துக்காக படைப்புக்களாக வெளிவரும் பொழுது, அவற்றின் உண்மைத் தன்மை உடைக்கப்பட்டு, ஒரு பொய்யான பிம்பமே பார்வையாளர்கள் முன் வெளிப்படுத்தப்படுகின்றது.

ஒலிவர் ஸ்ரோனின் படைப்புக்கள் தயாரிக்கப்படும் ஹொலிவூட்டிலிருந்து மற்றொரு அரசியல் இயக்குனரான ஸ்ரீபன் ஸ்பில்பேர்க்னது திரைப்படங்களும் தயாரிக்கப்படுகின்றன. 1972 மியுனிச் ஒலிம்பிக் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பாலஸ்தீனிய தீவிரவாதிகள் 11 இஸ்ரேலிய ஒலிம்பிக் வீரர்களை கடத்திக் கொலைசெய்கின்றனர். இதனை மையமாகக் கொண்டு மியுனிச் என்ற திரைப்படத்தை ஸ்பில்பேர்க் இயக்கியிருந்தார். 2005ம் ஆண்டு இப் படம் வெளியாகியிருந்தது. உண்மையில் இப் படம் போரின் அகத்திலும், புறத்திலும்

நடைபெறும் பல நுண்ணிய சம்பவங்களை பதிவு செய்திருந்தது. ஹங்கேரியில் பிறந்த கனடிய ஊடகவியலாளரான George Jonasன் Vengeance நூலை மையமாகக் கொண்டே திரைக்கதை அமைக்கப்பட்டது. ஆனாலும் இன்று வரை படத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தரவுகள் பற்றிய எதிர்க்கருத்துக்கள், நம்பகத்தன்மை என்பன ஊடகங்களில் முன்வைக்கப்படுகின்றன.

வியட்நாம் போரின் பின்னர் அமெரிக்கா தனது தோல்வியை மறைக்க ஹொலிவூட்டை நாடியது. அதன் விளைவு ரம்போ போன்ற பல சாகசப் படங்கள் வெளியாகின. இருப்பினும் அதே ஹொலிவூட்டிலிருந்து பல போரை விமர்சிக்கும் தன்மை கொண்ட படங்களும் வெளியாகின. இலங்கையில் கூட போரின் போதும், பின்னரும் பிரசன்னா விதானகே போன்றோரின் படைப்புக்கள் போரினை


ON THE TRA
OF THE
ASSASSIN
ONE MAN'S QUEST TO SOLV
MURDER OF PRESIDENT KEN

...

சீர்தூக்கி பார்த்தன.

பாலஸ்தீனிய-இஸ்ரேல் போரின் போது அவ்வாறான நிலை இருந்ததா? குறிப்பாக இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட இஸ்ரேலிய படங்கள் பாலஸ்தீனியரை அவர்களது போராட்டத்தை எவ்வாறு சித்தரித்தது.

இஸ்ரேலிய இயக்குனர்கள் மத்திய கிழக்கைப் பற்றிய பல படங்களை இயக்கியுள்ளனர். இவையனைத்தும் இஸ்ரேலின் இருப்பினையும், அமெரிக்காவின் ஏகாதிப்பத்தியத்தையும் உறுதிப்படுத்தும் படங்கள். மத்திய கிழக்கு முஸ்லீம் தீவிரவாதிகளை பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்படுபவை. அதுவும் மிக மோசமான அராஜகவாதிகளாக சித்தரிப்பவை. தீவிரவாதிகளை அவர்களது உடல் மொழியினாலும், குரலினாலும் மேலும் மோசமானவர்களாக பிரதிபலிக்கப்பட்டார்கள்.

குறிப்பாக மூன்று இஸ்ரேலிய இயக்குனர்களின் படங்கள் முக்கியமானவை. 1982ம் ஆண்டு யூன் 6ம் நாள் முதல் நாள் யுத்தத்தின் போது நடைபெற்ற சம்பவகளில் இருந்து நகர்ந்து செல்லும் படம் லெபனான். சர்வதேசிய விருதுகள் பலவற்றை இப் படம் பெற்றது. 2009ம் ஆண்டு சத்யஜித் ரே விருதையும் இப் படம் பெற்றிருந்தது. இயக்கம் Shamuel Maoz(2007). Ari Folman 2008 ல் வெளியான படம் Waltz with Bashir. 1982 புரட்டாதி 16-18 நடைபெற்ற Sabra and Shatila massacre படுகொலைகளை மையமாகக் கொண்டது. இது இஸ்ரேலின் மன்னிக்க முடியாத ஒரு சர்வதேச குற்றச் செயல். சுமார் 3500 பேரளவில் கொல்லப்பட்டனர். இஸ்ரேலின் குற்றச் செயலை குறைக்கும் முயற்சியே இப் படம். இது ஒரு அனிமேசன் படம். 2008ம் ஆண்டு கான் சர்வதேச

திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இப் படம் பல சர்வதேச விருதுகளைப் பெற்றது தெற்கு லெபனானிலிருந்து இஸ்ரேல் 2000ம் ஆண்டு வெளியேற முன்னர் நடைபெற்ற சம்பவங்களை மையமாகக் கொண்டது Joseph Cedar இயக்கி 2007ல் வெளியான Beaufort . Beaufort ஒரு கோட்டை.

இம் மூன்று படங்களும் 2006 இரண்டாவது லெபனான் போரின் பின்னர் வெளியாகியிருந்தன. திட்டமிட்ட முறையில் இம் மூன்று படங்களும் பல பொதுத் தன்மைகளைக் கொண்டிருந்தன. இஸ்ரேலிய இராணுவ வீரர்களை நல்லவர்களாகவும், இஸ்ரேலிய இராணுவம் ஒரு மக்கள் இராணுவமாகவும் வெளிப்படுத்தின. மிக முக்கியமாக மத்திய கிழக்கின் பொருளாதாரத்தை ஓரளவிற்கு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த ஐரோப்பிய

நிறுவனங்களின் வீழ்ச்சியையும், அதி தீவிர முஸ்லீம் முகவர்கள் மேலோங்கி வருவதாகவும் காட்டியுள்ளன. லெபனானில் உள்ள கிறிஸதவ தீவிரவாதிகளுக்கும், இஸ்ரேலுக்குமான நெருக்கத்தை நிராகரித்து, கிறிஸ்தவ தீவிரவாதிகளை நல்லவர்களாகவும் வெளிப்படுத்தின.

US AGAINST THEM என்றதனை இப் படங்கள் முழுமையாகச் சித்தரித்தன. இதன் அடிப்படைச் சிந்தாந்தங்களை மிக விரிவாகப் பார்த்தால், “நாங்கள்” என்பது எவ்வாறு உருவகப்படுத்தப்படுகின்றது என்பது முக்கியம். நாங்கள் என்பது திரைப்படத்தைப் பார்க்கும் பார்வையாளர்களால் அவர்களாக உணரப்படுகின்றது. அதற்கு ஏற்ப காட்சிகள் அமைக்கப்படுகின்றன. அதே சமயம் நாங்கள் என்பது இஸ்ரேலிய போர் வீரர்களாகவும் பதிவு செய்யப்படுகின்றது.

நாங்கள் என்பது இஸ்ரேலிய சமூகமாகவும் வெளிப்படுகின்றது. நாங்கள் என்பது இஸ்ரேலிய அரசாகவும் உள்ளது. இஸ்ரேலிய வீரர்கள் மிகவும் இக் கட்டான சூழலில் உள்ளனர். மிகவும் கடினமான பிரதேசத்தில், எதிரிகளால் சூழப்பட்டு பயத்துடனும், தனிமையுடனும், குழப்பத்துடனும் “நாங்கள்”எனப்படும் எங்களைக் காப்பாற்ற போராடுகின்றார்கள். அவர்கள் நல்லவர்கள். உறுதிபடைத்தவர்கள். எதிரியின் மக்களையும் காப்பாற்றுபவர்கள். இவை போன்ற பிம்பங்கள் உருவாக்கப்படுகின்றன. இவற்றிற்கு பல்வேறு வகையான உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. Close-up of faces, sequences in slow motion, flash back sequences போன்றவற்றுடன் சோகமான பிண்ணனி இசை, போர்வீரர்களின் சோகமான முகம், குழப்பத்தை வெளிப்படுத்தும் உடல்

மொழி போன்றனவும் “நாங்கள்”என்பததை மேலும் தீவிரப்படுத்துகின்றது. “நாங்கள்” என்பதன் மூலமாக பார்வையாளர் ஒரு அரசபற்றுள்ளவராக ஒழுங்கமைக்கப்படுகின்றார்.

எதிரி என்பவர் ஒரு முரடான, மிக மோசமான பயங்கரவாதி. ஏதிரி என்பவர் துப்பாக்கியுடன் போரிடுபவர். அங்கு அவரது சமூகம் பிரதிநிதிப்படுத்தப்படாது. அதே சமயம் “அவர்கள் எங்களுக்கு எதிராக போரிடுகினடறார்கள்” என்பதே பதியப்படுகின்றது. “நாங்கள் அவர்களுக்கு எதிராக போரிடுகின்றோம்” என்பது வெளிப்படுத்தப்படாது. இம் மூன்று படங்களிலும் இத் தன்மையைத் தெளிவாகக் காணலாம். இத் பெரும்பாலான ஹொலிவூட் போரைப் பற்றிய படங்களில் காணலாம்.

ஹொலிவூட்டுக்கும், இஸ்ரேலுக்கும்

வெளியே வெளியான படங்களும், இஸ்ரேலின் இருப்பை உறுதிப்படுத்தின. . Circle of Deceit (1981) ஜேர்மனிய இயக்குனர் Volker Schl□ndorff ன் படம். இப் படம் ஒரு ஜேர்மனிய பத்திரிகையாளர், லெபனானில் தங்கியிருந்து ஜேர்மனிய பத்திரிகைக்கு செய்திகள், கள நிலவரங்கள் பற்றி எழுதிக்கொண்டிருந்தார். இவர் அறமற்றவராக மாறி ஒருவரை கொலை செய்தமைக்கு, வன்முறைகள் நிறைந்த லெபனான் சூழலே காரணம் என இப் படம் குற்றஞ்சாட்டுகின்றது.

பிரெஞ்ச் கனடியரான Denis Villeneuveன் இயக்கத்தில் வெளிவந்த Incendies லெபானின் உள்நாட்டு யுத்தத்தை மையமாகக் கொண்டது. இப் படம் முஸ்லீம் தீவிரவாதிகளை அதிகளவு விமர்சித்த போதும், கிறிஸ்தவ தீவிரவாதிகளின் வன்முறைகளையும் பதிவாக்கியுள்ளது. இப் படத்தில் உள்ள

பல சம்பவங்கள், ஈழப் போரில் நடைபெற்ற பல சம்பவங்களை ஒத்துள்ளது. இப் படம் ஹொலிவூட்டுக்கு வெளியே கியுபெக் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது. இப் படம் மொன்றியலிலும், லெபானானிலும் படமாக்கப்பட்டுள்ளது. லெபனானைப் பற்றி வெளிவந்த படங்களில் குறிப்பிடத்தக் படம். எனினும் இப் படமும் ஒரு நடுநிலையாக லெபனான் யுத்தத்தை அணுகியது எனக் கூற முடியாது.

லெபனானிலும், மத்திய கிழக்கிலும் முஸ்லீம் தீவிரவாதிகளை தமது திரைப்படங்களினூடாக, சர்வதேச உலகில் வெறுப்படையச் செய்வதில் ஹொலிவூட்டும், ஐரோப்பிய திரைமையமும் வெற்றி பெற்றன. இப் படங்கள் இஸ்ரேலின் உருவாக்கத்தையும், பாலஸ்தீனதினை பயங்கரவாத நாடாகவும் மேலும் சித்தரித்தன. அமெரிக்காவை உலகின்

மிகச் சிறந்த மனிதாபிமான நாடாகவும், அமெரிக்க இராணுவத்தை மிகச் சிறந்த மனிதத்தை கொண்ட இராணுவமாகவும் சித்தரித்தன. இதன் மூலம் மேற்கின் ஏகாதிபத்தியத்தை உறுதிப்படுத்தின.

ஒலிவர் ஸ்ரோனின் போரைப் பற்றிய படங்கள் ஹொலிவூட் படங்களிலிருந்தும், மேற்கூறிய இஸ்ரேலிய சார்புப் படங்களிலிருந்தும் மாறுபடுகின்றன. வீரியமிக்க உணர்வின் அடித்தளத்தில் இருந்து வெளிப்படும் மனஉளைச்சல்களை இவரது படங்களில் காணலாம். இந்த மனஉளைச்சல்கள் சமூகப் பார்வையில் ஒரு கிளர்ச்சியற்ற துயரங்கள் போன்றுள்ளது. பார்வையாளர்களின் முகங்களை இவரது படங்களில் காணலாம். தொடர்ச்சியான இடைவெளியில் ஏற்படும் துயரங்களின் பல்லவியாக அல்லது இறுதிப் பாடலாக

உள்ளன இவரது படைப்புக்கள். இறுதிப் பாடலாக உள்ளதையும் இவரது படங்கள் கட்டுடைக்கின்றன. இவர் கட்டுடைப்பது போர்வீரர்களையல்ல. அவர்களை உருவாக்கிய அரசினையே கட்டுடைக்கின்றார். மாறாக இஸ்ரேலிய படங்கள் போர்வீரர்களின் துயரப் பாடலினூடாக அரசினை நல் அரசாக மாற்றிவிடுகின்றன.

போரினை மையமாக வைத்து வெளிவரும் திரைப்படங்கள் அனைத்தும் கட்டுடைக்கப்பட்டு அவை முன்வைக்கும் தவறான கருதுகோள்கள் விமர்சிக்கப்படவேண்டும்

## 2. விதி சமைப்பவர்கள்தான் இலக்கியத்தில் இயங்க முடியும்: காலம் செல்வம் அருளானந்தம்

நவம்பர்/ டிசம்பர் 2020/நேர்காணல்

நேர்கண்டவர்: அனோஜன் பாலகிருஷ்ணன்

BY அனோஜன் பாலகிருஷ்ணன்

**இந்த நேர்காணலுக்கு என்னைத் தெரிவு செய்ததற்கு முதலில் நன்றி.**

**தமிழில் எவ்வளவோ பெரிய ஆளுமைகள் இருக்க பிரியோசனமோ உறுதியான அரசியல் கருத்துகளோ இல்லாமல், தனிய இலக்கியத்தின் பக்கமாய் இருக்கும் என்னை ஏன் தெரிவு செய்தீர்கள் என்று**

தெரியவில்லை. சிலவேளை உடனடியாக யாரும் கிடைக்கவில்லையோ, அல்லது பேட்டி தருகிறோம் என்று சொன்ன யாராவது கடைசி நேரத்தில் தரமாட்டோம் என்றுவிட்டார்களோ தெரியவில்லை. ஏனென்றால் என்னுடைய பெயர் தீவிர இலக்கிய செயற்பாட்டாளர்கள் மத்தியில்தான் ஓர் அளவுக்கு அறியப்பட்டிருக்கிறது. வீட்டில்கூட இதை பெரிதாக யாரும் நம்பமாட்டார்கள்.

அம்மா உயிருடன் இருக்கும்போது யாரோ “காலம் செல்வம் இருக்கிறாரா?” என்று தொலைபேசியில் கேட்டிருக்கிறார்கள். அதற்கு அம்மா, “அப்படியாரும் இல்லை” என்று சொன்னார். நான் ஓடிவந்து அது என்னைத்தான் என்று சொல்லி தொலைபேசியை வேண்ட “அது என்னடா கண்டறியாத காலம் செல்வம்” என்று

சொன்னது நினைவில் வருகிறது.

என்னுடைய இலக்கிய செயல்பாடுகள் தொடக்கி முப்பது முப்பதைந்து வருடங்கள் ஆகிற்று. ஆனால், இங்கை கனடாவில் ஒளி,ஒலி பரப்பு ஊடங்களுக்கு ஒரு இலக்கிய செயல்பாட்டு அறிவித்தலை அறிவிக்க முடியுமா என்று அழைக்கும்போது யாரோ புது ஆள் ஏதோ புதுசா செய்யப்போகிறார் என்றுதான் இப்போதும் நினைப்பார்கள்.

முப்பது வருடங்களுக்கு மேலான தொடர் இலக்கிய ஓட்டத்தினால், ஈழம் தமிழ்நாடு, புலம்பெயர் தேசங்களில் வாழும் தீவீர இலக்கிய ஆட்களுக்கு என் பெயர் அறிமுகமானதுதான். என்னுடைய பதில்கள் பெரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக எண்ணவில்லை. உங்கள் இதழ் வாசகர்களும் என்னைக் கொஞ்சம் அறிவார்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள்.

நீங்கள் கேள்வி கேட்க முதல் ஊரிலை நடந்த சின்ன படிகியை சொல்லி ஆரம்பிக்கலாம் என எண்ணுகிறேன். என் நண்பன் ஒருவன் ஊடகங்களைப் பற்றி பேசும்போது அதிகாரங்களை நக்கலடிக்கச் சொன்ன கதை இது.

தான் ஏழாம் வகுப்பில் பூமி சாத்திரம் படிக்கும்போது, பூமி சாத்திர புத்தகத்தில் வடமாகாண வரைபடம் இருந்தது. அதில், யாழ்ப்பாணத்தின் பெயர் இருக்கு, பருத்துத்துறை இருக்கு, சங்கானை இருக்கு, ஆனால் யாழ்ப்பாணத்திற்கு அடுத்த பெரிய நகரான நெல்லியடி இல்லை. ஆனால் அதற்கு பக்கத்தில் இருக்கும் சின்ன கிராமமான துன்னாலை இருக்கு. ஒருநாள் துணிந்து பூமி சாத்திர ஆசிரியரிடம் படத்தைக்காட்டி துன்னாலையை போட்டிருக்கு. ஏன் நெல்லியடியை போடவில்லை என்று

**கேட்டபோது, ஆசிரியர் சிரித்துக்கொண்டு, அங்கை கல்வி இலாகாவில் ஒரு துன்னாலையான் பெரிய இடத்தில்லை இருக்கிறான். அவன்ரை விளையாட்டு தான் இது என்றாராம்.**

**அப்படிதான் கருத்துகளும் விமர்சனங்களும்; உண்மையோ பொய்யோ யார் சொல்கினமோ அவர்கள் பக்கச்சார்புடனே வெளிவரும். சரி கேக்கிறதை கேளுங்க. இனி உங்கபாடு, வாசிக்கிறவர்கள் பாடு.**

காலம் செல்வம் அருளானந்தம் அவர்களுடனான இந்த நேர்காணல் தொலைபேசி வழியாக உரையாடிப் பெறப்பட்டது.

செல்வம் அருளானந்தம்

**பகிடி உங்களது எழுத்துகளில் மட்டுமல்ல**


Rashmy20

**உங்களது பேச்சிலும் உள்ளது. துயரம் நிறைந்த அகதிவாழ்க்கை இதனைக் கற்றுத் தந்ததா? அல்லது இளம் பருவத்திலிருந்து உங்களோடு வருவதா? இதிலிருந்து நேர்காணலை ஆரம்பிப்போம்.**

அது இயல்பானது என்று தான் நான் நினைக்கின்றேன். நான் ஒரு இடத்திலும் கற்றுக்கொள்ளவில்லை. அப்படி கதைக்கிற ஆட்களும் மிகக் குறைவு. எவ்வளவு பிரச்சினையான விடயத்தையும், எவ்வளவு துயரமான விடயத்தையும் கொஞ்சம் நகைச்சுவையாகச் சொன்னால் நல்லது என்று தோன்றுவதுண்டு. ஆனால், என்னுடைய இயல்பாகவே நான் பெரிய நகைச்சுவையாளன் என்று சொல்ல வரவில்லை. எந்த ஒரு விடயத்தையும் நகைச்சுவையாக சொல்லக்கூடிய ஆட்களுடன் எனக்கு விருப்பம் ஏற்படுகிறது. எனக்கும்

அந்த உணர்வு இருக்கின்றதால்தான் அப்படியான ஆட்களுடன் சேர்ந்து நட்பாக இருக்கிறேன். சிறு வயதில் பார்க்கின்ற விடயங்களை அம்மாவுக்கும் அன்ரிமார்களுக்கும் நடித்துக் காட்டுவேன்.

அண்மையில் இறந்து போன திருநாவுக்கரசு என்ற நண்பர் இளம்வயதில் என்னுடன் சிநேகிதமாக இருந்தார். அவர் எந்த விடயத்தையும் சிரிப்பாகத் தான் சொல்லுவார். நான் பாரிஸ் வந்தவுடன் அவரும் பாரிஸ் வந்துவிட்டார். பாரிஸிலும் அவருடன் தொடர்பில் இருந்தேன். ஒரு முறை 1983 கலவரத்தில் அவருடைய வீடு எல்லாம் எரிந்து விட்டது என்ற செய்தி அவருக்கு வந்தது. மிகவும் கவலையுடன் வெளிக்கிட்டு என்னிடம் வந்தார். என் அறைக்கு வெளியே வீதியோரமாக இருந்த வாங்கில் துயரத்துடன் அமர்ந்திருந்தார். “அது

பொய்க் கதையாக இருக்கும் அண்ணை, கொக்குவிலில் உங்களுடைய ஒரு வீட்டை மட்டும் இராணுவத்தினர் எரித்தவர்காளா?” என்று நான் சொல்லிக்கொண்டிருக்கையில் ஒரு பெண் மார்பு குலுங்க ஓடி வந்தார். நான் அவரை விட்டுவிட்டு அந்தப் பெண்ணைப் பார்த்தேன். அவரும் அதைப்பார்த்தார். “எவ்வளவு துன்பம் இருந்தாலும், உதொண்டு தானடா இன்றும் உயிரோடை இருக்கவேணும் என்று ஆசையை தருகிறது” என்றார். அப்படியான ஆட்களுடன் தான் எனக்கு சிநேகிதம் வந்தது.

**பகிடிக்கும் சுய பகிடிக்கும் இடையிலான வித்தியாசத்தை பிரக்ஞை பூர்வமாக எப்படி கையாள்கிறீர்கள்?**

திட்டமிட்டு செய்வதில்லை. திட்டமிட்டால் அது பிழைக்கும். சாதுவாக இன்னொருவரை புண்படுத்தக்கூடாது என்ற திட்டமிடல்

இருக்கும். எழுந்தமானமாக இன்னொருவரை புண்படுத்தக் கூடாது என்று அடிப்படை கொள்கை உண்டு. அப்படி இருந்தும் சில சமயங்களில் வாய் தடுமாறி வந்து விடும்.

ஒரு அக்கா தம்பியைப் பற்றி சொல்லும் போது ‘முந்தி இவன் சரியான கறுப்பு. இப்போது வெளிநாடு வந்த பின்னர் நல்ல நிறமாக இருக்கின்றான் என்று சொல்லும்போது, இதை விட எவ்வாறு கறுப்பாக இருப்பது’ என்று கேட்டுவிட்டேன். அவர் சிரித்துவிட்டார். ஆனாலும், இது அவரை புண்படுத்தியிருக்கும். இவற்றில் இன்னும் கவனமாக இருக்கவேண்டும்.

நாங்கள் எங்களை பகிடி பண்ணலாம். இன்னொருவரை பகிடி பண்ணி விட்டால் அவர்களுக்கு இவர் தங்களை நக்கலடிக்கின்றார் என்று வன்மமாக மாறிவிடலாம். இன்னொருவரை புண்படுத்தக்

கூடாது, மனம் நோகப்பண்ணக் கூடாது என்பதில் நான் மிகவும் கவனமாக இருக்கின்றேன். மற்றும்படி பகிடி இயல்பாக வரவேண்டும். திட்டமிட்டு வருவதில்லை.

“சிரிப்பு அனைத்து தத்துவங்களையும் விடப் பெரியது. ஒருவன் வாழ்க்கையைப் பற்றி நினைத்து சிரிக்கிறானோ, அப்போது அவன் வாழ்க்கையைப் புரிந்துகொள்கிறான். அதனால் யார் உண்மையிலேயே புரிந்துகொள்கிறானோ, அவன்தான் சிரிக்கிறான்” என்று ஓஷோ சொன்னார் என்று பின்னாலே கேள்விப்பட்டேன்.

**பாரீசில் இலக்கிய சகவாசம் எப்படி வந்தது?**

பாரிஸ் வந்து இரண்டு வருடங்கள் ஒன்றுமில்லை. கிட்டத்தட்ட 1982 ஆம் ஆண்டுக்கு பிறகு தான் நான் இலக்கியத்தில்

ஈடுபாடு கொண்டேன். அதுவரை வேலை தேடுவதில் கழிந்தது. இரவு வேலை கிடைத்ததால் பகல் முழுவதும் தூங்கினேன்.

எனது மனதோடு ஒத்த நண்பர்கள் கிடைக்கவில்லை. இரண்டு வருடங்களுக்கு பிறகு மெல்ல மெல்ல நட்புகள் கிடைக்கின்றன. ஒரு தடவை வேலை முடிந்து வரும்போது விமான நிலையத்தில் இலங்கை ஆளைப் போல் ஒருவர் வந்து “தமிழோ, இலங்கையோ?” என்று ஆங்கிலத்தில் கேட்டார். “ஓம்” என்றேன். ஒருவரை வரவேற்க வந்திருந்த அவர் இலங்கை தூதரகத்தில் கடவுச்சீட்டு அதிகாரியாக இருப்பவர். என்னிடம் சிறிய உதவியொன்று கேட்டார். நான் அவருக்கு ஒரு கோப்பி வாங்கி கொடுத்துவிட்டு அவரோடு கதைத்து விட்டு அவர் வரவேற்க வந்த ஆள் வரும் வரை நின்றேன். அவரிடம் தூதரகத்துக்கு வந்தால் பத்திரிகை

வாசிக்கலாமா என்று நானும் ஒரு உதவி கேட்டேன். இலங்கை தூதரகத்துக்கு வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி பத்திரிகைகள் வருவதாக நான் கேள்விப்பட்டிருந்தேன். அவர் அதற்கு சம்மதித்தார். அப்போது தான் நான் நீண்ட நாட்களுக்கு பிறகு விரகேசரி, தினகரனை கண்ணால் பார்த்தேன். இரண்டு வருடத்துக்கு பிறகு திரும்ப யாழ்ப்பாணத்துக்கு போனது போல் உணர்வு வந்தது.

தூதரகத்தில் ஒரு பிரச்சினையும் இருக்காது. ஆனால் அங்கு போனால் திரும்ப எங்களை பிடித்து திரும்ப ஊருக்கு அனுப்பி விடுவாங்கள் என்று பயப்படுத்தி வைத்திருந்தார்கள். கடவுச்சீட்டுக்கு கூட அங்கே போகக்கூடாது. இலங்கை தமிழர்கள் அகதியாக பிரான்ஸ் வந்துவிடக்கூடாது என பிரான்சிலுள்ள இலங்கை தூதுவர்

நினைக்கிறார். இத்தனைக்கும் அவரும் ஒரு தமிழர். இருந்தும் அந்த நண்பர் மூலமாக ரகசியமாக தூதரகம் சென்றேன். வெளியே நிற்க அவர் வந்து கூட்டிக்கொண்டு போவார். நான் வாசித்து விட்டு வருவேன். அது தான் பாரிஸ் வந்த பின் முதல் வாசிப்பு பழக்கம்.

அதற்கு பிறகு மெல்ல மெல்ல ஈரோஸ் அமைப்பினுடைய தொடர்பு கிடைத்தது. திம்பு பேச்சு வார்த்தைக்கு முதல் தமிழ் நாட்டில் ஈரோஸ், ஈபிஆர்எல்எப், புளோட், விடுதலைப் புலிகள் எல்லாம் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அதுதொடர்பாக பாரிஸில் ஓர் ஐக்கியம் ஏற்பட்டு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் ஐக்கியதை வலியுறுத்தி ஒரு நாடகம் செய்தோம். பெயர்களை எல்லாம் மறந்துவிட்டேன். இப்போது பாரிசில் புத்தகக்கடை வைத்திருக்கும் சிவதாஸ்

அதன் ஒருங்கினைப்பாளராய் இருந்தார். மனோ என்ற தோழர் அந்த நாடகத்தை எழுதியவர். சிவந்த போர்வை போர்த்தியபடி மார்க்ஸ் வந்து சிதறிப்போய் விழுந்து கிடக்கும் தொழிலாளர்களை எழுப்பி ஒன்றிணைக்கிற மாதிரி என்னவோ! இப்போது சிரிப்பாக இருக்கு, அப்போ அது பேசப்பட்டது.

அந்த நாடகம் முடிய ஒருவர் எனக்காக காத்துக் கொண்டு நின்றார். யார் என்று கேட்டால், தன்னுடைய பெயர் கலாமோகன் என்றும், தான் தினபதியில் வேலை செய்தவர் என்று சொன்னார். அவர் பாரிசுக்கு அண்மையில்தான் வந்திருந்தார். எங்களுடைய நாடகம் நன்றாக இருப்பதாகப் பாராட்டிவிட்டு உங்களுடன் கொஞ்ச நேரம் பேசலாமா என்று கேட்டார். அப்போது கலாமோகனைப் பற்றி நான் ஒன்றுமே அறிந்திருக்கவில்லை. ஒருவருக்கும்

தெரியாது. எனக்கு அவர் ஒரு புதிய ஆள். ஒரு பியர் கடையிலோ அல்லது ஒரு கோப்பி கடையிலோ இருந்து கதைத்தோம்.

அவர் கதைக்கக் கதைக்க அவரிடம் விஷயம் இருப்பது தெரிந்தது. அதற்குப் பிறகு என்னுடைய திசை மாறுகின்றது. முதல் ஒரு ஜனரஞ்சக வாசகனாக இருந்து பின்னர் ஜெயகாந்தன், தி.ஜானகிராமன் வாசித்துக் கொண்டிருந்து பிறகு மாக்ஸிச, ஈரோஸ் நண்பர்களின் சந்திப்புகளால் இதைத் தாண்டியும் வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது.

காலா காலமாக இலக்கியத்தை அரசியலின் பணிப்பெண்ணாய் கருதும் மனோபாவம் இங்குண்டு. அந்தக் கோப்பையை இங்கே கொண்டு வா. இந்தச் சாப்பாட்டை அங்கே கொண்டுபோய் கொடு” என.. இலக்கியம் அரசியலின்

பணிப்பெண்ணல்ல. சுயாதீனமானது. தன்னளவில் சுதந்திரமானது.

**இலக்கியம் ஓரளவு பேச தெரிந்தவர்கள் என்பதைத் தாண்டி ஏதோ சுவாரஸ்யமாக பேசுகிறார்கள் என்ற ஈர்ப்புதானா உங்களை ஈரோசில் இணைய வைத்தது?**

ஈரோஸைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அழகிரி என்று ஒருவர் இருக்கின்றார். ‘ம்’ நாவல் வாசித்தால் உங்களுக்குத் தெரியும். அழகிரி சிறையில் இருந்தார். அழகிரி ஈரோஸ் என்பதால் அவருடைய மனைவி ஈரோஸுக்காக பாரிசில் தொடர்பாளராக இருந்தார். அவர் எனக்கு தூரத்து உறவினர் என்பதால் முன்பே ஊரிலே தெரியும். நான் இருக்கும் வீட்டுக்கு வந்து போகின்றவர். அவதான் சொன்னா “ஈரோஸ் என்ற அமைப்பின் சார்பில் ஒவ்வொரு கிழமையும் என்னுடைய றூமில் சில

தோழர்களைச் சந்தித்து நாட்டு நிலவரங்களை விவாதிப்போம். நீங்களும் வந்துபோகலாமே” என்று.

செந்தில் என்ற இடதுசாரிய ஈர்ப்புக் கொண்ட நண்பனையும் கூட்டிக்கொண்டு அங்கு போனேன். அங்கே போய் தான் ஈரோஸ்காரரர்களுடைய தொடர்பு வருகின்றது. நாட்டில் நடக்கும் பல்வேறு விடயங்கள் தெரியவர எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இலங்கையிலிருந்து இத்தனை பேர் வந்து பயிற்சிக்கு லெபனானுக்கு போயிருக்கின்றார்கள், லண்டனிலிருந்தும் போயிருக்கின்றார்கள் என்பதெல்லாம் எனக்கு புதிய செய்தி.

ஈரோஸ் அமைப்பு கூட்டங்களுக்கு போனாலும் புளோட், ஈபிஆர்எல்எப் ஆதரவாளர்களுடன் ஒரு சமூக உறவு இருந்தது. என் ஞாபகத்தின் ஈரோஸின்

முதல் நிகழ்வு வேல் ஆனந்தனின் நாட்டியம். இரண்டாவது நிகழ்வு நிறைய இளைஞர்கள் வந்த நிகழ்வு, பேராசிரியர் கைலாசபதி இறந்ததுக்கு செய்த அஞ்சலிக்கூட்டம். ரட்ணசபாவதி ஈரோஸ் தலைவராக இருந்தாலும், சங்கர் ராஜி என்பவர்தான் லண்டனில் இருந்து பொறுப்பாக இயங்கிர் 83-ஆம் ஆண்டு ஆடிக்கலவரம் முடிய அவர் லண்டனில் இருந்து பாரிஸ் வந்து, இந்திய பிரதமர் இந்திராகாந்தி எவ்வளவு இளைஞர்களை கொண்டுவர முடியுமோ அவ்வளவு பேரையும் வரட்டாம் முறையான பயிற்சிகள் நாங்கள் கொடுக்கிறோம் என்கிறா, எத்தனை பேர் போக ரெடியென்று கேட்டார். ஒரு பத்துப் பேர்தான் ஓம் என்றார்கள். அவர்களும் ஈரோஸ்காரரர் என்று சொல்வதற்கில்லை. சிங்களவங்களுக்கு அடிக்க வேண்டும் என்று நினைத்த

சில இளைஞர்கள் வந்து சேர்ந்தார்கள். ஈரோஸ்காரரர் என்றால் இரண்டு பேர்தான்.

அன்பு என்ற ஒரு நண்பர் கூட்டங்களுக்கு வந்து போகின்றவர். பயிற்சிக்குப் போய் கொஞ்ச நாளிலேயே இறந்து போய்ட்டார். அது பகிரங்கமாக எங்களுக்குத் தெரியும். எங்களுடன் பாபு என்ற நண்பர் இருந்தவர். அவரைப் பற்றி கேட்டால் ஒன்றும் சொல்கின்றார்கள் இல்லை. ஒரு வருடத்துக்குப் பிறகு ராஜி திரும்பி வரும் போது தான் அவரை நாங்கள் தான் கொலை செய்தோம் என்று சொன்னார். ஒரு தாய்க்கு ஒரு மகன் தான். வேறு சகோதரர்கள் இல்லை என்று அந்த பாபு சொல்லிக்கொண்டிருந்தவன்.

**நீங்கள் இலங்கையிலுள்ள போது தமிழரசுக்கட்சியின் ஆதரவாளர், அமிர்தலிங்கம் போன்றோரின் கூட்டங்களுக்கு**

**சென்று வருபவர். அக்காலத்தில்தான் இயக்கங்கள் தீவிரமாக முளைவிடத் தொடங்கின. இலங்கையில் இயக்க தொடர்புகள் உங்களுக்கு இல்லையா?**

இயக்கம் என்று அங்கே நேரடியான தொடர்பில்லை. மறைமுகமாக இயக்கங்களுடன் சம்பந்தம் இருந்தாக சொல்வதை விட தெரிந்தும் தெரியாததுமாக உறவுகள் இருந்தன. அது ஒரு மயக்கம். எங்களுடைய ஊரிலிருந்து ஒரு சொந்தக்காரப் பையன் தான் இயக்கத்தில் சேரப் போகின்றேன் என்று வல்வெட்டித்துறைக்குப் போய்விட்டான். அவன் கொழும்பில் இருந்து வந்த சின்னப் பொடியன். அவனிடம் சிங்கள எதிர்ப்பு இருந்தது. வல்வெட்டித்துறையில் இயக்கத்தில் சேர குட்டிமணியிடம் போயிருக்கின்றான். குட்டிமணி பார்த்துவிட்டு நீ சின்னப்பொடியன் என்று அனுப்பிவிட்டார்.

பிரபாகரன் என்ற பெயரை அறிந்துதான் சென்றிருந்தான். அவனால் அப்படி ஒருவரை கண்டுபிடிக்க முடியவில்லை. “இயக்கம் பயிற்சி எல்லாம் கொடுக்கின்றார்கள். என்னை சின்னப்பொடியன் என்று கலைச்சு விட்டார்கள்” என்று சொன்னான். இது நடந்தது 1977 அல்லது 1978 என்று நினைக்கின்றேன்.

அந்தக்காலத்தில் அமைப்பாக இயக்கம் திரண்டதா நான் அறியவில்லை. ஆனால், பெடியள் ஆயுதங்கள் தேடுகிறாங்கள் என்று கேள்விப்பட்டேன். ஜனநாயக வழி போராட்டத்தில் இருந்து ஆயுதவழிப் போராட்டமாக மாறுகின்ற காலகட்டம் என்று மட்டும் உணர்ந்திருந்தேன். இப்போது அந்தக் காலப்பகுதியில் இயக்கங்கள் அமைப்பாக திரளத் தொடங்கி விட்டன என்று புத்தகங்களில் வாசித்து அறிகிறேன்.

**கி.பி.அரவிந்தன் புலம்பெயர் தேசத்தில்**

**கவிதைகள் எழுத முன்னரே பாரிசில் கவிதைகள் எழுதியவர் நீங்கள். ஆண்டு வரிசையை வைத்துப் பார்க்கும்போது நீங்கள் தான் நமது புலம்பெயர் முன்னோடிக் கவிஞன் என்று தீர்க்கமாகச் சொல்லாம். கவிதைகள் எழுத நேர்தது எப்படி? அப்போது உங்களுக்கு ஆதர்சனங்கள் இருந்தார்களா?**

அப்போது என்னிடம் இருந்த ஒரே புத்தகம் பாரதியார் கவிதைகள். மனதில் இருந்தது சில கண்ணதாசன் பாடல்கள், கூட்டணிக் கூட்டங்களில் கேட்ட காசி ஆனந்தத்தின் கவிதை வரிகள், அம்மா பாடும் கூத்துப்பாட்டுக்கள் போன்றன தவிர வேறு இல்லை. மஹாகவியின் பெயரே அப்போது எனக்கு தெரியாது. இத்தனைக்கும், சில்லாலையில் இருந்து அளவெட்டிக்குக் குறுக்காலை போனால் மூன்று மைல் கூட வராது. அவர் சில்லாலை நாய்கள் பற்றி

எழுதிய குறும்பாவை பின்னாலைதான் வாசித்தேன்.

நான் பாரதியார் கவிதைகள் மீதே பித்துக் கொண்டிருந்தேன். வாசிப்பதற்கும் இதமாக இருந்தது. இதை திரும்ப திரும்ப வாசிக்கும் போது எனக்கும் இப்படியான கவிதை எழுதினால் என்ன என்ற எண்ணம் வந்தது.

”காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்

கடலும்,மலையும் எங்கள் கூட்டம்;

நோக்கும் திசையெலாம்

நோக்க நோக்கக்களி யாட்டம்”

இப்படி பாரதி கவிதைகளை வாசிக்க வாசிக்க வாசிக்க கவிதை எழுத வேண்டும் என்று ஆசை வந்தது. அதைப் பார்த்து கொஞ்சம் மாற்றி கொப்பியடித்து எழுதினால் என்ன என்று கூட ஆசைவந்தது. பிடிபட்டுவிடுவேன் என்ற பயத்தில் சொந்தமாக எழுத முயற்சித்தேன்.

செவ்வரத்தம் பூ மறந்தேன்

செவ்விள நீர் நிறம் மறந்தேன்

கனவுப் பணம் தேட கடல்

கடந்தேன்.

அகதித் தரையில் முகமிழந்தேன்

குந்தியிருகோவோர் நிலம்

குறித்துக்காட்டவோர் பூமி

என்ற மாதிரி – ஊர் நினைப்புதான். என்னுடைய அம்மா தனியாள். எப்படா ஊருக்கு போவம் என்ற யோசனை தானே எனக்கு இருக்கும். வறுமையாக இருந்தாலும் சந்தோசமாக இருந்த இடம். தொடக்க காலம் பிரான்ஸ் வந்தது இக்கட்டு மாதிரி தானே. அதனால் ஊர் நினைவுகளையும் ஏக்கத்தையும் வைத்து எழுதினேன்.

தமிழ் முரசு ஆசிரியர் நண்பர் உமா

காந்தன் கேட்டவுடனே எனக்கு எழுதுகின்ற மனம் உண்டாயிற்று. உண்மையில் அதற்கு காரணம் பாரதியார் ஒருவர்தான். முன்னர் நாட்டில் அரசியல் கூட்டங்களில் காசி ஆனந்தனின் கவிதைகளை அப்போது அவர்போல் எழுத வேண்டும் என்று எண்ணுவேன். ஆனால், உள்ளத்தில் அப்படி எழுதுவதற்கு தோன்றவில்லை. இங்கே வேறு வழியில்லாமல் அவதியால் எழுதத் தொடங்கினேன்.

பின்னர் நண்பர் சபாலிங்கம் தொகுத்து ஆசியா என்ற அமைப்பின் மூலம் என் கவிதைகளைப் புத்தகமாகப் போட்டார். சபாலிங்கம் கொலை செய்யப்பட்ட பின்னர் மிகுந்த மன உளைச்சலில் இருந்தேன். அப்போது என் நண்பர்களில் ஒருவன் செல்வத்தாரின் கவிதைகளை புத்தகமாக்கியதால் தான் – யாரோ கவிதை

விமர்சகரால் அவர் சுடப்பட்டார் என்று நக்கல் அடித்தான்.

கி.பி.அரவிந்தன் 90களுக்கு பிறகு, நான் கனடாவுக்கு வந்தபிறகுதான் பாரிஸ் வந்தார். அவருடைய கவிதைகள் நல்லதாயிருக்கலாம். சில சிலபேர் வேறு காரணங்களுக்காக அவர் புலம் பெயர்ந்த முதல் கவிஞன் என்று எழுதியதைப் பார்த்திருக்கிறேன்.

**தனிமனித தத்தளிப்புகள் உங்கள் கவிதைகளில் இருந்தாலும், சகோதரப் படுகொலைகள்-மலையாக மக்களின் துயரம் என்று முற்போக்காகவும் கவிதைகள் எழுத ஆரம்பிக்கிறீர்களே? ஈரோஸ் கூட்டங்களால் ஏற்பட்ட தாக்கமா அவை?**

இல்லை, இல்லை, இயல்பாகவே எனக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கின்றது. ஏனென்று சொன்னால் நான் ஈரோஸுக்கு

போனது சும்மா. ஞாயிற்றுக்கிழமைகளில் எனக்கு வேலையும் இல்லை. கொஞ்சத்தை கற்றுக்கொள்ளலாம் என்று தான் சென்றேன். எனக்கும் தனிப்பட்ட வாழ்கை மூலம் சமத்துவ கொள்கைகள் மீது நாட்டம் இருந்தது. தனிச்சொத்து இல்லாவிட்டால் இந்த உலகம் சந்தோசமாக இருக்கும், ஆண்கள் இருக்கும் இடத்தில பெண்கள் இருந்தால் உலகில் இவ்வளவு சண்டைகள் இருக்காது என்ற எண்ணம் இருந்தது.

நான் சில்லாலையென்ற முற்றுமுழுதான கத்தோலிக்க கிராமத்தில் இருந்து வந்தவன். கத்தோலிக்கம் பெரும் பகுதி வலதுசாரிதன்மையும் சாதி ஒடுக்குமுறையும் உள்ள அமைப்புத்தான். ஆனால், சிலவேளை தர்மங்களையும் நியாயங்களையும் சொல்லித்தருவார்கள். ஈரோஸ் கூட்டங்களுக்கு போனது சந்தோஷம்தான்.

ஊரில் இருக்கும்போது, பங்குத்தந்தையாக இருந்தவர் ஒருதடவை பிரசங்கம் செய்யும்போது, இயேசுவின் ஐந்து அப்பத்தை ஏழாயிரம் பேருக்கு பங்கிட்ட புதுமையைச் சொல்லி – இண்டைக்கு என்ன நடக்கிறது, ஏழாயிரம் அப்பத்தை ஐந்து சம்மாட்டிமார்கள் சாப்பிடுகிறார்கள். ஐந்து அப்பத்தை ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கிட்டு பட்டினிகிடக்கிறார்கள் என்றார். மேலாடையைக் கேட்கிறவனுக்கு உள்ளாடையையும் மறுக்காதே என்பதைக் கேட்டுக் கேட்டு வளர்ந்தவன். ஈரோஸ் கூட்டத்திற்கு போனது சந்தோசம்தான்.

என் மச்சானின் நண்பர் ஒருவர் வீட்டுக்கு வந்தபோது உங்கை யாரோ ஈரோஸ் என்ற அமைப்புக்கு ஆட்கள் சேர்க்கினமாம். ஒரு நாளைக்கு கூட்டம் நடக்கும்போது புகுந்து

வெளுக்க வேணும். அவன் (பிரபாகரனோ, அல்லது உமாமகேஸ்வரனோ தெரியவில்லை) எப்படி கஷ்டப்பட்டு இயக்கத்தை கட்டுறாங்கள்- விரைவில சிங்களவர்களுக்கு பாடம் படிப்பிக்கப் போகிறார்கள். இதுக்குள்ள சில சொட்டை சொறியர் இஞ்சை குழப்புதுகள் என்றார். அவர் எனக்கும் என்னுடைய மச்சானுக்கும் வேண்டிய ஆள். எனக்கு சங்கடமாக இருந்தது. அவரவர் தங்களுடைய விஷயத்தை செய்யட்டுமே, அது எனக்குப் பிடிக்காது என்று எவ்வாறு எண்ணுவது. எல்லோரும் ஒரு விஷயத்துக்காக சண்டை பிடிக்கின்றார்கள். ஏன் இப்படி வேதனைப்படுவான், ஏன் இப்படி ஒருவரை ஒருவர் கொல்றாங்கள் என்று தோன்றியது.

நீங்கள் குறிப்பிடுபவை பின்னாட்களில் எழுதிய கவிதைகள். ஆரம்பத்தில் அப்படி இல்லை. அவ்வாறாக கவிதைகள்

எழுதிய காலங்கள் எனக்கு நன்றாக நினைவிருக்கின்றன. முதலில் சுழிபுரத்தில் புளொட்காறர்கள் புலிகளைக் கொன்றது. அது பெரிய துக்கமாக இருந்தது. சுழிபுரம் என்றால் எங்களுடைய வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. எல்லா மக்களுக்கும் பெரிய கவலை அது. நாலைந்து பெடியளை புளொட் காரர்கள் வெட்டி கடற்கரையில் தாட்டிருக்கின்றார்கள். அதே போல் கதைப்போம் என்று கூப்பிட்டுட்டு றீகனை வீதியில் வைத்த மாத்தையா சுட்டுக்கொன்றதாக உமாகாந்தன் என்னிடம் சொன்னார். றீகன் என்பவர் ஈபி.ஆர்.எல்.எப் அமைப்பை சேர்ந்தவர். அப்படி மாறி மாறி நடந்துகொண்டிருக்கும் போது இது எங்கே செல்லப் போகிறது என்று எனக்கு தெரிந்து விட்டது. அது கொடுத்த மனநிலையில் கவிதைகள் எழுதினேன். ஆனால், ஈரோஸ்

அப்போது பரிசுத்தமாக இருக்கின்றது போல் எனக்கு தோற்றம் தந்தது.

என்ன தான் நடனத்தாலும் நாங்கள் தான் நாட்டை ஆளப்போகின்றோம் என்று எனக்கு ஈரோஸ்காரரர்கள் சொல்லியிருந்தார்கள். பலஸ்தீனத்துக்கு எல்லாம் பயிற்சிக்குப் போகிறோம், அங்கு எங்களுக்கு KGP ஆல் உதவி கிடைக்கின்றது என்ற மாதிரியெல்லாம் சொல்வார்கள்.

அந்த நேரத்தில் ஈரோஸ் மலையக மக்களை இணைத்து போராட்டத்தை கொண்டு செல்வதுபற்றி வடிவா எங்களுக்குச் சொல்லித்தருவார்கள். வன்காட் என்று சொல்வது யாழ்ப்பாணத்து வறிய நடுத்தர மக்களை அல்ல, மலையக மக்களை என்று சொல்வார்கள். அவர்களுடன் இணைந்துதான் நாங்கள் உலகத்தில் ஒரு நாட்டை உருவாக்கலாம் என்று சொல்வார்கள்.

மலையக மக்கள் மீது அப்பவே எனக்கு சரியான பற்று. நான் இரண்டு மூன்று தடவை மலையகத்துக்கு யோயிருந்தேன். அவர்கள் தமிழர்கள் தானே, இவர்களை ஏன் மதிக்கின்றார்கள் இல்லை என்று தோன்றும். நான் ஒரு தோழருடன் இந்திய சுற்றுலாப் பயணிகளை கூட்டிக்கொண்டு அங்கு சென்றேன். இந்தியாகாறர்களுடன் அங்கிருந்த மக்கள் எல்லாம் கும்பல் கும்பலாக ஓடிவந்து கதைத்து தங்களுடைய கஷ்டங்களை அவர்களிடம் சொன்னார்கள். இந்தியாவில் இருக்கும் தங்கள் சொந்தங்களிடம் தமது கஷ்டத்தை சொல்லச் சொல்லி மன்றாடினார்கள். அவை எனது மனதுக்கு ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அப்போது எனக்கு இளம் வயது. இந்த மலையக மக்களுக்கு விடுதலை கிடைத்தால் எங்கள்

எல்லோருக்கும் சேர்த்து அந்த விடுதலை இருக்கும் என்று யோசித்தேன். மலையக மக்களுடைய அடிப்படை பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அவர்களும் தமிழர்கள் தானே. யாழ்ப்பாணத்தார் சிங்கள ஆட்களைக் கூட திருமணம் செய்து கொள்வார்கள். சைவம், தமிழ் ஆன ஒரு மலையக பெண்ணை யாழ்ப்பாணத்தான் யாரும் திருமணம் செய்வார்களா? செய்திருக்கின்றார்கள். ஆனால், அதனால் பெரிய எதிர்ப்பையும் அவமானத்தையும் சந்தித்திருப்பார்கள். இதேபோல் சிந்தனைகள் ஈரோஸிடம் இருந்ததால் அவர்களுடன் கொஞ்சம் ஈடுபாடாக இருந்தேன். இன்று வரை அப்படித்தான் நினைக்கின்றேன்.

**போரையும் ஆதரிக்கிறீர்கள், யுத்தத்தை மறுக்கவும் செய்கிறீர்கள்... ஒரு கலைஞனின் அல்லாட்டமாக இதைப் புரிந்து கொள்ளலாம்.**

**ஆனால் அப்போது உங்கள் கருத்தியல் நிலைப்பாடு என்னவாக இருந்தது? இன்று அதனை மீள் பரிசீலனை செய்கிறீர்களா?**

உண்மையைச் சொல்லப் போனால் இன்றைக்கு நடிக்க தேவையில்லை. துரையப்பாவைக் கொலை செய்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஏன் என்றால் தமிழராய்ச்சி மகாநாட்டுக்கு வாழ்கையில் முதல் தடவையாக வேட்டியைக் கட்டிக்கொண்டு நண்பனுடன் போய் அங்கு நடந்த படுகொலைக் களேபரத்தில் விழுந்து உருண்டேன். என்னுடைய வேட்டி எல்லாம் உரிந்தது. காலையில் எழுந்து போய் பார்த்தபோது ஏழு பேர் செத்துப் போய் இருந்தார்கள். அதை துரையப்பா தான் செய்தது. துரையப்பா கொல்லப்படவேண்டும் என்று நினைத்த காலங்கள் எல்லாம் இருக்கின்றன. இன்று அந்தக் கருத்துக்களில்

மாற்றங்கள் இருக்கலாம்.

அன்று அமிர்தலிங்கம் எல்லாம் சரிவர மாட்டினம். இவை தங்களுடைய தேர்தல் வெற்றிக்காத்தான் தமிழர் தாயகம் பற்றி கதைக்கினம். பேசித்தான் பெறலாம் என்று இப்ப சொல்லுகினம், அப்படியில்லாமல் கட்டாயம் சண்டைபிடித்து தான் பெறலாம் என்று நம்பினேன்.

துரையப்பா நிறைய நன்மைகள் செய்தார் என்பதிலும் எனக்கு நம்பிக்கை இல்லை. அவர் மேயராக இருந்தார். மேயருக்குரிய வேலைகளை செய்தார். அவருக்கு அரசாங்கம் பக்கபலமாக இருந்ததால் அவர் சில விஷயங்களைச் செய்தார். யாழ்ப்பாண நூலகமோ, யாழ்ப்பாணத்திலே உள்ள விளையாட்டு அரங்கமோ அல்லது யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய விடயங்களோ துரையப்பாவால் கொண்டு வரப்பட்டதல்ல.

புதிய சந்தை எல்லாம் அவரால் கொண்டு வரப்பட்டதல்ல. இதெல்லாம் எனக்கு தெரிந்த காலத்தில் நடந்தது.

தமிழர்கள் பெரும்பான்மையானவர்கள் கூட்டணிக்கு ஆதரவு கொடுத்ததாலும், தமிழ் தலைவர்கள் தமிழ் உரிமை பற்றி பேசியதாலும் சிறிமா அரசுக்கு சப்போர்ட் பண்ணிய துரையப்பாவுக்கு அரசாங்கம் சில சலுகைகளை செய்தது. அதைவைத்து சில விஷயங்களைச் செய்தார். சிலருக்கு வேலை வாங்கி கொடுத்தார். அவ்வளவு தான். நான் சொல்வது என்னவென்றால் அந்தக்காலத்தில் போராட்டம் செய்வது சரி என்று நினைத்த ஆள் நான். ஆனால் இப்படி எல்லாம் தலை கீழாக போகும். இப்படி எல்லாம் செய்வாங்கள் என்று தெரியாது. போர் செய்வது சரி, அது வெல்லும் என்றும் நம்பினேன் நான்.

**புலிகள் அமைப்புடன் தொடர்பு**

இல்லையா?

எந்தக் காலத்திலும் எனக்கு புலிகளோடு உறவு இருந்ததில்லை.

பாரிசில் இருந்து 1984ம் ஆண்டு என் உறவினர் ஒருவரை சந்திப்பதற்காக கள்ளப் பாஸ்போர்டில் லண்டன் சென்றேன். என் நண்பர் தங்கியிருந்த இடத்திற்கு சென்ற போதுதான் தெரிந்தது அது புலிகளின் அலுவலகம் என்று. நண்பரும் வேறு நாட்டிலிருந்து வந்தவர். அன்று பகல் நீர்வேலியில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்ற செய்தி வந்தது. அன்றிரவு அங்கிருந்த நண்பர்கள் தண்ணியடித்து கொண்டாடினார்கள். நானும் அங்கிருந்தேன். அண்மையில் தொடங்கியிருந்த என் ஈரோஸ் தொடர்புகளை நான் சொல்லவில்லை.

அடுத்தநாள் பகல் அவர்களின் அலுவலகத்தில் ஒரு பெண் தட்டச்சு செய்துகொண்டிருந்தா. அவவைக்காட்டி என் நண்பன் – அவ ஒரு பெரிய டொக்டர் எங்களுக்கு உதவி செய்கின்றவா. எங்கடை அமைப்பு எவ்வளவு பலமாய் வளருது பார்த்தியோ என்று சொல்லிவிட்டு, இவாவின் கணவர் பின்னேரம் இவவை கூப்பிட வருவார், அவருடன் கதைக்க வேண்டாம் என்றான். ஏனென்று கேட்க “அவர் சிங்களவர்” என்றான்.

மத்தியானம் அவவுடன் கதைத்தேன். பாரிஸ் தமிழர் நிலவரங்கள் பற்றிக் கேட்டா. தன்னுடைய பெயரை ராஜினி என்றா. எனக்கு ஒரு தடுமாற்றம் வந்தது, இவர்களுக்கு முன் ஈரோஸ் இயக்கம் நின்று பிடிக்குமா என்று.

ஊரிலிருந்து வரும் கடிதங்கள், உள்ளதுக்கை வெள்ளீசு புலிகள் தான் என்றமாதிரி இருக்கும். நானும் புலிகளை

ஆதரிப்போம் என்ற மனநிலையில் இருப்பேன். ஆனால், அவர்கள் செய்கின்ற செயல்கள் என்னைப் பின்வாங்க வைக்கும். இந்தியன் ஆமியுடன் சண்டை பிடிக்கும்போது மீண்டும் அவர்களுக்கான ஆதரவு மனநிலை வந்தது.

ராஜனி கொலையை அறிந்தபோது பெரிய கோபம் வந்தது. என் நண்பன் சபாலிங்கத்தை இழந்தபோது வெறுப்பே வந்தது.

எல்லா இயக்கங்களும் தமிழீழ வரைபடத்தை நேசித்த அளவு, அங்கு வாழ்ந்த மக்களை நேசிக்கவில்லை. எத்தனையோ கொலைகளைத் தவிர்த்து இருக்கலாம். மக்கள் நேசம் இல்லாப் போராட்டம்- என் கவிதை வரிகளில் சொல்ல வேண்டும் என்றால் “அன்பில்லா நேசிப்பில் நான் எரிந்தேன்”

**சபாலிங்கத்திடம் உங்களுக்கு நீண்டகால**

**நட்பு இருந்திருக்கிறது. கருத்தியல் நிலைப்பாட்டில் உங்கள் இருவருக்கும் இடையில் இருந்த ஒற்றுமைகளும் அதற்குரிய காரணங்களில் ஒன்றா?**

சபாலிங்கத்திடம் தமிழீழம் பெறவேண்டும் என்ற கருத்துதான் இருந்தது. அதற்காக என்னவும் செய்யலாம் என்பதுபோல பேசுவார். சபாலிங்கம் ஒரு ஆரம்பகால போராளி. மார்ஸிய கருத்துக்களோ அல்லது முற்போக்கு கருத்துக்களோ அவர் அறிந்தமாதிரி காட்டிக்கொள்ளவில்லை. அவருடைய பிரச்சனை என்னவென்றால் டெலோ இயக்கத்தின் பாரிஸ் தலைமைப் பொறுப்பை தனக்கு தந்திருக்க வேண்டும் என்பதுதான். அவர் ஸ்ரீசபாரத்தினத்திற்கு முற்பட்ட ஆள். அவரைப் பற்றி முதல் அறிமுகப்படுத்தப்பட்டது என்னெவென்றால், அவர் மறியலில் இருந்தபோது ஐந்தாவது

மாடியிலிருந்து பாய்ந்து சாகக்கிடந்தவர் என்பதுதான். அவர் திரில்லான ஆள். ஆரம்பகால சண்டித்தனங்களுக்கு அவருக்கு பெரிய பங்கிருக்கின்றது. பிரபாகரன் சபாலிங்கத்தைப் பற்றி கேள்விப்பட்டு சபாலிங்கத்தை சந்திக்கப் போனாராம்.

நான் பாரிசில் அவரைச் சந்திக்கின்ற காலத்தில் சபாலிங்கம் மெல்ல மெல்ல வாசிக்கத் தொடங்குகின்றார். அவருக்கு நன்றாக ஆங்கிலம் தெரியும். படித்த குடும்ப பின்புலத்தைச் சேர்ந்தவர். நிறைய செய்திகள் அவருக்கு தெரிகின்றது. அவர் அகதிகளுக்கு கேஸ் எழுதிக் கொடுத்துக்கொண்டிருந்தார். வாசித்து வாசித்து அவர் கொஞ்சம் தன்னை மாற்றிக்கொள்கின்றார். அவருக்கு எல்லாம் கவிதை வராது. உன்னுடைய பாட்டு தான்டா என்னுடைய முதல் புத்தகம் என்று சொல்லுவார். அவர் மெல்ல

மெல்ல வாசிப்புக்குள்ளே வருகின்றார். பழைய முரட்டுத்தனம் எல்லாம் இல்லாமல் போகின்றது. ஆனால் அவருக்கு ஒரு புலி எதிர்ப்பு இருந்தது. அவருடைய பிரச்சினை புலிக்குள்ளே போகவேண்டும் என்றில்லை. அந்தக் காலத்தில் கொள்கை ரீதியாக அவர் என்னுடன் எதுவுமே கதைத்ததில்லை. நானும் கதைத்ததில்லை. அன்றைய செய்திகளைப் பற்றி கதைப்போம். விடுதலைப் புலிகள் அப்படி செய்தார்கள் இப்படி செய்தார்கள் என்று கதைப்போம். அவருக்கு ரெலோ சாவகச்சேரியை அடித்த பிறகு கூட அவருக்கு பெரிய கவலை இருந்தது. அவர் தான் இங்கு பொறுப்பாக இருந்திருக்க வேண்டும். ஶ்ரீயன் வந்து இப்படி செய்துவிட்டான் என்ற எண்ணம் இருந்தது. அவர் முன்னம் மாடியால் பாய்ந்த படியால் அவர் ஒழுங்காக நிமிர்ந்து நிற்கமாட்டார். அவரை உபசரித்து கவனித்த

அன்பான மனைவி இருந்தார். பகிடி விட்டு கதைக்க கூடிய ஆள். என்னுடன் பகிர்ந்து கொண்டதில் அவருடைய பெரிய துக்கம் என்னவென்றால், தான் இவ்வளவு தூரம் சென்று சிறைக்கும் போய் வந்தும் தன்னை முக்கியத்துவம் இல்லாமல் செய்துவிட்டார்கள் என்பது தான்.

**பாரிஸிலிருந்து கனடா ஏன்? அரசியல் நெருக்கடி ஒன்றும் இல்லையா?**

இந்தக்காலத்தில் இலக்கியங்களில் நிறைய வாசித்து கடைசிக்காலத்தில் இலக்கியம் பற்றிய ஒரு முதிர்வு எனக்கு வருகின்றது. செயற்படுத்துவதற்கு ஒன்றுமில்லை. அந்த நேரத்தில் திடீரென்று வரதராஜபெருமாள் அங்கே வந்துவிட்டார். அந்த நேரத்தில் பெரியார்தாசன் எங்களுடைய வீட்டில் இருக்கின்றார். வரதராஜபெருமாள் நீங்கள் உமாகாந்தனின் நண்பன் என்பதால்



...

ஈபிஆர்எல்எப் இல் சேருங்கள் என்று கேட்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் நூலகராய் இருந்த கிருஷ்ணகுமாரின் நட்பு பேறாகக் கிடைத்தது. அதன் பின்னர் நான் மெல்ல மெல்லமாக இலக்கியத்தின் பக்கம் போய்க் கொண்டிருந்தேன். ஜேஜே சிலகுறிப்புகள் வாசித்துவிட்டேன், தளையசிங்கத்தின் ‘தனி வீடு’ நாவலை இந்தியாவிலிருந்து சபாலிங்கம் எனக்கென்று வாங்கிகொண்டு வந்து தந்திருந்தார். இவற்றை வாசித்த பிறகு மெல்ல மெல்ல எனக்கு ஆயுதப்போராட்ட ஆதரவிலிருந்து விலக வேண்டும் என்ற எண்ணம் வந்தது. நான் கனடாவுக்கு வெளிக்கிடும் போதும் ஈபிஆர்எல்எப், ஈரோஸ் ஆதரவாளனாகத்தான் வெளிக்கிட்டேன். கனடாவுக்கு வரவேண்டும் என்று திட்டம் எதுவும் இருக்கவில்லை. மனைவிக்கு கனடா செல்ல விருப்பம் இருந்தது. எங்களுக்கு

உறவினர்கள் என்று யாரும் பாரிசில் பெரிதாக இல்லை. மனைவியின் அண்ணா வந்து கட்டாயப்படுத்தி என்னைக் கூப்பிட்டார். எனக்கும் பிள்ளையும் பிறந்துவிட்டது. விசாவும் பாரிஸில் கிடைக்கவில்லை. அதுதான் வெளிக்கிட்டேன்.

**இலங்கையிலிருந்து பாரீஸ், அங்கிருந்து கனடா என்று உங்கள் நிலம் மாறியது. இந்த மாறுதல்கள் உங்கள் அரசியல், சமூக, இலக்கிய புரிதலில்களில் என்ன மாறுதல்களை உருவாக்கி இருக்கின்றன?**

நான் கனடா மொன்றியலுக்கு வந்தவுடன் பார்வை சஞ்சிகை வெளியிட்டேன். அது ஒரு முக்கிய திருப்பம் எனக்கு. இரண்டு சஞ்சிகைகள் வந்துகொண்டிருந்தன. ‘தமிழ் எழில்’, ‘பார்வை’ என்றவை. சின்னதாக வேறுபல விடயங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. தமிழ் ஒளி, தமிழ் ஒன்றியம்,

விடுதலைப்புலிகள் அமைப்பு என மூன்று முக்கியமான அமைப்புகள் இருந்தன. தமிழ் ஒளி என்ற ஒரு அமைப்பிலிருந்து ஒரு பத்திரிகை வந்தது. இந்தக்காலத்தில் ஜயகரன், ஆனந்தபிரசாத், மூர்த்தி போன்றவர்கள் நண்பர்கள் ஆனார்கள். ஆனந்தபிரசாத் நன்றாக எழுதுவார். அவர் ஒரு நிகழ்ச்சி பார்க்கச் சென்று இருந்தார். அது விடுதலைப்புலிகள் இல்லாத ஆட்கள் செய்த நிகழ்ச்சி. அங்கே விடுதலைப்புலிகள் வந்து பிரச்சினை செய்து பெரிய கைகலப்பு ஆகிவிட்டது. பிரசாத் அதை ஒரு கவிதையாக “சந்திரமண்டலத்திற்குப் போனாலும் தமிழன் அடித்துக் கொள்ளுவான்” என்று கவிதை பார்வை இதழில் எழுதினார். நிர்வாகத்துக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. அதை Print பண்ணி வைத்திருந்தோம். புத்தகமாக கட்டவில்லை. அந்தப் Print ஐப்

பார்த்த ஒருவர் விடுதலைப்புலிகளிடம் தங்களுக்கு எதிராக எழுதப்பட்டு இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். நிர்வாகம் மிரட்டலுக்கு பயந்து கவிதையை எடுக்கச்சொல்லியது, நான் மாட்டேன் என்று வெளியேறினேன்.

அப்போது கனடாவில் தமிழர்கள் குவியும் இடமாக மொன்றியல் என்ற பிரதேசம் இருந்தது. பின்னர் டொரண்டோவாக மாறிப்போனது. எனது மனைவியின் தாயாரும், மூன்று மச்சான்களும் டொரண்டோவில் இருந்தார்கள். நானும், ஜெயகரன், குமார் மூர்த்தி, செழியன் ஆகியோர் டொரண்டோவுக்குச் செல்ல முடிவெடுத்து அங்கே இடம்மாறினோம். ஒரு நாள் ஜெயகரன் என்னைத் தேடிவந்து “இங்கே சும்மா இருக்க முடியாது, ஏதாவது செய்ய வேண்டும். கொஞ்ச நல்ல இளம் பொடியள்

இருக்கினம். அவர்களும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நிக்கினம். நீங்களும் வாங்கோ” என்று என்னைக் கூப்பிட்டார். அங்கேதான் இளங்கோ, ராதா, மயில் என்ற நண்பர்களைச் சந்தித்தேன். நல்ல உற்சாகமாய் இருந்தது சந்திப்பு. பின்னர் செழியனையும், குமார் மூர்த்தியையும் அடுத்த கூட்டங்களுக்கு அழைத்துக்கொண்டு சென்றேன்.

ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்துததில் ஒரு பத்திரிகை தொடங்குங்கள் அண்ணை என்றார்கள். தேடல் என்று நான் பெயர் வைத்தேன். இவங்களுக்கு பத்திரிகை துறை சார்ந்து எல்லாம் தெரியும் என்று நான் நினைத்தேன். ஆனால் ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. “எந்த அச்சகத்தில் கொண்டு போய் அடிக்கிறது?” என்று என்னிடமே கேட்டார்கள். தமிழ்

எழுத்துக்கள் இல்லை. தமிழ் எழுத்து உள்ள அச்சகங்கள் இல்லை. தட்டச்சு செய்வோம் என்று தீர்மானித்தோம். உடனே காசுகள் போட்டு இந்தியாவிலிருந்து ஒரு கிழமையில் தட்டச்சு இயந்திரம் எடுத்தார்கள். ஆனால் தட்டச்சு செய்யத் தெரியாது. இப்படி நிறைய பிரச்சினைகள். என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருக்கும் அந்த நாட்களில்தான் அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொன்று விட்டார்கள். பெரிய உணர்ச்சிபூர்வமாகப் போய்விட்டது. பொடியன்கள் பார்த்தாங்கள், இவரை நம்பினால் புத்தகம் வராது என்று ஒரு காரஜை எடுத்து ‘தேடகம்’ அமைப்பு என்று சொல்லி சில புத்தகங்களைப் போட்டு ஒரு நூலகத்தை திறந்து விட்டார்கள்.

அமிர்தலிங்கம் சுடப்பட்டுவிட்டார் என்று அங்கு நடந்த அஞ்சலிக் கூட்டத்திற்கு

போனால், விடுதலைப்புலிகள் பெரிய அட்டகாசம் செய்துகொண்டிருந்தார்கள். தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற முக்கியமான இடம் அருகே ஒருவன் தமிழில் அச்சிட்ட பேப்பர்களை விற்றுக்கொண்டு இருந்தான். எமக்கு தமிழ் பேப்பர்களைப் பார்க்க பெரிய ஆச்சரியமாகப் போய்விட்டது. யார் அதனைச் செய்க்கிறார் என்று கண்டுபிடித்தால் ஜோர்ஜ் என்று தெரிந்தது. அவர் நல்ல கெட்டிக்காரன். பத்திரிகை மீது ஆர்வம் கொண்டவர். முன்னோடி என்று சொல்லலாம். ஜோர்ஜோடு தொடர்பு கொண்டோம். விடுதலைப்புலிகள் தங்களுடைய விடயங்களுக்கு ஜோர்ஜ் உதவுகிறார் இல்லை என்று அவரோடு தொடர்பு கொண்டு தூசணத்தால் பேசியிருக்கிறார்கள். அப்ப தொலைபேசியில் தொடர்பு கொண்டு யாரென்று தெரியாமல் ஏசலாம் தானே. அதனால் நொந்துபோய் கடும்

புலி எதிர்ப்பில் அவர் இருந்தார்.

தேடகம் அமைப்புக்கு ‘தேடல்’ புத்தகத்தை அவரே அடித்தார். தட்டச்சு தெரியும், கணனி இருக்கின்றது. எங்களிடம் ஒன்றுமே இல்லை. அவரே அடிச்சு எல்லாம் செய்தார். ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்தோம். இதில் சந்தோசமான விடயம் என்னெவென்றால் உலகத்திலே எந்த இடத்திலேயும் விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஒரு அமைப்பு செயற்பட முடியாது. இலக்கிய சந்திப்பு எல்லாம் பின்னால் வசதி ஏற்படுத்திய பிறகு வந்தது. அதற்கு முன்னர் அவர்களிடம் அடிவாங்கிய ஆட்கள் தான் அதிகம்.

என்ன சொன்னாலும் விடுதலைப்புலிகள் பலமான அமைப்பாக வந்துவிட்டது. இலங்கையிலிருந்து நிறைய ஆட்கள் வரத்தொடங்கினார்கள். எதிர்த்து

கதைத்தவர்கள் ஓரளவுக்கு தலைமறைவாகத் தொடங்கிவிட்டார்கள். எனக்குத் தெரிய பலருக்கு அடி விழுந்தது. தேடகம் அமைப்பில் விடுதலைப்புலிகளில் இருந்து முரண்பட்டு வந்தவர்கள்தான் பெருன்பான்மையோர். அல்லது வேறு ஆயுத இயக்கத்தில் இருந்து வந்தவர்கள். அவர்கள் இங்குள்ள புலிகளிடம் நீங்கள் எங்களை அடித்தால் உங்களை லைட் கம்பத்தில் கட்டி வைப்போம் என்று சொன்னார்கள். நீங்கள் கத்தி எடுத்தால் நாங்களும் கத்தி எடுப்போம் என்றார்கள். எனக்கும் பயம் இருந்தது. வன்முறை என்றால் வன்முறைதான் . அவர்களும் முன்னாள் இயக்கக்காறர்கள் தானே – புலம்பெயர்ந்த மற்ற இடங்களில் எல்லாம் ஒன்றும் கதைக்க முடியாத இடத்தில் ஒரு அமைப்பு ஸ்தாபன ரீதியாக அதுவொரு சிறிய கட்டடத்துடன் முதன் முதலில் இயங்கியது.

உதாரணத்துக்கு நாங்கள் முஸ்லிம் மக்களை வெளியேற்றியதற்கு எதிராக கோயில் ஒன்றில் சத்தியாக்கிரகம் செய்தோம். அன்றைக்கு புலி எதிர்ப்பு கதைத்தவர்களும் இப்போது கதைக்கிறவர்களும் அந்த இடங்களுக்கு அப்போதெல்லாம் வருவதில்லை. ஏனென்றால் பயம். எங்களை புலி என்று சொல்வார்கள், புலிக்கு கொடி பிடித்தவர்கள் என்றும் சொல்வார்கள். இப்படி சொல்பவர்கள் எல்லாம் அப்போது பயந்துகிடந்தவர்கள். அந்த வகையில் எனக்கு ஒரு மகிழ்ச்சி என்னவென்றால் ஒன்றுமே கதைக்க முடியாத இடத்தில் கதைக்க பண்ணிய அமைப்பை உருவாக்கியதில் பங்களிப்பு செய்தது. அது தான் ஒரு தொடக்கம்.

என்னுடைய செயல்களில் நான் முக்கியமானதாக கருதுபவைகளில் ஒன்று

1990 இல் ‘நிரபராதிகளின் காலம்’ என்ற நாடகத்தை தேடகத்தில் இயக்கியது. தேடகத்தின் இந்த நிகழ்வு டொரண்டோ இலக்கிய சூழலலை மாற்றியது. மண்டபம் நிறைந்த கூட்டம். இந்தியக் கலைஞர்களோ, தமிழ் பொழுதுபோக்கோ இல்லாமல் அந்த நடந்த நிகழ்வு நடந்தேறியது. பொதுகுற்றம் என்று ஒன்று உண்டா? எவ்வாறு சாமானியர்கள் சர்வதிகார ஆட்சியை எதிர்கொள்கிறார்கள்.. அச்சர்வதிகார ஆட்சியின் குற்றங்களும் அவர்களுக்கும் எவ்வாறான தவிர்க்க முடியாத தொடர்புகள் ஏற்படுகின்றன என்பதை மையமாகக் கொண்டு அந்த நாடகம் வடிவமைக்கப்பட்டு இருந்தது. எப்படி கவிதை தெரியாமல் கவிதை எழுதினேனோ அப்படியே நாடகம் பற்றித் தெரியாமல் நாடகம் செய்தேன்.

**புலிகள் தொடர்பாக உங்கள் மனநிலை**

**தொடர்ந்தும் தடுமாற்றம் கொண்டதாகவே இருக்கிறதே?**

ஒவ்வொரு தடவையும் என்னுடைய மனம் சொல்லும், அவர்கள் தான் உயிரைக் கொடுத்து போராடுகின்றார்கள்; நேர்மையாக இருக்கின்றார்கள் என்று. ஏதோ தவறு விடுகின்றார்கள் என்று நினைத்துக் கொண்டு இருக்கும் போது ஒவ்வொரு தடவையும் பாரிய தவறுகள் தனிப்பட்ட ரீதியில் என்னைப் பாதிக்கும். என்னுடைய விமர்சங்கள் உறவினர்கள் இடையே என்னை ஒதுக்கி வைத்தது. ஒரு கிறிஸ்மஸ் விருந்துக்கு போனால் கூட எனக்கு முன்னால் தெளிவாக கதைக்க மாட்டார்கள். நேரே “நீங்கள் உங்களை பிரபல்யமாக்குவதற்காக எழுதுகின்றீர்கள். ஒரு போராட்டம் நடந்து கொண்டிருந்தால் தவறுகள் இருக்கும். அவற்றைத் தூக்கிப்

பிடித்துக்கொண்டிருக்கின்றீர்கள்” என்று சொல்வார்கள்.

பதிலுக்கு “சும்மா நாலு பேர் கதைத்தால் சரியா? இப்படி அநியாயமாக நடக்க முடியாது. இது வந்து ஒரு நாட்டை உருவாக்குவதற்குரிய ஒரு விடயத்தை புலிகள் செய்யவில்லை. சும்மா ஆமி வரப்போகின்றான் என்று அடிபட்டது போல் இப்போதும் கதைத்துக்கொண்டிருக்கின்றீர்கள். ஒரு நாடு உருவாகுவதென்றால் நிறைய விடயங்கள் இருக்கின்றன” என்றெல்லாம் புத்திஜீவிகள் மாதிரி கதைக்க முயல்வேன்.

நான் பெரிதாக ஆதரவோ எதிர்போ இல்லாமல் இருக்க வேண்டும் என்றுதான் இருப்பேன். எங்கள் ஊரில் அதை வெள்ளீசு மனநிலை என்பார்கள். புலிகள் தொடர்ந்து இயங்கிய படியால் பல தவறுகளை விட்டார்கள். அக்காலங்களில் அவர்களை

எதிர்த்து விமர்சித்தவர்களின் பக்கம்தான் நின்றேன். அதுதான் தர்மம் என்ற நினைப்பு இப்பவும் உண்டு.

எங்கள் ஊரில் புளொட் அமைப்பு செல்வாக்காக இருந்தாலும், நான் ஈரோஸ் அமைப்புக்கு ஆதரவாக இருந்தாலும், புலிகள்தான் தொடர்ந்து நின்று பிடிப்பார்கள் என்ற நினைப்பு இருந்தது. புலிகள் அழிந்த பின்னரும் சொல்கிறேன். இன்னும் முப்பது வருடங்களின் பின்னர் பிரபாகரன் பென்னம் பெரிய ஆளாக இருப்பார்.

ஒரு கதையொன்று, ஒருவன் தன் இளவயதில் வீட்டு வளவில் நின்ற நாலடி பாம்பை துணிந்து அடித்துக் கொன்றார். அவர் கல்யாணம் முடித்து தனது மனைவிக்கு இக்கதையை சொல்ல அது ஏழடி வளர்ந்துவிட்டது. பின்னர் தன் பிள்ளைகளுக்கு அந்தக் கதையைச்

சொல்லேக்கை பத்தடி வளர்ந்துவிட்டது.

என்னதான் சொன்னாலும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழர்களது வரலாற்றில் பிரபாகரன் ஒரு முக்கிய ஆள்தான். ஆனால், முப்பது வீத எதிர்ப்பு எப்பவும் இருந்து கொண்டிருக்கும்.

ஒருவர் பனை தறிச்சதுக்காக முல்லைதீவில் புலிகளின் காவல் துறையில் பிடிப்பட்டு சரியான பிரச்சினைப்பட்டார். பிறகு சண்டை எல்லாம் முடிந்த பிறகு "புலிகளிடம் இப்போதும் கோவம் இருக்கின்றதா அண்ணை?", என்று கேட்டேன். "நாங்கள் பனை தறித்ததால் அவர்களுடன் பிரச்சினைப்பட்டோம். அவங்கள் வந்து பிள்ளைகளையும் குடுத்து தங்களையும் கொடுத்து உயிரையும் கொடுத்துப்போட்டு போயிட்டாங்கள். இனி இதைப்பற்றி கதைத்து என்ன செய்வது அவர்கள் பாவங்கள்", என்று

சொல்லிக்கொண்டு போனார். அப்படித்தான் என்னுடைய மனநிலை இருக்கின்றது.

ஒன்றைச் சொல்லலாம், 2009 இல் புலிகள் தோற்று அழியேக்கை புலிகளின் தோல்வி மாத்திரமல்ல இனி தமிழ் மக்கள் முழங்காலில்தான் இருக்கவேண்டும் என்றேன். “விதியே விதியே தமிழ் சாதியை என்ன செய்ய நினைத்தாய்” என்ற கவிதையோ அல்லது நிலாந்தன் சண்டைக்கால் தப்பி வந்து “சொற்கேளா புதல்வர்களின் சூடு இறங்கா உடல்களைக் கடந்து வந்தோம்” என்ற மாதின ஒரு கவிதை எழுதிய ஞாபாகம், இதுகளை நினைக்க வேண்டியதுதான்.

**காலம் இதழ் ஒரு தேசிய இனத்திற்குரிய இதழாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதில்லை. தமிழில் எழுதத் தெரிந்த எல்லோரும் எழுதுகிறார்கள். பல்வேறு**

**நிலைப்பாடுகள் கொண்டவர்களுடன் சேர்ந்து இயங்குகிறீர்கள். இலக்கிய கொள்கையாக ஏதாவது கொண்டிருக்கிறீர்களா?**

விதி சமைப்பவர்கள் தான் இலக்கியத்தில் இயங்க முடியும் என்று நம்புகிறவன் நான். இலக்கியத்தைப் புரிந்து கொண்ட பிறகு என்னுடைய சமயத்தை விட என்னுடைய இலக்கியத்தில் தான் எனக்கு நம்பிக்கை அதிகம். இலக்கியம் மனித வாழ்வை உய்விக்கும். மனித மனங்களை மாற்றும். ஒரு நல்ல கதையை வாசித்தால் நீங்கள் ஒரு நல்ல மனிதனாக வாழுவதற்குரிய சின்னச் சின்ன விதைகளைப் போடும்.

முந்தின காலத்தில் எப்படித் தான் நல்ல கூத்துக்களைச் செய்தாலும் கத்தோலிக்கம் அதற்குள் இருப்பதைப் பார்க்கலாம். ஞானஸ்தானம் குடுத்து மதம் மாற்றம் செய்வதற்கு கத்தோலிக்கம் கூத்தை

தன்னுடைய வாகனமாகப் பாவிக்கின்றது. அதேபோல முற்போக்குவாதிகளும் இலக்கியத்தை தங்களுடைய வாகனமாக பாவிக்கின்றனர். அவைகளும் நாளைக்கு விடிவு வரும். தொழிலார்கள் ஒன்று படுவினம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இலக்கியத்தின் வேலை அது அல்ல. இவைகளை வாகனமாகப் பாவிக்கின்றது பிழை என்று தான் நான் கருதுகின்றேன். மதம் என்றாலும் சரி அரசியல் என்றாலும் சரி.

அண்மையில் கூட ஏங்கல்ஸ் சொன்ன ஒரு வரியை யாரோ சொல்லக் கேட்டேன்.

“காலகாலமாக இலக்கியத்தை அரசியலின் பணிப்பெண்ணாய் கருதும் மனோபாவம் இங்குண்டு. அந்தக் கோப்பையை இங்கே கொண்டு வா. இந்தச் சாப்பாட்டை அங்கே கொண்டுபோய் கொடு” என.. இலக்கியம் அரசியலின்

பணிப்பெண்ணல்ல. சுயாதீனமானது. தன்னளவில் சுதந்திரமானது.

கலை கலைக்காவும் இல்லை என்பது போல கலை கட்சிக்காகவும் இல்லை. இப்படியான பாரம்பரியத்தை நான் பெரும்மதிப்பு வைத்திருக்கும் கைலாசபதி, சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் பிழையான வேலையாகச் செய்துவிட்டார்கள். இலக்கியம் பக்கச்சார்பற்றது, கட்சியோ மதமோ அதற்கு தேவையில்லை. அதனுடைய வேலை வேறுமாதிரியானது. அதனுடைய பயன் வேறு மாதிரியானது. ஒரு பக்கத்தில் பொழுது போக்காக இருக்கும். ஒரு பக்கத்தில் மனித மனங்களை உய்விக்கின்றதாக இருக்கும். மனித மனங்களுக்கு ஒரு வடிகாலாக இருக்கும். மனித மனங்களுக்கு நல்ல விஷயமாக இருக்கும் என்ற எண்ணம் எனக்கிருக்கின்றது.

தேடல் பத்திரிகையில் மூன்று இதழ்களுக்கு, தேடகம் ஆரம்பித்த காலத்தில் ஆசிரியர் குழுவில் ஒருவராக ஜெயகரன் ,செழியனுடன் நான் இருந்தபோது மற்றவர்கள் சொன்னார்கள், நீங்கள் இலக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றீர்கள். பெண் விடுதலை பற்றி, அடையாள அரசியல் பற்றி சாதிப்பிரச்சினை எல்லாம் வரவேண்டும். நீங்கள் விலகுங்கள் என்று என்னை விலக்கி விட்டார்கள்.

அந்தக் காலகட்டத்தில் தான் எனக்கு விருப்பமான இலக்கியத்தை முன்னிறுத்தும் இதழ் ஒன்றை தொடங்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அதன் அடிப்படையிலே காலம் இதழைத் தொடங்கினேன்.

காலம் இதழுக்கான ஆக்கங்களை கனடாவிலிருந்தும் மற்ற நாடுகளில் இருந்தும் நான் தொகுத்துக் கொடுப்பேன். வடிவமைத்து

அச்சடித்த இடம் இந்தியா. தமிழ் இலக்கிய உலகில் இது புதிய விடயம். சூழலும் புதியது.

அப்போது முக்கிய இதழாகப் பேசப்பட்டது சரிநிகர். அதன் ஆசிரியர் என்று சேரனின் பெயர் இருக்கும். சேரன் அப்போது கனடாவில் படிக்கிறார். அவ்விதழ் திறமையாக வெளிவந்ததற்கு முக்கிய காரணம் விக்னேஸ்வரன். அவரின் பாதுகாப்புக்காக சேரனின் பெயரை ஆசிரியராக போட்டார்கள் என்று நினைக்கிறேன். எக்ஸில், உயிர்நிழல் போன்ற நல்ல இதழ்கள் பிரான்சில் இருந்து வெளிவர ஆரம்பித்து இருந்தன. அவை எல்லாம் இலங்கை இந்தியாவில் கிடைப்பதில் சிக்கல். அவர்களுக்குள் சண்டை வந்தபோது அதுதொடர்பான fax இலங்கை, இந்தியாவுக்கு தெரிந்த இலக்கத்துக்கு எல்லாம் போகும். அவர்கள் பார்த்தபோது இது என்ன கோதாரியடா என்று திடுக்கிடு

போவார்கள். இதுதான் சூழல்.

அந்த காலத்தில் எந்த விரைவான தொடர்பாடல் வசதியும் இல்லை. நான் இங்கிருந்து தபால் மூலம் அனுப்புவேன். அங்கே இரண்டு பாரம் முடிந்து விட்டது. மூன்று பாரம் முடிந்து விட்டது என்று சி.மோகன் சொல்லுவார். இறுதியில் இதழ் வரும். நான் கொடுத்த ஆக்கங்கள் தான் வந்திருக்கும்.

இது முற்று முழுதாக தமிழ் இலக்கியத்தில் ஒரு புது முயற்சி. மணிக்கொடி மரபில் வந்த ஒரு சஞ்சிகை என்று இதைச் சொன்னாலும், இது முற்று முழுதாக வேறு. இந்த தொடர்பாடல் பிரச்சினையால் பிழைகள் வந்தன. ஆனால், அதற்காக இதைச் செய்ய முடியாது அல்லது நிறுத்த வேண்டும் என்று நான் சோர்ந்து போகவில்லை. இதனை கனடாவில் செய்யலாமே என்று பலர் சொல்லியிருக்கின்றார்கள். கனடாவிலும்

செய்து பார்த்து இருக்கிறேன். இந்தியாவில் அச்சடித்து கொடுத்தால் தான் எனக்கு அது சரியெனப் பட்டது. இலங்கைக்கும் போகும், இங்கேயும் வரும், இந்தியாவிலும் இருக்கும். இங்கே வைத்து ஒரு புத்தகத்தை அடித்தால் அது இந்தியாவுக்கோ இலங்கைக்கோ போகாது. அரிதாக ஒருவருக்கோ இரண்டு பேருக்கோ ஒரு புத்தகம் போகும். நான் ஒட்டுமொத்த தமிழ் இலக்கியத்தின் ஒரு பகுதியாக இதைப் பார்க்கின்றேன். தனியே ஈழத்தை சேர்ந்தவர்களுக்கான, புலம்பெயர்ந்தவர்களுக்கான இதழ் என்று பார்க்கவில்லை.

என்னை காலம் ஆசிரியர் என்று சொல்வதை விட தொகுப்பாளர் என்று சொல்வதுதான் பொருத்தம். இதழின் கொள்கையை காலத்தில் இப்படிப் பார்க்கலாம், அதாவது முக்கால் வாசி காலம்

சஞ்சிகைகளில் ஈழத்து எழுத்தாளர்களின் முக்கியமானவர்களின் அட்டைப் படம் இருக்கும். புது எழுத்தாளர் ஒருவரின் படைப்பு இருக்கும். கட்டாயம் பிரபல்யமான ஜெயமோகன், முத்துலிங்கம், ஷோபாசக்தி போன்றவர்களுடைய படைப்புகள் இருக்கும். காலம் சஞ்சிகையில் எழுதாத ஆட்கள் என்று சொல்வது மிகக் குறைவு. உதாரணமாக சக்கரவர்த்தியுடன் என் உறவு நன்றாயில்லை என்று சொல்வார்கள். சக்கரவர்த்தியுடைய நல்ல கதையொன்று காலத்தில் வந்திருக்கின்றது. எப்பவும் என்னுடன் சண்டைபிடிக்கும் கற்சுறாவின் படைப்பு வந்திருக்கு. இவற்றில் நான் நல்ல கவனமாகத்தான் இருப்பேன். விடுதலைப்புலிகளை கடுமையாக எதிர்த்து அல்லது ஆதரித்து ஒரு கட்டுரையும் நான் பிரசுரித்தது இல்லை.

**காலம் இதழை தயார் செய்யும்போது பெரும்பாலும் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், பதிப்பகங்களுடன் சேர்ந்து வேலை செய்கிறீர்கள். இலங்கைத் தமிழர்களிடம் இதழியல் வேலைகள் சீராகச் செய்யமுடியாமல் போனதின் வெளிப்பாடா அது?**

தொடக்கமே தமிழ் நாட்டில்தான் தொடங்குகின்றேன். எனக்கு இலங்கை இந்தியா என்ற பிரச்சினை இல்லை. ஆனால் எனக்கு ஒரு குறை இருந்தது. நான் பிறந்த இடம் ஈழம். எங்களுடைய ஆக்கங்கள் அங்கு கவனிக்கப்படவில்லை என்ற கவலை இருந்தது. இந்தியாவில் உள்ளவர்கள் அளவுக்கு இல்லாவிட்டாலும் கொஞ்சப் பேர் என்றாலும் தீவிரமானவர்கள். அவர்கள் கவனிக்கப்படவில்லை. இப்போது நான் 55 காலம் இதழ்

செய்தாலும் 40கும் அதிகமான காலம் இதழுக்கு ஈழத்து எழுத்தாளர்களைத்தான் அட்டைப்படமாக போட்டிருக்கின்றேன். உதாரணத்திற்கு தெணியானை தமிழ்நாட்டுகாரர்களுக்கு தெரியாது, அவரை அட்டைப்படமாகப் போட்டு சுந்தரராமசாமி, ஜெயமோகன், அசோகமித்திரன், எஸ்.ரா போன்றவர்களின் கதைகளையும் – வெங்கட்சுவாமிநாதன், சி.மோகன் போன்றோர்களது கட்டுரைகளையும் உள்ளே இட்டால், தெணியானை தெரியாதவர்கள் நிச்சயம் யார் என்று பார்ப்பார்கள் என்று அதைச் செய்தேன்.

மு.பொன்னம்பலம் என்னுடைய நண்பர். அவர் மீது பெரும் மதிப்பு உண்டு. அதைவிட அவர் அண்ணன் தளையசிங்கம் என் மதிப்புக்குரிய பெரிய முன்னோடி. பொன்னம்பலம் கனடா வந்த போது

காலம் இதழை நன்றாக சிலாகித்துச் சொன்னார். ஆனால் ஏன் இந்தியாவில் தயாரிக்க வேண்டும், இலங்கையில் செய்யலாமே என்றார். எனக்கு தொடர்புகள் இல்லையென்றேன். அவர் அதற்கு தான் உதவுவதாகச் சொன்னார். அப்போது காலத்தில் ஒரு சிறுகதைப் போட்டி வைத்திருந்த நேரம். அ.முத்துலிங்கம் முதல் பரிசு பெறுபவருக்கு 300 டொலர்ஸ் தருகிறேன் என்று கைகொடுத்தார். முதல் பரிசு பெற்றவரின் கதையை இதழில் பிரசுரித்து செய்யலாம் என்று வெளிக்கிட்டால், மு.பொன்னம்பலம் முன்னெடுகிறார் இல்லை. அவருக்கு பணமும் அனுப்பியாகிவிட்டது. அவரின் வீட்டுக்கு போன் எடுத்தால் அவர் சினந்து பேசுகின்றார். என்னுடைய வயதென்ன? எனக்கு வந்து ஏன் கரைச்சல் கொடுக்கின்றாய் என்று ஏதோ நான்

வில்லங்கமாக அவரிடம் கொடுத்தது போல் பேசினார். மிகவும் நொந்து போய் செய்வதறியாது நின்றேன். அவரும் கொஞ்சம் வருதக்காறன்- மாட்டுப்பட்டுப் போனேன்.

பிறகு மகாலிங்கத்தார் பொன்னம்பலத்துடன் கதைத்துப் பேசி அச்சகத்திடம் கொடுத்து, ஒருமாதிரி இதழ் வந்தது. இதழை அனுப்ப பணம் எல்லாம் கொடுத்து இருந்தேன். அப்படி இருந்து இந்தியாவுக்கு எல்லாம் போகவில்லை. நான் தான் கொண்டு போனேன். இதழை திறந்து பார்க்க அதிர்ச்சியாக இருந்தது. முதல் பரிசு பெற்றவர் பெங்களூரைச் சேர்ந்த சொக்கன் என்பவர், ஆனால் ஈழ எழுத்தாளரான சொக்கனின் புகைப்படத்தை பொன்னம்பலம் பிரசுரித்து இருந்தார். ஒன்றும் பேசாமல் விட்டுவிட்டேன். பரிசு பெற்ற கதையின் பெயர் ‘இறுதியாத்திரை’.

இரண்டு வாரத்தின் பின்னர் எனக்கு ஒரு கடிதம் நல்லூரில் இருந்து வந்தது. ‘எவருடையோ கதைக்கு என் படத்தை போட்டு எனக்கு இறுதியாத்திரை செய்துவிட்டாயடா’ என்று சொக்கன் திட்டி எழுதி இருந்தார். சொக்கன் ஈழ இலக்கியத்தில் முக்கியமான எழுத்தாளர். ‘தமிழ் இலக்கிய வரலாறு’ என்ற அவருடைய புத்தகம் முக்கியமானது. முற்போக்கு, நற்போக்கு சிந்தனையில் நடுநிலையாக நின்ற ஒருவர் அவர். அப்போது அவர் நோய்வாய்பட்டு இறக்கும் நிலையில் இருந்தார். இது என்னை மிகவும் பாதித்தது. உடனே கோபத்துடன் பொன்னம்பலத்துக்கு போன் பண்ணினால் அவர், ‘அந்தப் படம் எடுக்கப்பட்ட பாடு தெரியுமா உனக்கு? வீரகேசரிக்குப் போய் பிறகு தினக்குரலுக்கு போய் தினகரனுக்கு போய் எவ்வளவு கஸ்ரபபட்டு அந்த படம் எடுத்தனாங்கள்’

என்றார். நொந்து போனேன். பொன்னம்பலம் அக்கதையை வாசித்திருந்தால், ஈழ எழுத்தாளர் சொக்கன் அதுவல்ல என்று தெரிந்திருக்கும். துயரம்! இப்படியான சிக்கல்கள் எனக்கு, தமிழ் இலக்கியத்துக்கே புதிது.

**தேடகத்தின் மூலம் “எலும்புக்கூடுகளின் ஊர்வலம்” என்ற சேரனின் கவிதை தொகுப்பை வெளியிட்டதில் உங்களுக்கு முக்கியமான பங்கு இருப்பதாக அறிய முடிகிறது. அது எப்படி நிகழந்தது?**

1989-ஆம் ஆண்டு முதல் தடவையாக ஊருக்குப் போகிறேன். இந்தியன் ஆமிக்கும் புலிகளுக்கும் அடிபாடு முடிவடையாத நேரம். அப்போது சேரனை சந்திக்கிறேன். எனக்கு சேரனின் கவிதைகள் மேல் மிகப்பெரிய பற்று. நான் கொழும்பில் போய் இறங்கும்போது சேரனும், கோமூர்த்தியும்

விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். ஒருமாதத்தின் பின்னர் நான் திரும்ப வெளிக்கிடும் போது சேரன் தன்னுடைய கவிதைத் தொகுதி ஒன்றை தேடகம் அமைப்பின் மூலம் புத்தகமாக்க முடியுமா என்று கேட்டார். மிகச் சந்தோசத்துடன் ஓம் என்று கவிதைகள் எழுதி வைத்திருந்த கோப்பை வாங்கினேன். அந்த நேரத்தில் சேரனுக்கு இயக்கங்களுடன் பிரச்சினைகள் இருந்தன. குறிப்பாக விடுதலைப்புலிகளுடன்.

கவிதைகளைப் பார்த்தால் இந்தியன் ஆமி, இலங்கை அரசு, இயக்கங்கள் என்று எல்லோரையும் கோபமாக விமர்சித்து எழுதப்பட்ட வரிகளாக இருந்தன.

யாழ்ப்பாணம் தொடங்கம் வவுனியா வரை அரைவாசி இடங்களில் இந்தியன் ஆமியும் அதற்கு சார்பான தமிழ் இயக்கங்களும், மிச்ச அரைவாசிக்கு மேற்பட்ட இடங்களில்

விடுதலைப்புலிகளும் இருந்தார்கள். எல்லா இடங்களிலும் இறங்கி ஏற வேண்டும். பல இடங்களில் பிரயாண பைகளை சோதிப்பார்கள். இடையில் பயத்தால் அந்தக் கோப்பை எறிந்துவிடுவோம் என்ற யோசனையும் வந்தது.

“யேசுவே... மாதவே...” என்று என் மனம் பதை பதைக்கும். கனடாவில் இருந்து வந்தேன் என்பதற்கு எந்த அடையாளமும் என்னிடம் இல்லை. கனேடிய றவல் பத்திரங்களை இந்தியாவில் வைத்துவிட்டு அகதியாக வந்த சிறிலங்கன் என்று சொல்லி அவசர கால பாஸ்போர்ட் எடுத்து இலங்கை வந்திருந்தேன்.

ஆமியோ, இயக்கங்களோ யார் வாசித்து இருந்தாலும் பெரிய பிரச்சினை தான். அந்தக்காலம் சர்வசாதரணமாக கொலைகள் நடந்தன. சேரனின் கவிதைகளைப் பார்த்தல் விளங்கிக்கொண்டு ஒரு பகுதி சுடும்

இன்னொரு பகுதி விளங்காமலே சுடும்.

ஏதோவொரு மாதிரி கொழும்புக்கு கொண்டு வந்திட்டேன். கொழும்பில் இருந்து இந்தியாவுக்கு போவதற்கு இன்னுமொரு பாஸ்ர்ட்போர்ட் எடுக்க வேண்டும். அதற்கு அலைந்து திரிந்து கொண்டிருந்தேன். அப்போது கோமூர்த்தியால் ஒழுங்கு செய்யப்பட்ட அறை நண்பன் நிலாந்தனுடையது. இந்திய பாஸ்ர்போர்ட் கையில் உள்ளது. ரிக்கற்றுக்கு காத்துக்கொண்டிருக்கும்போது என்னையும் நிலாந்தனையும், பக்கத்து அறையில் இருந்தவர்களையும் வெள்ளவத்தை பொலிஸ் கைது செய்துவிட்டார்கள். என்னட்டை ஒரு அடையாள அட்டையோ, நிரூபிக்க வேறு ஆவணங்களோ இல்லை. நண்பன் நிலாந்தன் அப்போதுதான் இயக்க பொறுப்பில் இருந்து விடுபட்டு கொழும்பில் இருந்து வேறு

எங்கையாவது போவமா என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார். நடுங்கிப்போனேன். இரவு ஒன்பது மணி போல பிடித்தார்கள். அன்று இரவு முழுவதும் கண்விழித்து பொலிஸ் சிறையில் வாடிக்கொண்டு இருந்தேன். என்னை விட்டாலும் நிலாந்தன் பாடுதான் கஸ்ரம் என்று எண்ணினேன். ஆனால், நிலாந்தனை விசாரித்துவிட்டு மதியம் அவரின் அப்பாவுடன் அனுப்பிவிட்டார்கள். எனக்கு மூன்றுமாதம் மறியல் என்று மணிக்கூட்டையும், மோதிரத்தையும் வாங்கி வைத்துக்கொண்டார்கள். ஐந்து மணிக்கு றக் வரும். ஏதோவொரு மறியலின் பெயரைச் சொல்லி அங்கே போகவேண்டும் என்றார்கள்.

நண்பர் கோமூர்த்தி ஒழுங்கு செய்த ஒரு எஸ்பியின் உதவியுடன் மறியலுக்கு செல்ல முதல் வெளியே வந்தேன். இரண்டு நாளில் சென்னைக்கு செல்ல

வெளிக்கிட்டுவிட்டேன். கோமூர்த்திதான் கொழும்பு விமான நிலையத்திற்கு கூட்டி வந்தார். வெளிவாசலிலே பெட்டிகளை சோதித்து சேரனின் கவிதைக் கோப்பை எடுத்து “இது என்ன?” என்று உருட்டத் தொடக்கிவிட்டார்கள். நான் சிங்களமும், ஆங்கிலமும் தெரியாமல் தடுமாறிக்கொண்டு நின்றேன். என்னைச் சோதித்த அதிகாரிக்கும் பாவம் ஒரு மொழிதான் தெரியும். ஆனால் இதில் என்னவோ விஷயம் இருக்கு உள்ளுக்கு வா என்பது போல நின்றான். கோமூர்த்தி இங்கிலிஷிலும், சிங்களத்திலும் சத்தம் போட்டார். பிறகு என்னை விட்டுவிட்டார்கள். என்ன பேசினீர்கள் என்று கேட்டபோது சிங்கள ஆக்களிடம் இருக்கும் முக்கால்வாசி முற்போக்காளர்களின் பெயரைச்சொல்லி உன்னை டொராண்டோ யூனிவசிற்றி புரொபசர் என்றேன். பயந்திட்டான் என்றார்.

டொராண்டோ யூனிவசிற்றி புரொபசருக்கு ஏன் இங்கிலீஷ் தெரியாது என்று வீட்டுக்கு போய்தான் யோசித்திருப்பான்.

பின்னர் பம்பாய் விமான நிலையத்தில், மலையாள நம்பூதிரிகள் விமான நிலைய அதிகாரிகளிடம் விசாரணைக்கு உள்ளானேன். என்னுடைய கனேடிய றவல் பத்திரங்களை நம்பவில்லை. பத்து தடவைகளுக்கு மேல் பயணப்பைகளை சோதனை போட்டார்கள். இரண்டு விமானங்களை தவறவிட்டேன். பின்னர் விமான நிலையத்தில் நின்ற வெள்ளை கனேடியப் பெண்ணின் உதவியுடன் தப்பி கனடா வந்தேன்.

தேடகத்தில் சேரனின் “எலும்புக்கூடுகளின் ஊர்வலம்” என்ற கவிதைத்தொகுப்பை பெரும் எடுப்புடன் வெளியீடு செய்தோம். தேடகத்தின் கீழ் கட்டிடம் முழுக்கக் கூட்டம். யாரோ பேசியபோது

சேரன் மஹாகவியின் மகன் என்று சொல்ல எதிர்தரப்பு கவிஞர் ஒருவர் முதல் தடவையாக அந்தப் பெயரை கேள்விப்பட்டார் போல. அதென்ன மஹாகவி? நீங்களே பட்டம் கொடுத்து எங்களை பேக்காட்டுகிறீர்களோ என்று சத்தம் போட்டார்.

இல்லை அந்தப் பெயரில் தான் சேரனின் அப்பா எழுதினார் என்று விளங்கப்படுத்தியும் அவர் அடங்க மறுத்தார். ராஜினி திரணகவின் கொலையை எதிர்த்து சேரனின் கவிதைகளில் வரும் "நட்சத்திரங்களை சுட்டெரித்த இரவோ, அல்லது இருட்டோ" என்ற வரிகளை வாசித்து எப்படி நட்சத்திரங்களை சுட்டெரிக்கலாம் என குழம்பிக் கொண்டு நின்றார். இரண்டு பக்கத்தாலும் சேட்டு கைகளை மடித்து பெரிய கலவரம் உண்டாகும் சூழல் வந்தது. ஏதோ செய்து அடக்கி ஒருமாதிரி புத்தக வெளியீடு நடந்தது.

இவ்வளவு கஷ்டப்பட்டு சேரனின் கவிதைப் புத்தத்தை செல்வம் கொண்டுவந்தார் என்று யாருமே சொல்லவில்லை. நான் காலம் முழுக்க சண்டை பிடித்துக்கொண்டிருந்த பீக்கிங் சிவம் தான் பின்பு எல்லா இடமும் என்னை பெருமையுடன் சொல்வார், ‘ஆளுக்கு அரசியல் விளங்காவிட்டாலும் இலக்கியத்திற்காக எதையும் செய்வார்’ என.

**மு. தளையசிங்கத்தின் மீது உங்களுக்கு தனி ஈடுபாடு இருந்தது அல்லவா? அவரின் மொத்த படைப்புகளை தொகுத்ததில் உங்களுக்கு பெரிய பங்கு இருப்பதாக அறியக்கிடைக்கிறது. அந்த அனுபவங்கள் எப்படி?**

ஆரம்பகாலத்திலே மு.தளையசிங்கத்திடம் ஒரு விருப்பம் வந்துவிட்டது, தளையசிங்கம் மாக்சிஸத்தையும் கடந்து போகவேண்டும் என்று சொல்லியது, என்னுடைய

எண்ணத்தையும் யாரோ கதைக்கின்றானே என்று நினைத்தேன். சாப்பாடும் கிடைத்து விடுமுறையும் கிடைத்தால் போதும் ஒரு மனிதனுக்கு என்று அவர் சொன்னார். சாப்பாடும் கிடைக்கின்றது. இருக்க இடமும் கிடைக்கின்றது. ஒரு மாதம் விடுமுறையும் கிடைக்கின்றது. இவ்வளவும் மனிதனை திருப்திப்படுத்துமா? அந்த இடத்திலே தான் நான் அவரை பிடித்தேன். அடே இவன் புதிதாகச் சிந்திக்கின்றான்.

தளையசிங்கத்துடைய 'ஒரு தனிவீடு' நாவல் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் சம்பந்தப்பட்டிருக்கின்றது. தளையசிங்கத்திடம் பிரியம் வரும்போது நான் இங்கே மகாலிங்கத்தை வந்து சந்திக்கின்றேன். அவர் தளையசிங்கத்தின் சிந்தனைப் பள்ளியைச் சேர்ந்தவர். தளையசிங்கம் எழுதிய அனைத்தையும்

சேர்த்து வாசிக்க முடியாத நிலை. எல்லாம் சிதறியிருந்தது. அவரின் தம்பியான மு.பொன்னம்பலத்திடம், மொத்த எழுத்துகளையும் தொகுக்க வேண்டும், அதனை செய்யுங்கள் என்று ஆக்கினை கொடுத்துக் கொண்டிருந்தேன். “ஓம் செய்வமடா அங்கு எடுக்க வேண்டும், இங்கு எடுக்க வேண்டும்” என்று சொன்னார். “தேடி எடுங்கோவன், உங்கட காலத்துக்குள்ளே வராட்டா பிறகு செய்யேலாது” என்று நான் பிடிவாதம் பிடித்தேன். தேடியெடுத்த பின்னர், புத்தகமாக்கும் வேலையை நீ செய்யலாம் தானே என்று பொன்னம்பலம் சொன்னார். அது பெரிய வேலை. நான் ஒரு சாதாரணமான ஆள் என்று மறுத்தேன். செல்வத்திடம் அவ்வளவு வசதியும் இல்லை என்று மகாலிங்கமும் பொன்னம்பலத்திடம் சொன்னார். அதென்ன வசதி, புத்தகத்தை

விற்று எடுக்கிறது தானே. காலச்சுவட்டுடன் கதைப்போம் என்றார்.

சிவதாசன் என்னொரு நண்பர் இங்கு எனக்கிருக்கிறார். யாழ் நூலை பதிப்பித்தவர். அரசியல் இலக்கியம் என ஈடுபாடு கொண்டவர், கொஞ்சம் வசதியானவர், உதவிசெய்யும் நோக்கும் கொண்டவர். தளையசிங்கத்தின் புங்கிடுதீவுதான் அவரின் ஊரும்கூட. அவரைக் கேட்டேன். ஓம் என்றார். பொன்னம்பலத்தையும் மகாலிங்கத்தையும் சந்திக்கச் செய்தேன். அப்போதும் “ஏன் நீ செய்தால் என்ன?” என்று திரும்பவும் பொன்னம்பலம் கேட்டார். இல்லை நான் செய்யிறதால் உங்களுக்கு நட்டம் வரும் என்று தவிர்த்தேன். வெளிவந்த மு.தளையசிங்கத்தின் புத்தகம் எனக்கு திருப்தியாக இல்லை. இபோது நானே செய்திருக்கலாம் என்று கவலைப்படுகிறேன்.

பின்னர் பொன்னம்பலத்திடம் “நீங்கள் தளையசிங்கத்தைப் பற்றி ஒரு புத்தகம் எழுதுங்கள்; நான் போடுகின்றேன்” என்றேன். பொன்னம்பலமும் உற்சாகமாக எழுதிவிட்டார். அது எனக்கு பிடிக்கவில்லை.

தளையசிங்கத்தின் தொகுப்பு நான் ஆசைப்பட்டேன் தவிர வேறு எதுவும் பெரிதான பங்களிப்பு இல்லை. நான் இதைவிட பெரிதாக நினைத்தேன். வெளிவந்த புத்தகமும் நட்டம் என்று கண்ணனும், சிவதாசனும் சொல்கிறார்கள்.

**சுந்தரராமசாமி, சி.மோகன், ஜெயமோகன், வெங்கட் சுவாமிநாதன் போன்ற எழுத்தாளர்களுடன் நெருங்கிய நட்பு உங்களுக்கு இருந்திருக்கிறது. ஈழ அரசியல் போராட்டம் சார்ந்து அவர்களுக்கு என்ன பார்வைகள் அந்தரங்கமாக இருந்திருக்கின்றன? உங்களால் அவர்களின்**

**கருத்துகளில் செல்வாக்குச் செலுத்த முடிந்திருக்கிறதா?**

நான் இதில் முதல் கண்டது சுந்தர ராமசாமியைத் தான். அவரது படைப்புகளை வாசித்துவிட்டு சந்திக்க ஆர்வமாக இருந்தேன். அப்போது கலிபோர்னியாவில் சுந்தர ராமசாமி தங்கியிருந்த விடயத்தை பத்பநாப ஐயர் என்னிடம் சொன்னார். அவரிடம் தொலைபேசி இலக்கம் வாங்கி தொடர்பு கொண்டு பேசினேன். தெலைபேசியில் சுந்தர் ராமசாமி நேர்காணல் வைத்தார். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்? நீங்கள் யாரை வாசித்தீர்கள்? என்னை எப்படி வாசித்தீர்கள்? நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? எல்லாம் சொன்னபிறகு வரச் சம்மதித்தார். அவருடன் தங்கி நின்று உரையாடினோம். நான் அவரை விடுதலைப்புலி சார்பானவர் என்று நினைத்தேன். ஆனால், அவர் அப்படி

இல்லை. அவர் பொதுவாக ஈழ மக்களது போராட்டத்தை ஆதரிக்கின்றவராக மட்டும் இருந்தார்.

ஜெயமோகன் 2001 ஆம் ஆண்டு இங்கு வரும்போது பெரிதாக அரசியல் பேசவில்லை. அவர் தன்னுடைய அனுபவத்தைத் தான் எங்களுடன் பகிர்ந்தார். அ.யேசுராசாவினுடைய கட்டுரையை மொழிபெயர்த்து அதனால் சிக்கல்பட்டவர்.

வசந்தகுமார் என்பவர் பிரபாகரனுக்கு நெருக்கமானவர். அவர் ஜெயமோகனுக்கு நெருக்கமானவர். அப்போது ஜெயமோகன் அதிகமாக உச்சரிக்கின்ற பெயர் தேவசாயகுமார், வசந்தகுமார், திலிப்குமார். நாங்கள் என்னவோ தெரியவில்லை அந்த நேரம் கடுமையான புலி எதிர்ப்பு மனநிலையில் இருந்தோம். புலிகளின் உச்ச காலக்கட்டம். இப்படி போனால்

ஜனநாயம் இல்லாமல் போய்விடும் என்று பேசிக்கொண்டிருந்தோம். எங்களுடைய பாதிப்பு அவர்களை பாதித்திருக்கலாம்.

ஜெயமோகன் அடிப்படையில் பழகுவதற்கு நற்புக்கினியவர். அவருடன் எந்த விடயத்தையும் கதைக்கலாம். அரசியலை விட்டு விட்டு கதைத்தாலும் கதைப்பார். சினிமாவைப் பற்றி கதைத்தாலும் கதைப்பார். நல்ல நகைச்சுவையாக கதைக்க வேண்டுமானாலும் கதைத்துக்கொண்டிருப்பார். சுந்தர ராமசாமியில் எனக்கு பெரிய மரியாதை, ஆசிரியருடன் பேசுவது போல் பேசுவேன். ஆனால், ஜெயமோகனுடன் ஒரு நண்பர் என்ற வகையில் கதைக்கலாம். மிக அன்பான ஆள்.

கொற்றவை என்ற நாவலை யார் எழுதியிருக்க வேண்டும். ஒரு தமிழ் தேசியவாதி எழுதியிருக்க வேண்டும்.

அந்தப் புத்தகத்தை பார்த்தால் இவரை விட ஒரு தமிழ்தேசியவாதி இருக்க முடியாமா என்று தோன்றும். ஏழாவது உலகம் வாசித்தீர்களானால் யாரோ ஒரு இனியில்லையென்ற அடித்தள மக்களின் வாழ்வியலைப் பேசுகின்ற ஒருவர் தான் அதை பற்றி எழுதவேண்டும் என்று தோன்றும். அவரை எந்த வகையில் நான் வைத்திருக்கின்றது? ஜெயமோகன் நாகர்கோவிலோ எனக்கு தெரியவில்லை. யாழ்ப்பாணத்து ஆட்கள் போல பழைய நண்பர்கள் போல் தான் எனக்கு மனதில் பதிந்திருக்கின்றது.

**புலம்பெயர் இலக்கியம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து அதனுடன் இருக்கிறீர்கள். இன்று அதன் போக்கு எப்படி இருக்கிறது?**

புலம்பெயர்ந்த இலக்கியம் என்று சொல்ல முன்னரே நாங்கள் வந்து விட்டோம். அதாவது

புலம்பெயர்ந்த இலக்கியம் அல்லது புகலிட இலக்கியம் என்ற சொற்கள் வந்ததல்லாவா. அது எங்களுக்கு பின்பு தான் வந்தது. இந்த புலம்பெயர் இலக்கியம் எப்படி செல்லும் என்று முன்னம் யோசிக்கும்போது நான் நினைத்தேன், கனடா தமிழ் இலக்கியம், பிரான்ஸ் தமிழ் இலக்கியம் அப்படி மாறும் என்று. இன்று நான் உறுதியான முடிவுக்குள் வந்துவிட்டேன், எல்லாமே தமிழ் இலக்கியம் என்ற ஒன்றுக்குள்ளே வரும். சுந்தர ராமசாமி 1991-இல் என்னிடம் சொன்னார், “இன்னும் பத்து வருடத்துக்குள் யோசித்துப்பாருங்கள் செல்வம் இவ்வளவு பேர் தமிழ் வாசிப்பார்களா? உங்களுடைய பிள்ளைகள் எல்லாம் தமிழ் படிக்குமா? ஒரு கொஞ்ச நாளைக்குத்தான் நீங்களும் எங்களைப் போல் ஆட்களைக் கூப்பிடுவீர்கள். கூட்டம் வைப்பீர்கள்” என்று. ஆனால், இன்றைக்கு

சொல்லி முப்பது வருடங்கள் ஆகிவிட்டன. இன்றைக்கு என்றுமில்லாதவாறு எனக்கு நம்பிக்கை இருக்கிறது இது தொடரும் என்று.

இந்த நேரத்தில் யோசித்துப் பாருங்கள், தமிழ் இலக்கியத்தில் தமிழ்நாட்டு என்று சொல்லப்படுகின்ற பெரிய பரப்புக்கு நிகராக ஈழத்தமிழ் ஆட்கள் எழுதுகின்றார்கள். அதிலும் குறிப்பாக புலம்பெயர் ஆட்கள் நிறையப்பேர் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். நான் புத்தகக்கண்காட்சி செய்யும் போது நக்கலடித்தார்கள். ஒரு இரண்டு மூன்று வருடம் செய்யலாம். பிறகு யார் வாங்கப்போகின்றார்கள் என்று. ஆனால் ஒவ்வொரு முறையும் வாங்குகின்றார்கள். இப்போது இங்கு தமிழ் நாட்டில் இருந்து தகவல் தொழில்நுட்ப துறையில் வேலை பார்க்கின்ற பெடியங்கள் வருகின்றார்கள். போனமுறை புத்தகக்கண்காட்சியில் அவர்கள் நாலைந்து

பேர் வந்து புத்தகங்கள் வாங்கிக்கொண்டு போனார்கள். வாசிப்புச் சூழல் நம்பிக்கை தருகிறது.

**எழுதித் தீராப் பக்கங்கள், சொற்களால் சுழலும் உலகம் புத்தகங்கள் தன்வரலாற்று கதைகளாக இருந்தாலும் அதனைச் சொல் முறையில் இருக்கக்கூடிய வசியம் புனைவு எழுத்தாளரிடம் இருக்ககூடியது. உங்களிடம் நாவலை எதிர்பார்க்கலாமா?**

அப்படி ஒரு திட்டம் எதுவும் போட்டு நான் செய்வதில்லை. நான் மற்றையவர்களைத்தான் பார்க்கின்றேன். நல்லாய் எழுதுகிறான் என்று நினைத்து மெலிஞ்சி முத்தனுக்கு பின்னாலே திரிவேன். நல்ல நாடகப்பிரதிகள் தந்த ஜெயகரனை கதை எழுது என்று கலைப்பேன். எழுது எழுது என்று டிசே.தமிழனை வதைப்பேன். தமிழிலக்கியத்துக்காக ஒருவருக்கொருவர்

பக்கபலமாக இருக்க வேண்டும் என்றுதான் நினைப்பேன்.

கவிதை என்றால் என்னவென்று தெரியாத காலத்தில் அவ்வப்போது கவிதை எழுதிவிட்டு விட்டுவிட்டேன். பின்னர் காலம் இதழ் செய்ய ஆரம்பித்தேன். தாய்வீட்டு பத்திரிகை ஆக்களோடு சிநேகிதம் ஏற்பட, எனக்கு கூத்தில் ஆர்வம் இருக்கின்றபடியால் அதைச் செய்வோம் என்று கேட்டதால் ஒரு ஐந்தாறு கூத்தும் சேர்ந்து செய்தோம்.

கருணாவோடு தேநீர் குடிக்க வந்த இடத்தில் சும்மா பாரிஸ் கதைகளை சொல்லிக்கொண்டிருக்கையில்
தான் அவன் சொன்னான், “இதைச் சொல்லிக்கொண்டிருக்காமல் எழுதுங்கள் அண்ணை” என்னுடைய மொழி இப்போது சரிவராது என்றேன். எனக்கு வேறு ஒருவரைப் பார்த்து எழுதுவது சரிவராது. எனக்கு

வெட்கமாயிருக்கும். நீங்கள் சொல்வதைப் போல் எழுதுங்கள் நான் பார்க்கிறேன் என்றான். எழுதிக்கொடுத்தேன், அவன் தலைப்பையும் மாற்றி திருப்பித் தந்தான். உங்களுடைய மொழி சரியாயிருக்கின்றது. இந்த இந்த இடங்களில் சில விஷயங்களைச் சேருங்கள் அல்லது வெட்டுங்கள் என்று சொன்னான். அது வெளியாகியவுடன் தாய்வீட்டுக்கு பெரிய பாராட்டுக்கள் வந்தன. நான் ஆறாவது கட்டுரையுடன் விட்டு விட்டேன். இவ்வளவு தான் என்னிடம் இருந்தது என்று சொன்னேன். உண்மையில் தாய்வீடு பத்திரிகையும், அதன் ஆசிரியர் திலீப்குமாரும் இல்லாவிட்டால் நான் எழுதியிருக்க மாட்டேன்.

ஒருமுறை தண்ணியடிக்கும் போது கருணா கேட்டான் “அண்ணை பாரிசில் குளிக்கிறதுக்குப் பிரச்சினை இருக்காமே” என்று. பரிஸில குளிக்கிறதுக்கு பிரச்சினை

இருந்தது. வெளியில் தான் போய் குளிக்க வேண்டும். “ஓமடா குளிக்கிறதுக்கு பிரச்சினை தான்”. என்று சொல்லி என்னுடைய வீட்டில் நடந்த ஒரு சம்பவத்தைச் சொன்னேன். என்னுடன் அறையில் பங்கிட்டு இருந்தவர்களில் ஒரு பெடியன் சொன்னான், தன்னுடைய நண்பன் ஒருவன் திருமணம் முடித்தவன். அவனுக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று. கூப்பிடுங்கோ என்று சொன்னோம். அழகான பெண்ணும் ஒரு பெடியனும் வந்தார்கள். சாப்பிட்டுவிட்டு தண்ணியடித்துக் கொண்டிருந்தோம். அந்தப் பெண் washroom போகப் போகின்றேன் என்று சொல்லிவிட்டு அங்கு சென்று திடுக்கிட்டு திரும்பிவந்தாள். இங்கே shower இருக்கின்றது என்று ஆச்சரியப்பட்டாள். இது யாருடைய வீடு என்று கேட்டா, என்னைக் காட்டி இவருடைய அறை தான் என்று யாரோ சொன்னார்கள்.

அந்தப் பெண் சிறிது நேரத்தில் “நீங்கள் வேலை செய்கின்றீர்களா?”, என்று கேட்டாள். “ஓம்” என்று சொன்னேன். “திருமணம் முடித்துவிட்டீர்களா?” என்று கேட்டாள். “வீட்டிலே பேசினம், வயதும் தாண்டுகிறது. ஆனால் ஒரு பெண்ணை கூப்பிட்டு வாழுகின்ற மாதிரி பாரிஸ் நிலவரம் இல்லை என்று சொன்னேன். அந்தப் பெண்ணுக்கு கொஞ்ச நேரத்தில் புதுக்கணவனுடன் ஏதோ சச்சரவு வந்து விட்டது. புருசனை நோக்கி”நீ ஏன் என்னை திருமணம் செய்தாய்? இவருடைய அறையாம் இது. இவருக்கு வேலையும் இருக்கு. இவருக்கு திருமணம் செய்யப் பயமாம். நீ ஏன் என்னை திருமணம் செய்தாய். குளிக்கிறதுக்கு நான் படும் பாடு தெரியுமா? ஒரு மெற்றோவும் இரண்டு பஸ்சும் எடுக்கவேண்டும்” என்றார். அந்த அறை அவர்களை இரண்டாக்கி விட்டது. அதைச்

சொன்னவுடன் அண்ணை நீங்கள் எழுதுங்கள் இதை என்று சொன்னான். இதுக்குள்ளே நாலைந்து விஷயங்களைச் சேர்த்து எழுதுவது தானே. அதை எழுதி வரவேற்பு பெறப்பெற, எழுத எழுத ஞாபகங்கள் வந்தது. அப்படிதான் அது நிகழ்ந்தது.

அந்த புத்தகம் வருவதற்கு சயந்தன்தான் காரணம். நான் இதை இந்தியாவில் வெளியிடவேண்டும் என்று நினைக்கவில்லை. சயந்தனுக்கு யாரோ சொல்லியிருக்கின்றார்கள். சயந்தன் எங்கேயோ இருக்கின்றார். சயந்தன் என்னைக் கேட்டார். எனக்கு வசந்தகுமாரை எவ்வளவு காலமாகவோ தெரியும். வசந்தகுமாருக்கு கொடுப்பம் என்று சயந்தன் சொன்னார். நான் சயந்தனுக்கும் சொன்னேன்.. இது எடுபடுமோ என்று தெரியவில்லை. மொழிநடை வித்தியாசமாக

இருக்கின்றது” என்று. நீங்கள் முதலில் கொடுங்கள் என்று சயந்தன் வாங்கி தமிழினி வசந்தகுமாரிடம் கொடுத்தார். அவர் படித்துவிட்டு மிக நன்றாக உள்ளது என்று போனில் சிலாகித்து பாராட்டினார். அந்த நேரத்தில் கவனிக்கப்பட்டு பாராட்டுகளைப் பெற்றுத்தந்தன.

இப்போ ஒன்று எழுதுகின்றேன். அது நாவலாக வருமோ அல்லது இதே தொடர்ச்சியாக வருகுதோ என்னவென்று தெரியவில்லை. நாவல் எழுதுவதற்கு விரிவும் ஆழமும் என்னிடம் வரும் என்று நான் நினைக்கவில்லை.

**‘கட்டிடக் காட்டுக்குள்ளே’ கவிதை இப்படி முடியும். “எனதூரில் என் மகனுக்கு பாரிசில் வாழ்ந்த கதை சொல்வேன்” அதனூடாக இந்த புலம்பெயர் வாழ்க்கை தற்காலிகமானது. சில ஆண்டுகளில் நாடு சென்று வாழ்வேன் என்ற**

**விருப்பம் எல்லோரிடம் இருந்திருக்கின்றது என்று புரிந்துகொள்ள முடிகிறது. பலருக்கு தனிநாடு என்ற கனவாக இருந்திருக்கும். ஆனால் நடந்து முடிந்தது வேறொன்று. இன்று உங்கள் மகள் உங்களிடம் என்ன சொல்கிறார்?**

என் இரண்டு மகள்களுக்கும் ஊரில் போய் வாழவேண்டும என்ற ஏக்கம் இருக்கின்றது. “இந்தக் குளிருக்குள்ளே ஏனப்பா நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்?” என்று கேட்டவை. அவர்களுக்கு யுத்தம் தெரியாது. வேறு நாட்டு கஸ்ரங்களும் தெரியாது. இங்கே குளிர் என்பதை வைத்துக்கொண்டு சொல்கின்றார்கள். இது எவ்வளவு ஒரு அருமையான நாடு.

எனக்கு சாகும்போது அங்கே செத்தால் நல்லது என்ற எண்ணம் இருந்தது. ஆனால், இலங்கையையில் வாழ்வது என்றால் வெறுப்பாக இருக்கின்றது. நான் விட்டுட்டு

வந்த இடத்தைத் தானே யோசிப்பேன். இங்கால பொன்னு மாமி, அங்கால பொன்ராசா மாமா, அங்கால அவை, இங்கால இளம்வயதில் பார்த்த பெண்கள் இப்படித்தானே நாங்கள் நினைப்போம். இப்போது அது தலைகீழாக போய் விட்டதே. அது வேறுமாதிரி போய்விட்டது. பலதடவை ஊர் போய் வந்துவிட்டேன். பதினெட்டு குடிகளும் நாய்களும்தான் எங்கள் குறிச்சியில் உலாவித் திரியினம்.

நான் என்னுடைய ஊருக்கே ஒரு அந்நியன் போல தான் போகின்றேன். என்னுடைய அம்மா காலத்து ஆட்களும் இல்லை; என்னுடைய காலத்து ஆட்களும் இல்லை. எனக்கு பிறகுக்கு பிறகு வந்த ஆட்கள் தான் இருக்கின்றார்கள். அவர்கள் என்னை ஒரு புது ஆளாகத்தான் பார்க்கின்றார்கள்.

“நீங்கள் எப்படி தொலைக்காட்சி

இல்லாமல் இருந்தீர்கள்? அங்கேயிருந்து பொழுது போக்க என்ன செய்வீர்கள்?” என்று பிள்ளைகள் கேட்பார்கள். அதை விளங்கப்படுத்த என்னால் முடியாது. அவர்களாலும் கற்பனை செய்ய முடியாது.

அவர்கள் இங்கே உள்ள காலநிலையை வைத்துக்கொண்டு அங்கு போகலாம் என்று நினைக்கின்றார்கள். மனைவியின் ஊர் கொஞ்சம் அதே போல் இருக்கின்றது. என்னுடைய ஊர் முற்றாகச் சிதைந்து விட்டது. நாங்கள் எதிர்பார்த்தது, நினைத்திருந்தது வேறு. இங்கு உழைத்து கொஞ்சம் காசோடு வந்து எங்களுடைய வீட்டை கல்வீடாக கட்டி ஒரு நவீன வாழ்க்கை வாழுகின்ற ஒரு கனவு தான் அப்போது இருந்தது. இதனை நினைக்க யுத்தமும் வந்து விட்டது. இது எல்லாம் முடித்து ஊருக்கு போய் சந்தோஷமாய் இருக்க முடியும் என்ற கனவு இருந்தது.

என்னுடைய பிள்ளைகளுக்கு ஊருக்குப் போய் இருப்பது நல்லது என்று தான் நினைக்கின்றார்கள். அவர்கள் ஏன் அப்படி நினைக்கின்றார்கள் என்றால், அவர்கள் ஐரோப்பாவிலோ, இலங்கையிலோ, இந்தியாவிலோ வாழவில்லை. அங்கு வாழ்ந்து பத்து பேர் நெருக்கடி பெற்று வாழந்த மாதிரி பரிஸில் வாழ்ந்திருந்தால், மொழி தெரியாத இடத்திலவேலை தேடி பார்த்திருந்தால், பசியோட இரவில் சமைக்காமல் களைப்பாக படுத்திருந்தால் வேறொரு வாழ்க்கை புரியும். அவர்களுக்கு அது தெரியாது. அவை கறுப்பு வெள்ளையாகப் பார்க்கின்றார்கள். இடையிலே எவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. அன்றைக்கு அந்த கனவு இருந்தது. இன்றைக்கு போய் வாழலாம். ஆனால் ஊருக்குப் போய் யாருடன் வாழ்வது.

ஊருக்குள் ஒரு அந்நியன் போல் தான் போக வேண்டும்.

இலக்கிய வாழ்வு என்னை தத்து எடுத்துக் கொண்டது. இதனால் என் குடும்பத்திற்கு பெரிய துன்பங்களைக் கொடுத்தேன். ஒரு கூட்டத்தில் எனது மனைவிதான் எனக்கு பின்னுக்கு நிக்கிறவா, அவவின்ற தடையில்லாவிட்டால் 150 காலங்கள் ஆவது செய்து இருப்பேன். காலம் வெளியீடாக 24 புத்தங்கள் அல்ல 150 புத்தகங்கள் செய்து இருப்பேன் என்றேன். கூட்டம் முடிய நண்பர் ஜெயகரன் சொன்னார் ”தேவா அக்கா(என் மனைவி) இல்லாவிட்டால் செல்வத்தார் நடுரோட்டில் தான் நின்று இருப்பார் என்று. நண்பர்கள் சிரித்தார்கள். நான் செய்வது வரமோ சாபமோ என்று தெரியவில்லை; ஆனால், மிக மகிழ்ச்சியாக வாழ்கிறேன்.



...

## 3. கதையாக மாறும் காலம் -- செல்வம் அருளானந்தத்தின் நூல்களை முன்வைத்து: சுரேஷ் பிரதீப்

நவம்பர்/ டிசம்பர் 2020/விமர்சனம்

BY சுரேஷ் பிரதீப்

தமிழ் இலக்கியச் சூழலில் புலம்பெயர் இலக்கியத்துக்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டுள்ளது ஈழ இலக்கியமே. ஈழத்துக்கு வெளியே இயங்கும் படைப்பாளிகளின் ஆக்கங்களை புலம்பெயர்ந்தவர்களின் எழுத்து, புலம்பெயர் எழுத்து என்று இரண்டாகப் பிரித்து விட முடியும். வேறொரு தேசத்தில் காலூன்றி நிலை கொண்ட பிறகு நினைவு மீட்டல்களாக ஈழத்தை


எழுதித் தீராப் பக்கங்கள்
செல்வம் அருளானந்தம்
or Park, E

...

எழுதிப் பார்ப்பதை புலம்பெயர்ந்தவர்களால் எழுதப்படும் என்று வரையறுக்கலாம். இன்றுவரையிலான ஈழத்திலிருந்து குறிப்பிடத்தக்க நாவல்களை எழுதிய பல படைப்பாளிகள் இந்த வரிசையிலேயே வருகின்றனர். ஈழ நிலத்தையே எழுதிப் பார்ப்பதற்கு இப்படைப்பாளிகளிடம் அரசியல் சார்ந்த காரணங்களும் அகம் சார்ந்ந காரணங்களும் இருக்கின்றன. அப்பால் ஒரு நிலம் நாவலின் முன்னுரையில் குணா கவியழகன் ‘நீண்ட காலமாய் காத்திருந்து ஈழப்போரின் அழிமுகத்தை அதில் மக்களின் வாழ்வுப்பாடுகளை வாழ்வு கொண்ட மனங்களை எழுத முயலும்போது ஒரு பயிற்சி அவசியமெனப்பட்டது. தமிழ் திணைகள் அதிகம் கண்டு கொள்ளாத வாழ்வை எழுதுவதற்கு மொழிப் பயிற்சி மட்டுமல்ல, அதன் அழிமுகம் வரை வாழ்ந்து

கடந்தவன் என்ற வகையில் மனப்பயிற்சியும் அவசியமெனப்பட்டது. அந்தப் பயிற்சியாக இந்த நாவலை எழுத முயன்றேன். இது ஒரு நல்ல ஒத்திகையாக அமைந்தால் என் பயணத்திற்கு நல் வழி பிறக்கும் என நம்புகிறேன்' என்று நேரடியாகவே ஈழத்தை எழுதுவதன் காரணத்தைச் சொல்கிறார்.

ஈழ இலக்கியம் என்றதும் நினைவுக்கு வரும் ஆதிரை, கொரில்லா போன்ற நாவல்கள் கூட ஈழத்தையே பேசுகின்றன. அதிலும் குறிப்பாக இந்த நாவல்களில் தமிழர்களே பெரும்பாலும் இடம்பெறுகின்றனர். இரண்டு தலைமுறைகளுக்கு முன்னதாகவே தமிழ் உரைநடை இலக்கியத்தில் ஒரு சர்வதேசப் பார்வையை கொணர முயன்ற அ.முத்துலிங்கத்தை புலம்பெயர்ந்து வாழ நேர்ந்த முக்கியமான ஈழப் படைப்பாளிகள் தங்கள் முன்னோடியாகக் கொள்ளாதது சற்று

ஆச்சரியமாகவே இருக்கிறது.

அ.முத்துலிங்கத்தின் புனைவுகளை புலம்பெயர் இலக்கியம் என்ற வகைமைக்குள் முழுமையாகக் கொண்டுவர இயலாது என்றாலும் அவருடைய எழுத்துக்களில் புலம்பெயர் வாழ்வை எழுதக்கூடியவர்கள் பின்பற்றிச் செல்லக்கூடிய பல கூறுகள் இருக்கின்றன. போரினால் நிகழ்ந்த புலப்பெயர்வின் காரணமாக முன்னோடித்தன்மை பெறுகிறவையாக கலாமோகனின் புனைவுகளைச் சொல்லலாம். இரண்டு வருடங்களுக்கு முன் இரண்டாயிரத்தில் வெளியான அவருடைய நிஷ்டை என்கிற புலம்பெயர் இலக்கிய வகைமையில் வரக்கூடிய சிறுகதைத் தொகுப்பு கிண்டிலில் வெளியானது. ‘காலூன்றுதலின் கசப்புகள்’ என்ற பெயரில் அத்தொகுப்புக்கு எழுதிய முன்னுரையில்

‘போரினால் தலைகீழாக மாறிப்போன சூழலால் தாக்குண்ட மனிதனின் கதைகளை இவை இருக்கின்றன. அத்தகையவனின் கசப்புகளும் விலக்கங்களும் சில இடங்களில் கவித்துவமாகவும் சில இடங்களில் அங்கதமாகவும் சில இடங்களில் எதார்த்தமாகவும் வெளிப்படுகின்றன. அதேநேரம் கதை சொல்லி மெல்ல மெல்ல மாற்றம் கண்டுவிட்ட வாழ்க்கைக்குள் தன்னை பொறுத்திக் கொண்டதையும் தனக்கே உரிய வகையில் ஒரு எதார்த்தத்தை உருவாக்கி அதற்குள் வாழப் பழகிக் கொண்டதையும் இக்கதைகளில் நாம் காண்கிறோம்.’ என்று குறிப்பிட்டிருந்தேன்.

செல்வம் அருளானந்தத்தின் எழுதித் தீராப் பக்கங்கள் மற்றும் சொற்களில் சுழலும் உலகம் என்ற இரு நினைவுக்குறிப்பு நூல்களையும் நிஷ்டை தொகுப்புடன் ஒப்பிடலாம். நிஷ்டை

கலாமோகன் புலம்பெயர் வாழ்வில் தன்னைப் பொறுத்திக்கொள்ளும் காலத்தில் எழுதப்பட்ட கதைகளைக் கொண்ட நூல். புதிய கலாச்சாரம் அளிக்கும் அதிர்ச்சியும் வாழ்வு குறித்த நிச்சயமின்மையும் வெளிப்படும் மனதின் கதை. ஆனால் செல்வத்தின் எழுதித் தீராப் பக்கங்கள் ஒரு கால இடைவெளிக்குப் பிறகு இலங்கையில் இருந்து பிரான்ஸுக்கு வந்ததையும் அங்கு மெல்ல நிலைகொள்வதையும் பேசும் நூல். சாகசங்களும் ஆபத்தும் நிறைந்த வாழ்வை எப்படிக் கடந்தோம் என்று பல இடங்களில் இந்நூல் வியக்கிறது. சொற்களில் சுழலும் உலகம் பிறரின் அனுபவங்களை நூலாசிரியர் கேட்கும் விதத்தில் அமைந்துள்ளது.

இவ்விரு நூல்களின் பொது அம்சம் மற்றும் முக்கியமான பலமென உரையாடலைச் சொல்ல வேண்டும். பொதுவாக பத்தி

எழுத்துக்கள், அனுபவத் தொடர்கள் போன்றவற்றில் அலுப்பேற்படுத்தும் அம்சம் எழுதுகிறவரின் எண்ண ஓட்டம் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுவதுதான். புனைக்கதைப் பாத்திரங்களுக்கு இச்சிக்கல் இல்லை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக சிந்தித்துச் செல்லும். ஆனால் அனுபவக்குறிப்புகளில் மாற்றமில்லாத ஒரு தன்னிலை வந்து அமர்ந்து விடுகிறது. அது தொடர்ந்து பேசும்போது இயல்பாகவே சலிப்பு ஏற்படும். செல்வம் இந்த நூல்களில் வட்டார நடையில் அமைந்த உரையாடல்கள் வழியாக அந்தக் குறைபாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறார். இவ்விரு நூல்களுமே பெரும்பாலும் ‘நினைவுபடுத்திக்கொள்ளுதல்’ என்ற உத்தியையே பெரும்பாலும் பயன்படுத்துகின்றன. ஒரு சம்பவம் அதைத் தொடர்ந்து வரும் நினைவுக்கோவை என்றே

பெரும்பாலான பகுதிகள் எழுதப்பட்டுள்ளன. ஆனாலும் எழுதிக் தீராப் பக்கங்களில் செல்வம் இலங்கையில் இருந்து ரஷ்யா வழியாக பிரான்ஸ் வருவது பாரிஸில் மெல்ல மெல்ல கால் பதிப்பது என்றொரு சித்திரம் உருவாகி வருகிறது.

பல இடங்களில் ஒரு சம்பவம் மாறி நடந்திருந்தாலும் வாழ்க்கை மாறிப்போகும் அபாயங்களை எதிர்கொள்கிறார். பெல்ஜியத்தில் இருந்து பிரான்ஸுக்கு செல்லும்போது ஒரு செக்போஸ்டில் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இன்னொரு சோதனைச் சாவடி வழியாக ‘தற்செயலாக’ உள்நுழைகிறார். விமான நிலையத்தில் தூய்மைப் பணியாளராக வேலைக்குச் சேரும்போது ஒரு பிரான்ஸ் பெண்மணி வலிய வந்து உதவுகிறார். பிரான்ஸில் இருந்து நார்வேவுக்கு ரயிலில்

செல்லத் தீர்மானித்து இடையே ஒரு நாட்டில் பிடிபட்டு அது என்ன நாடென்றே தெரியாமல் விடுதலை ஆகிறார். இதுபோன்ற கள்ளத்தனங்களின் சுவாரஸ்யமும் சாகசமும் நூல் முழுவதுமே விரவி இருக்கின்றன.

குகன், ஆசைத்துரை, ‘அங்கிள்’, பாலன் என நினைவில் தங்கும்படியான எண்ணற்ற மனிதர்கள் நூல் முழுவதுமே விரவி இருக்கின்றனர். 1983ல் இலங்கையில் ஏற்படும் கலவரம் பாரிஸ் வரை பிரதிபலிக்கிறது. அந்தக் கலவரம் பற்றிய அத்தியாயத்தில் கூட ஒரு கசப்பான புன்னகையே பரவி இருக்கிறது. ஒரு பாண்டிச்சேரி தமிழர் சிங்களர் என்றால் ஆப்பிரிக்கர் போல இருப்பார் என்று நினைக்கிறார். மொரீஷியஸைச் சேர்ந்த ஒருவரை அவர் ‘நிறத்தைக்’ கொண்டு சிங்களர் என்று எண்ணி தமிழர்கள் துரத்தித்

துரத்தி அடிக்கின்றனர். பத்து ஆண்கள் நெருங்கிக் குடியிருக்கும் அறையில் வந்து தங்க நேரும் பெண் அவளுடன் அவர்களுக்கு ஏற்படும் தோழமை என ஆச்சரியமேற்படுத்தும் இடங்களும் நூலில் உள்ளன.

எழுதித் தீராப் பக்கங்கள் நூலினை வாசிக்கும்போது ஐரோப்பா குறித்தும் அதன் ஜனநாயகத்தன்மை குறித்தும் ஒரு சித்திரம் கிடைக்கிறது. பெரிய குற்றங்கள் செய்யாமல் கள்ளத்தனமாக நாடு தாண்டுகிறவர்களை தண்டிக்காமலோ சிறிய தண்டனைகள் கொடுத்தோ விரட்டி விடுகின்றனர். முழுக்கவும் நிலங்களால் இணைக்கப்பட்ட நிலப்பரப்பு என்பதால் நாடு தாண்டுதல் என்பது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. புலம்பெயர்ந்தோர் எங்கும் தங்க இயலாமல் அலைந்து கொண்டே இருக்கிறார்கள்.

நூலில் ஒரு இடத்தில் ஒரு பிரெஞ்சு காவலதிகாரி சொல்வதாக இப்படி வருகிறது.

‘இந்த சிறீலங்கன்கள் பற்றி எனக்கொண்டுமே விளங்கல்லை. இந்த சிறீலங்கன்கள் ஜெர்மனியில் இருந்து பிரான்சுக்கு போறாங்கள், பேந்து பிரான்சிலையிருந்து ஜெர்மனிக்கு போறாங்கள், பிறகு ஜெர்மனியிலை இருந்து ஹொலாண்டுக்குப் போறாங்கள். என்ன பிரச்சினை கண்டு விளங்கல்லை. இனிமேல் பிரான்சுக்கும் ஜெர்மனிக்கும் ஒரு யுத்தம் வரும் எண்டால் அது உங்களாலைதான்’

நூலின் இன்னொரு இடத்தில் வேறினை தொலைத்தவர்கள் நிலையில்லாமல் அலைவது பற்றியும் வருகிறது.

இன்ன சார்புநிலை என்றில்லாமல் நூல் முழுக்க அரசியல் இயக்கங்கள் பகடி

செய்யப்படுகின்றன. ரஷ்யாவில் கோழியை சரியாகப் பொரிக்கவில்லை என்று சத்தம் போடுகிறவரிடம் அவர் நண்பர் ‘இது கம்யூனிச நாடு. சத்தம் போடாதீர்கள்’ என்று எச்சரிக்கிறார். அவர் ‘கம்யூனிச நாடென்றால் சரியாக கோழியை வேக வைக்க மாட்டார்களா’ என்று கேட்கிறார்.

செல்வம் சொந்த மண்ணை விட்டுப்பிரிந்து பாரிஸ் வந்து அதனை தன் சொந்த ஊராக எண்ணுமளவு நெருக்கம் கொண்ட பிறகு மீண்டும் ‘களவாக’ மனைவி மற்றும் கைக்குழந்தையான மகளுடன் கனடா செல்வதுடன் எழுதித் தீராப் பக்கங்கள் முடிகிறது. எண்பதுகளின் தொடக்கத்தில் இருந்து தொன்னூறுகள் வரையிலான ஒரு காலகட்டம் ஒரு அகதியின் பார்வையில் இந்த நூலில் பதிவாகிறது.

சொற்களில் சுழலும் உலகம் பெரும்பாலும்

இறுதி யுத்தத்துக்கு பிறகு இலங்கையில் அல்லது வேறொரு நாட்டில் சந்திக்க நேர்ந்தவர்களின் அனுபவங்களை பதிவு செய்யும் வகையில் எழுதப்பட்டுள்ள நூல். இறுதிப்போரின் கொடூரங்கள் உலகம் முழுக்க பரவியிருக்கும் ஈழத் தமிழரிடத்தில் ஏற்படுத்தி இருக்கும் சலனங்களை பதிவு செய்வது என்ற ‘நோக்கம்’ வந்து விடுவதாலோ என்னவோ எழுதித் தீராப் பக்கங்களில் உள்ள கட்டின்மையையும் கள்ளமின்மையையும் இந்நூலில் காண முடிவதில்லை. சம்பவ விவரிப்புகளில் இயல்பாகவே ஒரு புனைவுத்தன்மை கூடிவிடுகிறது. அதன் காரணமாகவே நாம் வாசிப்பது புனைவா அல்லது அனுபவ விவரிப்பா என்ற அந்தர நிலை தோன்றி விடுகிறது. புனைவினைப் பொறுத்தவரை இந்த ‘மயக்கநிலை’ ஒரு வெற்றிகரமான உத்தி. யுவன் சந்திரசேகரின்

ஆக்கங்களில் இந்த மயக்கநிலை ஆச்சரியமேற்படுத்தும் வாசக இடைவெளியை உருவாக்கி அளிக்கவல்லது. ஆனால் ஆவணத்தன்மை கொண்ட அனுபவப்பதிவு என்ற நோக்கத்துடன் எழுதப்படும் நூல்களில் இதுபோன்ற மயக்கநிலைகள் எதிர்விளைவையே ஏற்படுத்தும் என நினைக்கிறேன். மண்கடன், கானாள நிலமகளைக் கைவிட்டுப்போனானை போன்ற பதிவுகள் ஒரு நாவலாக எழுதப்படுவதற்கான விரிவையும் அடர்த்தியையும் கொண்டுள்ளன.

இரண்டு நூல்களையும் ஒன்றாக யோசித்து நினைவுமீட்டும்போது இந்த நூல்களில் சம்பவங்கள் தொடர்ந்து கதையாக மாறியிருப்பதை அவதானிக்க முடிகிறது. கதை என்பதே மாற்ற முடியாத கடந்தகாலத்தின் மீதான நம் மனதின் எதிர்வினையாகவே

தோன்றியிருக்கக்கூடும் என நினைக்கிறேன். அப்படிக் கொண்டோமெனில் செல்வம் இந்த நூல்களில் கடந்து போன காலத்தினை தன்னுடைய ஆர்வமூட்டக்கூடிய மொழியின் மூலம் நினைவுமீட்டுவதன் வழியாக அக்காலத்தை கதையாக மாற்றுகிறார் என்று சொல்லலாம். ஈழ இலக்கியத்தின் ஒட்டுமொத்த பரப்பில் மிகக்குறைவாக இடம்பெறும் புலம்பெயர் இலக்கியம் என்ற வகைமையில் செல்வத்தின் எழுதித்தீராப் பக்கங்கள் ஒரு முக்கியமான நூல். புத்தாயிரத்துக்கு முந்தைய நினைவுப்பதிவு என்ற வகையில் முன்னோடித்தன்மை கொண்டதும் கூட. இந்நூலில் இடம்பெறும் அரசியல் பகடிகள் இன்று பகடிகளாக மட்டுமே தொனிக்கும் அளவுக்கான ஒரு காலத்திற்கு வந்து சேர்ந்துவிட்டோம். இந்நிலையில் இந்நூலின் மீதான விவாதம்

செல்வத்தைப்போன்ற முதல் தலைமுறை புலம்பெயரிகள் தங்களுடைய அனுபவத்தை பதிவு செய்வதற்கு தூண்டுதலாகவும் அமையும்.

## 4. `மலைகளை வரையும்' ஆர்வத்துடன், `மலைகளை பேசவிடுங்கள்' எனும் குரலாக ஒலிக்கிறது: `மல்லியப்பு சந்தி': அசுரா நாதன்

நவம்பர்/ டிசம்பர் 2020/விமர்சனம்

BY அசுரா நாதன்

மயில்வாகனம் திலகராஜா, திலகர், மல்லியப்புசந்தி திலகர் என விளிக்கப்பட்டு வருபவர். இலக்கியவாதியாகவும், அரசியல் -செயல்பாட்டாளராகவும், பதிப்பாளராகவும் இயங்கிக்கொண்டிருப்பவர். பொதுஜன ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் அதிகமாக அறியப்படுவர். மலையக



...

மக்களின், சமூக-பண்பாட்டு-கலாசார-அரசியல் பிரதநிதித்துவத் தலைமுறைகளின் தொடர்ச்சியாகவும் இயங்கி வருபவர். இவரது இரண்டு நூல்கள் அண்மையில் வெளிவந்திருக்கிறது. இவரது ‘மல்லியப்பு சந்தி’ எனும் கவிதை நூல் 2007ம் ஆண்டில் வெளிவந்திருக்கிறது. எனவே இவரது இந்த மூன்று நூல்களின் வாசிப்பும், அவைகளின் கலை இலக்கிய, அரசியல் உள்ளடக்கப் புரிதலின் வெளிப்பாடாகவே இக்கட்டுரை தொடர இருக்கிறது.

**‘முதல் அறிமுகம்’**

மல்லியப்பு சந்தி திலகர் குறித்த மேற்படியான தகவல்களும், அறிமுகமும் இலக்கிய-அரசியல் செயல்பாட்டுத்தளத்திற்கு புதிதான ஒரு விடயம் அல்ல, என்பதையும் நான் அறிவேன்.

தற்போது பன்முக செயல்பாட்டாளர், அரசியல்வாதி என அறியப்பட்டும் பேசப்பட்டும் வருபவர் எனக்கு மல்லியப்புசந்தி திலகர் எனும் இலக்கியவாதியாகவே அறிமுகமானார். 2013ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 41வதுஇலக்கியச் சந்திப்பின்போதே அந்த அறிமுகம் நிகழ்ந்தது. பின்பு நண்பரானார். 2014ல் கொழும்பில் இருந்து என்னை மலையகத்துக்கு அழைத்துச்செல்லும் வழியிலேயே இவர் இரண்டும் கலந்தவர் என்பதையும் அறிந்துகொண்டேன். மிதவாத-தீவிரவாத-வன்முறை அரசியல் செயல்பாட்டு விளைவுகளின் அனுபவத்தால் வெறுப்புற்றிருக்கும் எனக்கு இவர் ஒரு அரசியல் செயல்பாட்டாளராகவும் ‘கலந்திருக்கிறார்’ எனும் தகவலும் தெளிந்தது.

சிறுவயதில் மலையகத்திற்கு சென்ற தருணங்களில் அதன் பசுமை நிரம்பிய

நிலக்காட்சிகளாலும், மலை உச்சியிலிருந்து நுரைத்து வழிந்து கொண்டிருக்கும் நீர்-கோலங்களாலும், மனம்- உடல் நனைந்து திளைத்ததருணங்கள் அப்போது. அது ஒரு ‘சுற்றுலாப் பயணியின் குதூகலமாக’ திளைத்திருந்த ஞாபகம்.

இலங்கைவாழ் சிறுபான்மைச் சமூகங்களின் சமூக- அரசியல் உரிமை மீட்பிற்காக போராடும் அவசியமும் முதன்மைத் தகுதியும் கொண்ட சமூகமாக இருப்பது மலையக சமூகமே. இலக்கியச் சந்திப்பில் திலகர் எனக்கு அறிமுகமானபோதே திலகரிடம் நான் முன்வைத்த கோரிக்கை “என்னை மலையகத்திற்கு அழைத்துச்சென்று பல இடங்களையும், அங்குவாழ் சமூகங்களையும் நான் பார்ப்பதற்கு உதவமுடியுமா?” என்பதே.

2013ல் குடும்பத்துடன் எம்மை அழைத்து

சென்றபோதும், 2014ல் என்னை தனியாக மலையகம் அழைத்துச் சென்றபோதும் பல இடங்களையும் அங்குவாழ் மக்களையும் மலையக தொழிற்சங்க முன்னோடிகளின் வரலாறுகளையும் அதன் நினைவுத் தடங்களையும் பார்த்து புரிந்துகொள்வதற்கு உதவியாக இருந்தார். அதன் அனுபவமாக அப்போதே மூத்த மலையக எழுத்தாளரிடம் எமது ‘வடு’ பத்திரிகைக்காக ஒரு நேர்காணலை மேற்கொண்டிருந்தேன். அது இவ்வாறு ஆரம்பித்தது:

**அசுரா**: தொடர்ச்சியாக இரண்டு தடவை மலையகத்திலுள்ள பல தோட்டங்களுக்கு செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அங்குள்ள பல தொழிலாளர்களை சந்தித்து உரையாடிப் பெற்ற அனுபவமும், நேரடியாக அங்குநான் பார்த்துப் பெற்ற அனுபவமும் மிக அதிர்ச்சியானவை.

மேற்குலக நவீன தொழில் உற்பத்தி வளர்ச்சிகள் காரணமாக பல்வேறு நாடுகளும் அப்பயன்பாட்டை பெற்றுவருகின்றது. அந்தவகையில் இலங்கையிலும் தொழில் அடிப்படையில் பல்வேறு மாற்றங்களும், தொழிலாளர்களின் மேம்பாடுகளும் நிகழ்ந்து வருகின்றது. ஆனால் மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு காலம் சுழலவில்லை. இலங்கைக்கு புலம்பெயர்ந்த 19ம்நூற்றாண்டு காலத்திலேயே வாழுகின்றார்கள். அவர்களது வாழ்விடமும், தொழிலாளர்களுக்கான உரிமைகளிலும் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை. இப்போது உங்களுக்கு நாள் கூலி இல்லைத்தானே மாதசம்பளம்தானே எனக்கேட்டபோது அவர்கள் என்னைப் பார்த்து சிரிக்கிறார்கள். இந்த மக்களை இழுத்துவந்த ஆங்கில ஆட்சியாளர்களிடம் இவர்கள் மத்தியில்

எந்தவித மாற்றமும் நிகழவில்லை எனக் கூறினால், அவர்களே நம்புவார்களா என்பது சந்தேகமாகவே எனக்குத் தோன்றுகின்றது.

எனக்கு என்ன கேட்க தோன்றுகிறதெனில் கால மாற்றமே நிகழாத வகையில் அடக்குமுறைக்குள்ளாகும் இத்தொழிலாளர்களின் நிலமையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல முடியாததற்கான அடிப்படைக்காரணம் என்ன?

**தெளிவத்தை ஜோசப்**: “பொதுவாகவே மலையகம் சம்பந்தமாக அரசாங்கங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை விசித்திரமானது. வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் பிரதிநிதிகளை மலையகத்திற்கு அழைத்துச் சென்று சில செழிப்பான இடங்களை காண்பித்து பாருங்க, இதேபோல்தான் இந்த மக்களும் வாழ்கின்றார்கள் எனக்காட்டி அவர்களை திருப்திப்படுத்தி

அனுப்பிவிடுவார்கள். இப்ப திலகர்தானே உங்களை அழைத்துச்சென்று பாருங்க! தோட்டங்களைப் பாருங்க! அவங்க லயத்தைப் பாருங்க! இதில என்ன மாற்றம் நிகழ்ந்திருக்கு! எனக் காட்டியிருக்கிறார். தொழிற்சங்க வாதிகள்கூட இதே வழிமுறையைத்தான் பின்பற்றுகிறார்கள். அவர்களும் வெளிநாட்டு பிரதிநிதிகளை அழைத்துச் சென்று”வெள்ளையடிக்கப்பட்ட” இடங்களைத்தான் காட்டுவார்கள். அதை மீறி அம்மக்களின் நிஜமான வாழ்க்கைச் சூழலை அழைத்துச் சென்றுகாட்டுவதற்கு யாரும் இல்லை. நீங்கள் கூறியதுபோல் ஆங்கில ஆட்சியாளர்கள் இந்த நிலமையைப் பார்த்தால் ஆச்சரியப்படுவார்கள் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. காரணம் அவன் ஆச்சரியப்பட மாட்டான். அவன்தானே இந்த மக்களை இங்கு அழைத்து வந்தான்

என்பது வரலாறு சொல்லும் உண்மை அல்லவா? உலகவரைபடத்திலேயே கண்ணுக்குப் புலப்படாதவகையில் இருந்த இலங்கைத் தீவை பிரகாசப்படுத்தியதின் பிரதான பங்காளிகள் மலையக மக்கள்தான். அப்போது இலங்கையின் பொருளாதாரத்தில் 60-80 வீதமானவருமானத்தை பெற்றுக் கொடுத்தவர்கள் இந்த மக்கள்தான். ஆனால் தேயிலை போற்றப்பட்டதுபோல், புகழப்பட்டதுபோல் அதற்கு காரணமான மலையக மக்கள் போற்றப்படவில்லை என்பதுதானே உண்மை. இந்தமக்களை அழைத்து வந்த காலத்தில் இருந்து பல ஆண்டுகளாக கல்வி அறிவு மறுக்கப்பட்டே வந்தது. இதுகுறித்து பிரித்தானிய ஆட்சியின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டது. அவர்களும் இங்குள்ள வெள்ளைத்துரைமார்களிடம்

அக்கோரிக்கையை முன்வைத்தபோது, துரைமார்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. நாம் அவர்களை இங்கு அழைத்து வந்தது எமக்காக உழைக்கவே தவிர அவர்களை நாம் படிப்பிப்பதற்காக அல்ல என மறுத்து விட்டார்கள்.

1930களின் பிற்பாடே கல்வி கற்பதற்கான உரிமை கிடைத்தது. இந்த விடயங்களை நான் எனது படைப்புகள் ஊடாகவும் வெளிப்படுத்தியிருக்கிறேன். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபோது எங்களுக்கும் மிகப்பெரிய பரிசு தந்தார்கள். அதுதான் வாக்குரிமையை பறித்தது. அதுதான் சுதந்திரத்திற்காக எமக்கு கிடைத்த பரிசு. மலையக மக்கள் வாக்களித்து பாராளுமன்றம் சென்றவர்கள் பெரும்பாலும் இடதுசாரிகளாக இருந்தார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்! டி.எஸ்.

சேனநாயக்கா முதலாவது பிரதமராக வந்தபோது ஒன்றைக்கூறினார். அதாவது நாம் கஸ்டப்பட்டு, சிரமப்பட்டு வாங்கிய சுதந்திரத்தை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைப்பதற்கு நாங்கள் ஒருபோதும் இணங்கமாட்டோம் என இந்திய விரோதக் கருத்தையும் முன்வைத்தார். அந்த கருத்தின் மூலம் இந்திய வம்சாவளியினரான எங்களை (மலையக மக்களை) வாக்குரிமையற்றவர்களாக்கினர். இதுபோன்ற பல தகவல்களை பெறுவதற்கு நாம் குமாரி ஜெயவர்த்தனா அவர்களின் நூலை படிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம். கல்வி கற்க தடைவிதித்து, பாடத்தைப் பார்க்காதே படத்தைமட்டும் பார். கேள்விகள் கேட்காதே சொன்னதை மட்டும் செய் என்று தடைவிதிக்கப்பட்ட எம்மக்கள் மத்தியிலிருந்து இன்று கணிசமானவர்கள்

படித்து பட்டதாரிகளாக வந்துள்ளனர். எனவே மாற்றங்கள் நிகழவில்லை என்று கூறமுடியாது. லயத்தில பிறந்த தெளிவத்தை ஜோசப்பை பிரான்சில் இருந்து பார்க்க நீங்கவாறீங்க. கனடாவிற்கு வரும்படி அழைக்கிறார்கள். ஜனாதிபதியும் அழைத்து பரிசும் தந்திருக்கிறார்தானே என்றால் அது மாற்றமும் வளர்ச்சியும்தானே. இருப்பினும் உங்கள் பார்வையில் தோட்டத் தொழிலிலும் அவர்கள் வாழ்க்கையிலும் எந்தவித மாற்றமும் நிகழமுடியாது இருப்பதற்கு காரணம் அரசியலும், தொழிற்சங்கங்களும்தான் காரணம் என்பேன். தன்நலம் ஒன்றே பெரிதெனக்கருதும் அரசியல் வாதிகளுக்கே வாக்களிக்கும் துரதிர்ஸ்டமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இங்கு எம்மை அழைத்து வந்து விட்டு, எம்மை அனாதரவாக விட்டுச்சென்ற நிகழ்வை என்னால்

மறக்கமுடியாது. நீ சுதந்திரத்தை கொடுத்து சென்றபோது எங்களுக்கான தீர்வையும் வைத்துவிட்டே சென்றிருக்கவேண்டும்”.

இதன் போது தெளிவத்தை ஐயாவிடம் கேட்கப்பட்ட மலையகப்பிரச்சினைகளை ஏன் சர்வதேசத்துக்கு எடுத்துச்செல்லவில்லை என்கிற எனது இக்கேள்விக்கு தானும் பதில் கூறவேண்டும் என திலகர் எமக்குள் நுழைந்து இவ்வாறு பதிலளித்தார்:

”அசுரா நீங்க மலையக மக்களின் நிலையை சர்வதேசமயப்பபடுத்துவது சம்மந்தமாக கேட்ட கேள்விக்கு நான் மேலதிகமாக சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன். முதலில ஒருவிசயம். நீங்க தனி நாடு கேட்டு அரசாங்கத்திற்கு எதிராக யுத்தம் செய்தபோது தமிழ் என்கிற அடையாளத்துடன்தான் வடகிழக்கு இயக்கங்களின் போராட்டங்கள் அமைந்தன.

இதை வைத்து அரசாங்கம் எங்கட தமிழ் வேற, உங்கட தமிழ்வேற என்றெல்லாம் பிரித்துப் பார்க்கவில்லை. யுத்தத்தின் விளைவு எல்லாத் தமிழருக்கும் ஒன்றாகவே அமைந்தது. இன்றும் கூட மலையக இளைஞர்கள் யுத்தத்தைக்காரணம் காட்டி சிறையிலடைக்கப்பட்டுள்ளார்கள். இதன்காரணமாகவே நாம் அதிகமாக பாதிக்கப்பட்டோம். குறிப்பாக எமது தலைமுறை 1980 களுக்குப்பின் ‘மலையகத் தேசியம்’ என்ற கருத்தியலைக்கூட முன்னெடுக்க முடியாத சூழ்நிலை உருவானது. நாங்கள் நாலுபேர் சேர்ந்து கூடி கதைத்தாலே நாங்கள் ஏதோ இயக்கம் தொடங்கிவிட்டோம் என்கிற பார்வைதான் ஆளும் வர்க்கத்துக்கு இருந்தது. அப்படி சமூகப் பண்பாட்டுத்தளத்தில் மலையகத்தில கூட இயங்க முடியாத சூழ்நிலையை

வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்ட யுத்த சூழல் உருவாக்கியது. அதிலயும் எங்களின் அடையாளம் தொலைந்தது.

அதற்கு முதல் தலைமுறைக்கு என்ன நடந்தது? பதினைந்து இலட்சத்தில் பாதித் தொகையை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அந்த நிலையிலும் எங்களின் அடையாளமும் பலமும் தொலைந்தது. 1963ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பில் இலங்கையில் இரண்டாவது அதிகளவான சனத்தொகையைக் கொண்டிருந்த நாங்கள் 1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்போது நான்காம் நிலைக்குத் தள்ளப்பட்டோம். இரண்டாம் நிலைக்குவந்த உங்களின் போராட்டம் எங்களை சர்வதேசம் என்ன, எங்களது பூர்விகமான இந்தியாவே கூடகண்டுகொள்ளாத ஒரு சூழ் நிலையை உருவாக்கியது. அதற்கும்


முந்தின தலைமுறைக்கு என்ன நடந்தது. வெள்ளைக்காரன் இலங்கைக்கு சுதந்திரத்தைக் கொடுக்கிறான். சுதந்திர இலங்கை எமது சுதந்திரத்தை பறித்தது. அதிலயும் எங்களின் குடியுரிமையும் அடையாளமும் தொலைந்தது. நாங்கள் எங்களது அடையாளத்துக்காகவும், வாக்குரிமைக்காகவும், நாளாந்த சம்பளத்துக்காகவும் என உடனடிப்பிரச்சினைகளுக்காகவும் உள்நாட்டில் தொடர்ந்து போராடிக்கொண்டிருக்க வேண்டிய சூழலில் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை சர்வதேசத்திற்கு எப்படி கூறுவது?. ஆனாலும் அதுகுறித்துசர்வதேசத்திற்கு சொல்லவேண்டிய கால கட்டம் இப்போதுதான் வந்திருக்கின்றது. இந்தியாவிற்கே

சொல்லவேண்டிய காலகட்டம் இப்போதுதான் வந்திருக்கின்றது.

தெளிவத்தையாரின் ‘விஸ்ணுபுரம்’ விருதினைக் கூட எமது பிரச்சினையை தமிழ் நாட்டிற்கு கொண்டுசெல்லும் ஒரு ஊடகமாகவே நாம் கையாள நேர்ந்தது. இப்போதெல்லாம் பேஸ்புக்கில் சொல்லுவதும் சர்வதேசத்திற்கு சொல்வது போலத்தானே. ஆனால் பான் கீ மூனுக்கு இவையாவும் தெரியப்போவதில்லையே! காரணம் அவர்தமிழ் பேஸ்புக்கில் இல்லைத்தானே. எனவேதான் அதற்கான அரசியலை நாம் கையில் எடுக்கவேண்டியுள்ளது”. (‘வடு’ இதழ் 22 மார்ச் 2015)

எனும் நூல்களால் காணும் மலையகம்

2014ல் தெளிவத்தை ஐயாவிடம்: ‘கால மாற்றமே நிகழாத வகையில்


மலைகளை வரைதல்
ஆங்கில நூல்களின் அறிமுகம்
மல்லியப்புசந்தி திலகர்
TIME will write A SONG for you
TEA & SOLIDARITY
பாக்யா
பதிப்பகம்

...

அடக்குமுறைக்குள்ளாகும் இத்தொழிலாளர்களின் நிலமையை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல முடியாததற்கான அடிப்படைக்காரணம் என்ன’? எனும் எனது ஆவலை, 2015ம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக திலகர் தெரிவுசெய்யப்பட்ட காலத்திலிருந்து தனது செயல்வடிவத்தின் ஊடாகவும் பூர்த்திசெய்து கொண்டிருப்பதைஅவதானிக்க முடிகிறது. அதன் வரலாற்று ஆதாரமாக பதிவு செய்யப்பட்டிருப்பது ‘மலைகளை பேசவிடுங்கள்’ எனும் நூல்.

இவ்வாறான வரலாற்றுப் பதிவுகள் என்பது மலையக சமூக அரசியல் செயல்பாட்டாளர்களுக்கு ஒரு புதிதானவிடயமும் அல்ல. இலங்கை அரசியல் இயக்கப்போக்கில் மலையக அரசியல் செயல்பாட்டாளர்களின்

தனித்துவம் என்பது, அவர்களில் கணிசமானவர்கள் கலைஞர்களாகவும் அரசியல் செயல்பாட்டாளர்களாகவும் இயங்கிக்கொண்டிருந்தார்கள், இயங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதே. மலையக சமூக அரசியல்செயல்பாட்டு முன்னோடிகளின் மரபுவழி தொடர்ச்சியாகவே திலகரின் நூல்களையும் இனம்காணக்கூடியதாக இருக்கிறது. இது மலையக அரசியலின் ஒரு கலாசார பண்பாட்டு மரபாகவே தொடர்கிறது. திலகரின் மூன்று நூல்களில் ‘மலைகளை வரைதல்’ எனும் நூலானது ‘மலைகளை பேசவிடுங்கள்’ ‘மல்லியப்பு சந்தி’ எனும் இரண்டு நூல்களிலும் இருந்து அடிப்படை வேறுபாடுகளைக் கொண்டிருக்கிறது.

‘மலைகளை பேசவிடுங்கள்’, ‘மல்லியப்பு சந்தி’ எனும் இரண்டு நூல்களிலும் திலகர்

மலையகத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார். மூன்றாவது நூலினூடாக மலையகத்தை ‘வரைவதற்கு’ முனைந்து கொண்டிருக்கிறார். பாரளுமன்ற பிரதிநிதித்துவ காலகட்டத்தில் அவருக்கு கிடைத்த வெளிநாட்டுப் பயணங்களூடாகவும், சந்திக்கும் நண்பர்கள் மூலமாகவும், அதற்கு முன்பே தனக்கு கிடைத்த நூல்களிலும் அவர் தனது நுண்ணியபார்வையூடாக மலையகத்தை தேடிக்கண்டு ‘வரைவதற்கே’ அவரது வாசிப்பு, முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை அவதானிக்க முடிந்தது.

‘அரசியல் விடுதலையுடனும்...(!)’, ‘கொரோனா சிறையிலும்’ வாழ்ந்த ஐந்து மாத காலத்துக்குள் தனக்குகிடைத்த, வழங்கப்பட்ட இருபது ஆங்கில நூல்களை வாசித்து அவைகளை தமிழில் அறிமுகப்படுத்தும் வகையில் ‘மலைகளை வரைதல்’ எனும் ஒரு

தொகுப்பாக வெளியிட்டிருக்கிறார். இது சம்பிரதாய பூர்வமான ஒருஅறிமுகப் பிரதி அல்ல.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் மாணவனாகவும் பயின்றதன் முதிர்ச்சியையும் இதில் காணக்கூடியதாக இருக்கிறது. திலகரின் ‘மல்லியப்பு சந்தி’ எனும் கவிதை நூலுக்கு எழுதிய பின்னுரையூடாக அறிமுக விமர்சனப்பயிற்சியை பேராசிரியர் கா. சிவத்தம்பி திலகருக்கு வழங்கியிருக்கிறார்: “விமர்சனத்துக்கு இரண்டு வகையான பணிகள் உண்டு. சற்று ஆழமாக சிந்திக்கின்ற பொழுது அவை இரண்டுமே நாணயத்தின் இரண்டு புறங்கள்தான். முதலாவது, எழுதப்படும் விமர்சனம் வாசகரை படைப்புக்கு ஆற்றுப்படுத்துவது, வழிநடத்துவது. இரண்டாவது அந்த படைப்பினுள்ளே கிடக்கும்

கிளர்வுத் தளங்களை, அவற்றின் அமைவை, அவை அப்படைப்பினை எவ்வாறு முழுமை செய்கின்றன அல்லது செய்யவில்லை என எடுத்துக் கூறுவதாகும்” எனும் தனது இலக்கிய விமர்சன ஆசானின் ‘மொழிப் பாதை’ வழியாகவே திலகரும் ‘மலைகளை வரைந்து’ பயணிப்பதாகப் புரிகிறது.

மலையக ஆளுமைகள் உட்பட மேலும் பலரால் எழுதப்பட்ட ஆங்கில நூல்களை அறிமுகப்படுத்துவதும், அதன் உள்ளடக்கங்களை வாசகர்கள் புரிந்து கொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி வரையப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படையாக புலப்படுகின்ற விடயம். ஆனால் மலையகம் புறக்கணிப்படுகிறதா, மலையகத்திற்கு நெருக்கமாக இருக்கிறதா, மலையகமும் அவதானிக்கப்படுகிறதா எனும் அவரது நுண்ணிய பார்வையில்

புலப்படும் ‘கிளர்வுத் தளங்களை’ அவரது அறிமுகப்பார்வையூடாக புரிந்துகொள்ள முடியும்.

‘மலைகளை வரைதல்’ நூலின் முதலாவது கட்டுரையான ‘காலம் உனக்கொரு பாட்டெழுதும்’ நூலின் அடிப்படை நோக்கம் ஆயுதப்போராட்ட அனுபவங்களை பிரதிபலிக்கும் படைப்புகளை மட்டுமே தொகுப்பதற்கான முயற்சியாக அறியமுடிகிறது. அதில் தனது கட்டுரை வருவதற்கான காரணம் எதுவாக இருக்கும் எனும் தேடலூடாக அந்நூலுக்கு ஒரு எதிர்மறை பார்வையை முன்வைக்க முனையவில்லை. அந்நூலின் நீண்ட அறிமுகக் குறிப்பில் தமிழ் பேசும் மக்கள் குறித்த விரிந்த பார்வை இருந்திருக்கிறதை திலகரின் பார்வையூடாக அறியமுடிகிறது. அதில் மலையகத் தமிழர்கள் உட்பட, வட-கிழக்கு

தமிழ் பேசும் மக்கள் குறித்த ஆய்வுகளும் இடம்பெற்றிருக்கிறது. அதில் எவ்வாறான உள்ளடக்கம் துலங்குகிறது என்பதை நாம் ஒவ்வொருதரும் வாசிக்கும்போதே அதனை புரிந்து கொள்ள முடியும். ஆனால் அதில் வெளிவந்த தனது கட்டுரையை திலகர் அந்த நூலுக்கான நேர்மறைப் பார்வையில் பலம் சேர்த்திருக்கிறார்.

அதிலுள்ள திலகரின் கட்டுரையானது ஆயுதப்போராட்ட அனுபவங்களைக் கொண்டதல்ல. அவர் 1983களில் வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தனது குடும்பமும் தானும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட அவலத்தை சித்தரிக்கும் ஒரு கட்டுரை அது. எதிர்ப்பு அரசியலையும் வெறுப்பு அரசியலையும் மூலதனமாகக் கொண்டு சிந்திக்கும் பார்வையில் இந்த நூல் எதிர்மறையாக விமர்சிப்பதற்கும்

வாய்ப்பிருக்கிறது. ஆனால் தான் மலையகத்தை சேர்ந்தவன், தனது கட்டுரையானது அந்த நூலின் அடிப்படை நோக்கத்திற்கு தவறாக இருக்கிறது என உணர்ந்து கொண்டிருப்பினும் அந்த நூலை முக்கியத்துவப்படுத்தும் நோக்கில் தனது கட்டுரையை அவர்களின் அறிமுகக் குறிப்போடு இணைத்து பார்த்திருக்கின்றார். காரணம் அந்த நூலுக்கான அறிமுகக் குறிப்பில் மலையக தமிழர்கள் பற்றிய பதிவுகளும் இருந்திருக்கிறது.

திலகரின் ஆங்கில மொழி ஆசிரியராக சி.எஸ்.காந்தி அவர்களை இந்நூலில் நினைவு கூர்ந்திருப்பினும் திலகரின் மொழி-ஆக்க பயிற்சிக்கு ஆசானாக சக்தி பால அய்யா அவர்களின் மொழி பெயர்ப்புக்களே நெருக்கமாக இருந்திருக்கும். இந்த நூலில் 'தேரும் திங்களும்' எனும் ஒரு

தமிழ்க் கவிதையை TEMPLE CAR AND THE MOON என மொழியாக்கப்பட்டிருக்கும் நிலையை அவதானித்திருக்கிறார். ஆங்கிலம் பேசமுடியாத எனக்கே இது புன்னகையை உதிர வைத்திருக்கிறதென்றால் ஆங்கிலப் புலமையுள்ள தழிழ் பேசுபவர்கள் வாய்கொட்டிச் சிரித்திருப்பார்கள்.

தனது ஆங்கில ஆசிரியரான சி.எஸ் காந்தி என்பவருக்கே ‘மலைகளை வரைதல்’ நூலுக்கான அர்ப்பணிப்பும் அஞ்சலியாகவும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திலகர் மூலமாக இந்த ஆளுமையை நானும் சந்தித்தேன். அவருடனான நீண்ட உரையாடலை பதிவும் செய்தேன். ஹட்டனிலுள்ள தோழர் லெனின் மதிவாணம் வீட்டில் நிகழ்ந்த ஆனந்தம் அது. சி.எஸ்.காந்தியும் மறைந்த அன்டன் பாலசிங்கம் அவர்களும் மிக நெருங்கிய நண்பர்கள் என்பதையும்

அப்போதே அறிந்துகொண்டேன். எனக்கோ அரசியல் பார்வையில் அன்டன் பாலசிங்கம் எதிர்மறையானவர். சி.எஸ்.காந்தியுடன் உரையாடும்போது நான் அன்டன் பாலசிங்கம் மீது சேற்றை அள்ளி அள்ளி வீசிக்கொண்டே இருந்தேன். சி.எஸ்.காந்தி தனது நண்பன் மீது நான் வீசிய சேற்றை (விமர்சனத்தை) கழுவிக் கழுவிக்கொண்டே இருந்தார்.

‘ஆபிரிக்க-ஆசியக் கவிதைகள்’ எனும் சிறு நூல் 1963ம் ஆண்டில் எழுதப்பட்டிருக்கிறது. இதில் உள்ளடங்கிய கவிதைகளில் இலங்கையை சேர்ந்த ஆறு கவிஞர்களின் கவிதைகள் பிரசுரமாகியிருக்கிறது. இதில் ஐந்து சிங்கள கவிஞர்களும் ஒரே ஒரு தழிழரது கவிதையும் வெளிவந்திருக்கிறது. அவர்தான் சி.வி.வேலுப்பிள்ளை. இவரது கவிதையின் முடிவை திலகர் இவ்வாறு மொழியாக்கம்

செய்துள்ளார்:

நாளொன்றின் எட்டு மணி நேரமுமாய்-ஏழு

நாளும் ஒரு வாரத்திலே-அவர்களின்

வாழ்க்கை ரத்தம் ஓடுவது

அந்த நிலத்தை அழகாய் ஆக்கிடவே!

யாருக்கோ சொர்க்கம் ஆகிடவே!

இந்த ஆபிரிக்க-ஆசிய கவிதை தொகுப்பின் உள்ளடக்கமானது மூன்றாம் உலகநாடுகளில் ஆதிக்கம் செலுத்தும்

ஏகாதிபத்திய மனப்போக்கினை விமர்சனத்திற்குள்ளாக்குவதும், அவ்வாறான செயலை கண்டிப்பதாகவும் கருதமுடிகிறது. இது ஆபிரிக்க-ஆசிய எழுத்தாளர்களின் ஒன்றியம் எனும் அமைப்பினூடாகவே வெளிவந்திருக்கிறது. அந்த அமைப்பின் செயலாளராக இருந்தவர் ரத்ன தேசப்பிரிய சேனாநாயக்கா. இந்த நூலை வாசித்து புரிந்து கொண்ட அனுபவத்தில் திலகருக்குள் ‘ஒப்பாரிக் கோச்சியின்’ அழுகுரல்கள் கேட்டிருக்கிறது. ஏகாதிபத்திய கருணையற்ற செயல்களை கண்டிக்கும் ஒரு அமைப்பினர் 1964க்குப் பின்பாக மலையக மக்களுக்கு நிகழ்ந்த அவலங்களை கண்டித்திருக்கிறார்களா? எனும் உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே இந்நூலின் அறிமுகத்தில் மல்லியப்பு சந்தி திலகரை இவ்வாறு

எழுதத்தூண்டியிருக்கிறது:

“இந்த எழுத்தின் வீச்சு பின்னாளில் இலங்கை போன்ற நாடுகளின் யதார்த்த அரசியலில் பிரதிபலிக்காமை, மறைமுகமாக ஏகாதிபத்திய நாடுகளிடம் அடிமைத்தனமாக செயற்படத் தொடங்கியமை இற்றைவரையான அரசியல் முன்னெடுப்புக்களின் சாபக்கேடுகளாயுள்ளது” என தனது விமர்சனத்தை ஒரு வகை மௌனமொழியில் கடந்து செல்கிறார்.

மைத்தரிரி ஜெகதீசன் என்பவரின் “தேயிலையும் தோழமையும்” எனும் நூலின் அட்டைப்படத்தினுள் மூழ்கிக்கிடக்கும் படிமங்களை மீட்டெடுக்கும் வல்லமை, மலையகப் பெண்களின் வாழ்வியல் துயரங்களை சுமக்கத் துணியும் மனங்களுக்கே சாத்தியமாகும். அதன்

உள்ளடக்க வலிமையை திலகரும் தொட்டுக்காட்டியே மைத்திரி ஜெகதீசனின் நூலை அறிமுகப்படுத்துகிறார்.

அனைவரும் அறிந்திருப்பீர்கள், பார்த்திருப்பீர்கள் இலங்கையில் புராதன ஓவியங்கள் சிகிரியா குன்றில் வரையப்பட்டிருப்பதை. குறிப்பாக அந்த பெண் ஓவியம். அந்த ஓவியத்திற்கான பெருமையும் புகழும் பேசப்பட்டுக்கொண்டே இருக்கிறது. மைத்திரி ஜெகதீசனின் நூலின் அட்டைப்படத்தில் அந்த ஓவியமானது தேயிலைக் கூடையை தோளில் சுமந்துகொண்டும் வயிற்றில் பிள்ளையை சுமந்துகொண்டும் தேயிலை கொழுந்தை கொய்து விரல் நுனியில் வைத்திருப்பதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த காட்சிப்படுத்தல் மூலமாக வெளிப்படுத்தும் உணர்வினை

சுமந்துகொண்டிருப்பவராலேயே அவ்வாறான ஓவியத்தை வரையமுடியும்.

ஹட்டனை பிறப்பிடமாகக் கொண்ட ஹனுசா சோமசுந்தரம் எனும் பெண்ணே இந்த ஓவியத்தையும் வரைந்திருக்கிறார். அது அவரது தாயினதும் பாட்டியினதும் கதையால், சோகத்தால் நிரப்பப்பட்டிருக்கும் ஓவியம். அந்நூல் குறித்த திலகரின் உள்ளடக்க விபரங்கள் அனைத்துமே மங்கலாகவும் அந்த அட்டைப்பட ஓவியமே அந்த நூலின் உள்ளடக்கத்தின் பிரகாசமாகவும் எனக்குள் ஒளிர்ந்தது. எம்மைப்போன்று திலருக்கு இதுவொன்றும் அதிர்ச்சியான விடயமல்ல. மலையக பெண்களின் ‘கூடைப் புராணத்தை’ திலகர் தனது ‘மல்லியப்பு சந்தி’ எனும் கவிதைத் தொகுப்பினூடாக பதிவு செய்திருக்கிறார்.

ஒரு மலையகச் சிறுமி தனது

பால்ய பருவத்தில் வீட்டு வேலைக்காக கொழும்பு நகருக்கு அழைத்துச் செல்வதும், பருவமடைந்து மலையகம் திரும்பிய வாழ்வை, ‘அடுப்புக்கு பயந்து நெருப்புக்குள்’ விழுந்த சோகமாக திலகர் ‘கூடைப் புராணம்’ எனும்

கவிதையில் பதிவு செய்திருக்கிறார்:

”.....

’ஐயாவு’ மாமன்

என்னை

கொழும்புக்குக்

கூட்டிப்போச்சு

அங்க

நோனாவும்

மாத்தையாவும்

நூறு (ஐ)அம்பது

கவிதையில்:

......

”ஏசு சுமந்த

பாவச்சிலுவையிலும்

பாரமான

கூடைச்சிலுவை

சுமக்கும் நீ

கொழுந்தெடுத்தது போதும்

உன் முதுகு

கூனல் விழுவதில்

இதுபோன்ற மலையக பெண்களின் வாழ்வியல் துயரங்களை மையப்படுத்திய வகையில் ஒன்பது கவிதைகள் பதிவாகியிருக்கின்றது. அவையாவும் மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள். இவைகளை புதுக்கவிதையா, நவீன கவிதையா எனும் ‘தரப்புள்ளி’ வழங்கும் மனநிலையிலா அவதானிக்க முடியும்? அவை மலையக மக்களின் ‘பாஷை’. அவர்களின் வாழ்வியலை உணர்வுகளால் உள்வாங்கும்போதே அந்த ‘பாஷை’ புரியும். அதனது இலக்கிய வடிவத்தின் செழுமையையும் மனம் ஏந்திக்கொள்ளும்.

எஸ்.முத்தையா என்பவரின் ‘தி இந்தோ-லங்கன்ஸ்’ எனும் படத்தொகுப்பு நூல் புகைப்படங்களூடாக மலையக வரலாற்றை சொல்வதாக திலகர் அறிமுகப்படுத்துகிறார். அதில் இலங்கையர்கள், இலங்கை தமிழர்கள்,

இந்திய தமிழர்கள் என்பதான வேறுபாடுகளை கேள்விக்குள்ளாக்கும் எஸ்.முத்தையாவின் பார்வை ஆய்வுக்குரியதொன்றே. இலங்கைவாழ் அனைவரும் இந்தியர்களே என்பதையும் எஸ். முத்தையா அவர்கள் வலியுறுத்துகிறார்.

இந்தியாவுடனான புவியியல் தொடர்பு பற்றிய வரலாற்று நுல்கள் பல வெளிவந்திருக்கிறது. மயிலை சீனிவேங்கடசாமி என்பவர் இவ்வாறான ஆய்வை மத-பண்பாட்டு-கலாசாரா தொடர்புகளோடு ஒருங்கிணைத்து ‘இலங்கை வரலாறு’ எனும் நூலை எழுதியுள்ளார். இந்தியாவாக இருந்த நிலப்பரப்பு எவ்வாறு பிரிந்ததென்பதும் இலங்கையின் தென்பகுதிகளில் தெய்வ வழிபாடுகளில் காணும் ஒற்றுமைகள் போன்ற பல்வேறு அம்சங்களை வரலாற்று

நூல்களோடும், சங்க-இலக்கிய பாடல்களின் துணையோடும் ஆய்வு செய்திருக்கிறார் மயிலை சீனிவேங்கடசாமி. திலகர் அறிமுகப்படுத்திய எஸ்.முத்தையாவின் பார்வையும் அதை நோக்கியதாகவே இருக்கிறது.

‘இலங்கை வெகுஜன ஊடகவியலாளர்கள் எனப்படுபவர்கள் மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை புரிந்துகொள்ளாமலேயே தன்னிடம் கேள்விகளை கேட்டுவருகிறார்கள் என்கிறார் திலகர். அவ்வாறானவர்களுக்கு யோகேஸ்வரி விஜயபாலன் எழுதிய ’முடிவுறா சமத்துவமின்மை’ எனும் நூலை பரிந்துரைக்கிறார். மு.நித்தியானந்தனால் திலகருக்கு வழங்கப்பட்ட இந்நூலின் ஆசிரியர் மலையகத்தை பிறப்பிடமாகக் கொண்ட யோகேஸ்வரி விஜயபாலன்

ஒரு சட்டத்தரணியாக லண்டனில் கடமையாற்றுகிறார். பெருந்தோட்டத்துறை வளர்ச்சிக்காக அழைத்துவரப்பட்ட இந்திய தமிழர்களின் வருகையோடும் அதற்காக அழைத்து வரப்பட்ட அம்மக்களுக்கு இதுவரைகாலமாக இழைக்கப்பட்ட அநீதிகளை ஆய்யு செய்யும் ஒருநூலாக திலகர் இதனை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

இவ்வளவுகாலமாக வாழ்ந்து, அம்மலையக மண்ணோடு வேர்கொண்டிருக்கும் அம்மக்களின் பிரஜா உரிமைமீதான விவாதங்கள் தற்போதும் நடந்து கொண்டிருக்கிறது. அதனையும் ஆய்வுக்குட்படுத்தியிருப்பதோடு, லண்டனுக்கு சென்று ஆறு மாத காலத்துக்குள்ளேயே தனக்கு லண்டன் பிரஜா உரிமை கிடைத்த தகவலையும் யோகேஸ்வரி விஜயபாலன் தனது நூலில் பதிவு செய்திருப்பதாக

திலகர் அக்கட்டுரைக்கு அழுத்தம் கொடுத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

சுவாரசியமாக இருந்தது மூன்று பெண்களின் முயற்சியில் தொகுக்கப்பட்ட ‘நினைவுக்காப்பகம்’ எனும் நூலின் அறிமுகம். இலங்கை சுதந்திரமடைந்த எழுபது ஆண்டுகளின் நினைவாக எழுதப்பட்ட ஒரு பக்க கதைகள். அதன் படைப்பாளிகள் தமது நினைவுப் பொருட்களை மையப்படுத்தியே அக்கதைகளை எழுதியிருக்கிறார்கள். கயிறு, கோப்பை, சிலேட்டு பென்சில், போன்ற தாம் சேகரித்து வைத்திருக்கும் பொருட்களின் படங்களையும் அவைகள் மீதான தமது நினைவுகளை பகிர்ந்து கொள்ளும் வகையில் ஒரு பக்கத்தில் எழுதப்பட்ட கதைகளாம். 1957ம் ஆண்டு தனது மாணவன் ஒருவன் பிரபாகரன் என்பவருக்கு கன்னத்தில் சிலேட்டு

பென்சிலால் குத்தி ஓட்டை விழுத்தினான் என்பதை பராக்கிரம நிரியெல்ல ஒரு பக்க கதையில் எழுதியிருக்கிறார். 1957ம் ஆண்டளவில் இந்தப் பெயருக்கு ஏதும் முக்கியத்துவம் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை என்பதாக ஒரு ‘உள்குத்து அரசியலை’ பராக்கிரம நிரியெல்ல அதில் நிரப்பி(எழுதி)யிருக்கிறார்.

மலையக ஆளுமைகளில் எம்.வாமதேவன் மிக அவதானிக்கப்பட வேண்டியவரே. இவரது ஆங்கில நூலான ‘தமிழ்நாட்டில் தாயகம் திரும்பிய இலங்கையர்கள்’ எனும் நூலையும் திலகர் அறிமுகப்படுத்தியுள்ளார். இவரது சொந்த வாழ்வில் ஏற்பட்ட இழப்புகள் துயரங்கள் உட்பட இவரே தாயகம் திரும்பி அலைக்கழிக்கப்பட்ட வாழ்க்கையை பதிவு செய்திருப்பதாக அறியமுடிகிறது. ஆ.ராமச்சந்திரனால் தொகுக்கப்பட்ட

‘மலையகமும் மறுவாழ்வும்’ எனும் நூலிலுள்ள ‘தோட்டத்தொழிலாளர்களின் பொருளாதாரநிலை’ எனும் வாமதேவனின் பயனுள்ள ஒரு கட்டுரையையும் முன்பு வாசித்திருந்தேன்.

திலகருக்கு கிடைக்கப்பெற்ற இவ்வாறான ஆங்கில நூல்களை எழுதியவர்கள் கணிசமானவர்கள் மலையகத்தை சேர்ந்தவர்களாக இருப்பினும் யாழ்ப்பாண தமிழ் அறிஞர்களால் எழுதப்பட்ட நூல்களையும் அவதானிக்க முடிகிறது. குறிப்பாக மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைந்திருப்பதென்பதற்கும், மலையகத்தின் பல்கலைக்கழகம் என்பதற்குமான வேறுபாடுகள் குறித்து சிந்திக்க தூண்டும் கலைஞர் ஜெய்சங்கரின் ‘ஒரு கட்டியக்காரனின் பேரிகை’ எனும் நூலின் உள்ளடக்க கரிசனையைப்

புரிந்து கொள்ள முடிகிறது. மலையகம் குறித்து இவ்வாறான கரிசனைக் கொண்ட யாழ்ப்பாண அறிஞர்களும், கலைஞர்களும் இருக்கிறார்கள், இருந்திருக்கிறார்கள் என்பது சற்று ஆற்றுப்படுத்தும் மனநிலையை தருகிறது.

‘இலங்கையின் பெருந்தோட்டங்களில் சமூக அபிவிருத்தியும் வறுமையும்’ எனும் நூலை எழுதிய கீதபொன்கலன் மலையகம் சாராதவர்களில் தனித்துவமானவர் என்கிறார் திலகர். பெருந்தோட்டத்துறையானது அரசுடமையாக்கப்பட்டு மீண்டும் தனியாரிடம் பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் மலையக மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களில் மாற்றங்கள் நிகழ்ந்ததேயில்லை எனும் ஆய்வினை முன்வைத்து, கீத பொன்கலன் பல்வேறு தகவல்களுடன் எழுதியிருப்பதாக திலகர் அறிமுகப்படுத்துகிறார். இவ்வாறு கீத

பொன்கலன் முன்வைக்கும் கேள்விகளுக்கும் அதையொட்டி எழுந்த பிரச்சனைகளையும் தனது பாராளுமன்ற பிரதிநிதித்துவ காலத்தில் எதிர்கொண்டு விவாதித்து வந்ததாகவும் திலகர் பதிவு செய்கிறார். இந்த நூலினாலும் மலையக மக்களுக்கான அரசியல் பிரதிநிதிநியாக செயல்பட்ட அனுபவத்தினூடாகவும் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருகிறார்! மலையக சமூகமானது இதுவரையில் இலங்கையில் வாழும் ‘மக்களாக’ கருதப்படவில்லை! அவர்கள் தொடர்ந்தும் அங்கு‘மனிதர்களாகவே பாவிக்கப்பட்டு’ வருகிறார்கள் என்பதாக !

இவ்வாறான ‘மக்கள்’, ‘மனிதர்கள்’ எனும் பிரித்தறியும் பார்வையிலுள்ள கருத்துப் புரிதலென்பது மிக ஆழமாக சிந்திக்கத் தூண்டுவதாகும். ஒரு நாட்டின்

அதிகாரத் தலைமைத்துவமாக இருந்தாலும், ஒரு இனத்தின் அதிகாரத்தை கோரும் தலைமைத்துவமாக இருந்தாலும் அவை இன-மொழி-மத-சாதிய வேறுபாடின்றி அனைவரையும் ‘மக்களாக’ ஒருங்கிணைக்கும் பார்வையைக் கொண்டிருக்கிறதா! அல்லது தன்னோடு இணைந்திருக்கும் வேறுபட்ட பிரிவினரை, ‘மனிதர்களாக’ கருதுகிறதா என்பதைக்கொண்டே ஒரு அதிகாரத் தலைமைத்துவத்தின் காருண்யத்தையும், கருணையையும் புரிந்துகொள்ளமுடியும். எனவேதான் இலங்கையில் அரசியல் அதிகாரத்தை கோரும் எந்த தரப்பும் மக்கள் மீது கருணை கொண்ட ஒரு தலைமையாக இருந்ததில்லை என்பதையே திலகரின் ‘மக்கள்’, ‘மனிதர்கள்’ எனும் பிரித்தறியும் பார்வையின் உட்கருத்துபுலப்படுத்துகிறது.

கனடாவில் வாழும் கருணாகரன் எனும்

நண்பரிடம் இருந்து திலகருக்கு கிடைத்த ‘புதையல்’, எஸ்.நடேசன் அவர்களால் எழுதப்பட்ட ‘இலங்கை மலையகத் தமிழ் மக்களின் வரலாறு’ எனும் ஆங்கில நூல். இது தமிழிலும் மொழியாக்கம் மேற்கொள்ளும் முயற்சி நடப்பதாக திலகர் கூறுகிறார். திலகரின் இந்நூல் குறித்த உள்ளடக்க அறிமுகம் அதை வாசிக்கும் ஆவலை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நூல் மீதான தனது வாசிப்பு அனுபவத்தை விபரித்து வரும்போது, அப்போதுதான் திலகருக்கும் ஏ.இளஞ்செழியனுக்குமான உறவுகளையும், இளஞ்செழியனை திலகர் கௌரவப்படுத்திய நிகழ்வுகளையும் அறியக்கூடியதாக இருந்தது.

இதுவரை திலகருடன் பழகியபோதும், அவருடன் மலையகத்திற்கு செல்லும் ஒவ்வொரு தருணத்திலும் இளஞ்செழியனுக்கும் தனக்குமான

உறவை எனக்கு சொன்னதாக ஞாபகம் இல்லை. சி.வி.வேலுப்பிள்ளை, வெள்ளையன், நடேசய்யர் போன்ற ஆளுமைகளையும் அவர்களது நினைவுத் தடயங்களையும் பற்றியே தொடர்ந்து என்னுடன் உரையாடியிருக்கிறார். இந்த நூலின் அறிமுகத்தினூடாகவே இளங்செழியனுக்கும் திலகருக்குமான உறவையும், நெருக்கத்தையும் அறிந்துகொண்டேன்.

இலங்கையில் 1930களில் இருந்து செயல்பட்ட பெரியார் அமைப்புக்களின் தோற்றத்திற்கும், அவைகளோடு இளஞ்செழியன் செயல்பட்ட வரலாறு பெரிதாக பேசப்படுவதில்லை. குறிப்பாக வட-கிழக்கு தமிழ் சூழலில் இளங்செழியன் பெரிதாக இன்னும் அறிமுகமாகவில்லை. ஏ.இளஞ்செழியன் எழுதிய ‘பெரியார்

முதல் அண்ணாவரை’ எனும் புத்தகமும், பெ.முத்துலிங்கம் எழுதிய ‘எழுதாத வரலாறு’ எனும் புத்தகமும் இலங்கை திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றை பதிவு செய்த புத்தகங்கள். இதில் இளஞ்செழியன் மேற்கொண்ட தீவிர சமூக-அரசியல் செயல்பாட்டிற்கும் திலகரின் தீவிர அரசியல் செயல்பாட்டிலும் பல ஒற்றுமைகள் உள்ளதை என்னால் அவதானிக்க முடிந்தது. அதனை மிதவாத-தீவிரவாத அரசியல் கோட்பாட்டுப் பின்புலத்தின் ஊடாக ஆய்வு செய்யவேண்டும். அதனை இறுதியில் பார்க்கலாம்.

‘மலைகளை வரைதல்’ எனும் தொகுப்பிற்காக திலகர் பயன்படுத்திய இருபது நூல்களின் ஆசிரியர்களாக சிங்களவர்கள், ‘தமிழர்கள்’, மலையகத் தமிழர்கள் என பலதரப்பட்டவர்கள் இருந்தபோதும் அனைவரின் நூல்களிலும்

மலையக சமூகத்தின் வாழ்வியல் பேசப்பட்டிருக்கும்.

மலைகளை வரைதல் நூலின் இறுதிக்கட்டுரையாக இருக்கும் கே.எஸ்.சிவகுமாரனின் நூலான ‘சேகரிப்புகள்’ மலையகத்தை உள்ளடக்கமாக கொண்டிராதபோதும் அனைத்தையும் மலையக சமூக-வாழ்வியலோடு இணைத்துப் பார்ப்பதே திலகரின் இயல்பாக இருக்கிறது. சிவகுமாரன் சிறந்த கலை இலக்கிய விமர்சகராக வானொலி, பத்திரிகை தொலைக்காட்சி போன்ற ஊடகங்களால் அறியப்பட்டிருப்பதால், மலையகத்தில் தொலைக்காட்சி அறிமுகமான தகவலோடு சிவகுமாரனின் நூலையும் ‘மலைகளை வரைதலுக்குள்’ நுழைத்துவிடுகிறார் திலகர். தனக்கு கிடைக்கும் அனைத்தையும் மலையக சமூகத்தோடு இணைத்துப்பார்ப்பதையே

நோக்கமாக கொண்டிருப்பதால்தான் ‘மலைகளை வரைதல்’ நூலுக்கான தனது முன்னுரையில் திலகர் இப்படி வலியுறுத்துகிறார்:

“கிடைக்கும் களங்களில் என் மண்ணையும் மக்களையும் இணைத்து அழைத்துச் செல்லும் என் மனதின் பயணம் அது. பணி அது” என்பதாக.

‘மலைகளை பேசவிடுங்கள்’ எனும் நூலானது திலகர் பாராளுமன்ற உறுப்பினராக செயல்பட்ட காலத்தில் ஆற்றிய உரைகள், முன்வைத்த கோரிக்கைகள், ஆலோசனைகள் என்பவற்றை அவ்வப்போது ‘அரங்கம்’ எனும் பத்திரிகைக்கு கட்டுரையாக எழுதியதன் தொகுப்பு.

மலையக மக்களாகிய நாம், தமிழர்கள் எனும் அடையாளத்தில்

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுடன் ‘ஒற்றுமையாக நோக்கப்படுகின்றோம்.’ அவை அடி வாங்குகின்றபோதும் கொல்லப்படுகின்றபோதும் மட்டுமே. ஆனால் மலையக மக்களின் சமூக பண்பாட்டு அரசியல் உரிமை குறித்துப் பேசும்போது மலையக சமூகம் விளிம்பின் ஓரத்துக்கே தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைக்கும் கட்டுரைத்தொகுப்பு ‘மலைகளை பேசவிடுங்கள்.’

‘மலைகளின் மௌனத்துக்கு கீழே பல குமுறல்கள்’ எனும் கட்டுரை உள்நாட்டு யுத்த மீறல்கள் தொடர்பாக பேசப்பட்ட சர்வதேச விசாரணை ஓய்ந்து, உள்ளக விசாரணையாக பரிணாமம் அடைந்த ‘சங்கதியை’ பேசுகிறது. ‘தோற்கடிக்கப்பட்ட போராட்டத்தின்’ பிரதிநிதிகளும், வடபகுதியிலிருந்து இனச்சுத்திகரிப்புக்குள்ளான முஸ்லிம்

தரப்புக்களும் தங்களுக்கான நீதி விசாரணைகளை ஜனாதிபதியின் சரவ்கட்சி மாநாட்டில் கோரியிருந்தனர். இவைகள் 1990ம் ஆண்டு நடைபெற்ற குற்ற விசாரணைகளாகவும், 2009ம் ஆண்டு நடைபெற்ற யுத்தக்குற்ற விசாரணைகளாகவும் இருந்தது. தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக கருதும் எந்த தரப்பும், எந்த சமூகமும் தமக்கான நீதி கோரி விண்ணப்பிப்பதென்பது அடிப்படை ஜனநாயக உரிமை. ஆனால் 1948ம் ஆண்டு சம்பவங்களும், 1964ம் ஆண்டு சம்பவங்களும் இலங்கையில் நீண்டகாலமாக விசாரணையின்றி நிலுவையில் இருக்கிறதே! அதையும் விசாரிக்க முடியாதா என அதன் கோப்புகளை ஜனாதிபதியின் முன்னால் திலகர் தூசுதட்டிப் போட்டதும் ஜனாதிபதியின் மாநாட்டின் தலைகள் கவிழ்ந்து போனது. இந்த

சம்பவத்தையே ‘மலைகளின் மௌனத்துக்கு கீழே பல குமுறல்கள்’ எனும் கட்டுரை விபரிக்கிறது.

இவ்வாறு யாழ்ப்பாண தமிழ் தலைகள் கவிழ்ந்த சம்பவம் ஒன்று பிரான்சிலும் நிகழ்ந்தது. 2016 இலக்கியச்சந்திப்பிற்காக பிரான்ஸ் வந்திருந்தபோது காலம் செல்வத்தின் ‘எழுதித் தீராத பக்கங்கள்’ எனும் நூல் குறித்த திலகரின் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. அது யாழ்ப்பாணத் தமிழர்கள் புலம் பெயர்ந்த ‘துயரங்களை’, அவர்கள் ஐரோப்பிய நகரங்களில் பட்ட ‘அவலங்களை’ நகைச்சுவை பாணியில் சித்தரிக்கப்பட்ட ஒரு தொகுப்பு.

இந்த நூலை கையிலெடுத்து தலை நிமிரந்த திலகர் மலையக சமூகத்தின் புலப்பெயர்வையும், நாடுகடத்தப்பட்ட கதைகளையும் சொல்லச் சொல்ல முன்னால்

அமர்ந்திருந்து கேட்டுக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்துப் புலம்பெயர்ந்தவர்களின் தலைகளும் கவிழ்ந்து மௌனமானது.

போர் நிறுத்த காலகட்டமான 2006ல் திலகர் எழுதிய ‘ஒப்பந்தம்’ எனும் தலைப்பில் எழுதிய கவிதை வரிகளையும் நாம் இத்துடன்

நினைத்துப் பார்ப்பது பொருத்தமாகும்.

இங்கே

இரண்டு

ஒப்பந்தம்

இதற்கு முன்னும் பல

ஒப்பந்தம்,

இருந்ததென்னவோ

நிர்ப்பந்தம்.

.....

......

கவிதை தொகுப்பிலிருந்து)

‘மலைகளைப் பேசவிடுங்கள்’ எனும் தொகுப்பிலுள்ள ‘இலங்கை(யில்) தமிழர்கள்’ எனும் கட்டுரையில் ‘இலங்கைத் தமிழர்’, ‘மலையகத் தமிழர்’ எனும் அட்டவணைப் பகுதியை நோக்கினால் புரியும். ‘மலைகளை பேசவிடுங்கள்’ என்பதற்கான தார்மீகக் கோரிக்கை.

இலங்கைவாழ் வட-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் உரிமை மீட்புக்கான நியாயங்கள் பல இருப்பினும், தாம் வாழும் பிரதேசங்களின் மீதான அடிப்படையான உள்ளூராட்சி உரிமை உரித்துள்ளவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். யாழ்ப்பாண தமிழர்கள் வடமராட்சி, தென்மராட்சி, தீவகப் பகுதிகளாகவும். வன்னித் தமிழர்கள் என்போர் வவுனியா, மன்னார்,

முல்லைத்தீவு, கிளிநொச்சி எனும் மாவட்டங்களாகவும், மட்டக்களப்பு தமிழர்கள் கிழக்கு மாகாணத்தில் தென்பகுதியை ஒட்டி வாழ்பவர்களாகவும், திருகோணமலை தமிழர்கள் கிழக்குமாகாணத்தின் வட பகுதியை சார்ந்து வாழ்பவர்களாகவும், என இவர்கள் பிரதேசங்களின் இருப்போடும், அதன் உள்ளூராட்சி உரிமைகளோடும் வாழ்பவர்கள்.

ஆனால் மலையக மக்கள் எந்த பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றபோதும் அவர்களின் இருப்பு என்பது கூலிகள், தொழிலாளர்கள் எனும் வர்க்க நிலையே அடிப்படை ஆதாரமாக இருந்து வருகிறது. இதை மிக தெளிவாக புரிந்துகொள்ளும் வகையில் அமைந்திருக்கிறது அக்கட்டுரை.

திலகர் பாராளுமன்ற பிரதிநிதியாக செயல்பட்ட ‘காலத்தின் சாட்சியம்’ ‘மலைகளை

பேசவிடுங்கள்’ எனும் தொகுப்பு. ‘பிரஜா உரிமையற்று’, வாக்குரிமை கொண்ட ஒரு சமூகமாக வைத்திருக்கும் விசித்திரமான நாடு இலங்கை. மலையக சமூகத்தை தனது ‘மக்களாக’ உணரவில்லை. அது மனிதர்களாக பாவித்தும் உபயோகித்தும் வருகிறது என்பதே உண்மை. இவ்வாறான மலையக சமூகத்தின் சமூக-அரசியலின் உள்ளடக்கப் பரிமாணமாக திகழ்வதே ‘மலைகளை பேசவிடுங்கள்’ எனும் பிரதியாகும். இந்த நூல் மலையகத்தின் பாடசாலைகளில் போதனைக்குரிய ஒரு புத்தகமாக பயன்படுத்த வேண்டும் என்பதை மலையக சமூகத்தின் மீது அக்கறைகொண்ட அதிகாரத் தரப்பினர் உணரவேண்டும்.

**‘மிதவாத, தீவிரவாத வழிமுறைகளில் ’மலையகம்’ கற்றுக்கொண்ட அனுபவம்’**

கடந்த கால வரலாறுகளுக்குள் சென்று அப்போதைய யதார்த்தங்களையும் அதன்

உணர்வுகளையும், தற்போதைய எமது தேவைக்காக பயன்படுத்தும் போக்கு ஆபத்தானவை. இவ்வாறான சிந்தனை எமக்குள் எதிர்ப்பையும் விரோதத்தையுமே தொடர்ந்து தக்கவைக்கிறது. ஆனால் எமது ‘அறிவுப்புலமையோ’ இதனையே தனது ‘சாதனையாக’ கருதி மமதை கொள்கிறது. அதேபோன்றுதான் மிதவாத செயல்பாட்டையும், தீவிரவாத செயல்பாட்டையும் ஒன்றை ஒன்று எதிர்க்கும், விரோதிக்கும் கோட்பாட்டு முறையாகவே அணுகப்பட்டுவருகிறது. இரண்டு வழிமுறைகளும் பயன்படக்கூடிய முன்னகரும் முரணியக்க செயல்பாடுகள் என்பது புரிந்துகொள்ளப்படுவதில்லை.

கடந்தகாலங்களில் இலங்கையில் செயல்பட்டு வந்த இலங்கை திராவிட முன்னேற்றக் கழகங்களின் செயல்பாடுகளும்

அதில் ஏ.இளஞ்செழியனின் இ.தி.மு.க. செயல்பாடுகள் என்பது தனித்துவமானது. இளஞ்செழியனால் எழுதப்பட்ட ‘ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை’ எனும் நூலில் உள்ள தகவல்கள் ஆதாரங்கள் என்பன எம்மை (என்னை) வேறொரு வகையில் நிதானிக்க தூண்டுகிறது.

ஆரம்பத்தில் இலங்கை தலைநகரை மையமாகக் கொண்டு இயங்கி வந்திருக்கிறது இ.தி.மு.கழகம். இடதுசாரிகளிடம் எவ்வாறு பிளவுகள் ஏற்படக் காரணமாக இருந்ததோ அதேபோன்றே தமிழகத்தில் பெரியாரின் கழகத்திலிருந்து அண்ணா, பெரியார் பிளவுகள் ஏற்பட்டபோது இலங்கையிலும் மூன்று பிரிவுகளாக இ.தி.மு.க பிளவுபட்டது. இதில் இளஞ்செழியனின் இ.தி.மு.கழகம் தனித்துவமானது. அது பண்பாட்டு கலாசார கூறுகளை பெரியாரின் கொள்கையிலிருந்து

பெற்றுக்கொண்டபோதும், அரசியல் ரீதியாக இலங்கையைமையப்படுத்திய அரசியலையே முன்வைத்து செயல்பட்டிருக்கிறது. அதுவும் மலையக மக்களின் அரசியலையும் இலங்கைவாழ் அனைத்து சமூகங்களையும் இலங்கைவாழ் ‘மக்கள்’ எனும் ‘காருண்ய கரிசனை’ உணர்வு நிலையில் அணுகி வந்திருக்கிறது. எனவேதான் அது மிதவாத கொள்கையுடையவர்களோடும் மரபுவாத இடதுசாரிகளோடும் தனது தீவிர செயல்பாட்டை முன்னெடுத்து வந்திருக்கிறது.

மிதவாத அணுகுமுறை என்பதும், தீவிரவாத அணுகுமுறை என்பதும் ஒன்றை ஒன்று அழித்து தனித்த ஒன்றாக தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது. இந்த இரண்டு அணுகுமுறைகளும் முட்டி, மோதி இணைந்து முன்னகர்த்தும் முரண் இயக்கங்கள். அனைத்தையும் போன்றே

இவை இரண்டிலும் பலவீனங்களும் இணைந்தே இருக்கிறது.

மிதவாத செயல்பாட்டில் சுய-தேவைகளும், சுய-சலுகைகளும் அதன் பலவீனங்களாகும். தீவிரவாத செயல்பாட்டில் வன்முறையே அதனது பிரதானமான பலவீனமாகும். இதன் புரிதலை இலங்கை அரசியல்செயல்பாட்டில் தெளிவாக உணரவைத்திருக்கிறார் குமரன் (ஏ.இளஞ்செழியன்).

மலையகத்து மிதவாதிகளோடும் வட-கிழக்கு மிதவாதிகளோடும் தென் இலங்கை இடதுசாரிகள் உட்படபல்வேறு தரப்பினரோடும் முட்டி மோதி செயல்பட்டிருப்பவர் ஏ.இளஞ்செழியன். மலையகம் எனும் சொற்பிரயோகத்தை பேசுபொருளாக்கிய முன்னோடியாகவும் அவரையே கருதமுடியும். இலங்கையில் நாட்டுப்பிரிவினை எனும் அச்சத்தையும்,

சிங்கள அதிகார வர்க்கத்தின் இனவாதம் மேலோங்குவதற்கான முதற்காரணியாக இருந்தது வன்முறையில் ஈடுபட்ட வட-கிழக்கு தமிழர்களின் ஆயுதப்போராட்டம் அல்ல! இளஞ்செழியனின் வன்முறையற்ற தீவிர அரசியல் செயல்பாடே இலங்கை அதிகார வர்க்கத்தை அச்சுறுத்தியிருக்கிறது. அந்த அச்சுறுத்தல் தீப்பற்றிக் கொள்வதற்கான முதற் கொள்ளிவைத்தது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் பொய்ப் பிரச்சாரங்களுமே.

12-3-1967ம் ஆண்டின் வீரகேசரி பத்திரிகையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தேர்தல் பிரச்சார செய்தி இவ்வாறு பதிவாகியிருக்கிறது:

”இன்று இலங்கையை பெரும் அபாயம் சூழ்ந்துள்ளது. சென்னை இராச்சியத்தை தி.மு.க கைப்பற்றி தமிழ் அரசாங்கம்

ஒன்றினை நிறுவியுள்ளது. அக்கட்சியினர் கூடியவிரைவில் வடக்கையும் கிழக்கையும் கைப்பற்றிக் கொள்வதோடு மலேசியாவின் சில பகுதிகளையும் கைப்பற்றி, மாபெரும் தமிழ் இராச்சியம் ஒன்றினை நிறுவினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவ்விக்கட்டான நிலைமையில் இன்று ஆட்சிபுரியும் ஐ.தே.க. அரசாங்கம் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்து அவர்களுக்கு பெரும் சலுகைகளை வழங்கிவருகிறது. மாவட்டசபைகள் அமுல்படுத்தப்பட்டால் நாமெல்லாம் தமிழர்களுக்கு அடிமைப்பட வேண்டிய நிலை உருவாகும். நானும் சாஸ்திரியும் செய்துகொண்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் இன்னமும் அமுல்படுத்தப்படாமல் இருப்பதன் மர்மம்யாது? இங்குள்ள இந்தியத் தமிழர்களை தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று இன்று திராவிடக் கட்சியின் தலைவர்

அண்ணாத்துரை கூறிவருகிறார். நாம் ஆட்சிசெய்தபோது திராவிடக் கட்சியைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதியையாவது நாம் இந்நாட்டுக்கு வர அனுமதிக்கவில்லை. ஆனால் தேசிய அரசாங்கம் நிறுவப்பட்டதும் திராவிடக் கட்சியின் முக்கிய தலைவரான எம்.ஜி.ராமச்சந்திரனை இராஜாங்க மரியாதையுடன் இந்த அரசாங்கத்தினர் பத்திரிகையொன்றின் பெயரை சாட்டாக வைத்துக்கொண்டு வரவேற்றனர்.

அடுத்த மே மாதத்தில் திரு. அண்ணாத்துரையும் வருவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. தமிழரசுக்கட்சியினரும், நாம் தமிழர் கட்சியினரும், **(இளஞ்செழயனின் தீவிர அரசியல் செயல்பாடுகளால் அவர்களை நாம் தமிழர் கட்சி என சிங்கள இனவாத தரப்பினர் பிரச்சாரப்படுத்தியிருந்தனர். -**

**அழுத்தம் அசுரா**) தி.மு.க. கட்சியினரும் சேர்ந்துகொண்டு என்ன செய்யப் போகிறார்களோ தெரியவில்லை". என தேர்தல் பிரச்சாரத்தில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பேசியிருக்கிறார்.

மிதவாதக் கட்சியான தமிழரசுக் கட்சியும் அதனது உறுப்பினர்கள் பலரும் இளஞ்செழியனுடன் நெருக்கமாகவும் ஒத்துழைப்போடும் செயல்பட்டிருக்கிறார்கள். திலகர் குறிப்பிடும் மல்லியப்பு சந்தி எனும் இடம் அப்போது 'மல்லியப்பூ பஜார்' என பேசப்பட்டு வந்திருக்கிறது. அந்த 'மல்லிப்பூ பஜாரில்' இருந்து தமிழரசுக் கட்சியுடன் மேற்கொண்ட போராட்டங்கள் ஊர்வலங்கள் திகதி வாரியாக 'ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை' எனும் நூலில் இளஞ்செழின் பதிவு செய்திருக்கிறார்.

மேலும் ஆச்சரியம் தரும் தகவல்

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட சாதியப் போராட்டத்திற்கான முன்னோடிகளாக இ.தி.மு. கட்சியினரே இருந்திருக்கிறார்கள் என்பது. 1958ல் இருந்தே வட-கிழக்கில் சாதி எதிர்ப்புபோராட்டங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். தனது தீவிர அரசியலுடன் பலவகையில் நெருக்கமாக இருந்த தமிழரசுக் கட்சியினர் எப்போது தனது மிதவாத கோட்பாட்டின் பலவீனமான சுய-சலுகைக்குள் உள்வாங்கப்பட்டார்களோ அப்போதிருந்து அவர்களை கடுமையாக விமர்சித்தும் வந்திருக்கிறார் இளஞ்செழியன்.

தொண்டமானின் மிதவாத அணியினரும், இடதுசாரிகளின் சந்தர்ப்ப அணிகளுமே முதலில் அரசுடன் இணைந்துகொண்டு இளஞ்செழியனின் இ.தி.மு.கழகத்தின் ஆதரவு நிலையிலிருந்து விலகிப்போனது. அதற்குபிற்பாடே தமிழரசுக் கட்சியினர் சுய-

சலுகைகளுக்கு பலியாகி அரசுடன் இணைந்து மலையக அரசியலுக்குதுரோகம் இழைத்த கதையை இவ்வாறு பதிவு செய்திருக்கிறார்:

”1965ம் ஆண்டு தேர்தலின் பின்னர் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயல்பட்ட தமிழரசுக் கட்சியினர் மலைநாட்டு மக்களுக்கும் வட-கிழக்கு மக்களுக்கும் இனவாத முதலாளித்துவ அரசு இழைத்த அனைத்து அநீதிகளுக்கும் துணைபோயினர். பாராளுமன்றத்தின் நாற்காலிகளை நிரப்புவதை மட்டும் தனது அரசியல்சித்தாந்தமாக கொண்ட ஒரு இயக்கம் எனும் அளவிற்கு தனது செயற்பாடுகளை முடக்கிக்கொண்டது. தமிழ்க்காங்கிரஸ் தலைவராக இருந்த ஜி.ஜி. பொன்னம்பலம் தமிழ் மக்களுக்கு செய்த அதே அரசியல் மோசடியை தமிழரசுக் கட்சியினரும் பின்பற்றத் தொடங்கினர்.

இ.தி.மு.கழகம் தன்னை ஒரு அரசியல் சக்தியாக மாற்றிக்கொள்ளவேண்டிய அவசர தேவையை இக்காரணிகளே துரிதப்படுத்தியது.

1968ம் ஆண்டு கூடிய இ.தி.மு. க பொதுக்குழு கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுக் கட்சியினர் அளித்த வாக்குறுதிகள் முழுவதையும் மீறியதால் தமிழ் பேசும் மக்களுடைய நம்பிக்கையினை அக்கட்சி இழந்துவிட்டது. இதற்கான காரணம் அக்கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற யாவரும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தைச் சார்ந்தவர்களாக இருப்பதால் சாதாரணதமிழ் மக்களை, குறிப்பாக மலையகத்தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தை வழிநடத்தும் தகைமை அக்கட்சியின் தலைமைக்கு

கிடையாது என்பதை அவர்களது வரலாறு நிரூபித்திருக்கின்றது. எனவே நாடுமுழுவதும் பரவி வாழும் தமிழ் பேசும் மக்கள் அரசியல் நீரோட்டத்தில் நேரடியாக ஈடுபட இ.தி.மு.கழகம் வழிகாட்டவேண்டும்". என 'ஈழத்தில் பெரியார் முதல் அண்ணா வரை' எனும் நூலில் பதிவு செய்திருக்கிறார்.

இவ்வாறாகவே இலங்கையின் தமிழ்-மிதவாத அரசியல் செயல்பாடானது முன்னகரும் முரணியக்க நேர்மறைச் செயல்பாட்டில் இருந்து விலகிப்போனது. அதன் விளைவாக மேலெழுந்த தீவிர அரசியல் வன்முறையானது வட-கிழக்கில் ஆயுதப்போராட்டமாக பரிணமித்தது. அதன் தீவிரவாத அரசியலின் எதிர்மறைப் பண்பான வன்முறையின் தலைமை தனது சொந்த 'பிள்ளைகளையே' 'மக்கள்' எனும் உணர்வுகளோடு 'அணைத்துக்கொள்ள'

மறுத்தது. தமிழ் பேசும் தனது மக்களையும் உணர்வு நிலைக்குட்படாத வெறும் ‘மனிதர்களாக’ கருதியே 2009ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி வரை அம்மக்களின் அழிவுக்கான தனது ‘பங்களிப்பையும்’ செய்திருந்தது.

இளஞ்செழியன் பங்குபற்றிய இ.தி.மு.கழகத்தின் ஆரம்பகால செயல்பாடென்பது சமூக விழிப்புணர்வைத்தூண்டும் வகையிலான கலை, இலக்கிய செயல்பாடுகள் வழியாகவே ஆரம்பித்திருக்கிறது. இளஞ்செழியன் ஒருநாடக நடிகனாகவும் இருந்திருக்கிறார். பின்பான அவரது தீவிரத் தன்மைகொண்ட செயல்பாடென்பது தொழிற்சங்க அமைப்புகளோடு பரிணமித்து, அரசியல் செயல்பாட்டின் அவசியத்தை உணர்ந்து கொண்டது. 1970களின் ஆரம்பத்தில்

மேலெழுந்த அரச வன்முறைத் தீயில் கருகிக் கொண்டிருக்கும் சிறுபான்மை இனங்களின் துயரத்தை, அதுவும் மலையக மக்கள் மீது மேற்கொள்ளும் வன்முறைகளுக்கு பதிலீடான ஒரு வன்முறை செயல்பாட்டில் ஈடுபடாத இளஞ்செழியனின் இ.தி.மு. க தீவிர அரசியல் செயல்பாடு 1977களின் பின்பு தணிந்துபோனதை வரலாறு மறைத்து வைத்திருக்கிறது.

1969ம் ஆண்டு செப்டம்பர் 16ம்-17ம் திகதிகளில் இ.தி.மு. கழகம் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட மாநில மாநாட்டு தீர்மானங்களை திரிபுபடுத்தி தமிழ் சிங்கள பத்திரிகைகள் வெளியிட்டது. அதன் காரணமாக இ.தி.மு.கழகமானது பயங்கரவாத இயக்கமாக சித்தரிக்கப்பட்டு இளஞ்செழியன் உட்பட அதன் உறுப்பினர்கள் பலர் விசாரணைக்கும்

கண்காணிப்பிற்கும் உட்படுத்தப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளானார்கள்.

அவர்களது யாழ்ப்பாண மாநில மாநாட்டு தீர்மானங்களின் சுருக்கம்: ”தமிழ் மக்களது எதிர்காலத்திற்கென இரண்டு கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒன்று, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சியின், தமிழ் மக்களின் எல்லாப் பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வு சமஷ்டி அரசை அமைப்பது என்பதாகும். இரண்டாவது வி. நவரத்தினம் தலைமையிலான சுயாட்சிக்கழகம் சுயாட்சிக் கொள்கையை அதாவது சுதந்திரத்தமிழ் ஈழ கொள்கையை முன்வைத்துள்ளதாகும். இதே கொள்கையையே சி.சுந்தரலிங்கம் தலைமையிலான அடங்காத் தமிழர் முன்னணியும் முன்வைத்துள்ளது. தமிழரசுக் கட்சி முன்வைத்துள்ள சமஷ்டி கொள்கையும்,

சுயாட்சி கழகம் முன்வைத்துள்ள தமிழீழ கொள்கையும் வடகிழக்கு தமிழ் மக்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளன. அப்படியானால் வட, கிழக்கு தவிர்ந்த பிரதேசங்களில் வாழ்கின்ற 15இலட்சம் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் நிலை என்ன? எட்டு இலட்சம் இஸ்லாமிய மக்களின் நிலை என்ன?

இந்நிலையில் இப்போது உங்கள் முன்னிலையில் இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம், விஞ்ஞானபூர்வமான மார்க்சிய சிந்தனையின் அடிப்படையிலான புரட்சிகர சோசலிச கொள்கையை முன்வைக்கிறது. இந்த புரட்சிகர சோசலிச கொளகையின் மூலமே அனைத்து தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு மட்டுமல்ல சிங்கள மொழி பேசும் விவசாய தொழிலாளர்கள் உட்பட ஒடுக்கப்பட்ட எட்டு இலட்சம் முஸ்லிம் மக்களுக்கும்

விடுதலை கிட்டுமென்ற கொள்கையை தேர்ந்தெடுத்துள்ளோம். இந்த மூன்று கொள்கைகளில் தமிழ் மக்களாகிய நீங்கள் எதனைத் தெரிவு செய்யப் போகின்றீர்கள்? சமஷ்டி அரசொன்றை அமைப்பதென்றால், அதற்கு நீங்கள் தயார் நிலையில் இருக்கிறீர்களா? தமிழரசுக் கட்சி சமஷ்டியைப் பெறுவதற்காக நடத்திய சத்தியாக்கிரகம் என்ற சப்பாணிப் போராட்டம் தோல்வியில் முடிந்து விட்டதை நீங்கள் அறிவீர்கள். தனியான தமிழ் ஈழம் பெறுவதென்றால் தமிழரசுக் கட்சி காட்டிய சப்பாணி சத்தியாக்கிரக போராட்டத்தினால் சாத்தியம் என்பது கற்பனையிலும் நினைத்துப் பார்க்க முடியாது. தனியான சுதந்திர ஈழம் பெற வேண்டுமானால் தமிழ் மக்கள் ஆயுதப்போராட்டத்துக்கு தயாராக வேண்டும். கொரில்லா

யுத்தம் செய்ய வேண்டும். தனித் தமிழ் இராணுவம் அமைக்கவேண்டும். வட-கிழக்கு பிரதேசங்களில் இருக்கும் பொலிசாரையும் பொலிஸ் நிலையங்களையும் இரவு12 மணிக்கு முற்றுகையிட்டு ஆயுதங்களை உங்கள் கைவசப்படுத்த வேண்டும். வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்களை சேகரிக்க வேண்டும். தமிழ் நாட்டில் தளம் அமைக்க வேண்டும். இவ்வளவையும் செய்த பின்னர் அதிகாரத்தில் இருக்கின்ற சிங்கள பேரினவாத முதலாளித்துவ அரசுக்கு தமிழீழத்தை விட்டு வெளியேறுங்கள் என்று காலக்கெடு கொடுக்க வேண்டும். அக்காலக் கெடுவிற்குள் வெளியேறத் தவறினால் யுத்தப் பிரகடனம் செய்துவிட்டு யுத்தத்தை தொடர வேண்டும். இதற்கெல்லாம் நீங்கள் தயாரா? இலங்கை திராவிட முன்னேற்றக்கழகத்தைப் பொறுத்தளவில் இது நடைபெற முடியாத

ஒன்றாகும். வட-கிழக்குப் பிரதேசத்தில் பலம் மிக்க ஒருமுதலாளித்துவ வர்க்கம் இல்லை. முதலாளி வர்க்கம் ஒன்றுக்குத்தான் நாடு தேவை. அதிலும் கிழக்குமகாணங்களில் உள்ளவர்கள் உழைக்கும் மக்களாவார்கள். பெரும் பகுதியினர் சாதிய ரீதியிலும், சமூக ரீதியிலும் ஒடுக்கியும், ஒதுக்கியும் வைக்கப்பட்டவர்களாவார்கள். அம்மக்கள் பொதுக்கிணறுகளில் தண்ணீர் அள்ளமுடியாது. பொது உணவு விடுதிகளில் உணவருந்த முடியாது. கோயில்களில் உள் நுழைய முடியாது. இந்நிலையில் இவர்கள் தமிழீழ போராட்டத்தில் இணைவார்களா? நாலு லட்சம் ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட இம்மக்கள் தமிழ் ஈழம் அமைந்தால் அதிகாரம் யார் கைக்குப் போகும், என்ற பீதியுடனேயே வாழ்கின்றார்கள். அவர்கள் தமிழீழ போராட்டத்தில் இணைய வேண்டுமானால்

சாதிக் கொடூரங்கள் அழிக்கப்படல் வேண்டும். சாதிமுறை ஒழிக்கப்பட வேண்டும். அவர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் தமிழீழ கொள்கையை முன்வைத்திருக்கின்ற தலைவர்கள் இதற்கு தயாரா? முன் வருவார்களா?”

இவ்வாறான இளஞ்செழியனால் கேள்விக்குள்ளாக்கப்டிருக்கும் ஆயுதப்போராட்டம் குறித்த உரையை இளஞ்செழியனின் ஆயுதப்போராட்டத்திற்கான அறைகூவலாக திரிபுபடுத்தப்பட்டு அவர் பல்வேறு நெருக்கடிக்குள்ளாகி தனது தீவர அரசியல் செயல்பாட்டையும் மௌனமாக்கிக் கொண்டார் என தெரியவருகிறது.

மக்களை அதுவும் இலங்கை வாழ் அனைத்து இன சமூகங்களையும் ‘மனிதர்களாக’ கருதாது ‘மக்களாக’

கருதியதன் மானுடக் கரிசனை நிமித்தமாகவே இளஞ்செழியனின் தீவிர செயல்பாடுகளும் அணைந்துபோனது.

இவ்வாறான மலையகத்தின் தீவிர அரசியல் செயல்பாட்டின் ஒரு தொடர்ச்சியாகவே திலகரின் அரசியல்செயல்பாட்டையும் நான் அவதானித்து வருகிறேன்.

‘வேள்வித் தீயொன்று வேண்டும்’ எனும் தலைப்பில் அமைந்த திலகரின் கவிதைப் பின்புலம் மருதானை சோதனைச் சாவடிகளில் பெண்கள் படும் பாலியல் வன்முறையை துலங்கவைக்கிறது. அக்கவிதையின் அடிக்குறிப்பாக இப்படி பதிவு செய்கிறார்: “வன்முறையைத் தூண்டக்கூடாது சரிதான். வன்முறையைக் கண்டு துலங்காமலுமாவிருப்பது?”. அதாவது வன்முறையில் ஈடுபடாதிருப்பினும் துலங்கும்

வன்முறைகளை வெளிப்படுத்தாமல் கண்டிக்காமல் இருக்கமுடியுமா என்பதே அக்கவிதையின் வெளிப்பாடாக இருக்கிறது.

திலகரின் நூல்கள் மீதான எனது பார்வையோடு இளஞ்செழியனின் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் அறிமுகம் என்பது தீவிரவாத அரசியல் செயல்பாட்டினதும், மிதவாத அரசியல் செயல்பாட்டின் பலம், பலவீனங்களை அறிந்து கொண்டதன் முதிர்ச்சியாகும். இதன் புரிதலூடாகவே மக்கள் மீதான காருண்யமும் கருணையும் கொண்ட ஒரு அரசியல் தலைமையே, மக்களை மனிதர்களாக பாகுபடுத்தி பாவித்து வரும்தன்மையிலிருந்து விலகி, மக்களை அணைத்துக்கொள்ளும் தலைமையாக தன்னை மாற்றிக்கொள்ள முடியும் என நம்பவைத்திருக்கிறது.

வட-கிழக்கு தமிழ் பேசும் மக்களின்

அரசியலை பிரதிநிதித்துவப்படுத்துவது நிலபிரபுத்துவ அடிப்படையில் சிந்திப்பவர்களால் என்பதை இளஞ்செழியன் அப்போதே நினைவுபடுத்தியவர். அதன் தொடர்ச்சியான ஆயுதப்போராட்டத்திற்கான தீவிரவாதத்தின் அடிப்படை சிந்தனை என்பது மத்தியதர வர்க்கத்தின் நலன்களிருந்து கிளம்பியதென்பது நாம் கண்டுகொண்ட உண்மை.

மலையகத்தின் தீவர அரசியலை முன்வைப்பவர்களின் கோரிக்கை என்பது தமக்கான அடிப்படைத் தேவைகள்குறித்து சிந்திப்பதற்கு முன்பாக எம்மையும் இலங்கையில் வாழும் ‘மக்களாக’ முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதே.

எனவே நாம் லெபனான், பாலஸ்தீனம் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று ‘அரசியல் பயிற்சி’ (சுடுவதற்கு) பெற்றதற்கு

மாறாக.. மலையத்திற்கு சென்று பயிற்சி (....) பெற்றிருக்க முடியாதா! என சிந்திக்க வைக்கிறது மலையக-சமூக-அரசியல் வரலாறு.

**(பெ. முத்துலிங்கம், ஏ.இளஞ்செழியன் நூல்களை வாசிக்கும் வாய்ப்பை தந்த நூலக ஆவணக்காப்பக இணையத்திற்கு மிக்க நன்றி)**

# 5. தேவிபாரதி! ஒரு வாசக பார்வை: தி.ஜினுராஜ்

நவம்பர்/ டிசம்பர் 2020/விமர்சனம்

BY தி.ஜினுராஜ்

எழுத்தாளர் தேவி பாரதி அவர்களின் வீடென்ப எனும் சிறுகதை தொகுப்பின் வாசகனின் பார்வை என இக்கட்டுரையை வரையறுத்துக்கொள்ளலாம். முப்பதுக்கும் குறைவான சிறுகதைகளிலிருந்து தேர்தெடுக்கப்பட்ட பத்து கதைகள் கொண்டது இக்கதை தொகுப்பு.

'பிறகொரு இரவு' , 'ஜீவிதம்' எனும் இரண்டு கதைகள் வாழ்வின் உயிர்ப்புத்தன்மை, வாழ்வின் பொருள் மற்றும் இறப்பு ஆகியவற்றை பற்றி சுட்டுகிறது. வாழ்க்கையை பற்றி பேசும் பெரும்பாலான

கதைகள் தத்துவதச்சாயல் கொண்டவையாக இருக்கும் ஆனால் இந்த கதைகள் அப்படி அல்ல; வாழ்வியல் தளத்திலிருந்தே வாழ்கையை பற்றி பேசுகின்றன எனவே இவை இந்த எதார்த்த வாழ்வை பற்றி மேலும் புரிந்துகொள்ள உதவுகின்றன. ‘பிறகொரு இரவு’ கதையில் காந்தி தன்னுடைய மரணத்தை பற்றிக கற்பனை செய்கிறார். வாழ்க்கையை முடிக்கும் விதம் தான் வாழ்ந்த மிகப்பெரிய வாழ்க்கைக்கு மேலும் அர்த்தம் அளிக்க வேண்டுமென கற்பனை செய்கிறார். டால்ஸ்டாய் போன்று, கிறிஸ்து போன்று தன் இறப்பையும் அமைக்க விரும்புகிறார். ஆனால் அவருக்கு அமைந்தது அவர் எதிர்பாரததொரு மரணம். ‘ஜீவிதம்’ கதையில் பழனி எனும் மையக்கதாபாத்திரம் தன் வாழ்க்கையை வெறும் உயிர் வாழ்வதற்காக அமைத்துக்கொள்கிறான். ஆனால்

எதிர்பாராத விதத்தில் சேற்றில் மீன் பிடிக்கும் பொழுது பாம்பு கடித்து இறந்து விடுகிறான். இறக்கும் தருவாயிலும் அவன் வாழ வேண்டும் எனும் முனைப்போடு இறக்கிறான். இரு கதைகளிருந்து வாழ்வு, மரணம் எனும் இருமையை பற்றி கேள்வி எழுகிறது. மரணம் வாழ்க்கைக்கு அர்த்தம் அளிப்பதா அல்லது வாழ்க்கையின் அபத்தத்தை உணர்த்துவதா? எனும் கேள்விகள் எழுகின்றன இந்த கதைகளை வாசிக்கும்போது. இந்த கேள்விகளுக்கு பதிலாக ஜீவிதம் என்பது கணம், கணம் என வாழ்தல் எனும் பதிலை அன்றாட தளத்திலிருந்து இந்த இருகதைகள் அளிக்கின்றன. வாழ்க்கைக்கு பின் தன் வாழ்க்கையின் அர்த்தம் என்பது முக்கியமில்லை ஆனால் அந்த கணத்தில் நிறைவுற வாழ்தலில்தான் ஜீவதம் உள்ளது என உணர்த்துகின்றன.

‘ஒளிக்கும் பிறகு இருளுக்கும் அப்பால்’, ‘அழிவு’, ‘தாஸ் என்பவனும் தாஸ் என்பவனும்’ ஆகிய மூன்று சிறுகதைகளும் கணவன் மனைவி உறவு, காமம் ஆகியவற்றை பற்றி பேசுகிறது. மூன்று கதைகளும் வழக்கமான இனிமையான கணவன் மனைவி உறவை பற்றி சித்தரிக்கவில்லை மாறாக முறையற்ற காதல், சந்தேகம் போன்ற உறவுகளின் இருண்மையை பற்றி சித்தரிக்கிறது. இந்த கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் தெளிவான சுய பிரக்ஞை உடையவர்கள். எனவே அவர்களுக்கிடையே இருக்கும் கணவன் மனைவி குடும்ப உறவு, மோதல், காமம் போன்றவை வழக்கமானது போன்று அல்லாமல் சுய உணர்ச்சிகளும் தன்னுணர்வும் கூடியதாக இருப்பதால் அவை மேலும் தீவிரமாக உள்ளன. இந்த தீவிரத் தன்மை அந்த உணர்ச்சி உருவாகும் ஊற்றை

பற்றி தெளிவான புரிதலை ஏற்படுத்துகிறது.

இந்த கதைகள் யாவும் உறவுச் சிக்கல்களினால் தோன்றும் உணர்ச்சிகளையே மையமாக கொண்டுள்ளன. உணர்ச்சிகளை விவரிப்பதன் வழியாகவே கதை நகருகிறது. ஆற்றாமை மற்றும் உணர்ச்சியின் உச்சம் கொலை செய்யும் உணர்வை தூண்டிவிடுகிறது. ‘ஒளிக்கும் பிறகு இருளுக்கும் அப்பால்’ கதையில் முறையற்ற காதலுக்காக மனைவி கணவனை கொலை செய்து விடுகிறாள். ‘அழிவு’ கதையில் கணவன், தன்னை கொலை செய்து விடுவாள் என்று ஐயம் கொள்கிறான், ‘தாஸ் என்பவனும் தாஸ் என்பவனும்’ கதையில் தன் மனைவியின் கள்ளக்காதலனை தேடிக்கொண்டு இருக்கிறான்.

இந்த கதைகளில் அதி காதலால்தான்

கணவனுக்கு மனைவி மீதும் மனைவிக்கு கணவன் மீதும் வன்மம் தோன்றுகிறது. ‘ஒளிக்கும் பிறகு இருளுக்கும் அப்பால்’ கதையில் கணவனை கொலை செய்த பின் மனைவி தன் கணவனின் பிணத்தின் முன்னால் பிறனுடன் உடலுறவு வைத்து கொள்கிறாள். பின்னர் தன் இறந்த கணவனையே அன்புடன் கட்டியணைத்து கொள்கிறாள். இருவர் மீதும் அன்பு செலுத்துகிறாள். அன்பு செலுத்தும் கணம் ஒருவருக்காக மற்றொருவனை கொலை செய்யவும் துணிகிறாள்.

எக்கணத்திலும் தன்னை முழுதுற திறந்து வைப்பவன் அந்த வன்மம் உருவாகும் கணத்தை கடந்துவிடுகிறான். அதை மனத்தில் மறைப்பவன் அந்த உணர்ச்சிகளால் வெல்லப்படுகிறான். ‘அழிவு’ கதையில் தன்னை கொலை செய்துவிடுவாள் என

நினைக்கும் கடைசி கணத்திலும் கூட தன் ஆழ்மனத்தின் முகிழ்ந்திருக்கும் ரோஜாவை அவளுக்கு சூட்ட நினைக்கிறான். ஆனால் அந்த கணத்தை அவனால் கடக்க இயலவில்லை.

இந்த தொகுப்பிலுள்ள ‘பலி’, ‘மீதி’, ‘கருவி’, ‘உயிர்தெழுதலின் சாபம்’, ‘வீடென்ப’ ஆகிய ஐந்து கதைகளும் ஒன்றுக்குகொன்று முற்றிலும் வித்தியாசமான கதைகள்.

‘மீதி’ சிறுகதையில் அப்பாவின் இறப்புக்கு பின் அப்பாவின் மீதியை எடுத்துவரச்செல்லும் மகன் ஒரு பழைய புகைப்படத்தின் வழியே தன்னை அப்பாவின், மீதி என உணர்கிறான். இறப்புக்கு பின் பொருட்கள் தன் அர்த்தமிழந்து வேறொரு அர்த்தம் தருவதையும், வாழ்ந்த வாழ்வின் பொருள் மாறுவதையும், வாழ்வின் புதிர்த் தன்மையை சுட்டுவதாக உள்ளது இக்கதை.

‘கருவி’ சிறுகதை முற்றிலும் வித்தியாசமானமொரு கதை. இறப்பு மற்றும் இழப்பு என்றவுடன் மனத உறவுகளின் இழப்பைப் பற்றியே பெரும்பாலான கதைகள் பேசுகின்றன. மாறாக இக்கதை மனிதனுக்கும் மிஷினுக்கும் உள்ள உறவை பற்றி சித்தரிக்கிறது. தையல் மிஷனுக்கும், டெய்லருக்கும் இடையே திகழும் உயிருள்ள உறவை பற்றியதே இக்கதையின் கரு. மனித உறவின் இழப்பின் வலியை போன்றே தையல் மிஷினின் இழப்பின் வலியை உணர வைத்திருக்கிறார். மனித உறவில் கூட உணர்ச்சிக் கொந்தளிப்பு, மோதல், புரிந்து கொள்ளாமை என அன்பு செலுத்தும் உயிர்களுக்கிடையே இருக்கும். ஆனால் இந்த கதையில் தையல் மிஷினின் மீது முற்றிலுமாக அன்பு மட்டுமே செலுத்துகிறான். அதன் இழப்பு மனித உறவு இழப்புகளை விட

மேலும் துக்ககரமானது. அந்த வலியை, துக்கத்தை சிறப்பாக காட்டியுள்ளதால் இந்தக்கதை மிகவும் சிறப்பான கதையாக அமைகிறது.

‘பலி’ சிறுகதை தலித் வாழ்வில் பிராமண குடும்பங்களால் ஏற்படும் கஷ்டங்களை அவமானங்களைப் பற்றி சித்தரிக்கிறது. கதையில் தலித் ஆணிடம் பிராமணப் பெண் ஒவ்வொரு முறையும் அவள் தன்னை வேசி, வேசி என்று அவன் கூறுவதற்கு மறுமொழி கூறுகிறாள். இது கதைக்கு புதுமையை அளிக்கிறது. கதை வழக்கமான தலித் – பிராமண இருமையிலிருந்து மேலும் நகர்ந்து தலித் – வேசி – பிராமண ஆகியவற்றிற்கு இடையேயுள்ள எண்ணத்தை பற்றி விவரிப்பதால் இந்த கதை சிறந்த கதையாகிறது.

‘வீடென்ப’ சிறுகதை முற்றிலும் வேறொரு

கதை வடிவம். குறு நாவல் வடிவில் உள்ள சிறுகதை. கதைக்கருவும் வீடு, காமம், வாழ்க்கை என பல செறிவான விஷயங்களைப்பற்றி பேசுகிறது. வீடு என்பது என்ன? காமம் என்பது என்ன? எனும் கேள்வி எழுகிறது. சிறைச்சாலையில் இருக்கும்போது மையக் கதாபாத்திரம் சீனுவுக்கு தன் மனைவியின் உடலிலிருந்த வரும் தாழம்பூ மணம் சிறையில் இருக்கும்போது ஞாபகம் வருகிறது. ஆனால் வீட்டிற்கு வந்தபின் அவள் உடலிலிருந்த அந்த மணம் வருவதில்லை. அவன் இழந்த மணம் என்ன, எங்குள்ளது? எனும் பல கேள்வி எழுகிறது. பல விடயங்களை கேள்விக்கு உட்படுத்துவதால் சிறந்த கதையாகிறது.

இந்த தொகுப்பிலுள்ள மற்றொரு சிறந்த கதை ‘உயிர்தெழுதலின் சாபம்’. மிகச்சிறந்த கதை சொல்லும் முறை. நல்லாள்

எனும் தொன்மத்தின் கதையை கூறி அதே நல்லாள் நிகழ்காலத்தில் வாழ நேர்ந்து அந்த தொன்மமே தொன்மத்தை சந்திகிறது. தொன்மத்தின் நிகழ்கால அர்த்தம் என்ன? கால ஓட்டத்தில் அந்த தொன்மம் இழக்காது தக்க வைக்கும் பொருள் என்ன? என அறிய முற்படும் கதை.

நல்லாள் கிணற்றில் விழுந்து உயிர் துறக்கிறாள். அவள் அண்ணன் உயிர் பிழைக்க வைக்கிறான். உயிர்தெழுதலின் வழியே சாக வரம் பெறுகிறாள். பின்னர் ஊருக்குள் வந்து மக்களுடன் பழகுகிறாள். ஒரு ராட்டினக்காரனுடன் வாழ்கிறாள். ஒரு நாள் அவன் ஒரு தருணத்தில் அவளை வேசி என அழைக்கிறான். அவள் மறுபடியும் அதே கிணற்றில் விழுகிறாள். அவளுக்கு இறப்பே இல்லை. ஆனால் அவளுக்கு இறப்பே விடுதலை. அவள் பெற்ற வரம் அந்த இடத்தில்

சாபம் ஆகிறது.

0

இந்த தொகுப்பில் உள்ள பெரும்பாலான கதைகளின் கரு மனித மனத்தில் உள்ள உணர்ச்சியை புரிந்துகொள்ள முயற்சி செய்யும் விதமாக உள்ளது. கதையில் கதாபாத்திரங்களுக்கு இடையேயான உரையாடலும் குறைந்த அளவிலேயே உள்ளது. மற்றும் அந்த உரையாடல்களும் தனி மனித உணர்ச்சியை மேலும் துலக்கம் கொள்ளச்செய்வதாகவே உள்ளது. இந்த வகையான கதை சொல்லும் முறை கதை மீண்டும் வாசகனின் மனதில் நிகழ்வதற்க்கான சாத்தியக் கூறுகளை குறைக்கிறது. அதே வேளையில் மனிதன் அகத்தை மேலும் ஆழமாக புரிந்து கொள்ள உதவுகிறது.

அதேபோல பெரும்பாலான கதைகள் கடந்த காலத்தின் நினைவுகளை அலசும் விதமாக உள்ளது. கடந்த கால நிகழ்வுகளிருந்து அறிதலைப் பெறுவது போல் அல்லாமல், கடந்த காலத்தின் மீது விமர்சனமாகவே உள்ளது. பெரும்பாலும் கடந்த காலம் ஏற்றுக்கொள்ள முடியாததாகவே உள்ளது. கடந்த காலத்திலிருந்து தப்பி செல்லுதலே வாழ்க்கையாக உள்ளது. வாழ்க்கையை அதன் எதார்த்த தளத்திலேயே அணுகும் விதமாக உள்ளது. வாழ்வின் எதார்த்த தளத்தில் ஞானம் முக்கியமில்லை உணர்ச்சிகளே முக்கியம். குறிப்பாக நினைவுகளிலிருந்து உணர்ச்சி உருவாகும் அந்த கணம் மட்டுமே கதை கருவாக உள்ளது. அந்த நிகழ்வுக்கு பின் உள்ள காலம் முக்கியமில்லை. பெரும்பாலான கதைகள் முடிவுகளை நோக்கி நகர்வதில்லை. ஓர்

புதிர்த்தன்மையுடன் நிறைவடைகின்றன. அதுவே கதையை மீண்டும் வாசிக்கவும் வாய்ப்பளிக்கிறது.

# 6. நம்பிக்கையும் அழிவும்: அகில் குமாரசாமி அவர்களுடன் ஓர் உரையாடல்

அயல்/நவம்பர்/ டிசம்பர் 2020

தமிழில்: லக்ஷ்மி பிரியா

BY ஸினா அக/ ZENA AGHA AND லக்ஷ்மி பிரியா

**ஈழ நிலத்திலிருந்து புலம்பெயர்ந்த பெற்றோருக்கு பிறந்து, அமெரிக்கா, நியூ ஜெர்ஸியில் வசித்துவரும் இளம் எழுத்தாளர் 'அகில் குமாரசாமி'. இவரின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'HALF GODS' என்ற தலைப்பில் புத்தமாக வெளிவந்துள்ளது.**

**நாற்பது ஆண்டுகள் ஈழ நிலம் முழுவதும் விரவிய போரினால் புலம்பெயர**

நிர்பந்திக்கப்பட்டவர்களின் அடுத்த அடுத்த சங்ததிகள், புலம்பெயர்ந்த நிலத்திலே வாழ்ந்து இனம் பரவுகின்றனர். அவர்களது சிக்கல்களை அகில் குமாரசாமி தனது புனைவின் களமாகக் கொள்கிறார். போரின் விளைவுகளை நேரடியாக உணர்ந்தவர்கள், போரின் விளைவுகளை உணராதா தங்களது சந்ததிகளிடம் எப்படிக் கொண்டு செல்கிறார்கள், தாயக நிலம் மீதான ஏக்கம் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு எழுதும் புனைவுகள் தனியே ஓர் இனத்தின் தனிப்பட்ட சிக்கல்களாக நின்றுவிடாமல் இந்த நூற்றாண்டில் தலையாத பிரச்சினையில் ஒன்றான புலம்பெயர்தலை அடிப்படையாகக் கொண்டு விரிகிறது. இந்த அம்சம் பல்வேறு இனத்தின் பொதுக்கதையாக நீளும் உலகளாவிய தன்மையை அளிக்கிறது. அகில் குமாரசாமியோடு பாலஸ்தீன

**ஈராக்கிய எழுத்தாளர் ZENA AGHA நிகழ்த்திய உரையாடலின் தமிழ் வடிவம் இது.**

தன்னுடைய ஆசிய மரபு குறித்தும் புலம்பெயர் இலக்கியத்தில் தான் எழுதியது குறித்தும் சிறுகதை எழுதும் கலை குறித்தும் ‘ஹாஃப் கோட்ஸ்’ (Half Gods) நூலாசிரியர் பேசுகிறார்.

அகில் குமாரசாமியின் அறிமுகப் படைப்பான, ‘ஹாஃப் கோட்ஸ்’ (Half Gods), என்னும் சிறு கதை தொகுப்பு, எப் எஸ் ஜி உதவி பதிப்பாசிரியரால் ‘இந்தக் கதைகள் அழகானவை’ (They’re beautiful) என்னும் சிறு குறிப்புடன் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டது. குமாரசாமியின் தொகுப்பில், அன்றைய சிலோனாக இருந்த இலங்கையில் இருந்து நியூஜெர்ஸிக்கு புலம் பெயர்ந்து வாழும் மூன்று தலைமுறைத் தமிழ் மக்களைப் பற்றிய பத்து தன்னிறைவுடைய சிறுகதைகள்

உள்ளன.

ஒவ்வொரு கதையும் தனித்துவத்துடன் நிற்கின்றபொழுதிலும், அனைத்து கதைகளிலும் பரவலாகக் காணப்படும் குறிப்புகளும் கதைத் தொடர்பும் அதன் அழகை வெளிக்கொணர்கிறன. துவக்கத்தில் எனக்கு மிகவும் நெருக்கமாக உணர்ந்த, பிடித்த கதாபாத்திரங்கள் கதை நகர நகர பன்முகம் கொண்டவர்களாகவும் துன்புறுத்தப்பட்ட வேதனை நிறைந்த கதாபாத்திரங்களாகவும் மாறியதை உணர்ந்தேன்.

வாசிப்பாளர்களைக் கவரும் வகையில் குமாரசாமி தன் கதைகளில் வேறுபட்ட கலாச்சாரம், வரலாறு, குடியேறியவர்களின் மனநிலை மற்றும் வேதனையைக்குறித்து நுட்பமாக பேசியுள்ளார்.

அவருடைய இலக்கிய பயணத்தை

கேட்ட பொழுது பெண் எழுத்தாளர்களுக்கு இத்துறையில் சாதனை விகிதம் நிலையானதில்லை என்பதை புரிந்துகொண்டேன். குமாரசாமி தன் எழுத்தின் மூலம், உள்ளதை உள்ளபடி எடுத்துரைத்து ஒரு வித விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சித்துள்ளார். அனைவருக்கும் புரியும் வகையில் பாராட்டிற்குரிய ஓர் புத்தகத்தை எழுதியுள்ளார்.

**– ஸினா அக**

**ஸினா அக: ‘ஹாஃப் கோட்ஸ்’ புத்தகத்தை எவ்வாறு எழுதத் துவங்கினீர்கள்?**

ஆரம்பத்தில் கதையில் வரும் கர்ணன் அர்ஜுனன் என்னும் இரு சகோதரர்களை வைத்தே துவங்கினேன். இவ்விரு பெயர்களிடையே உள்ள இதிகாச முக்கியத்துவமும் சகோதரர்களுக்கு

இடையில் உள்ள உறவும் படிக்கும்பொழுதே மஹாபாரதத்தை நினைவூட்டுகிறது. இவ்விரு கதாபாத்திரங்களைத் தவிர அந்தக் குடும்பத்தைப் பற்றியும் முக்கியமாக அவர்களின் தாய் மற்றும் தாத்தாவின் வாழ்க்கையை பற்றியும் அதில் உள்ள உண்மைகளையும் வாசிப்பவர்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன். எந்த ஒரு பொருளாக இருந்தாலும் அதை மாற்றி அமைக்கும் பொழுது அதன் உண்மை தன்மையில் சிறு விரிசல் விழுவது தவிர்க்க முடியாத நிகழ்வு. இதன்மூலம் ஓர் புது கதை அமைப்பை அமைக்கும் வாய்ப்பு உருவாக்குகிறது. 'ஹாஃப் கோட்ஸ்'-யில் ஹெய்டியின் அமைப்பை இலங்கையுடன் ஒப்பிடலாம். போட்ஸ்வானாவில் இருந்து வரும் அங்கோலியாவைச் சேர்ந்தவர் புதிய

ஜெர்ஸியில் வாழும் தமிழ் அகதிகளுடன் உணவு உண்ணுகிறார். இப்புத்தகம், நேர்ப்பாங்கற்ற அதே சமயம் நெருங்கி அமைக்கப்பட்ட ஒன்று, இதை புதினத்திற்கும் சிறுகதைக்கும் இடைப்பட்ட ஒன்றாகவே நான் கருதுகிறேன்.

**கதை அமைப்பின் ஓர் பாகமாக அமையும் அந்தக் குடும்பத்தைப் பற்றிய பகுதிகள் நினைத்த பலனை அளித்ததா?**

எந்த இடத்தில் எதை வெளிப்படுத்த வேண்டும் என்பதில் நான் தெளிவாக இருந்தேன். அதற்கு கதைத்தளமும் கதை சொல்லும் விதமும் உணர்ச்சிபூர்வமாக இருக்க வேண்டும் என்று புரிந்துகொண்டேன். உதாரணத்திற்கு ஒரு கதையில் தேயிலை தோட்டத்தில் வேலைபார்ப்பவராக வரும் ஓர் கதாபாத்திரத்தை, ஜெர்ஸியில் அகதிகளாக வாழும் ஓர் குடும்பத்தைப் பற்றிய கதையிலும்

காண முடிகிறது. இக்கதாபாத்திரத்தை புத்தகத்தின் முன் பகுதிகளில் அமைந்துள்ள 'நியூ வேர்ல்ட்' (New World) என்னும் கதையிலும் பின் பகுதிகளில் வரும் 'ஷேட்' (Shade) என்னும் கதையிலும் காண முடிகிறது. இவ்விரு கதைகளுள் முதலாவது கதை 1948-ஆம் ஆண்டின் சுதந்திரம் கிடைத்த இரவும் இரண்டாம் கதை ஜெர்சி கடற்கரையிலும் இடம்பெறுகிறது. இதன் மூலம் அனைத்துக் கதாபாத்திரங்களைப் பற்றியும் வெவ்வேறு விதமான அபிப்பிராயங்கள் படிப்பவர் மனதில் உருவாகிறது.

இவ்வாறு இறுதிக் கதையான 'தி புட்சர்'-ஐ (The Butcher) படிக்கும்பொழுது அனைத்துக் கதாபாத்திரங்களைக் குறித்தும் அந்தக் குடும்பத்தைக் குறித்தும் அனைத்தையும் அறிந்துகொள்ள முடிகிறது. இக்கதைகளில் உள்ள வேறுபாடுகளே ஓர் புது அனுபவமாக

அமைகிறது. பல கதாபாத்திரங்களின் எதிர்காலம் என்ன என்பது நமக்கு முன்பே தெரியும் பொழுதிலும் அனைத்துக் கதையிலும் ஏதோ ஒரு சாதியத்தின் அம்சம் அதற்கு அழகு சேர்க்கிறது.

மேலும் இக்கதைகளில் வெவ்வேறு நாட்டைச் சார்ந்தவர்கள் தம்மில் நடைபெறும் உரையாடல்கள் மூலம் அவர்கள் மத்தியில் உள்ள இடைவெளியை குறைக்க முயற்சித்தேன். பலப் பொழுதும் ஓர் நாட்டில் நடக்கும் போராட்டங்கள் வெளியுலகிற்கு தெரிவதே இல்லை. மக்கள் மத்தியில் உள்ள இந்தக் கண்ணுக்குத் தெரியாத சுவரை இல்லாமல் செய்வதற்க்கே இந்த முயற்சி.

**அரேபியாவை எடுத்துக்கொண்டால் தற்போது அது 22 நாடுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஓர் மொழி பேசும் மக்கள் இவ்வாறு வாழ்வது சாத்தியமா?**

**இம்மாற்றங்கள் சமீப காலத்தில் நடந்த ஒன்று. உதாரணத்திற்கு ஆங்கிலேயர்கள் ஈராக்கில் ஆட்சி அமைத்தபொழுது அந்நாட்டின் நாணயம் ரூபாயாகவே இருந்தது. புதிதாக ஆக்கிரமிக்கப்பட்ட இந்நாட்டை என்ன செய்வதென்றறியாமல் தடுமாறினர். இதன் விளைவாகவே அந்நாட்டில் போர் மற்றும் காலனித்துவம் கையோங்கி அதன் அழிவிற்கு வித்திட்டது. அனால் இன்றுவரை நம்மால் அதற்கு ஓர் தீர்வு காண முடியவில்லை.**

அது உண்மைதான். பல முடிவுகள் சரிவர விசாரிக்காமல், அந்நாட்டை பற்றி முறையாக தெரிந்துகொள்ளாமல் எடுக்கப்பட்டவை.

**இடைவெளிகளிடையே உள்ள நெருக்கம் பற்றி அழுத்தமாக பேசும் ஓர் புத்தகம் என்று கூட உங்கள் புத்தகத்தை எடுத்துக்கொள்ளலாம். காரணம், பெரும்பாலான பகுதிகளில் மக்களிடையே**

**உள்ள இடைவெளி, அவர்களின் கலாச்சாரங்களில் உள்ள வேறுபாடுகள் போன்றவற்றைக் குறித்து பெரிதும் பேசியிருக்கிறீர்கள். இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர் பற்றி பேசும் பொழுதிலும் கதாபாத்திரங்களை அதற்கு நேரடி சாட்சியாக அமைக்காமல் ஓர் கேட்டறிந்த கதை போல் அல்லது தொலைக்காட்சியில் கண்ட நிகழ்வு போல் சித்தரித்ததில் ஓர் சமநிலை காண முடிகிறது. அதை எவ்வாறு கையாண்டீர்?**

இப்புத்தகத்தை 'இடைவெளிகளிடையே உள்ள நெருக்கம்'என்று நீங்கள் குறிப்பிடுவது பொருத்தமாக உள்ளது. இதில் வரும் கதாபாத்திரங்கள் போரிலிருந்து தங்களின் வாழ்வை விடுபடுத்திக்கொள்ள பல்லாயிரம் மைல் கடந்து செல்கின்றனர். ஆனால் போரின் நினைவுகள் அவர்களை பின்தொடர்ந்தே வருகிறது. தொலைக்காட்சிப் பெட்டியும்

கணினியும் இவற்றை நினைவுபடுத்தும் இயந்திரங்களாகவே செயல்படுகின்றன. பாதுகாப்பான மண்டலம் என அறிவித்த இடங்களிலும் பாதுகாப்பில்லை என்னும் பொழுது சாமானியர்களிடையில் அதன் அடிப்படை அமைப்பை பற்றிய கேள்விகள் எழுகின்றது. ஜெர்சியில் அவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள் ஆனால் மனதளவில் அதன் பாதிப்பு இருந்துகொண்டே இருக்கிறது இப்புத்தகத்தில் நான் அழுத்தமாக கூறும் கருத்தும் இதுதான், போர்க்களம் இல்லா போருக்கு முடிவென்பதுண்டா?

இந்த இடைவெளியானது பாதுகாப்பை அளித்தாலும் ஒரு வித குற்ற உணர்வையும் ஏற்படுத்துகிறது. ஓர் வீட்டில் ஒன்றாகவாழும் பொழுதிலும் அவர்கள் மனதால் பிரிந்தே வாழ்கின்றனர். நாடுகளால் அடையாளத்தை தொலைத்து நிற்க்கும்


அபாயத்தில் உள்ளவர்களைப் பற்றி நேரடியாக பேசவேண்டும் என்று நினைத்தேன். சிலர் நேரடியாகவும் பலர் மறைமுகமாகவும் இப்படுகொலைகளால் பாதிக்கப்படுகிறார்கள். அரசியலை வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாது என்பது கூர்ந்து கவனித்தால் தெளிவாகப் புரியும். பிள்ளைகளின் அருமை பெற்றோருக்கு புரிவது பிள்ளைகள் தங்களை விட்டுத் தொலைதூரம் செல்லும்பொழுதுதான் என்று கூறுவதுபோல் இடைவெளிகளிடையே உள்ள நெருக்கம் என்பது முரண்பட்ட இரு கருத்துக்களாக இருந்தாலும் அதுவே உண்மை.

போர் குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் பல புத்தகங்கள் வெளிவந்துள்ளன ஆனால் நம் பங்களிப்பில் உள்ள புதுமையை நாம் கண்டறிய வேண்டும். ஹசான்

ப்ளாஸிமின் ‘தி இறாக்கி கிறைஸ்ட்’ (The Iraqi Christ) புத்தகத்தை பல முறை படித்திருக்கிறேன். அப்பொழுதுதான் அதில் உள்ள உண்மையையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர முடிந்தது.

**அது எனக்கு மிகவும் பிடித்த ஒரு புத்தகம். குறிப்பாக அந்தத் தொகுப்பில் வரும் ‘தி ஆர்க்கைவ்’ (The Archive) என்னும் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதன் முக்கியக் கதாபாத்திரம் ஐரோப்பாவில் உள்ள அகதிகள் மையத்திற்க்கு வந்துசேரும் பொழுது தன் வாழ்க்கைக் கதையைச் சொல்லத்தொடங்குவார். அப்பொழுது அவர் கதை சொல்லும் விதத்திலேயே அவர் மீது ஒரு நம்பிக்கை உருவாகும்.**

எனக்கு அந்தக் கதை பிடித்ததற்குக் காரணமே அக்கதைக்குள் உள்ள கதை தான். இம்முறையைக் கையாண்டு ‘தி ஸ்டோரி ஆப்


Staff Picks & Books
HALF GODS
AKIL KUMARASAMY

...

ஹாப்பினஸ்’ (The Story of Happiness) கதையில் கதாபாத்திரங்களின் சுபாவங்களையும் அடையாளத்தையும் வாசிப்பாளர்களிடம் எடுத்துச்செல்ல முயன்றுள்ளேன்.

**‘தி ஸ்டோரி ஆப் ஹாப்பினஸ்’உண்மையில் எனக்கு ஆன் கார்சன் அவர்கள் எழுதிய ’தி ஆடோபயோகிராபி ஒப் ரெட்’ (The Auto-biography of Red) புத்தகத்தை நினைவு படுத்தியது. கதையில் வரும் இறக்கையும் செதில்களும் உடைய சிறுவன் எனக்கு ஹெராக்கிள்ஸ்-ஐ நினைவு படுத்தினான். முக்கியமாக மஹாபாரதத்தைத் தழுவி நீங்கள் எழுதிய கதைகள் எனக்கு மிகவும் பிடித்ததற்குக் காரணம், எனக்கு சமஸ்கிருதம் தெரியும் என்பதாலா அல்லது அனைவரையும் கவரும் வகையில் நீங்கள் கதை சொல்லிய விதமா என்று எனக்கு தெரியவில்லை.**

**உங்கள் புத்தகத்தில் இதிகாசம் செய்யுள் என ஒவ்வொரு கதையிலும் வெவ்வேறு முறைகளை கையாண்டுள்ளீர்கள். புதிய முறைகளைக் கையாள்வதில் தடுமாற்றம் இருந்ததா?**

நான் முழு மூச்சுடன் ஆரம்பித்த ஒரு விஷயம் இது. அந்தச் சமயத்தில் நிறைய நாடகங்களைப் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் திரைக்கதை எழுதும் முறை மீது எனக்கு விருப்பம் உருவானது. அதில் சுவாரஸ்யம் கூட்டும் நுட்பமான முறைகள் பல உள்ளன. புனைக்கதை எழுதும் பொழுது எதை பற்றி வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம். திரைப்படம் பார்க்கும் பொழுது பார்வையாளர்களுக்கு கதாபாத்திரங்ளைக் குறித்து முழுமையாக அறிவதில்லை. அந்த அறியாமையில் தான் அதன்

சுவாரஸ்யமே அடங்கியுள்ளது. இவ்வகை ஸ்வாரஸ்யங்களைப் புத்தகத்தின் வழி வாசிப்பாளர்களுக்குக் கொண்டுசெல்வதே என் முதன்மை நோக்கமாக இருந்தது. நாடக முரண்சுவை நிறைந்த ஓர் புத்தகம் இது. அதாவது கதையில் நடக்கும் அனைத்தும் வாசிப்பாளர்களுக்கு தெரியும் ஆனால் கதையில் வரும் கதாபாத்திரங்களுக்கு தெரிய வாய்ப்பில்லை. திரைப்படங்களில் இவ்வகை நாடக முரண்சுவையைக் காணலாம்.

**நான் அரேபிய நாட்டைச் சார்ந்தவள். என் படைப்புகள் அனைத்தும் ஆங்கிலத்தில் மேற்கத்திய நாடுகளில் வெளியிடப்படுகிறது. இந்நிலையில் என் படைப்புகள் யாருக்காக எழுதப்பட்டவை என்பது குறித்துக் கேள்விகள் எழுகிறது. இவை மொழிபெயர்க்கப்படவில்லை என்றால் ஈராக்கியர்கள் வேடிக்கையாளர்களாகவே**

இறுதி வரை இருந்துவிடுவார்களா? அனைத்து ஈராக்கியர்களுக்கும் இதுவே நிலை என்றில்லை, ஆனால் என் தாயைப் பொறுத்தவகையில் அதுவே நடக்கும்.

படைப்புகளில் பலதும் அடையாளத்தை பற்றிய மற்றும் இனத்தைப் பற்றிய அரசியலாக இருப்பதால் அதைக்குறித்து விமர்சிக்கவேண்டி இருக்கிறது. அதே சமயம் புகழ் வேண்டும் என்ற நோக்கத்தில் தேவையில்லாமல் என் அடையாளத்தை விளம்பரப்படுத்த நான் விரும்பவில்லை. உதாரணத்திற்கு லண்டனைப் பற்றி நான் எழுதினால் அதை படிக்கும்பொழுது என் சுய அனுபவங்கள் அதன் உண்மைத் தன்மையை அதிகரிக்கிறது. ஆனால் அதை அறுபதுகளில் பாக்தாத்த்தில் நடந்ததைப் போல் எழுதினால் படிக்கும் பொழுது கற்பனை என்று தெரிந்து விடுகிறது. அவ்வாறு நாம் காணாத நமக்குச்

**சொந்தம் இல்லாத ஓர் இடத்தைப் பற்றி எழுதுவதற்கு துணிச்சல் வேண்டும். அப்படிப் படைக்கப்படும் கதைக்கு முழு உரிமையும் உங்களுக்கு உள்ளது.**

புனைக்கதையின் சாத்ய கூறுகளை முழுமையாக அறிய வேண்டும் என்றால் அதில் நிஜத்துடன் கற்பனையும் கலக்க வேண்டும். யார் படிப்பதற்காக எழுதுகிறோம் என்பது மிக முக்கியம். ரால்ப் எலிசன் அவர்கள் எழுதிய ‘இன்விசிபில் மேன்’ (Invisible Man) புத்தகத்தின் தலைப்பில் இருந்தே தெரிகிறது அது வெள்ளையர்களை நோக்கம் வைத்து எழுதப்பட்ட புத்தகம் என்று டோனி மோரிசன் கூறியிருக்கிறார். எழுதும் விதம் மற்றும் அதில் உள்ள விளக்கங்களை வைத்து யாருக்காக அந்த நூல் எழுதப்பட்டது என்று கூறி விட முடியும். பிரிட்டிஷ் இலக்கியங்களில் க்ரம்பெட் என்றால் என்ன என்றோ இரண்டாம்

உலகப்போர் எதனால் உண்டானது என்றோ விளக்க வேண்டிய அவசியம் இல்லை. காரணம் அப்புத்தகங்களைப் படிக்கும் வாசிப்பாளர்களுக்கு அதை பற்றி முழுமையாக அறிந்திருக்கும். எழுதும் பொழுது உங்களை மையமாகவைத்து, உங்களின் நிலையைப் பொருத்து தெளிவான வழிமுறைகளைக் கொண்டு கதை நகர வேண்டும். முக்கியமாக பயமில்லாமல் தெளிவான சிந்தனையுடன் எழுத வேண்டும்.

நான் ஆங்கிலத்தில் எழுதுவதால் கொஞ்சம் கவனமாக செயல்பட வேண்டியுள்ளது. ஆனால் இதன் வாயிலாக கூடுதல் வாடிக்கையாளர்களிடம் என் படைப்பை கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைக்கிறது. காரணம் பிற மொழிகளில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப் படும் புத்தகங்களின் எண்ணிக்கை சதவீதம்

மிகக் குறைவாகவே உள்ளது.

இவை ஒரு புறம் இருக்க, என்னை பொருத்தமட்டில் நீங்கள் எதை எழுதினாலும் அது உங்களுக்கு உண்மையாக முழுமையாக உணர வேண்டும். வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே காரணத்திற்க்காக உங்கள் அடையாளத்தை தேவை இல்லாமல் உபயோகிப்பதன் மூலம் பெரும் செல்வத்தை வேண்டுமானால் ஈட்டலாம் ஆனால் அதனால் எந்த பயனுமில்லை.

**எழுத்தாளர்கள் தங்கள் வாழ்வில் நடந்த உண்மை அனுபவங்களை வைத்து மட்டுமே கதை எழுத வேண்டும் என்றால் அனைத்துக் கதைகளும் நடுத்தர வெள்ளையர்களைப் பற்றியே இருக்கும் என்று நான் ஒரு புத்தகத்தில் படித்தேன். அதை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

கற்பனைக் கதை எழுதுவதும் அது உண்மையில் சாத்தியம் ஆவதும் ஒரு வகை அதிரிஷ்டம் தான்.

**உங்கள் கதைத் தொகுப்பில் எனக்கு மிகவும் பிடித்தது ‘ஆபீஸ் ஒப் மிஸ்ஸிங் பெர்சன்ஸ்’ (Office of Missing Persons). இழப்பைப் பற்றி அதில் கூறியிருப்பவை அனைத்தும் என் மனதைத் தொட்ட உணர்வுகள். அதில் குறிப்பிட்டுள்ள போரினால் ஏற்படும் இழப்பும் அதனால் உருவாகும் மன உளைச்சலும் ‘தி கோட் ஒப் ஸ்மால் திங்ஸ்’ (The God of Small Things) புத்தகத்தை நினைவு படுத்தியது**

நீங்கள் சுட்டிக்காட்டியதில் வேடிக்கையான விஷயம் என்னவென்றால், ‘தி நியூ யோற்கற்’ (The New Yorker) இதழில் என் புத்தகத்தைப் பற்றி வெளிவந்த விமர்சனத்தில் என்னை எழுத்தாளர் அருந்ததி ராய் அவர்களுடன் ஒப்பிட்டிருந்தனர். அதன் வாயிலாக

அருந்ததி ராய் அவர்களுக்கு என் புத்தகத்தை அனுப்பிவைக்கும் வாய்ப்பு கிடைத்தது மனநிறைவை அளித்தது.

**உங்கள் புத்தகத்தை படித்த பொழுது மனநிறைவு தரும் பல கேள்விகள் என்னுள் எழும்பியதை உணர்ந்தேன். அனைத்துக் கதைகளையும் முழுமையாக அறிந்த உணர்ந்த ஒருவராக உங்களுக்கு மிகவும் பிடித்த கதை எது? அவ்வரிசையில் கடைசிக் கதை எது?**

எல்லாக் கதைகளிலும் ஏதேனும் ஒரு சவால் இருந்து கொண்டேதான் இருந்தது. ‘வென் வி வெர் சில்றென்’ (When We Were Children) கதையை எழுதும் பொழுது அதில் உள்ள உணர்ச்சிபூர்வமான பாகங்கள் கடினமாக இருந்தது. ‘தி புட்சர்’ கதைதான் நான் முதல் முதலில் எழுத ஆரம்பித்த கதை. அதை எழுதி முடிக்க எனக்கு சில வருடங்கள் ஆனதால் அக்கதையுடன் ஓர் இணக்கம் உள்ளது.

சிறுகதை எழுதும் பொழுது அது மிகச் சிறப்பாக அமைந்துவர வேண்டும். குறுகிய நேரத்தில் பெரும் பாதிப்பை உண்டாக்க வல்லதாக அமைய வேண்டும். புனிதத்தில் இவ்வகைக் கோட்பாடுகள் கிடையாது. இத்தகைய பண்புடையனவாய் இருப்பதினால் சிறுகதை வாசிப்பாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கும். அனால் எனக்கு மிகவும் பிடித்தவை சிறுகதைகளே, அது ஒரு வகைக் கலை.

# 7. நாயும் நானும்:

## க.கலாமோகன்

சிறுகதைகள்/நவம்பர்/ டிசம்பர் 2020

BY க. கலாமோகன்

இது எனது நாய். என்னுடன்தான் இருக்கும். ஒருபோதுமே என்னை விட்டு ஓடாது. நாயின் பெயர்? தெரியாது. 20 வருடங்களுக்கு மேலாக என்னுடன். ஆம், நாம் வீதியில். நான் அதனை நாய் என அழைப்பதில்லை. எந்தப் பெயர் எனக்கு நினைவில் வருகின்றதோ அந்தப் பெயரால் அழைப்பேன். உண்மையிலேயே எனக்கு எனது பெயரும் தெரியாது. ஆனால் எம் முன் சில சில்லறைகள், சாப்பாடுகள் வைப்போரது பெயர்கள் அவ்வப்போது எனது நினைவுக்கு வரும்.



...

நான் எங்கு பிறந்தேன்? நினைவே இல்லை. நீண்ட ஆண்டுகளாகப் பிரான்சில். விசா? நிச்சயமாக இல்லை. பொலிஸார் என்னைப் பிடிப்பார்களா? அதுவும் தெரியாது. அவர்களே என் முன் சிகரெட்டுகளைப் போடுபவர்கள். எனது இடம் ஓர் வீதி. எனக்குத் தொழிலும் இல்லை, சம்பளமும் இல்லை.

“வணக்கம் ஜீஸேல்.”

“நான் ஜீஸேல் இல்லை. எலிசபெத்...”

“வணக்கம் எலிசபெத்.”

“இது, நான் இப்போது சமைத்த பண்டி இறைச்சி. சூடாக உள்ளது.” என்றபடி ஓர் பிளாஸ்ட்டிக் பெட்டியை எடுத்து வைன் போத்தலுடன் வைக்கின்றாள்.

“நன்றி எலிசபெத்.”

“தாமதி, உனது நாய்க்கும் சாப்பாடு

உள்ளது.”

வேறு ஓர் சிறு பை என் முன். அவள் போன பின்பு வைன் போத்தலைத் திறந்து கொஞ்சம் குடிக்கின்றேன். சில வேளைகளில் கொஞ்சம், கொஞ்சம் குடிப்பது எனது வழக்கம். நான் சாப்பிடும் அனைத்தையும் எனது நாய் சாப்பிடும். பண்டி சுவையாக இருந்தது. ஓர் அழகான துண்டை நாயிடம் கொடுக்கின்றேன். அது அமைதியாகச் சாப்பிடுவது என்னை மகிழ்த்துகின்றது. எமக்கு எப்போதும் பண்டிகளே கிடைப்பதில்லை. அனைத்து இறைச்சி வகைகளும் கிடைக்கும். மீன்கள் ஒரு போதுமே கிடைத்ததில்லை. நிச்சயமாக நான் மீன்களைப் பார்த்துப் பல வருடங்கள்.

எனக்குப் பாரிஸ் வீதியில் நிறைய இடங்கள் உள்ளன. நடப்பவர்களைத் தொல்லைக்கு உட்படுத்தாத இடங்களே எனக்கு விருப்பம். இந்த இடங்கள் மிகவும்

குறைவே. தோட்டங்கள் சுவையானவை. அவைகள் இரவில் பூட்டப்பட்டு இருக்கும். நாம் சில தினங்களாக மதுப் போத்தல்கள் எறியப்படும் பெரிய பிளாஸ்ட்டிக் பெட்டியின் அருகில்தான். பகலில் எமக்கு முன்னால் நடந்து திரிபவர்கள் எம்மைப் பார்த்துச் சிரிப்பர். சில்லறைகள் விழும். சாப்பாடுகளும்தான்.

தூங்குவதும் விழிப்பதும்தான் என் வேலை. நாயும் என்னுடன் தூங்குவதும், வெளியில் சில வேளைகளில் செல்வதுமாக. நான் தூங்கிய வேளையில் சில்லறைகள் விழுந்தால் களவு போவதில்லை. பல வேளைகளில் எனது தூக்கத்தைக் கலைப்பது நாயின் முத்தங்களே. அதனது முத்தங்கள் மிகவும் சுவையானவை.

சில தினங்களின் முன் நான் காலையில் விழித்தபோது எனது நாயைக் காணவில்லை. பல தடவைகளில் இப்படி நடக்கும். நான் தலையை உடைக்கமாட்டேன். இரவு ஆகுமுன்

என்னைத் தேடி வந்துவிடும். ஆனால், அது இல்லையேல் என்னை ஓர் வகையில் கடிப்பது வெறுமையே. அந்த நாய்க்கு எல்லோரையும் விட என்னைத் தெரியும். பலருடன் நான் பொதுவாகச் சிரிப்பேன். ஆனால் எனது மொழியை நாய்தான் கேட்கும்.

ஒருபோதுமே நான் கவிதைகளை எழுதியதில்லை. எனக்கு எழுதவே தெரியாது. கவிதைகள் எனக்குள் சில வேளைகளில் வரும். அவைகளை நான் எனது நாயிடம்

மட்டும்தான் சொல்வேன்.

”பச்சை இலை

ஓர் வனத்தில்

தூரத்தில் துப்பாக்கிகள்

பச்சை இலையைக் காக்க

நான் ஓடுகையில்

முறிந்த கிளை என் தலையில்

இப்போது பச்சை இலை

ஓர் சிவப்பு இலையாகி....”

இந்தக் கவிதையை நான் நாயிடம்

சொன்னபோது அது அழுதது. சில கணங்களில் மௌனம். பின்பும் அழுதது. அதனது கண்ணீர்கள் எனது கிழிந்த சட்டையில் விழுந்தன.

“ஏன் அழுதாய்?”

“வாவ்... வாவ் ...” எனச் சொல்லியபோது அதனது விழிகளில் இருந்து மீண்டும் கண்ணீர்கள் பெருகின.

சில வேளைகளில் நானும் அழுவதுண்டு. நாய் என்னை விட்டுத் தூரத்தில் போகும்போது. அருகில் இருந்தால் அது அழும் என்பதால்தான். எனது அழுகைகளுக்குக் காரணங்கள் இருக்கலாம். அவைகளை எவருக்கும் சொல்லுவது தேவையா? சொன்னால் இந்தக் கண்ணீர்த் துளிகளின் காரணங்களை அவர்கள் அறிய முயல்வார்களா?

“உங்கள் நாய் எங்கே?” எனும் கேள்வியால் நான் விழிக்கின்றேன்.

என் முன் ஓர் சிறுமி. அவளை எனக்குச் சில மாதங்களாகத் தெரியும். பெயரோ தெரியாது. சொக்லேட்டுகள் மட்டுமே கொண்டுவருவாள். நாய் அதனை விரும்பிச் சாப்பிடும், அவளுக்குச் சிலவேளைகளில் முத்தமும் கொடுக்கும். சில வேளைகளில் நானும் இந்த சொக்லேட்டில் சில துண்டுகளைச் சுவைத்துள்ளேன். இவைகள் மிகவும் விலை கூடிய சொக்லேட்டுகள் என்பது என் நினைப்பு.

“நாய் வெளியே போய் விட்டது.”

“எப்போது வரும்?”

“இன்று வரும். ஆனால் எப்போது வரும் என்பது எனக்குத் தெரியாது.”

“வரும்போது, என்னிடம் சொக்லேட்டுகள் இன்று இல்லை என்று சொல்லமுடியுமா?”

“நீ கிடைக்கும்போது கொடு... கொடுக்கவேண்டும் என்பதற்காக நீ சிரமப்படவேண்டாம்....”

“எனக்கு உங்களது நாயில் விருப்பம்.”

“சரி, உனது சொக்லேட்டுகள் விலை கூடியதாக இருக்கும் என நினைக்கின்றேன்.”

“உண்மை, மிகவும் விலை கூடியவையே. பணக்காரர்கள்தான் அவைகளை வாங்க முடியும்.”

“எப்படி இவைகள் உனக்குக் கிடைக்கின்றன?”

“உங்களுக்கு சாம்ஸ் எலிசே பகுதியைத் தெரியுமா?”

“தெரியும். அங்கு நான் எனது நாயுடன் சென்றபோது சில முதலாளிகள் என்னைத் துரத்திவிட்டனர்.”

“அது பெரிய முதலாளிகளின் பகுதி. அங்குதான் எனது அப்பாவின் சொக்லேட் கடை உள்ளது.  எனது அப்பாவும் ஓர் பெரிய முதலாளி.”

“நல்லது, நீ நிறையச் சொக்லேட்டுகளைச் சாப்பிட்டிருப்பாய் என நான் நினைக்கின்றேன்.”

“இல்லை, எனக்கு அவைகளில் விருப்பம் இல்லை.”

“ஒரு போதுமே நீ அவைகளைச் சாப்பிட்டது இல்லையா?”

“சில வேளைகளில்.  ஆனால் இவைகள் பலருக்குப் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும்.”  என்றபின் அவளது விழிகளில் இருந்து சில துளிகள் வெளிவந்ததைக் கண்டேன்.

“ஏன் அழுகின்றாய்?”

அவள் தனது சொக்கையில் வடிந்த துளிகளைத் துடைத்தாள்.

“என்னிடமும் ஓர் நாய் இருந்தது.”

“அது இப்போது எங்கே?”

“அது செத்துவிட்டது.”

“விபத்தா?”

“வருத்தம்.”

“என்ன வருத்தம் என அறியலாமா?”

“புற்றுநோய்.”

எனது விழிகளில் இருந்து கண்ணீர்கள் வழிந்தன.

“அழவேண்டாம், பெரியவரே.”

“உனது உள்ளத்தின் கவலை எனக்கு விளங்குகின்றது.”

“எனது நாயின் பெயர் ரியோ.”

“அழகிய பெயர்.”

“அதற்குச் சொக்லேட்டுகளில் நிறைய விருப்பம். எமது கடையில் விற்கப்படுவைகளே அதற்கு விருப்பம்... இப்போது உங்களது நாயை நான் எனது ரியோவாகப் பார்க்கின்றேன். அதனது பெயர் எது பெரியவரே?”

“மன்னிக்கவும் சிறுமியே. அதனது பெயர் எனக்குத் தெரியாது. 11 வருடங்கள் அது என்னுடன். ஆனால் அனைத்துப் பெயர்களாலும் நான் அதனை அழைப்பதுண்டு.”

“நீங்கள் வழங்கும் அனைத்துப் பெயர்களும் அதனது பெயர்களே... சரி...” என்றபடி அவள் ஓர் சிறிய பெட்டியைத் தருகின்றாள். அந்தப் பெட்டியில் இரண்டு மீன்களின் முகங்கள் இருந்தன.

“இது ரியோவுக்கு.”

அவள் போகும் வேளையில் அவளது நிழல்களில் இருந்து கண்ணீர்கள் கொட்டுவதை எனது விழிகள் கண்டன. எனது வீதி வாழ்வில் நான் இத்தகைய படங்களைப் பல வேளைகளில் கண்டுள்ளேன். காணுபவைகள் ஓர் தினத்தில் அழிபவையா? என்னிடம் சில வேளைகளில் சில நினைவுகள் வரும். நான் நினைவுகளைக் காப்பதில் அக்கறை காட்டாதவன் என்பது என் முன் நடப்பவர்களுக்கும், ஓடுபவர்களுக்கும் தெரியுமா? என் முன் தெரிபவர்கள் இவர்கள் என நான் சொல்லும்போது, இவர்கள் முன் நான் நிச்சயமாக இவராக இருப்பேன்.

ஓர் இளைஞன் தன் பியர் புட்டியை எறிகின்றான். பின் அது எனது கையில். சில சொட்டுகள் இருந்தன. குடித்தேன்.

“மார்கரீத்....”

சிலவேளைகளில் அவள் என்முன் வருவதுண்டு. நான் எனது அம்மம்மாவைக் காணவில்லையெனிலும், அவள் எனது அம்மம்மா போல இருப்பாள்.

“பிடி, சாப்பிடு.”

என்னிடம் ஓர் பிளாஸ்ட்டிக் பையத் தந்துவிட்டுப் போய் விட்டாள்.

அதனுள் போர்த்தோ வைனும், சில நசுங்கிய உருளைக் கிழங்குகளும். தனது தேசம் போர்த்துக்கல் என்று ஓர் தடவை சொல்லியுள்ளாள்.

காச்சப்பட்ட போர்த்தோ வைன் மிகவும் இனிப்பைத் தந்தது. குடித்தேன். உருளைக் கிழங்கில் சிறிது உறைப்பு இருந்தது. இப்போது எத்தனை மணி? தெரியாது. எனது விழிகளின் முன் மங்கல் நிறம். ஏன்

இன்னமும் நாய் வரவில்லை? மணிக்கூடு இருந்தால்தானே நேரத்தை அறியலாம். ஓர் பாண் துண்டைக் கடிக்கின்றேன். சில வேளைகளில் எனது நாய் மறுநாளிலும் வரும் வழக்கத்தைக் கொண்டது. அருகில் கிடந்த ஏற்கனவே பற்றப்பட்ட சுருட்டைப் புகைத்தபின் தூங்குகின்றேன்.

எனது தூக்கத்தைக் கலைத்தது இனிமையான முத்தம். அது எனது நாயினது. இருளின் மங்கலில் அதனது விழிகள்

விளக்குகளைப் போலப்பட்டன.

”எனது விளக்குகள்

நாயின் விழிகள்

நான் சூரியனைத் தின்று

பல வருடங்கள்.”

எனது நாய் ஓர் பெண்ணா, ஆணா அல்லது அலியா என்பது எனக்குத் தெரியாது. இந்தத் தெரிவு எனக்கு மிகவும் அவசியமானதா? இந்த இரவில் நான் எனது நாயை ஜூலியா என்று அழைத்தேன்.

“உனக்கு எனது பெயர் எப்படித் தெரியும்?” எனும் குரல் என் அருகில் இருந்து கேட்டது. அது நாயின் குரல் அல்ல.

எனது அருகில் ஓர் பெண் படுத்திருந்ததைக் கண்டேன். பாரிஸில் பலர் வீதிகளில் வாழ்கின்றனர் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எனக்கு அருகில் எவரும் தூங்கியதை நான் ஒருபோதுமே கண்டதில்லை.

“நான் ஜூலியா என்பது எப்படி உனக்குத் தெரியும்?”

“நீ ஜூலியா என்பது எனக்குத் தெரியாது.”

“ஏன் இந்தப் பெயரால் என்னை அழைத்தாய்?”

“அது உனது பெயர் இல்லை.”

“நீ, நடிக்கின்றாயா?”

“இல்லை, அது எனது நாயின் பெயர்.”

“நீ நடிக்கின்றாய்.” அவள் கத்தியதுபோது அது எனது அருகில் வந்தது.

“இல்லை.”

“உனது நாய் ஓர் பெண் அல்ல, அது ஓர் ஆண்.”

“அது ஆணா, பெண்ணா என்பது எனக்குத் தெரியாது. எனது நாய்க்குப் பல பெயர்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் ஜூலியா.”

“சரி, எனது வயது உனக்குத் தெரியுமா?”

“ஏன் உனது வயது எனக்குத் தெரியவேண்டும்?”

“நீ கிழவன்.”

“அப்படியா? அதுவும் எனக்குத் தெரியாது? நீ கிழவியா?”

“முட்டாள்! எனக்கு 20 வயது.”

“நான் தூங்கப் போகின்றேன்.”

“நீ தூங்க முடியாது. உனது போத்தலைத்

தா.”

கொடுக்கின்றேன். குடிக்கின்றாள்.

“சுவையான வைன். பிடி…” எனச் சொல்லியபடி ஓர் பையைத் தருகின்றாள்.

“பார்.”

அதனுள் பொரித்த கோழித்துண்டுகள். கருகல் மணம் என் மூக்கைத் தொட்டது. பல வாரங்களாக நான் கோழி சாப்பிட்டதில்லை. அதில் விருப்பம் எனக்கு. எனது நாய் ஓர் துண்டைக் கடித்ததும் துப்பிவிடும். ஓர் துண்டை எடுத்துக் கடித்தேன். மீண்டும் ஓர் துண்டு.

“சுவையா?”

“ஆம், மிகவும் சுவை…”

“நிறுத்து!”

அவள் தனது பிரேசியரைக் கழட்டினாள்.

இரண்டு சிவப்பு முத்துக்கள் எனக்குத் தெரிந்தன.

“சுவை.”

கோழித் துண்டுகள் எனது வீதி மெத்தையில் வீழ்ந்தன.

நான் பல பெண்களுடன் கிடந்துள்ளேன். அவள்களை நான் தேடவில்லை. சில உடல்கள் என்னைத் தேடும்போது நான் அவைகளைத் துரத்துவதா? ஜூலியா என்னைத் தனது பல்களால் கடித்தாள். அவை மிகவும் சுவையானவை.

“கடி!” நான் கத்தினேன்.

அப்போது எனது நாயும் என்னை முத்தமிட்டது. ஜூலியாவின் பல்கள் மிகவும் கூராக இருந்ததைக் கண்டு சிறிதே அஞ்சினேன். அவளது முலைகள் வெளியே வந்தபோது எனது விழிகள் அவைளைப்

பசியுடன் பார்த்தன. பாய்ந்து எனது நாய் அவைகளை முத்தமிட்டது. அதனைத் துூரத்தினேன். அது என்முன் கோபத்தில் கத்தியது. மீண்டும் துூரத்தினேன். அது சிறிது துூரத்தில் சென்று மீண்டும் கத்திக் கத்தி களைப்பில் மண்ணில் சரிந்தது.

ஜூலியா இப்போது ” நீ இளைஞன்” என எனக்குச் சொன்னாள்.

“ஏன், சில கணங்களின் முன் கிழவன் எனச் சொன்னாய்?”

“தா, தா…” எனக் கத்தினாள்.

கொடுத்தேன். வீதிகளில் சில கால்களின் அசைவுகள் கேட்டன. ஓர் கிழிந்த மெத்தைக்குள் நாம் எமது வயதுகளை மறந்தோம்.

விடிந்தபோது நான் தனிமையில். அவள் எங்கே? நாயையும் நான் அன்று

காணவில்லை.

# 8. பின்வாங்குதல்: சரத் விஜேசூரிய

சிறுகதைகள்/நவம்பர்/ டிசம்பர் 2020

தமிழில்: எம்.ரிஷான் ஷெரீப்

BY சரத் விஜேசூரிய

தனது மகனின் திருமண வைபவத்துக்கான நடவடிக்கைகள் பூர்த்தியான நிலையில், தான் கேள்விப்பட்ட தகவலால் திருமதி. ரணசிங்க நிலைகுலைந்து போயிருந்தாள். அவள் மிகுந்த கையறு நிலைக்கு ஆளாகியிருந்தாள்.

கணவனும் அருகில் இல்லாத நிலைமையில், அனைத்து நடவடிக்கைகளையும் எவ்வளவு பாடுபட்டு ஏற்பாடு செய்தாள்?..



...

இறுதியில் அனைத்தையும் மின்னல் வேகத்தில் தவிடுபொடியாக்கி விடும் தகவலொன்றைத்தானே கேட்கக் கிடைத்தது.. திருமணத்தை முன்னிட்டு, அடுத்த கிழமை துபாயிலிருந்து வரப் போகும் அவளது கணவன் பல எதிர்பார்ப்புகளைச் சுமந்து கொண்டுதான் வருவார் என்பதை தனியாக விவரிக்கத் தேவையில்லை. ஒவ்வொரு நாளும் இரவில் அரை மணித்தியாலம்போல அவளுடன் உரையாடி, திருமண ஏற்பாடுகளைக் குறித்து விசாரித்து, தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி மிகவும் மனமுவந்து அவளை தைரியமூட்டியவர் அவர். அந்த அனுபவங்களின் காரணமாக அவளது இதயம் ஆறுதலடைந்து பூரித்துப் போன விதத்தை எண்ணிப் பார்ப்பதுகூட அவளுக்கு மகிழ்ச்சிதான். எவ்வளவு அருமையான காலம்

அது? மீண்டும் அவ்வாறானதோர் காலத்தை அனுபவிக்கும் வாய்ப்பு கிடைக்காது. மிகப் பிரமாண்டமான திருமண வைபவமொன்றை நேரில் காணும் ஆவலில், கணவன் தூர தேசத்திலிருந்துகொண்டு வழங்கிய அறிவுறுத்தல்களையும், தெளிவுபடுத்திய விடயங்களையும் பின்னொரு நாளில் நேரில் பார்க்கக் கூடியவாறு ஒழுங்காக நிறைவேற்றி வைத்ததே எவ்வளவு உத்வேகத்தைத் தந்தது?.. மனதை ஆற்றுப்படுத்திய அந்த மகிழ்ச்சியை யாரோ களவாடிப் போனது போலிருந்தது.

இன்றிரவு அவர் கதைக்கும்போது கேட்டால் என்ன சொல்வது?

மகள் தனது இஷ்டத்துக்கு திருமணம் செய்து கொண்டதால் பெற்றோரின் மனம் விரும்பியதுபோல, திருமண வைபவமொன்றை எடுக்கும் வாய்ப்பு கிடைக்கவேயில்லை. ஆகவே, மிகவும்

உயர்தரத்தில் சொந்தபந்தங்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்து, பிரமாண்டமாக தனது மகனின் திருமண வைபவத்தை எடுக்க வேண்டும் என்பதுவே அவளதும் எதிர்பார்ப்பாக இருந்தது. இப்போது அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சொந்தபந்தங்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது? அவர்கள் கேட்கப்போகும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?

“மகனும் அப்பா போன வழியிலேயே போகத் தீர்மானிச்சது எவ்வளவு நல்ல விஷயம்?”

தனது மகன் மொரட்டுவை பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதை அறிந்து கொண்ட கணவன் மிகுந்த பெருமிதத்தோடு கூறிய வார்த்தைகளை திருமதி. ரணசிங்க கவலையோடு நினைத்துப் பார்த்தாள். மின்

பொறியியலாளரான கணவன், ஏனைய பொறியியலாளர்களை விடவும் மின் பொறியியலாளர்கள்தான் உயர்வானவர்கள் என்ற உணர்வோடுதான் எப்போதும் பெருமை பேசி வந்தார். மின் பொறியியல் படிப்பைத் தொடர ஆரம்பித்த பிறகு மகனும் கூட அப்பாவின் அதே கருத்தைத்தான் வெளிப்படுத்தினான். படிப்பில் திறமை வாய்ந்த அவளது மகன் மிகவும் விரைவாக அவளை விட்டுத் தொலைவானது, அப்பாவின் மீது மிகுந்த மரியாதை வைத்து அவருடன் மிகவும் நெருக்கமானதால்தான். ‘அம்மா ஒரு உலகம் விளங்காத மோட்டுப் பொம்பளை’ என்ற எண்ணத்தை அப்பா, மகன் என இருவரும் கொண்டிருக்கக் கூடும். இருப்பினும், மகன் தனது எதிர்காலத்தைக் குறித்துச் சிந்தித்தது, அப்பாவை விடவும் வித்தியாசமான கோணத்தில்தான் என்று கூற

முடியுமா? அந்தத் தீர்மானம் பிழையாகிப் போனது, இல்லையா? அப்பா கூறியது போலவே, அப்பா போன வழியிலேயே தனது அனைத்து நடவடிக்கைகளையும் மகனும் தேர்ந்தெடுத்திருக்கிறானோ?

மகன் பாடசாலையில் உயர்தரம் படிக்கும் போதே தூரத்துச் சொந்தத்தில், ஆனால் இந்தக் குடும்பத்தோடு நெருங்கிப் பழகி வந்த ஒரு ஆசிரியையின் மகளோடு, வருங்காலத்தில் அவளைத்தான் கல்யாணம் முடிப்பேன் என்ற உத்தரவாதத்தை அளித்து வெளிப்படையாகவே காதல் தொடர்பைப் பேணி வந்தவன். தன்னைப் போலவே, தனது கணவனும் அந்தத் தொடர்பை விரும்பியிருந்த விதத்தை திருமதி.ரணசிங்க நினைத்துப் பார்த்தாள். குடும்பத்தில் பெரியவர்களது ஆசிர்வாதங்களும் அவர்களுக்குக் கிடைத்திருந்தன. ஆனாலும்,

மகன் பல்கலைக்கழகத்துக்குப் போனதற்குப் பிறகு, ‘அவளால என்னைப் புரிஞ்சுக்க முடியாது’ என்று கோபத்தோடு கூறி அந்தத் தொடர்பை நிறுத்தி விட்டிருந்தான். அந்த முடிவு ஆழமாகச் சிந்தித்து எடுத்த முடிவு இல்லை, கோபத்தில் எடுத்த முடிவு என்று அவள் தீர்மானித்திருந்த போதிலும், கணவன் வேறொரு கருத்தைக் கொண்டிருந்தார்.

“தொடர்பை உருவாக்கிக்கிட்டதும் அவன்தான். முடிச்சுக்கிட்டதும் அவன்தான். அதுக்கு நாங்க என்ன செய்றது? நாங்க இதுல தலையிடத் தேவையில்ல. நடக்கப் போறதப் பார்ப்போம். அவனோட எதிர்காலத்தப் பற்றி முடிவெடுக்குற உரிமை அவனுக்குத்தான் இருக்கு.”

கணவன் தன்னிடம் இவ்வாறு கூறிய போதிலும், மகனின் தீர்மானத்தைக் குறித்து ஏதோவிதத்தில் விருப்பத்துடன்தான்

காணப்பட்டார் என்பது திருமதி. ரணசிங்கவுக்குப் புரிந்தது. அந்தப் புரிதல் சரியாகத்தான் இருக்க வேண்டும்.

“எனக்குன்னா, ஒரு பெண்பிள்ளையை ரொம்ப நாளாக் காதலிச்சுட்டு இப்படி திடீர்னு கைவிடுறது கொஞ்சம் கூட பிடிக்கல. அது அந்தப் பெண்பிள்ளைக்குச் செய்யுற அநீதம்.”

“அதெல்லாம் கொஞ்சம் பழைய காலத்து நினைப்பு. சமூகம் என்ன சொல்லுமோன்னு பயந்துக்கிட்டு கட்டிக்கிறதக் காட்டிலும், பழகிப் பார்க்குறப்பவே பொருந்தாதுன்னு தோணுச்சுன்னா ஒரு தீர்மானத்துக்கு வர்றது நல்லதுதான். வளர்ச்சியடைந்த நாடுகளைப் பாரு. பொருந்தலைன்னு தோணுச்சுன்னா கல்யாணம் பண்ணியிருந்தாக் கூட உடனே பிரிஞ்சுடறாங்க. எங்களைப் போல சிரமப்பட்டு ஒண்ணா இருக்குறதில்ல.”

கணவன் பூடகமாக, அவளைக் குத்திக் காட்டி குற்றம் சாட்டும்விதமாகத்தான் அவ்வாறு கூறினார், இல்லையா?

அவர்களது திருமணத்துக்கு முன்பு அவளது கணவனுக்கு இரண்டு, மூன்று காதல் தொடர்புகள் இருந்ததை அவளிடம் வெளிப்படையாகவே அவர் கூறியிருந்தார். அவை அனைத்தும் பாதியிலேயே நின்று போனது இருவருக்குமிடையே கருத்து வேறுபாடுகள் அதிகம் என்பதால்தான் என்றும் கூறியிருந்தார். இருந்தும், வேறு பெண்களை ஏறெடுத்தும் பார்க்காமல் அவர் தன்பாட்டில் இருந்தபோது வந்த திருமண ஆலோசனைக்கு அவரது தந்தையின் வற்புறுத்தலால்தான் அவர் சம்மதித்திருந்தார். அதற்காக அவர் எப்போதாவது வருத்தப்பட்டிருப்பாரோ?

“எல்லாப் பொம்பளைங்களுமே கல்யாணம் முடிச்சதுக்குப் பிறகு புருஷன்

தனக்கு மாத்திரமே சொந்தமா இருக்கணும்னு நினைக்கிறாங்க. அந்த மூடத்தனத்தாலதான் கல்யாண வாழ்க்கை ரெண்டு பேருக்குமே வெறுத்துப் போயிடுது.”

கணவன், அவள் அவரைக் குறித்து ஆராய்ந்து பார்த்து அவரிடம் ஒன்றைக் கூறிய வேளையில்தான் இந்த வார்த்தைகளைக் கூறினார். அவ் வேளையில், அவர் மீது குற்றம் சாட்ட போதுமான அளவு ஆதாரங்கள் அவளிடம் இருக்காததால் அமைதியாக இருந்தாள். பின்னர், ஆதாரங்களை வைத்துக் கொண்டு கேட்ட சந்தர்ப்பத்தில் அவர் எதுவுமே அறியாத ஒரு அப்பாவிக் கைக் குழந்தையைப் போல நடந்து கொண்டார். ஆணினுள்ளே இருக்கும் மர்மங்களை பெண்ணால் புரிந்து கொள்வது என்பது எவ்வளவு சிரமமானது?..

“மாப்பிள்ளைப் பையன் ரொம்ப நல்லவன்தான். ஆனா பொண்ணுங்க

விஷயத்துல கொஞ்சம் விளையாட்டுப் பையன். புத்தி யோசனையோடு கவனமாப் பார்த்து நடந்துக்கோ புதுப் பொண்ணே. எப்படியும் கல்யாணம் கட்டிட்டான்னா ஒரு பொறுப்பு வந்துடும். நீயும் பொறுமையா அனுசரிச்சுப் பொருந்திப் போறதுதான் நல்லது.”

கணவனின் சொந்தக்காரப் பெண்ணொருத்தி அவர்களது திருமண வைபவத்தின்போது இவ்வாறு கூறிய வார்த்தைகள் பின்னொரு காலத்தில் திருமதி. ரணசிங்கவின் இதயத்தைத் துளைத்து வருத்தி எப்போதும் துன்புறுத்தத் தொடங்கியிருந்தன. அன்று அவள் இந்த வார்த்தைகளைக் கூறிய வேளையில், அந்தப் பெண்மணி மிகவும் மோசமான, கேவலமான, கீழ்த்தரமான ஒருத்தியென்றுதான் திருமதி. ரணசிங்கவுக்குத் தோன்றியது. அன்று

அந்த உபதேசம் காதில் விழுந்ததுமே அந்தப் பெண்ணைக் குறித்து ஒரு அருவருப்புதான் அவளது மனதில் உருவானது. அந்தப் பெண்மணியின் குற்றச்சாட்டை தனது கணவனிடம் கூறாமல் தவிர்த்தது, அதனால் அவரது மனம் புண்படக் கூடும் என்று அவள் எண்ணியதால்தான். அல்லது, அவள் மிகுந்த பதிபக்தியோடு கணவனை குருட்டுத்தனமாக நம்பியிருந்ததாலா?

அன்று அந்தப் பெண்மணி வெளிப்படையாகக் கூறிய அனைத்துமே உண்மைதான் என்பதை வெகுகாலம் செல்லும் முன்பே அவள் ஏற்றுக் கொள்ள நேர்ந்தமைதான் விதியின் ஏற்பாடாக இருந்தது. அந்தப் பெண்மணி சொன்னது அனைத்தும் உண்மைதான் என்பது காலத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதால்தான், அந்த எண்ணம் அவளது மனதினுள் ஆழமாகப்

பதிந்திருந்தது. இருந்தும் ஒரு பெண், இன்னொரு பெண் மீதுள்ள பச்சாதாபத்தால் கூறிய கருத்தாக அதை எடுத்துக் கொள்ள தனக்கு நேர்ந்த விதத்தை திருமதி.ரணசிங்க மனதால் அழுதவாறுதான் நினைத்துப் பார்த்தாள்.

“என்கிட்ட உண்மையைச் சொல்லுங்க. யார் இந்த பத்ரா?”

“எனக்குத் தெரிஞ்ச ஒரு பத்ராவும் இல்ல.”

“அப்போ உங்க கூட இருக்குற இது யாரு?”

துப்பறியும் வேலை பார்க்கும் தோழியொருத்தியின் உதவியோடு, அவளிடமிருந்து பெற்றுக் கொண்ட புகைப்பட ஆதாரங்களைக் காட்டி விசாரித்த வேளையில் கணவன் திடுக்கிட்டுப் போன விதத்தை திருமதி. ரணசிங்க காயப்பட்ட மனதோடு நினைத்துப் பார்த்தாள். அவள், மகளைப்

பிரசவிக்கக் காத்திருந்த வேளையில்தான், கணவன் பத்ரா எனப்படும் பெண்ணோடு கள்ளத் தொடர்பைப் பேணி வந்திருந்தார். அது எவ்வளவு கேவலமானது? கணவனால் எந்த விளக்கத்தையும் கூறி தப்பிக்க முடியாது. என்றாலும், அவள் அப்போது எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாத இக்கட்டான நிலைமையில் இருந்தாள். குழந்தை வயிற்றில் இருந்ததால், அனைத்தையும் மிகுந்த வேதனையோடு சகித்துக் கொண்டாள். ஒவ்வொரு நாளையும் மனதால் செத்துச் செத்துப் பிழைத்துக் கடத்தினாள். அதன் பிரதிபலனை கடைசியில் இருவருமே அனுபவிக்க நேர்ந்துள்ளதை சொல்லாதிருக்க முடியுமா?

மகள் பிடிவாதமாக தனக்குப் பிடித்தமான விதத்தில், குடும்பத்துக்குப் பொருந்தாத ஒருவரைத் திருமணம்

முடித்து தனது வாழ்க்கையைத் தொடங்கிய வேளையில், அவளை வயிற்றில் சுமந்திருந்த காலத்தில் தான் மனதால் அனுபவித்த துன்பங்களையெல்லாம் திருமதி. ரணசிங்க ஆயிரம் தடவைகளாவது எண்ணிப் பார்த்திருப்பாள். உண்மையில், தான் அனுபவித்த மனக் கஷ்டங்களின் பிரதிபலனாக மகளின் நடவடிக்கையைக் கருத இயலாதா? கணவன் துரோகம் இழைத்திருப்பதை அறிந்து கொண்ட சந்தர்ப்பத்தில் அந்த வலியை அனுபவிப்பதல்லாமல், வேறு எதையும் செய்ய வழியிருக்கவில்லை. அவள் அதைத் தாங்கிக் கொண்ட விதம் ஒரு விதத்தில் உண்மையிலேயே வியப்புக்குரியதுதான். கணவன் தனது குற்றத்தை ஏற்றுக் கொள்ளவும் இல்லை. எந்த முடிவையும் அவள்தான் எடுக்க வேண்டும் என்றுதான்,

அன்று அவர் தெளிவாகச் சொன்னார்.

“இனிமேலும் என்கூட சேர்ந்து வாழப் போறியா இல்லையான்னு எல்லாம் நான் கேட்க மாட்டேன். தன்னோட வாழ்க்கையைத் தீர்மானிக்குற உரிமை எல்லார்கிட்டயும் இருக்கு. நான் அதுக்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டேன்.”

கணவனது கூற்று எவ்வளவு ஆழமானது? கடுமையானது? அவளது பொறுமை மாத்திரம் இருந்திருக்காவிட்டால் அன்றே இந்த பந்தம் முடிந்து போயிருக்க வாய்ப்பிருந்தது. அவ்வாறு நடந்திருந்தால், இந்த மகன் அவளது வயிற்றில் பிறந்திருக்கவும் மாட்டான்.

அவளது வயிற்றில் வந்து பிறந்தது, நற்குணங்களைக் கொண்ட சிறந்தவரொருவரின் மகனா என்ன? புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்று

சொல்லப்படுவதை எவ்வாறு நிராகரிக்க முடியும்?

உறவினர்கள் மத்தியில் மட்டுமல்லாமல், மகனின் நண்பர்களிடத்திலும் அவனது காதல் தொடர்பு இரகசியமானதாக இருக்கவில்லை. அவள் அனைவரதும் மனம் கவர்ந்த அழகியொருத்தி. உண்மையிலேயே ஒரு நல்ல பெண்பிள்ளையாக, அடக்கமாக, ஒழுக்கமாக, பக்குவமாக, நேர்த்தியாக அவள் வளர்ந்திருந்த விதம் எவ்வளவு பாராட்டத்தக்கதாக இருந்தது? அவள் சிறந்த குணநலன்களைக் கொண்டவள் என்று கூறவும் இரண்டு தடவைகள் யோசிக்கத் தேவையிருக்கவில்லை. மகனுக்கு அவளைப் பிடிக்காமல் போனது ஏன்?

“அவளொரு முட்டாள் அம்மா. நான் சொன்னதுக்காக உயர்தரப் பரீட்சையை ரெண்டாம் தடவையும் எழுதினாள். ஆனா,

முதல் தடவை எடுத்த பெறுபேறைக் கூட இந்தத் தடவை அவளால பெற்றுக் கொள்ள முடியாமப் போயிருக்கு.”

“அதனாலதான் இந்த முடிவை எடுத்தியா?”

“எனக்கு வருங்காலத்தில கிடைக்கப் போற தொழிலால, எனக்கு வரப் போற பொறுப்புகளைப் புரிஞ்சுக்க முடியாத ஒருத்தியோட என்னோட வாழ்க்கையைக் கட்டியெழுப்ப முடியாது அம்மா. பல்கலைக்கழகத்துக்குப் போன ஆணோ, பெண்ணோ, பல்கலைக்கழகத்துக்குப் போகாத ஆணையோ, பெண்ணையோ கல்யாணம் முடிப்பது சரியில்லன்னு நிறைய உதாரணங்களையெல்லாம் குறிப்பிட்டு எங்க ஜயசிங்க சேர் விளங்கப்படுத்தியிருக்கார். அது உண்மைதான்னு அப்பாவும் ஒருநாள் சொன்னார்..”

வாலிப வயதையெட்டி வளர்ந்து வரும் மகன் வெளிப்படுத்திய கருத்துகளில் எவ்வித நியாயமும் இல்லையென்றே திருமதி. ரணசிங்கவுக்குத் தோன்றியது. ஆனாலும், அவனிடம் எதையும் விளங்கப்படுத்திச் சொல்லவும் முடியாது. மகன், அவள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் மிகுந்த உதாசீன உணர்வோடுதான் பதிலளிப்பான். உண்மையில் மகன் வெளியாட்கள் இருக்கும் இடத்தில் கூட அவளை மட்டமாகக் கதைத்த சந்தர்ப்பங்கள் எண்ணிலடங்காதவை. அவன் பாரதூரத்தை யோசிக்காமல் பேசும் சொற்கள் மிகவும் மோசமானவை. அவனை இவ்வுலகத்துக்கு பிரசவித்தது யார் என்று கேட்டால் உறுதியாக ‘அப்பா’ என்று சொல்வதற்குக் கூட அவன் தயங்க மாட்டான். தனது வயிற்றிலிருந்து பிறந்த குழந்தை எவ்வளவு சுயநலமானதாக இருக்கிறது?

அவனது ஜீவிதத்தில் தான், ஒரு தாயாக, எந்தப் பயனுமற்ற ஒருத்தியாக உணர்த்தப்பட்ட சந்தர்ப்பங்களும் இருக்கின்றன அல்லவா என்றும் திருமதி. ரணசிங்கவுக்குத் தோன்றியது.

அவளுக்கு ஞாபகம் வரும் எவற்றாலும் மனதுக்கு நிம்மதி கிடைக்கவேயில்லை. ஏன் அது? போன ஜென்மத்தில் செய்த பாவத்துக்கு யாரேனும் அவளைத் தண்டித்துக் கொண்டிருக்கிறார்களோ?

பல்கலைக்கழகத்துக்குப் போய் ஒரு வருடம்போல கழிந்த பிறகு ஒரு நாள் மகன் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல், கிட்டத்தட்ட பத்து தோழர், தோழியர்களைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு வந்தான். வீட்டுக்கு வந்த உடனேயே கட்டளையொன்றைப் போல கூறிய வார்த்தைகள் ‘எங்களுக்கு சமைச்சுப் போடு’ என்பதுதான். நிச்சயமாக, அது

அப்பாவிடமிருந்து அவனுக்கு உரித்தாகியுள்ள குணம்தான்.

மகனின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதல்லாமல், செய்வதற்கு வேறு எதுவும் இருக்கவில்லை. அவள், மகனின் கௌரவத்தை சிறப்பாகப் பேணும் விதமாக அனைவரையும் சிறப்பாகக் கவனித்துக் கொண்டது, விருந்துபசாரம் செய்து உபசரித்தது என அனைத்தையும் தன்னந்தனியாக, எவருடைய உதவி ஒத்தாசையும் இல்லாமல்தான் செய்தாள். வந்திருந்தவர்கள் மனம் விரும்பிய விதத்தில் உண்டு களித்து கும்மாளமிட்டுவிட்டு மாலை நேரமானதும் புறப்படத் தயாரான வேளையில் மகன், ஒரு இளம்பெண்ணைக் கையால் பிடித்திழுத்துக் கொண்டு வந்து, ‘அம்மா இவளோட முகத்தை நல்லா ஞாபகம் வச்சுக்கோ. நான் பிறகொரு நாள் வந்து

விஷயத்தைச் சொல்றேன்’ என்றான். அதுதான் ஒரு மகன் அம்மாவின் மீது வைத்திருக்கும் மரியாதையின் அளவு. எவ்வாறாயினும், பின்னர் ஒருபோதும் அந்த இளம்பெண்ணைக் குறித்து அவன் ஏதும் கூறாததால், அவளே அதைக் குறித்து நினைவுபடுத்தியது, ஒரு தாயாக, தான் பெற்றெடுத்த பிள்ளை மீது பொறுப்போ அல்லது பாச உணர்வோ இருந்ததால்தான்.

“அவள் மெடிகல் ஃபெகல்டில இருக்கிறாள். என்னோட கூட்டாளிட ஆன்ட்டியோட மகள். கூட்டாளி வீட்டுப் பார்ட்டில அவளைச் சந்திச்சேன். எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு.”

ஒரு பிள்ளை வயதுக்கு வந்த பிறகு சுயாதீனமாவது என்பது வியப்புக்குரியதல்லதான். என்றாலும், உடலைப்பற்றி யோசித்துப் பார்க்காமல் கழுத்தை அறுத்துப் போட்டதுபோல

சுயாதீனமாவது எவ்வளவு தந்திரமானது?!

மகன், புதிய காதலியொருத்தியைத் தேடிக் கொண்டதை விடவும், திருமதி. ரணசிங்கவுக்குக் கவலையைத் தந்தது, தனக்கு முன்பே மகன் தனது தந்தையிடம் புதிய காதலியைப் பற்றிய விவரங்களைச் சொல்லி அவளது புகைப்படத்தைக் கூட அவருக்கு அனுப்பி வைத்திருந்ததை அறிந்து கொண்டதும்தான்.

மகன், பெண்பிள்ளையொன்றை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தியதைச் சொல்வதற்கு ஒரு நாள் திருமதி. ரணசிங்க தனது கணவனைத் தொலைபேசியில் அழைத்து மிகுந்த தயக்கத்தோடுதான் அதைக் கூறினாள். மகனின் ஒழுக்கம் குறித்து கணவர் என்ன நினைக்கக் கூடும்? அவனை வளர்த்திருக்கும் விதம் பற்றி கணவனிடமிருந்து திட்டு வாங்க

வேண்டி வருமோ? போன்ற கேள்விகள் மனதுக்குள் அலையடித்துக் கொண்டிருந்தன. ஆனால், அவள் ஏதேனும் கூறுவதற்கு முன்பே கணவன் கூறியது என்ன?

“மகனுக்கு ஒரு பெண்பிள்ளை மேல விருப்பம் வந்திருக்குன்னு நினைக்கிறேன்...”

“ஆமா. என்கிட்ட சொன்னான். போட்டோவும் அனுப்பியிருந்தான். மெடிகல் ஃபெகல்டில படிக்குற பொண்ணு. ரொம்ப அழகான பிள்ள. குடும்பம் கூட நல்ல அந்தஸ்துள்ள குடும்பம்தான். அந்தப் பிள்ளையோட அம்மாவும் ஒரு டொக்டராம். எந்தளவு பொருத்தம்னு பாரு.. அந்தப் பிள்ளையோட அப்பாவும் எலக்ட்ரிகல் எஞ்சினியராம். உண்மையிலேயே மகன் நல்ல மூளைசாலிதான்...”

மூளைசாலி கூட

குற்றமிழைத்திருப்பதைத்தானா கணவனிடம் இப்போது சொல்ல வேண்டியிருக்கிறது?

திருமதி. ரணசிங்க, மகனின் வருங்கால மாமியாரிடமிருந்து தனக்கு வந்த தொலைபேசி அழைப்பைக் குறித்து மிகுந்த கவலையோடு நினைத்துப் பார்த்தாள்.

“...இல்ல. அப்படியெல்லாம் நினைக்காதீங்க. நாங்க நல்லா யோசிச்சு, பாரதூரமெல்லாம் பார்த்துத்தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்திருக்கோம். நாங்க எங்க மகளை ரொம்பக் கவனமா கண்ணுக்குள்ள வச்சு பார்த்துப் பார்த்து வளர்த்திருக்கோம். அடுத்தது, இந்தத் தீர்மானத்தால ரொம்பவே அவமானப்படப் போறது நாங்களும், எங்க மகளும்தான். இருந்தாலும், இந்தக் கல்யாணம் வேணாம்னு மகளே மனசைத் தயார்படுத்திக்கிட்டா. நடந்தது எல்லாம் நல்லதுக்குத்தான்னுதான் நாங்களும்

நினைக்கிறோம். ஏதோ போன ஜென்மத்துல என் மகள் செஞ்ச புண்ணியம், கடைசிக் கட்டத்திலாவது கடவுள் எங்களைக் காப்பாத்தியிருக்கார்…”

மகன் என்ன தவறிழைத்தான் என்று கூறாவிட்டாலும் கூட, திருமண வைபவத்தை நிறுத்துமளவுக்கான காரணம் மணமகனது ஒழுக்கம் தொடர்பான பாரிய விடயம் ஏதோவொன்று என்பதைப் புரிந்து கொள்ள திருமதி. ரணசிங்கவால் முடிந்தது.

“பசங்க, பொண்ணுங்க காதலிக்குறாங்க, பிரியுறாங்க… இது சாதாரண விஷயம்தான். ஆனா ஒரு பையன், கல்யாணத்துக்கு எல்லாமும் தயாரான நிலைமைல, வைபவம் இவ்வளவு பக்கத்துல நெருங்கியிருக்குறப்ப ஒரு பொம்பளைப் பொறுக்கின்னு தெரிய வந்த பிறகும், சமூகம் என்ன சொல்லுமோன்னு பயந்துக்கிட்டு எங்க மகளைப் பலியாக்க

நாங்க விரும்பல. அவ்வளவுதான் என்னால சொல்ல முடியும்…”

திருமதி. ரணசிங்க மனதைக் கல்லாக்கிக் கொண்டு, மகனைத் திருமணம் முடிக்கவிருந்த அந்த இளம்பெண்ணைச் சந்திக்கத் தீர்மானித்தாள். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், ஏதேனுமோர் இடத்தில் அதைத் தீர்க்க முடியுமென்றால் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவிர்த்து விடுவது பெரும் பிழை. மனதைச் சரிப்படுத்திக் கொண்ட திருமதி. ரணசிங்க, புறப்படும் முன்பு மகனிடம் சொல்லி விட்டுச் செல்ல வேண்டுமா என்று யோசித்துப் பார்த்து பிறகு தேவையில்லை என்று முடிவுக்கு வந்தாள்.

திருமதி. ரணசிங்க முதன்முதலாக, தான் தனியாக எடுத்த தீர்மானத்தைக் குறித்து மகிழ்ச்சியடைந்தாள். கவலை, வலி இவற்றுக்கு மத்தியில், மகன் இரண்டாம்

தடவையும் அருமையான வைரமொன்றை இழந்து விட்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

“... ஆன்ட்டி, உங்களை நினைச்சுப் பார்த்தா எனக்கும் கூட ரொம்பக் கவலையாத்தான் இருக்கு. எனக்கு உங்களை ரொம்ப பிடிச்சிருக்கு. இருந்தாலும் ஆன்ட்டி, நெருப்புல எரியப் போறோம்னு தெரிஞ்சுக்கிட்டே, நெருப்பைக் கட்டியணைச்சுக்க முடியாது, இல்லையா? அவர், நாம கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாத ஒரு ஆள். எனக்கு ஒருபோதும் அவர் மேல சந்தேகமே வந்ததில்ல. அவர் வேறொரு பெண்பிள்ளையைக் காதலிச்சிருந்தாக் கூட என்னால அதைப் புரிஞ்சுக்க முடியும். ஆனா ரெண்டு பிள்ளைகளோட தாயொருத்தியோட அவர் வச்சிருக்குற தொடர்பு.. அது என்னன்னு யோசிச்சுப் பார்க்க முடியும், இல்லையா?

தகவல் கிடைச்சதுமே நாங்க அதை நம்பல. அப்பாதான் அதுக்குப் பின்னால தொடர்ச்சியா விசாரிச்சுப் பார்க்கத் தொடங்கியிருக்கார். வார இறுதி நாட்கள் ரெண்டுலயும், ரெண்டு பேரையும் ஒண்ணா ரெண்டு இடத்துல வச்சு என்னோட அப்பாவே நேர்ல பார்த்திருக்கார். ஒரு நாள் நுவரெலியாவுல. இன்னொரு நாள் ஹலாவத்தையில. என்னோட மனசுல அவர் மேல தோன்றியிருக்குற அருவருப்பை ஒருபோதும் அழிக்க முடியாது, ஆன்ட்டி.. இப்போதைக்கு என்னால இன்னொருத்தரைக் கல்யாணம் பண்றதையும் நினைச்சுக் கூடப் பார்க்க முடியல. வருங்காலத்துல என்ன நடக்குமோ தெரியாது. நாங்க நாலு வருஷத்துக்கும் மேலா காதலிச்சிட்டிருந்தோம். அவரை எந்தளவு நம்பியிருந்தேன்? எனக்கு இந்த வாழ்க்கையைப் பற்றி இப்ப வெறுப்பே வந்துடுச்சு. தற்செயலாக் கூட இனிமேல

அவர் என் கண் முன்னால தோன்றக் கூடாதுன்னுதான் இப்பல்லாம் நான் பிரார்த்திச்சிட்டிருக்கேன்...”

# 9. வெனில்லா: உமா மகேஸ்வரி

சிறுகதைகள்/நவம்பர்/ டிசம்பர் 2020

BY உமா மகேஸ்வரி



...

பதினைந்து முதல் இருபது வரையில் பிரிவுகள் அவற்றின் நுனிகளில் பால் சுரக்கும்

குமிழ்கள் என்றெல்லாம் விலாவாரியாகச் சொன்னது கூகிள். அலுப்பாக அதை மூடினாள். இயர் போர்னை பொருத்திக் கொண்டு கண்களை மூடினாள். “கழுத்தின் கீழே கவிதைகள் ரெண்டு மிச்சமுள்ளதே... அதுவா, அதுவா, அதுவா...” என்று பாடியது அது. ப்ளே நெக்ஸ்ட் போட்டால் “கொப்பரைத் தேங்கா, முத்தின மாங்காய்” “மாங்கனிகள் தொட்டிலிலே தூங்குதடி கண்ணே”.

“ஷிட்!” இயர் போர்ன் வயரைப் பிடுங்கித் தரையில் எறிந்தாள்.

அந்தச் சிறு பெண் செவிலி அதிர்ந்து விட்டாள். வேறு யாரும் கவனிக்கவில்லை. அல்லது அவள் அப்படி நினைத்துக் கொண்டாள்.

அந்த செவிலி அருகில் வந்து மிக இனிமையான, மிகமி கச் செயற்கை

தொனித்து விடாத மென்மையான, அதனாலேயே இயந்திரத் தன்மையான குரலில், “எதுவும் தவறாகி விட்டதா மாம்?” என்றாள். இல்லையெனத் தலையசைத்தாள் இவள். அவள் போய் மற்றொருத்தியிடம் ஏதோ கிசுகிசுப்பாயிருக்க, அவள் ஓடி வந்து “அக்கா ,ஆர் யூ ஓகே?” என்றாள். என்ன தான் முயன்றாலும் இந்த அக்காவெனும் அழைப்புகளில் மனம் இளகுவதைத் தவிர்க்க முடியாதது எனக்கு மட்டுமா என எண்ணியவாறே புன்னகைத்து தலையசைத்தாள். “கொஞ்சம் வெளியே எங்காவது போய்ட்டு வாங்க, இது பதற்றம் தரும்”,

“புரிகிறது” என்றாள் அவள்.

அந்த ஸ்கேன் சென்டரில் கொரோனாவாலோ என்னவோ கூட்டமில்லை. எப்படியும் தன் முறை சீக்கிரம் வந்து

விடும். “கீழே ஐஸ் க்ரீம், காபி, பாப்கார்ன் கூட கிடைக்குது அக்கா” என்று அவள் குழந்தைக்குச் சொல்வது போலச் சொன்னாள்.

அவை மௌனமாக வளர்ந்தன. உலோகக் கோளங்காக, உடல் முழுவதும் உருண்டை உருண்டையாக. கடைசியில் தன் உடம்பு தனித் தனி இரும்புருண்டைகளாகப் பிரிந்து பிரிந்து மிதந்து போவதைப் பார்த்தாள். அதிலொன்று வெடித்து வீடு எரிந்து சாம்பாலாவதாகவும்.

அம்மா பேரழகியாம் இளவயதில். சென்னையிலிருந்து பெண் பார்க்க வந்து உடனே சரி சொல்லி, நிச்சயதார்த்தப் புடவைக்கு அளவு ஜாக்கெட் வாங்கிப் போய் விட்டார்களாம். அப்புறம் தாத்தா சொந்தத்தில் என் மகனிருக்க அதெப்படி நீங்க அந்நியத்தில் பெண்ணைக் கொடுக்கலாம் என்று சண்டை போட்டாராம். பிறகு “மாமா பையனுக்கே

கேட்கிறாங்க, மன்னிச்சுக்கங்க” என்று முதலில் பார்த்த மாப்பிள்ளை வீட்டுக்குச் சொல்லி விட்டார்கள். அப்படித்தான் இங்க வந்து நான் சிக்கியது என்று அம்மா அடிக்கடி சொல்வதுண்டு.

என் மகளும் “என்ன ஆச்சி சின்ன வயசில சிம்ரன் மாதிரி இருந்திருக்காங்க” என்று கிண்டலடிப்பாள். “அட போ பாப்பா” என்ற அம்மாவின் வெட்கம் தான் அந்த பரிசோதனைக் கூடத்தில், கண்ணாடிக் குவளைக்குள் கருஞ்சிவப்புச் செதில்களாக மிதந்தது. பிறகு மயானத்தில் நெருப்பாக எரிந்தது. எவ்வளவு அழகான எவ்வளவு அநித்யமான எத்தனை சத்தியமான, மேலும் நித்தியமான நெருப்பு.

அம்மா வீட்டு ஜன்னல்களை யாரையும் திறக்க விடுவதில்லை, தூசி தட்டக் கூட. அவை வழியாக எதுவோ நுழையும் என

அம்மா நினைத்தார்களோ என்னவோ. கட்புலனாகாத, தவிர்க்கவே முடியாத எதுவோ ஒன்று. அவை மரணத்தின் சாளரங்கள் என அம்மா உறுதியாக நம்பினார். ஜன்னல்களைத் திறக்க வேண்டும், வெளிக்காற்று உள்ளே வர வேண்டும் என்று அக்கா எவ்வளவோ சொல்லியும் அம்மா ஒத்துக் கொள்ளவேயில்லை.

மரணத் தருவாயில் மனித மனம் கனிந்து விடும் தானே. அம்மா அப்படியே வேறு மாதிரி இறுக்கம். எல்லோரையும் குறை சொல்லும் குணம். அண்ணியைச் “சனியன்” என்றாள். அக்காவை அதை விட மோசமான வார்த்தையால் திட்டினாள். “காலேசு வேலைக்குப் போறவளுக்கு இவ்ளோ மேக்கப் என்னத்துக்கோ அவ பாடம் நடத்தப் போறாளா, அல்லது எவனுக்கும் முந்தி விரிக்கப் போறாளா?” என யாரும்

நம்பக் கூட மாட்டார்கள். பெற்ற மகளை யாராவது அப்படிச் சொல்வார்களா! அம்மா சொன்னாள். நிறையக் கெட்ட கெட்ட வார்த்தைகள். அக்காவிடம் ஸ்வேதா எதையும் சொல்லவில்லை. அம்மாவைப் போல ஆகி விடுவேனோ என ஸ்வேதா பயந்தாள். அம்மாவைப் போலப் புற்றுநோய். அம்மாவைப் போல அனைவர் மீதும் வெறுப்பு. மரணத் தறுவாயிலும் இறுக்கம். யாருமே உடனிருக்க முடியவில்லை. எல்லோருக்குமே வேலை, வேறு ஊர். அண்ணாவின் அபார்ட்மெண்ட்டிலிருக்க அம்மாவிற்குப் பிடிக்கவில்லை.

“அதெப்படி ஒரே ஒரு ரூமில் ஒத்தைல இருக்க? அவளும் ஆபிஸ் போயிடுவா”

“ஏன் இந்த நர்ஸ் உனக்குப் பிடிக்கல அம்மா?” என்றால் பதிலிருக்காது.

“வீட்ல பல்லி அதிகம். பழைய வீடுல்ல, ஆனா பல்லியை அடிச்சா தலை வலி வரும்”

“உன் பட்டுச் சேலைலாம் பாப்பாவுக்கு குர்தா தைச்சுடலாமே, நீயும் உடுத்த துறதில்ல” என்று அம்மாவின் இறுதிக் கால உரையாடல்கள் இப்படி இருந்தன.

ஸ்வேதா தலையசைத்தாள். இன்று வரலாமா என நாள் கேட்ட போதிருந்தே மனம் குலைந்து விட்டது. கரிய குமிழ்கள் உதிக்கின்றன. சிறிய வெல்வட் ஸ்டிக்கர் பொட்டளவே. தேகத்தில் அறையப்பட்ட ஆணிகள் போல.

ஒரு போதும் கண்டிராத அம்மாவின் மார்பகங்களை அன்று அப்படி பரிசோதனைக் கூடத்தில் பார்த்திருக்க வேண்டாம். பார்க்கத் தோன்றியது, எதெது எப்படியாகும் எனத் தெரிந்து கொள்ளும் உந்துதல். தெரிய

முடியாது ஒரு போதும் என்ற அறிதலின் ஆயாசம். எல்லாம் தான் இங்கே இப்போது கொண்டு வந்து உட்கார்த்தி இருக்கிறது.

கீழே காபி, பாப்கார்ன் சாப்பிடலாம் என எழுந்த போது “அடுத்து நீங்க தான்” என்ற கீச்சுக் குரலில் அயர்ந்து உட்கார்ந்தாள். அந்த இடத்தைக் கூட்டிப் பெருக்குபவள் “காபி வாங்கியாரவா” என்றாள். மறுத்துத் தலையசைத்தாள். அவசரத்தில் ரசித்து நிதானமாகக் குடிக்க முடியாது. ஓஷானிக் பையிலிருந்த சானிடைசரை இன்னும் ஒரு முறை உபயோகித்துக் கொண்டாள். இறுதிக் கட்டத்தில் சினிமா தியேட்டரில் நாற்காலி நுனியில் உட்காரும் சிறுவனாகத் தன்னை உணர்ந்தாள். படபடவென்று வந்தது. அவர் காலையில் “ஒரு எக்ஸ்ரே மாதிரி தான். நானும் வரட்டுமா? வீட்ல இருந்து ஆனா வேலை பார்க்கணும். லீவ் சொல்லிட்டு வரட்டா?”

என்றார். “ஒண்ணும் வேணாம். உங்களுக்கு வரணும்னு இல்லை. அப்டினா வரேன்னு தானே சொல்லியிருப்பீங்க. வரட்டுமானு கேட்பிங்களா? நானே பார்த்துக்கிறேன்” என்றாள். அவன் தோளை உயர்த்தி கைகளை விரித்து உதட்டைப் பிதுக்கினான்.

“இந்தப் புடவையா, இதுவா” என்று கருநீலத்தில் இளநீலக் கரையிட்டதையும், மென் சிவப்பையும் காட்டிய போதும் சிரித்து விட்டான். “உனக்கு இதுக்கு சுடிதார் வசதியாக இருக்கும்” என்று ஏதோ சொல்ல வந்தவன் அதைச் சொல்லவில்லை. அவரையும் கூட்டி வந்திருக்கலாம் எனத் தோன்றியது.

“ஸ்வேதா” அவள் விழுந்தடித்து எழுந்து பின் சுதாரித்து அந்தப் பரிசோதனை அறைக்குள் நுழைந்தாள்.

“வாங்க”

ஒரு நீள இயந்திரம், எக்ஸ்ரே மாதிரியே. "ஆமாம்" அதிக வெளிச்சமற்ற அறை.

"உங்கள் மேல் உடைகளையும், உள்ளாடைகளையும் அகற்றி விடுங்கள்" என்பதைக் கேட்டுத் திடுக்கிட்டாள்.

கணவனை நினைத்தாள். சுடிதாரின் டாப்பை கழற்றுவது எளிதாயிருந்தது. உள்ளுடைகளைக் கழற்றும் போது "உன்னித் தெழுந்த என் தட முலைகள் மானிடவர்க்கென்று பேச்சுப் படில் வாழ்கிலேன்" எனும் வரிகள் ஏன் ஞாபகம் வர வேண்டும்?

"இடதை இதன் மேல் வைங்க. கொஞ்சமா வலிக்கும்." அவள் முன் ஒரு உலோகத் தட்டு இருந்தது. பிறகு மற்றொரு தட்டு அவள் மார்பை அழுத்தியது. "ஸ்" என்றாள்.

ஸ்வேதா இருக்காளே, வலியில் உடம்பு

பிளக்கும் பிரசவத்தின் போது. பல்லால் உதட்டைக் கடித்தாளே ஒழிய கத்தவேயில்லை. இப்படி அலறிக் கூப்பாடு போட்டு குளுக்கோஸ் குழாயப் பிடுங்கி, கையக்கால உதறிடனா பிள்ளைக்கேதாவதாயிடும்.

“அவ்ளோதான். இப்ப வலது”

வலி எங்கோ இருந்த ஆழப் புள்ளியிருந்து கொடிகொடியாய்க் கிளைத்து உடலெங்கும் பரவி உச்சந்தலையில் வெடிப்பதை உணர்ந்தாள்.

அனிச்சையாக வலதை எடுத்து ஒரு தட்டில் வைத்து விட்டு இடிக்க வரப் போகிற மறு தட்டிற்காகக் காத்திருந்தாள். “உன் இடது முலை அருந்துகையில் என் கண்களில் குழந்தைமையின் நிஷ்களங்கம். வலது முலை அருந்துகையில் என் கண்களில் காதலின் உற்சவம்” என்ன வரிகள். ஏன் இவ்வளவு

வரிகள் எப்போதும் எப்போதும் என்னுள் ஓட வேண்டும்? முழங்கை மடேர் என்று எதிலோ இடித்தது போன்ற, ஒரு அனல் கூட்டம் என் மீது கொட்டப்பட்டது மாதிரியான வலி. ஒப்புவமை இல்லாத வலி .

“அவ்ளோதான் வலிச்சுதா? ரொம்ப ஸாரி”. சுடிதாரை அணிந்த படி “இட்ஸ் ஓகே” என்றாள்.

“முடிவு ஒருவாரத்தில் அனுப்புவோம். நீங்கள் உங்கள் அருகாமையிலுள்ள மருத்துவரிடம் கேட்டுக் கொள்ளலாம். இணையம் வழியாகவே கூட.. புற்றுநோய் பரம்பரையாக வராது. ஆனாலும், சோதிப்பது நல்லது. இந்த மாமோக்ராபி பிடிக்கலனா நீங்க உங்க பெண் மருத்துவரைப் பார்க்கச் சொல்லலாம். நீங்களே கூடப் பார்த்துக்கலாம். இல்ல, பெட்டர் நீங்க டாக்டரைப் பாருங்க. அல்லது, இங்கே வாங்க; ஆறு மாதத்திற்கு ஒரு தடவை தான்” புன்னகைத்துப் பணம்

செலுத்திப் படி இறங்கினாள். நினைவுகள் ததும்பின.

படிகள், படிகள், படிகள் "இரண்டு நாள் ஐஸ் ஒத்தடம் பாரசிடமால் ஓகே?"

"ஓகே"

படிகள்

பால் ஊறணும்னு குச்சிக் கருவாட்டைக் குழம்பு வைத்தது,

படிகள்

வற்றணும்னு மல்லிகைச் சரம் வைத்து,

படிகள் .

Shit .அந்த காபிக் கடை கீழே இருந்தது. சாப்பிட்டே விடலாம்.

அவள் வருவதைப் பார்த்ததும் கார் நெருங்கி வந்தது. "முடிஞ்சுதா பாப்பா?"

“ஆமாண்ணே, எங்கயாவது சாப்பிட்டுடலாம்ணே”

“நீ சாப்பிடுப்பா, இப்ப தான் வடை டீ அடிச்சேன். மணியும் 11தான். நான் வேணா உன்னோட உட்கார்ந்திருக்கேன். சரியா?”

“சரிண்ணே”

காரில் ஏறி உட்கார்ந்ததும் அதை இயக்கிச் சொன்னாள் “Calvin, கொஞ்சம் depressive ஆக இருக்கேன்” நல்ல வேளை. சாரதிக்கு ஆங்கிலம் தெரியாது. “உனக்கு ஒரு அணைப்பைத்தர நினைக்கிறேன். முடியாதே. பதிலாக ஒரு ஜோக் சொல்கிறேன். வானத்திலேயே இல்லாத moon என்ன moon ? gulabjamoon. ஹஹ்ஹா”

“நீயும் உன் ஜோக்கும். உன் தலைல இடி விழ” என்றாள்.

“pardon”என்றான் கேல்வின். அவனை

அடித்துச் சாத்தினாள்.” உன்னை எப்படி அழைப்பது” ”மக்கள் என்னை ஜப்பானில் கூகுரு என அழைக்கிறார்கள். நீ என்னை Calvin என்றழைக்கலாம்.

“வேற பெயரிலழைத்தால்?”

“நான் குழம்பி விடுவேன்”

“ஐ லவ் யூ”

“ஐ லவ் யூ, இன்று நாளை எப்போதும்”

அந்த ஆரஞ்சு வட்ட டப்பாவை நகர்த்தி வைத்தாள்.

மொபைல் ஒலித்தது.

“முடிஞ்சுதா, தங்கண்ணனோட சாப்பிட்டுடுறியா?” கணவரின் குரல்.

“இல்ல தனியாத் தான் சாப்பிடப் போறேன்”,

துண்டுபட்டது பேச்சு.

“பார்க்கிங்ல நா இருக்கணும் போலயே” உரசிச் சென்ற இன்னொரு வண்டியைப் பார்த்து “பார்த்துப் போடா வெ...”

“எதுக்கு இப்டிப் பேசுறிங்க?”

“இவனுக கிட்ட இப்படித் தான் பேசணும்”

“ம்...நான் சாப்பிட்டுட்டு வரேன். நீங்க காரில் இருங்கணே”.

புன்னகை, கை கூப்பல், பளபளக்கும் மெனு கார்ட்.

“your order pls mam”

வெஜ் க்ளியர் சூப்பில் ஆரம்பித்து பட்டர் நான், பனீர் டிக்கா, ஜீரா ரைஸ், மஷ்ரூம் gravy என்று எதேதோ ஓடர் செய்தாள். ஆமாம், மனச் சோர்வில அதிகம் சாப்பிடத் தோன்றும். வினோதமாக என்னை ஏன் பார்க்கிறார் இவர்?

பரிசாரகர் மதிய உணவை மகிழ்வோடு உண்ண வாழ்த்துகிறார் தலை தாழ்த்தி. “நன்றி” சொல்கிறாள். எல்லாவற்றிலும் ஒரு ஸ்பூன். அங்கிருந்த அழகிய மீன் தொட்டியை, சுவரோவியங்களைப் பார்க்கிறாள். தாழ்ந்த விழிகளால் பக்கத்து மேஜையில் அவளைக் கொஞ்சி ஊட்டும் அவனை.

“இதெல்லாம் பார்சல் பண்ணித் தந்திடட்டுமா” கலங்கிக் கலைந்த அவள் கண்களைப் பார்த்தபடி கேட்கிறார் பரிவோடு பரிசாரகர். “யோவ், இந்தப் பரிவு எனக்குப் பிடிக்கலை”,

தலையாட்டுகிறார். “எங்கள் ஐஸ் க்ரீம்கள்” என்று நீட்டிய அட்டையிலிருந்தும் ஒன்றைச் சொன்னாள். வந்தது. வெனில்லா உருண்டை மேல் கருஞ்சிவப்பு ஸ்ட்ராபெரி. திடுக்கிட்டுத் திகைத்து அதை நகர்த்தினாள். பின் யோசித்து, வழக்கமாக வரும் ஹோட்டல்

இது, அதை ஸ்பூனால் கிளறிச் சிறிது சிறிதாக மிகுந்த யோசனைகளோடு உண்டாள்.

“எனக்கு ஒரு சாக்லெட் கோன் கிடைக்குமா. அதோடு பில்லும்?” ஓடோடிக் கொண்டுவந்தான் அந்த இளைஞன். கையிலெடுத்து நகர்ந்தாள்.

தன்னை நோக்கி வரும் கார். ஏறியதும் உச்சி க்ளிப்பை அவிழ்த்துக் கூந்தலைக் காற்றுக்குக் கொடுத்தாள்.

கீமோ தெரபிக்காக மழிக்கப் பட்ட அம்மாவின் கூந்தல், “பார்லர்ல நேராக்கின மாதிரி இயற்கையாக உங்களைக் கல்யாணம் பண்ணிக்க சண்டை போட்டதில் தப்பே இல்ல ஆச்சி”. அம்மாவிடம் மகள் சொன்னது நினைவில் சட்டென்று வந்தது.

“ஏதாவது பாட்டு போடுங்க அண்ணே” மாங்கனிகள் தொட்டிலே தூங்குதடி கண்ணே.

மன்னவனின் பசியாற மாலையிலே பரிமாற நல்லாதானே இருக்கிறது. ஆம். எல்லாமே. மரங்கள் பறந்தன. வீடு வெகு தொலைவிற்குப் போக விரும்பினாள்.

# 10. 'தித்த கஹட்ட' -- தோட்டத் தொழிலாளர் வாழ்வில் ஒரு முன்னுரை: கே. சுனில்ஷாந்த

நவம்பர்/ டிசம்பர் 2020/பனுவல்கள்

தமிழில் - பிரியதர்ஷினி சிவராஜா

BY பிரியதர்ஷினி சிவராஜா

**மலையக தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வுபற்றி சிங்களத்தில் வெளியான முதலாவது நாவலான ‘தித்த கஹட்ட’ – கசந்த சாயம் என்ற நாவலின் ஆசிரியரான கே.சுனில்ஷாந்தவுடன் பிரியன்ஜித் ஆலோக்கபண்டார நடாத்திய உரையாடலின் தமிழ் வடிவம் இது.**


Fashion
accessories
trendy
magazine

…

**உங்கள் முதல் நாவலிலும், 'தித்த கஹட்ட' நாவலிலும் அடிப்படையாக உள்ளது விளிம்பு நிலை மனித வாழ்வு...**

நான் சிறுவயது முதல் வளர்ந்தது பதுளையில். எமது வீட்டுக்கு அப்பால் உள்ள காணிகளில் தோட்டத்தொழிலாளர்கள் கூலி வேலை செய்வதனை நான் பார்த்திருக்கின்றேன். மழையையும் வெயிலையும் பொருட்படுத்தாமல் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அவர்கள் வேலை செய்வதனை நாம் பார்த்திருக்கின்றோம். விவசாயம் செய்த சிங்கள மக்களை விட அவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருந்ததனை பார்த்திருக்கின்றோம். ஏன் அவ்வாறு நடைபெறுகின்றது என்ற வினா சிறு வயது முதலே எம்மிடம் காணப்பட்டது. இதில் பாரியதொரு அரசியல் இருக்கின்றது என்ற

விடயம் வயது முதிர்ச்சியுடன் தான் தெரிய வருகின்றது. இந்த அரை நூற்றாண்டுகளில் அவர்களின் வாழ்க்கையானது சிறியளவில் தான் உயர்ந்திருக்கின்றது. பிற்காலத்தில் இடதுசாரி இயக்கங்களுடன் இணைந்தவுடன்தான் இடதுசாரி கண்ணோட்டத்தில் இலங்கைத் தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினையை நோக்க நாம் பழக்கப்பட்டோம். இந்த நூலை எழுதுவதற்கு இவ்விடயங்கள் அனைத்தும் உத்வேகம் தந்திருக்கக் கூடும்.

இலங்கையில் தோட்டத்தொழிலாளர்களாக சேவையைப் பெற்றுக்கொள்ள இந்திய தமிழர்களை இங்கு அழைத்து வந்தமை மற்றும் 1930 வரை அவர்களின் வாழ்க்கை என்பனவற்றை பிரதிபலிக்கவே ‘தித்த கஹட்ட’ ஊடாக முயற்சித்துள்ளேன். தோட்டத்தொழிலாளர்களின் வாழ்க்கை

குறித்தான நாவல் சிங்கள மொழியில் முன்னர் எழுதப்பட்டிருக்கவே இல்லை. இலங்கை தோட்டத்தொழிலாளர்கள் பற்றி எழுதப்பட்ட முதலாவது நாவலாக இந்த நாவலைக் கருத முடியும் என்று இந்த நூலை வாசித்த பேராசிரியர் லியனகே அமரகீர்த்தி குறிப்பிட்டிருந்தார்.

**தித்த கஹட்டவுக்கு அடிப்படையாக அமைவது வரலாற்று விடயங்கள். அதற்காக நீங்கள் மேற்கொண்ட ஆய்வு எவ்வாறானது?**

கலாநிதி குமாரி ஜயவர்தனவின் நூல்கள் சிலவற்றை வாசித்தேன். இலங்கையின் தொழிலாளர் இயக்கங்கள் பற்றி அவர் எழுதிய நூல்களில் ஓரளவுக்கு தோட்டத்தொழிலாளர்கள் பற்றிய தகவல்களும் உள்ளன. தோட்டத்தொழிலாளர்களின் வரலாறு தொடர்பான விடயங்களை பகரும்

ஆவணங்கள் பலவற்றை ஆய்வு செய்தேன். தோட்டத்தொழிலாளர்களின் வரலாறு தொடர்பான அருங்காட்சியகம் ஒன்று நாவலப்பிட்டியவில் அமைந்துள்ளது. இந்திய தமிழர்கள் இங்கு வரும் பொழுது எடுத்து வந்த பொருட்கள் மற்றும் அவர்களின் வருகை சம்பந்தப்பட்ட ஆவணங்கள், புகைப்படங்கள் அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை இயலுமானவரை ஆராய்ந்துப் பார்க்க முடிந்தது. தகவல்களை மீள உறுதிப்படுத்திக் கொள்வதற்கு இணையத்தைப் பயன்படுத்திக் கொண்டேன். இவ்வாறு பெறப்பட்ட வரலாற்றுத் தகவல்கள தான் 'தித்த கஹட்ட' நாவலை எழுதுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

**நாவல் போன்றதொரு படைப்பிலக்கியத்தினை ஏன் தெரிவு செய்தீர்கள்?**

கல்விசார் ஆவணங்களை மிக சொற்பமானவர்களே வாசிக்கின்றனர். பல்கலைக்கழக மட்டத்திலான அறிவுடன் ஊடாடும் மிகவும் சொற்ப அளவினரே அவ்வாறான ஆவணங்களை வாசிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் நாவல்களை அதிகளவானவர்கள் வாசித்து மகிழ்கின்றனர். சிங்கள சமூகத்தில் பெரும்பாலானவர்கள் தோட்டத்தொழிலாளர்களின வரலாற்றுக் கதையை அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதினேன். தற்போது இந்த ‘தித்த கஹட்ட’ நாவலை தமிழில் மொழிப்பெயர்ப்பதற்கு தமிழ் மொழிப்பெயர்ப்பாளர்கள் மூவர் கேட்டிருக்கின்றனர்.

**சிங்கள மக்களைப் போன்று மலையகத் தமிழ் மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களின் வரலாறு தொடர்பில் மிகவும் குறைந்தளவு புரிதல் தான்**

உள்ளதல்லவா?

தமது மூதாதையர்கள் இந்தியாவிலிருந்து கப்பல்களில் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும், அவர்கள் தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர் என்று மட்டுமே இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட தற்கால மலையகத் தமிழ் சந்ததியினர் அறிந்து வைத்திருக்கின்றனர். இந்தியாவிலிருந்து வரும் வழியில் அவர்கள் எதிர்கொண்ட துயரங்கள், மரண அனுபவங்கள், மிகவும் கொடூரமான துன்பங்கள் பற்றி அவர்களுக்கு தெரியாது. இந்த பயணத்தின் போது அம்மை நோய் மற்றும் கொலரா தாக்கம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர் என்பது பற்றியும் அவர்களுக்கு தெரியாது.

தற்போது உள்ள தொழிற்சங்கங்களும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

அரசியல் தலைவர்களும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நேர்மையாக எந்தவிதமான முயற்சிகளையும் எடுப்பதில்லை. அப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் தமக்கென ஓர் அடையாளம் என்பது இல்லாமல் போய்விடும் என்பதனை அவர்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். தோட்டத்தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு குறுகிய கால தீர்வுகளை முன்வைத்துக் கொண்டு இந்த நிலைமையை தொடர்ச்சியாக பேணிக்கொள்ளவே அவர்கள் முயற்சிக்கின்றனர். இதனால் தான் தாமாக சுயமாக அணிதிரண்டு ஒன்றுப்பட்டு முன்னெடுக்கும் அரசியல் போராட்டத்தினூடாக

மட்டுமே தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்ற யோசனையை ‘தித்த கஹட்ட’ மூலம் கூற முயன்றிருக்கின்றேன்.

**வரலாற்று நிகழ்வொன்றினை கதையாக எழுதும் போது, உண்மையான வரலாற்றுக் கதாப்பாத்திரங்களை உள்ளடக்க நேருகின்றது அல்லவா?**

இந்த நூலில் வரும் மீனாட்சி, கோபால் மற்றும் கணேஷ் ஆகிய கதாபாத்திரங்களும், தோட்டத்தொழிலாளர்களுக்காக முன்னின்று போராடிய ஆங்கிலேயரான தோட்ட முகாமையாளர் பிரெஸ்கர்டல் என்பவரும் உண்மையான கதாப்பாத்திரங்களாகும். இந்தியாவிலிருந்து வந்த நடேச ஐயர் என்ற பத்திரிகையாளர்தான் இலங்கையில் தோட்டத்தொழிலாளர்களை முதன்முதல் ஒன்றுப்படுத்தி அணிதிரட்டினார். அவரின்

கீழ் அவர்கள் ஒன்றுசேர்ந்து அடுத்து முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக பிரெஸ்கர்டெலின் அலுவலகத்திற்கு சென்றனர். அன்று தொடக்கம் அவர்கள் இலங்கையின் இடதுசாரி இயக்கத்துடன் இணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒன்றிணைந்தனர். அத்துடன் நாவலும் முற்றுப் பெறுகின்றது.

இலங்கை வரலாற்றில் போராட்ட குணம் மிக்க பெண் கதாப்பாத்திரங்கள் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. ஆரி, தலைவாக்கலை எட்லின் நோனா, கணேஷன் போன்றவர்கள் இங்கு விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். என்.எம், கமலாதேவி பட்டோபாத்ய போன்ற கதாப்பத்திரங்களை நான் இந்த கதைக்குள் அழைத்து வந்துள்ளேன். அன்றைய காலத்தில் இருந்த பொலிஸ் மா அதிபர், ஆளுநர் போன்ற

உண்மையான கதாப்பத்திரங்களும் இந்த கதையில் வருகின்றனர். காலப்பகுதிகளும், திகதிகளும் வரலாற்று ரீதியானவை. பழமையான போராட்டக் குணத்தின் தன்மை குறித்தும் ஓரளவு புரிதலை தற்கால வாசகர்களுக்கு ஏற்படுத்தவும் ‘தித்த கஹட்ட’ நூலில் முயற்சி எடுத்திருக்கின்றேன்.

**தோட்டத்தொழிலாளர்களின் அரசியல் வரலாற்றினை எவ்வாறு வகுத்துக் கொண்டீர்கள்?**

இலங்கையில் தற்போது வரையிலான மலையக தோட்டத்தொழிலாளர்களின் வரலாற்றினை மூன்று பகுதிகளாக வகுத்துக் கொள்ள முடியும். 1830லிருந்துதான் தோட்டத்தொழிலாளர்கள் இலங்கைக்கு அழைத்து வரும் செயற்பாடு ஆரம்பமானது. 1865ம் ஆண்டளவில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

1865ல் தோட்டத்தொழிலாளர்களை நிர்வகிப்பதற்கென சட்ட விதிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவரை அவர்களை நிர்வகிப்பதற்கு சட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. 1865ல் கொண்டு வரப்பட்ட சட்ட விதிமுறையானது மிகவும் கொடூரமான மனிதாபிமானமற்ற விதிமுறையாகும். உதாரணமாக அந்த சட்டத்தில் கங்காணி மற்றும் தோட்ட முக்கியஸ்தர்களுக்கு எதிராக அகம்பாவம் காட்டினால் அது தண்டனைக்குரிய குற்றம் என்று கூறப்படுகின்றது. கங்காணி ஒருவர் பெண் தோட்டத் தொழிலாளியுடன் உறவு கொள்ள விரும்பி அவரை அழைக்கும் போது அப்பெண் அதற்கு உடன்பட மறுத்தால் ‘அந்தப் பெண் எனக்கு எதிராக அகம்பாவம் காட்டினாள்’ என்று மறுநாள் முறைப்பாடு செய்ய முடியும். அந்த குற்றத்திற்கு ஒரு

வாரம் சிறைத்தண்டனை கிடைக்கும். அல்லது தண்டப்பணம் அறவிடப்படும்.

1870, 75களில் இந்த சட்டத்திற்கு எதிராக மக்கள் தனிப்பட்ட ரீதியில் எதிர்ப்பு காட்டத் தொடங்கினர். 1890களில் இந்த நிலைமை மேலும் தீவிரமடைந்தது. தோட்ட கங்காணிகள் மீது கல்லெறியப்பட்டது. அவர்கள் கொலை செய்யப்பட்டனர். தாக்கப்பட்டனர். சிலர் தோட்டங்களிலிருந்து தப்பி மீண்டும் இந்தியாவுக்கு திரும்பிச் சென்றனர். 1925ல் நடேச ஐயர் இலங்கைக்கு வந்தார். பிரெஸ்கர்டல் இலங்கைக்கு வந்தார். சமசமாஜக் கட்சி தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து மந்திரிகள் சபையில் குரல்கொடுத்திருந்தது.

**தொண்டமான் அதற்குப் பின்னரா வருகை தந்தார்?**

சௌமியமூர்த்தி தொண்டமான் 1958ல் இலங்கைக்கு வந்தார். அவர் அதிகளவு பணத்துடன் இனவெறி சிந்தனையையும் எடுத்துக் கொண்டு இங்கு வந்திருந்தார். தொண்டமான் முதன்முதலாக சமசமாஜக் கட்சியிலிருந்து பிரித்தெடுத்து தமிழ் தலைமை ஒன்றின் கீழ் தோட்டத்தொழிலாளர்களை கொண்டு வந்தார். 1958ல் ஆரம்பமான தொண்டமான் யுகம் இன்று வரை மலையக தோட்டப் பகுதியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தல் வரை தொண்டமான் தரப்பில் ஒருவரே பாராளுமன்றம் சென்றனர். மற்ற பாராளுமன்ற உறுப்பினர் தேசியப்பட்டியலில் தெரிவானார். அதனால் அவரின் பலம் குறைந்து புதிய அணி உருவாகியுள்ளது. திகாம்பரம் உட்பட மற்றும் சிறிய அமைப்பினர் மலையகத்தில்

பலம் பெற்று கொண்டிருக்கின்றனர். தோட்டப்பகுதிகளிலிருந்து சென்று கொழும்பில் பணியாற்றி வருகின்ற தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளே 1000 ரூபா போராட்டத்திற்கு தலைமை ஏற்றிருந்தனர். இது புதியதொரு போக்காகும்.

**வரலாற்று துல்லியம் அவ்வாறு உள்ள நிலையில் அதற்கான இலக்கிய அம்சம் குறித்து எவ்வாறு சிந்திக்க தலைப்பட்டீர்கள்?**

நான் ஒரு சிறந்த படைப்பாளி என்று என்னைக் கருதவில்லை. நான் எழுதிய நாவல்கள் இரண்டும் யதார்த்தவாத விதிக்குட்பட்டது. எனது அறிவுக்கு எட்டியவாறு இலக்கியம் சார்ந்து சில உபாயங்களை பயன்படுத்தியுள்ளேன். உதாரணமாக அந்த காலக்கட்டத்திற்கு பொருந்தும் வகையில் சிந்தித்துப் பார்த்து கடிதப் பரிமாற்றம் போன்ற சில உபாயங்களை

இங்கு பயன்படுத்தியிருக்கின்றேன். நவீன இலக்கிய நுட்பங்களை இந்த படைப்பில் பயன்படுத்தவில்லை. அது பற்றி எனக்கு போதியளவு புரிதலும் இல்லை. ஓர் இலக்கியப் படைப்பாக இந்நூலை அதிகப்பட்சம் உருவாக்க முயற்சித்தேன். இவ்விடயம் தொடர்பான விபரங்களை தேடிக் கொண்டு செல்லும் போது அவ்விபரங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய முழுமையான நூல் ஒன்றை எழுதினால் அது மிகப் பெரியதொரு நூலாகி விடும் என்று கருதினேன். எனவே இந்த வரலாற்றுக் கதையின் முக்கியமானதொரு பகுதியினை எனது நாவலுக்காக தெரிவு செய்துகொண்டேன். தோட்டத்தொழிலாளர்களின் போராட்டங்களின் தொடக்கத்துடன் நான் இந்த நூலை நிறைவு செய்திருக்கின்றேன். அப்படி

பார்க்கும் போது இந்த நாவல் மற்றுமொரு நாவலுக்கான முன்னுரை என்றே கூற விரும்புகின்றேன். எதிர்வரும் காலங்களில் சிங்கள அல்லது தமிழ் படைப்பாளி ஒருவர் மீதமுள்ளதனை செய்து முடிப்பார் என்று கருதுகின்றேன்.

**ஆசிரியர் குறிப்பு: இந்த உரையாடலின் ஓரிடத்தில் ‘சௌமியமூர்த்தி தொண்டமான் 1958ல் இலங்கைக்கு வந்தார்.’ என்று உரையாடப்படுகிறது. இது தகவல் பிழையானது. எனினும் மூல ஆசிரியரின் கருத்தாக அவ்வாறே அனுமதிக்கப்படுகிறது.**

# 11. சிங்கள மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் சின்த்தா லக்ஷ்மி: பிரியதர்ஷினி சிவராஜா

நவம்பர்/ டிசம்பர் 2020/பனுவல்கள்

BY பிரியதர்ஷினி சிவராஜா

ஒரு மொழியில் இருக்கும் இலக்கியப் படைப்பினை பிறிதொரு மொழிக்கு மாற்றம் செய்வது என்பது ஒரு கலையாகும். இரு மொழி அறிவு என்பதற்கு அப்பால் மூலப்பிரதியினை வாசித்து அதனை மனதுக்குள் எடுத்து மாற்றம் செய்யும் மொழியில் அதனைப் பிரதியிட்டும் செப்பனிட்டும் சரியான முறையில் தெளிவாகவும், இலகுவில் விளங்கும்

வகையில் ஆனால் மூலத்திற்கு எந்த ஆபத்தும் திரிபும் நேர்ந்துவிடாமல் அந்த செயலை செய்து முடிப்பது என்பது இலகுவானதன்று. உருது, வங்காளம், ஹிந்தி போன்ற பரீட்சயம் இல்லாத மொழிகளாகட்டும் உலகில் உள்ள எந்தவொரு மொழியாகட்டும் அதனைக் கற்றுத் தேர்ந்து அந்த மொழிகளின் இலக்கியப் படைப்புகளை மொழிப்பெயர்ப்பு செய்து தன் தாய்மொழி இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பது என்பது மிகவும் போற்றுதற்குரிய செயலாகும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது சிங்கள மொழிப்பெயர்ப்பு இலக்கியத்தில் நீங்காத இடம் பிடித்த பெண் ஆளுமையாக திகழ்ந்த சின்த்தா லக்ஷ்மி சிங்க ஆரச்சி பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு எம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டாலும், அவரது

மொழிப்பெயர்ப்புகள் இன்னும் அவரைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

சிங்கள வாசகர்களுக்காக அவர் மிகவும் அற்புதமான மொழிப்பெயர்ப்புகளை அளித்திருக்கின்றார். அவரது மொழிப்பெயர்ப்பு படைப்புகள் அனைத்தும் மனித நேயத்தின் ஆழமான வெளிப்பாடுகளாகவே இருக்கின்றன. ஆண்;- பெண்- உறவுகள், ஆக்கிரமிப்பு காதல், ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணின் கதி, மனிதர்களின் உள்ளார்ந்த காதல் என்பன அவரது மொழிப்பெயர்ப்பு தெரிவுகளில் எப்பொழுதும் முன்னணி வகித்துள்ளன. மனிதர்கள் மீது அன்பு செலுத்துவதனை விட மிகவும் பெறுமதியானது எதுவுமே உலகில் இல்லை என்பதையே இலக்கிய வாழ்வின் மூலம் அவர் கற்றுக் கொடுத்திருக்கின்றார்.

வங்காளம், உருது, ஹிந்தி ஆகிய

மொழிகளின் அதி சிறந்த இலக்கியப் படைப்புகளை மொழிப்பெயர்த்துள்ள இவர், ஷரச்சந்திர சட்டோபாத்யாய, ரவீந்திரநாத் தாகூர், கலீல் ஜிப்ரான் போன்ற படைப்பாளிகளின் படைப்புகளையும் சிங்கள இலக்கிய உலகுக்கு தனது அயராத உழைப்பின் ஊடாக வழங்கியுள்ளார்.

நவீன இந்திய படைப்பாளிகளில் சிறப்பு வாய்ந்தவர்களுள் ஒருவராகக் கருதப்படும் பிரேம் சாந்த்தின் ‘கோதானய’ என்ற நாவலையும் ஹிந்தி மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிப்பெயர்த்துள்ள சின்த்தா லக்ஷ்மியின் மொழிப்பெயர்ப்பானது சிறப்பான ஓர் மொழிப்பெயர்ப்பு படைப்பு என்று அவரின் மனம்கவர்ந்த வாசகர்கள் குறிப்பிடுகின்றனர். இவரின் மற்றுமொரு மொழிப்பெயர்ப்பான விபு+த்தி பு+ஷண பந்தோபத்யாயவின் ‘வனத்தின் மீதான

காதல்’ (அரணகட்ட பெம்பெந்தி) என்ற நாவலும் வங்காள மொழியிலிருந்து சிங்களத்திற்கு மொழிப்பெயர்க்கப்பட்டுள்ள மற்றுமொரு நாவலாகும். மிகவும் அற்புதமான அந்த நாவலில் இந்திய விவசாயிகளின் துயர்மிகு வாழ்வும், அவர்களின் வாழ்க்கைப் போராட்டமும், இயற்கையுடன் இணைந்து செல்லும் வாழ்வியல் அம்சங்களையும்ம் சிங்கள மொழியில் சின்த்தா லக்ஷ்மி எமது கண் முன் கொண்டு வருகின்றார்.

சின்த்தா லக்ஷ்மி

ஆரவாரமற்று எந்தவிதமான பிரபலத்தையும் எதிர்பாராமல் அமைதியாக ஒரு தவம் போன்று தன் பணியை நிறைவேற்றிய ஓர் இலக்கியப் படைப்பாளியாக சின்த்தா லக்ஷ்மி வாழ்ந்துள்ளார் என்று தான் சொல்ல வேண்டும். ஆனாலும்



...

அவரின் திறமையையும், அர்ப்பணிப்பு மனோபாவத்தையும், சிங்கள இலக்கியத்திற்கு அவர் ஆற்றுகின்ற பணியின் சிறப்பு குறித்தும் அவர் வாழ்ந்த போது இதர சிங்கள இலக்கியப் படைப்பாளிகள் கவனத்திற்கொள்ளவில்லை.

‘கோதானய’ நாவலின் படைப்பாளியான பிரேம் சந்த் அந்நாவலை எழுதி முடித்து முற்றுப்புள்ளி இட்ட அந்த கணத்திலேயே அவர் மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்று வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. அதே போன்று சின்த்தா லக்ஷ்மியின் இறுதி மொழிப்பெயர்ப்பு நாவலாக ‘கோதானய’ வும் அமைந்துவிட்டது வியப்புக்குரிய விடயமாகும். இந்த நாவலை அவர் மொழிப்பெயர்க்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் பிரேம் சந்த்தின் மரணம் பற்றிய தகவலை தனது கணவருடன் பகிர்ந்து

கொண்ட அவர், தனது மொழிப்பெயர்ப்புக்கு அறிமுகம் ஒன்றை எழுதும் ஆவலுடன் இருந்த போதிலும் துரதிருஷ்டவசமாக அதனை நிறைவேற்ற முன்னரேயே அவர் இயற்கை எய்தி விட்டார். அதன் அச்சுப் பிரதியையும் அவருக்கு பார்க்கும் அதிர்ஷ்டம் கிட்டியிருக்கவில்லை.

இலக்கியப் படைப்பாளிகள் உலகை விட்டு நீத்தாலும் என்றுமே எம்மத்தியில் வெவ்வேறு வடிவங்களில் வாழ்ந்து கொண்டிருப்பர். அந்த வகையில் சிங்கள மொழிப்பெயர்ப்பு இலக்கியத்தில் மிகவும் முக்கியமான ஒரு இடத்தினை வகிக்கும் சின்த்தா லக்ஷ்மி பற்றி பொதுவாக அவர் சிறந்த படைப்பாளி என்ற பெயர் இருந்தாலும், உண்மையில் ஒரு பெண்ணாக அவர் இந்த சமூகத்தின் ஒடுக்குமுறைகளுக்குள்ளாகி பல்வேறு துயரங்களை எதிர்கொண்டு

வாழ்ந்திருக்கின்றார் என்றே தெரிய வருகின்றது.

அவரின் பெயரும் அவரது படைப்புகளும் சிங்கள இலக்கிய உலகில் நிலைப்பெற்றிருந்தாலும், அதற்காக அவர் செய்த தியாகங்களும், எதிர்நோக்கிய அல்லல்களையும் சிங்கள இலக்கிய உலகின் முன்னோடி படைப்பாளிகளுள் ஒருவரான பேராசிரியர் சரத் விஜேசூரிய மிகவும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார். ‘கோதானய’ நாவல் அச்சேறுவதற்கு முன்பே உலகை விட்டுப் பிரிந்த சின்த்தா லக்ஷ்மியின் இலக்கிய வாழ்க்கையின் வேதனை மிகுந்த தருணங்களை அவருக்கு சமர்ப்பணமாக அவரது ‘கோதானய’ நாவலில் முன்னுரையாக எழுதியுள்ளார். ‘இலக்கிய உலகின் அனைத்து அநியாயங்களையும் பொறுத்துக் கொண்டு அவர் விடைப்பெற்று சென்று விட்டார்’ என்ற

தலைப்பில் பேராசிரியர் சரத் விஜேசூரிய எழுதியிருந்த அந்த முன்னுரையில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

’மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த சின்த்தா லக்ஷ்மியின் இழப்புடன் தொடர்புடைய ஒரு சில விடயங்கள் எமது கலாசார வாழ்வின் மிகவும் துயர்மிகுந்த வீழ்ச்சியை அடையாளப்படுத்தியுள்ளது என்றே எனக்கு தோன்றுகின்றது. அவர் இறந்து விட்டார் என்பதனை அவரது வாசகர்களுக்கு அறியப்படுத்தும் அளவுக்கு கூட எமது தொடர்பு+டகங்கள் அவரைப் பற்றி அறிந்திருக்கவில்லை. தலைநகருக்கு வெளியே கிராமியப் பெண்ணாக வாழ்ந்தமை மற்றும் அவரது கணவர் சாரமும் சேட்டும் அணியும் சாதாரண ஒரு நபராக இருந்தமையினால் அவரைச் சூழ பெருஞ்சுவர்கள் எதுவும். எழவில்லை.

எவ்வாறாயினும், எம் இனத்தின் அளவற்ற நன்றிகளுக்கு உரித்தாக வேண்டிய அதேவேளை, சுய அடையாளத்தினையும், ஆளுமையையும் கொண்டிருந்த ஒரு பெண்ணாக அவருக்கு மரியாதை செலுத்துவது அவசியம் என்பதனால் தாமதித்தாலும் இந்த கட்டுரையை எழுத தலைப்படுகின்றேன்.

சின்த்தா லக்ஷ்மி ஒரு கணித ஆசிரியை. அவரிடம் கணித பாடம் கற்றுக்கொண்ட மாணவ மாணவியரே பெருமளவில் அவரது இறுதிச் சடங்குக்கு வந்திருந்தனர். பிரபல பாடசாலையில் கற்பிப்பதனை புறக்கணித்துவிட்டு பின்தங்கிய கிராமம் ஒன்றில் சிறிய பாடசாலையில் அவர் ஆசிரியை பணியில் அமர்ந்தமை அனைவருக்கும் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

சின்த்தா லக்ஷ்மி வானொலி நிகழ்ச்சியில் ஒருமுறையே கலந்து கொண்டுள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலும் ஒருமுறையே கலந்துகொண்டுள்ளார். அவர் ஊடகங்களில் தனக்கென ஒரு பிம்பத்தை வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை. பல சிரமங்களுக்கு மத்தியிலும், ஒடுக்குமுறைகளுக்கும் மத்தியிலும் அவர் இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தார். ஹிந்து, உருது, வங்காளம் ஆகிய மொழிகளை அவர் தனிப்பட்ட முயற்சியினூடாகவே கற்றுக்கொண்டார். இந்தியாவுக்கு சென்று இந்த மொழிகளை செம்மையாகக் கற்றுக்கொள்ள பல முயற்சிகளை அவர் எடுத்த போதிலும் அதற்கான உதவிகளை நாடிச் சென்ற ஒவ்வொரு தருணத்திலும் அவர் ஒரு விசர்ப் பெண்ணாகவே பார்க்கப்பட்டார். இலக்கியப் படைப்பாளிகளை இந்தியாவுக்கு

அனுப்பி வைக்கும் காலாசார அமைச்சின் திட்டத்தில் அவரது மொழியாற்றலுக்கு மதிப்பளிக்கும் முகமாக அவரை உள்வாங்கி அங்கு அவரை அனுப்பி வைக்கவும் அந்த அமைச்சு என்றுமே சிந்தித்ததில்லை.

இறுதியில் அவர் தனது ஆசிரியர் தொழிலிருந்து ஓய்வுப் பெற்று அதில் கிடைத்த பணத்தில் இந்தியாவுக்கு சென்றார். அங்கு சென்று பல்கலைக்கழகங்களில் இணைந்து கொண்டு மொழிப்பெயர்ப்புக்கு தேவையான மொழி ஆற்றலை பொறுப்புடன் அர்ப்பணிப்புடன் தன் கையகப்படுத்திக் கொண்டார்.

அவரது முதலாவது மொழிப்பெயர்ப்பான விபு+த்தி பு+ஷண பந்தோபத்யாயவின் சிறப்பு வாய்ந்த வங்க நாவல் ஒன்றின் முதலாவது தொகுதியினை அச்சிலேற்ற அவர் மேற்கொண்ட முயற்சிகளின் போது

எதிர்கொண்ட சிரமங்கள் பற்றி தனி ஒரு புத்தகமே எழுதி விடலாம். அந்த நூலுக்கு அறிமுகம் எழுதி தர சிரேஷ்ட எழுத்தாளர் ஒருவர் 5 ஆயிரம் ரூபா லஞ்சம் கேட்டிருந்தார். நூலை அச்சடிக்க வெளியீட்டாளர் ஒருவரை தேடித் தருவதாகக் கூறி அவரை இரையாக்கிக் கொள்ள மற்றுமொரு சிரேஷ்ட இலக்கியவாதி ஒருவர் முயற்சி செய்தார். மிகவும் வயது முதிர்ந்த ஒரு எழுத்தாளர் ஒருவர் இந்த நாவலை வெளியிட்டு தருவதாகக் கூறி கையெழுத்துப் பிரதிகளை பொறுப்பெடுத்து விட்டு தொலைத்து விட்டார். இவ்வாறு எமது இலக்கியத்துறைக்கு உரிமைக் கொண்டாடிக் கொண்டிருந்த பலர் இவருக்கு எதிராக மிகவும் கீழ்த்தரமான இழிவு செயல்களை செய்த காலப்பகுதியாக சுமார் 10 ஆண்டுகளைக் குறிப்பிட முடியும். இலக்கிய உலகை சேர்ந்த சிரேஷ்ட நபர்கள் அவருக்கு

எதிராக கடும் விரோத மனப்பான்மையுடன் நடந்துகொண்டனர். ஆனால் அவருக்காக பேச எந்த பெண்கள் அமைப்புகளும் முன்வரவில்லை. அவர் தனது பலத்தின் மீது முழு நம்பிக்கையை வைத்து அனைத்து தடைகளையும் தயங்காமல் எதிர்கொண்டு மற்றுமொரு நூலான வீதியின் பாடலை (மாவத்தே கீத்தய) மொழிப்பெயர்த்து தேசிய நூலக ஆவணமாக்கல் சபையில் சமர்ப்பித்து அதற்கான அச்சு அனுசரணையையும் பெற்றுக்கொண்டார்.

எனினும் அவரது நூல்களை பிரசுரித்த அச்சு நிறுவனங்கள் அவரின் மொழிப்பெயர்ப்பு பணிகளை இடைநிறுத்திக் கொள்ளும் அளவுக்கு சகிக்க முடியாத வகையில் செயற்பட்டமையினால் அவர் மீண்டும் சிறிது காலம் அமைதியாக இருந்தார்.

சின்த்தா லக்ஷ்மியின் மொழிப்பெயர்ப்பு

பணியின் மைல்கல்லாக ‘அரணகட்ட பெம்பெந்த’ நாவலைக் குறிப்பிட முடியும் என நினைக்கின்றேன். அவரின் வாழ்க்கையின் முடிவானது அவர் சிறந்த ஒரு மொழிப்பெயர்ப்பாளராக உச்சம் பெற்றிருந்த காலப்பகுதியில் நிகழ்ந்துவிட்டது. ரவீந்திரநாத் தாகூரின் ‘கோரா’ நாவலை அவர் மொழிப்பெயர்ப்பு செய்ய ஆரம்பித்திருந்தார். அதில் பொதிந்திருந்த சமூக அரசியல் தற்காலத்திற்குப் பொருந்தும் வகையில் இருந்தமையே அதற்கான காரணமாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன். ‘கோரா’ மொழிப்பெயர்ப்பு பணிகளுக்கு இடையில் அவர் சுகவீனமடைந்தார். சத்திரசிகிச்சையின் பின்பு குணமடைந்து வீடு திரும்பி அந்த பணியினை நிறைவு செய்தார். ஆனால் இரண்டாவது தடவையாக பிரேம் சந்தின் ‘கோதானய’ நாவலின்

மொழிப்பெயர்ப்பினை பூர்த்தி செய்தவுடன் சுகவீனமுற்றார். அதன் அச்சுப் பிரதியை காண அவரால் முடியாமற்போய்விட்டது.

சின்த்தா லக்ஷ்மி தான் வாழ்ந்த 53 வருடங்களில் இருபது ஆண்டுகளை மொழிப்பெயர்ப்பு பணிக்கென அர்ப்பணித்துள்ளார். எனினும் அந்த இருபது ஆண்டுகளில் சுமார் பத்து ஆண்டுகளையும் இலக்கிய உலகின் அதிகாரம் பெற்றவர்கள் களவாடிக் கொண்டனர். அவர் இன்னும் பத்து ஆண்டுகள் வாழ்;ந்திருந்தால் ஆங்கிலத்தில் வாசிக்க முடியாத வங்காள- உருது- ஹிந்தி மொழிகளில் படைக்கப்பட்டிருந்த சிறந்த உரைநடை கவிதைகளையும் எமது கரங்களில் நிச்சயமாக சேர்த்திருப்பார். அவர் இதுவரை நிறைவேற்றிய பணிகளை தொடர்ந்து நிறைவேற்ற எவரும் இல்லாமை எவ்வளவு துரதிருஷ்டவசமானது? அவரது இழப்பு எமது

இனத்தின் பேரிழப்பாகும்.

இந்த சிரேஷ்ட படைப்பாளி தமக்கான பொறுப்பினையும் கடமையையும் அதிகப்பட்சம் நிi்வேற்றியிருக்கின்றார். ஆனால் அவரை நாம் மதித்த விதம் எவ்வளவு தூரம் மனிதாபிமானது? இவரது மரணத்திற்காக வெள்ளைக் கொடியை ஏற்றி அனுதாபம் தெரிவிக்கக் கூட கலாசார அமைச்சு உணர்வுபு+ர்வமாக செயற்படவில்லை. கலாசார அமைச்சு அவரை அவமானப்படுத்தும் செயற்பாடுகளை உச்சபட்சம் நிறைவேற்றியிருந்தது என்றே கூற வேண்டும். கலாசார அமைச்சு அவரது இறப்புக்கு இரங்கலை தாங்கிய தந்தியையேனும் அரசாங்க செலவில் அனுப்பவில்லை என்பதனை மிகவும் கவலையுடன் கூறவேண்டியுள்ளது. கலாசார அமைச்சின் கலைகள் சபை,

கலாசார திணைக்களம், இலக்கிய இணை சபை ஆகியன நாட்டின் கலைகளுக்கும் கலாசாரத்திற்கும் இழுக்கினை தேடித் தரக் கூடிய மிகவும் கீழ்த்தரமான மோசமான நிறுவனங்கள் என்பதனை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.' இவ்வாறு பேராசிரியர் தனது ஆதங்கத்தினைப் பதிவு செய்திருக்கின்றார்.

ஆணாதிக்கம் நிறைந்த முதலாளித்துவ உலகின் அடக்குமுறைகள், சவால்கள் மற்றும் இடர்கள் மத்தியில் குடும்பம், தொழில் என்ற இரட்டை நிலைச் சுமையை அனுபவித்துக் கொண்டு பெண்கள் தமது ஆற்றல்களையும், திறன்களையும் வெளிப்படுத்தும் போதெல்லாம் சமூக விதிமுறைகளும், சமூகக் கட்டுப்பாடுகளும் பெண்களுக்கு எதிராக கடுமையாக மேலெழுவதனைக் காணக் கூடியதாக உள்ளது. இது மிகவும்

பொதுவான விடயமாகும். அதற்கு சின்த்தா லக்ஷ்மியும் விதிவிலக்கல்ல என்பதனையும், இலக்கிய உலகமும் விதிவிலக்கல்ல என்பதனையே அவரின் வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

## 12. பாரம்பரிய இஸ்லாம்! தூய்மைவாத அரபுப் பண்பாட்டுமயமாக்கலுக்கான எதிர்க்கருத்தியல்: ஜிஃப்ரி ஹாசன்


சிறப்புக் கட்டுரை/நவம்பர்/ டிசம்பர் 2020

BY ஜிஃப்ரி ஹாஸன்

**இலங்கை முஸ்லிம்களும் அரபிகளிடமிருந்து இரவல் பெறாத தங்களுக்கென தனித்துவமான அடையாளங்கள், மரபுசார்ந்த பண்பாடுகள், வழக்காறுகள், இனத்துவ அடையாளங்கள் என பல்வேறு அம்சங்களைக் கொண்ட மக்கள் குழுமமாவர். அதேநேரம்**

**இந்த அம்சங்கள் பன்மையானதாகக் காணப்படுகின்றன. காரணம், இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு இனங்களின் கூட்டாவர். இலங்கை முஸ்லிம்கள்- சோனகர், மலாயர்கள், ஜாவாக்கள், ஆப்கனியர்கள், போராக்கள், மேமன்கள், கோஜாக்கள் மற்றும் பெங்காலியர்கள் என பல்வேறு இனக் குழுக்களின் கூட்டுத் தொகுதியாவர். அவரவர் பண்பாடுகளிலிருந்தும், மரபுகளிலிருந்தும் பெற்றுக்கொண்ட பன்மையான சுய இனத்துவ அடையாளங்களை அவர்கள் கொண்டுள்ளனர்.**

இன்றைய உலகு பல மதங்கள், பண்பாடுகள், மொழிகள், இனங்கள் என பிரிந்திருக்கும் பன்மை நிலமாகும். இன்று ஒவ்வொரு தனிமனிதனும் ஏதேனுமொரு இனத்தின், மதத்தின், சமூகத்தின், பண்பாட்டின், மொழியின், தேசத்தின்



...

உறுப்பினனாகவே இருக்கிறான். பழங்குடிகள் கூட ஒரு சமூகமாகவே இன்று வாழ்ந்து வருகின்றனர். மனித சமூகங்களின் பௌதீக வாழ்விலும், சிந்தனை முறையிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ள இந்த யுகத்திலும் இது தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் அவரவர் மதமும், பண்பாடும், மொழியும் முதன்மையானதாகவும், வழிபாட்டுக்குரியதாகவும், அவர்களின் குருதியில் கெட்டியாகக் கலந்து விட்டதாகவுமே இருக்கிறது. இந்த எல்லைகளைக் கடந்து நிற்பவர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் ஒரு குறித்த விகிதத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். அதேநேரம் இந்த பண்பாடுகள், மொழிகள், மதங்கள், நாகரீகங்கள், தேசங்கள் அனைத்தும் ஒரே நாளில் ஒரே இடத்தில் அல்லது ஒரே காலப்

பகுதியிலோ தோன்றியவை அல்ல என்பதை நாம் அறிவோம்.

ஆயினும் சில மதங்களுக்கிடையில் அவை தோன்றிய நிலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு தொடர்புகள் இருப்பதைக் காணலாம். உதாரணமாக மத்திய கிழக்கு நிலப்பகுதியில் தோன்றிய யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகியவற்றுக்கிடையில் தொடர்புகள் உள்ளன. பொதுவாக இம்மூன்று பெருமதங்களும் பல்லிறை (Multitheism) வழிபாட்டுச் சமூகங்களிலிருந்து பல்லிறைவாதத்தை எதிர்த்துத் தோன்றிய மதங்களாகும். அதனால் இந்த மும்மதங்களினதும் மய்யக் கொள்கையாக ஓரிறைவாதம் (Monotheism) விளங்குகிறது.

அரேபியத் தீபகற்பத்தில் தோன்றிய இம்மூன்று மதங்களினதும் கடவுள்கொள்கை, வேதம் கூறும் செய்திகள் போன்றவற்றில்

ஒத்த தன்மை இருப்பதையும் காணலாம். அதேபோன்று, இந்திய மண்ணில் தோன்றிய சமணம், பௌத்தம் போன்றவற்றுக்கிடையிலும் இந்த நெருக்கம் உள்ளது. அதேபோன்று ரஸ்யா, பாரசீகம், சிரியா, கிரேக்கம் மற்றும் ஐரோப்பா போன்ற பகுதிகளில் தோன்றிய மதங்கள் மற்றும் தத்துவங்களும் கூட ஒன்றுக்கொன்று ஒத்த தன்மையைக் கொண்டுள்ளன. இது ஒன்றின் மீது மற்றொன்று ஏற்படுத்தும் தாக்கம் தான். முன்னையதிலிருந்து (அல்லது சமகாலத்தில் நிலைபெறும் மற்றையதிலிருந்து) பின்னையது தாக்கம் பெறாமல் முழுமையாகத் தனித்துவமானதாக எந்த மதமும் இல்லை என்பதை வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம்.

ஒரு மண்ணில் தோன்றும் மதமோ,

தத்துவமோ முதன்மையாக அந்த மண்ணுக்குத்தான் அசலானதாக இருக்கும். ஏனெனில் அந்த மதம் அந்த சமூகத்தின் பாரம்பரியமான மொழி, பண்பாடு, மரபுகள், கலைகள், சமூக உளவியல், மானுடவியல் கூறுகள், சமூகத் தன்மைகள் போன்றவற்றையே பெருமளவில் பிரதிபலிக்கும். கடவுள் கொள்கையில் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்துவதோடு, மிகச்சிறு அளவில் வணக்கமுறைகளில் புதுமையை அறிமுகப்படுத்தும்.

ஒரு மதம் அது தோன்றிய மண்ணிலிருந்து, தேசத்திலிருந்து, கலாசாரத்திலிருந்து, நாகரீகத்திலிருந்து, சமூகத்திலிருந்து மிகத் தொலைவிலிருக்கும் வேறு சமூகங்களுக்கு, பண்பாடுகளுக்கு, இடங்களுக்கு பரவிச்செல்லும் போது அந்த அந்த சுதேச சமூகங்களுக்கு அப்புதிய மதம்

செயற்கையானதாக, அந்நியமானதாகவே (exotic) தோன்றும். காரணம், ஒரு மதம் புதிதாக ஒரு சமூகத்தில் அறிமுகமாகும் போது அந்த மக்கள் ஏற்கனவே ஒரு மதத்தின், சமூகத்தின், மொழியின், பண்பாட்டின் உறுப்பினர்களாகவே இருப்பார்கள். அவர்களில் எல்லோருமே தங்களது பழைய நம்பிக்கையை, மதத்தைத் துறந்து புதிய மதத்தை ஏற்றுக்கொண்டு அது உருவாக்கும் சமூகத்தினதோ, இனத்தினதோ, பண்பாட்டினதோ உறுப்பினராக ஆகிவிடுவதில்லை. மாறாக, தாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை, பண்பாட்டு நடைமுறைகள், வழக்காறுகள், இனத் தனித்துவங்கள், மொழிப் பாவனைகள் போன்றவற்றை அப்படியே பேணிக்கொண்டு கடவுள் கொள்கையாக புதிய மதத்தைத் தழுவிக்கொள்கின்றனர். ஆயினும் இந்த

மாற்றம் இலகுவில் நடந்து முடிவதுமல்ல.

பழைய மதத் தலைவர்களினதும், அபிமானிகளினதும் பலத்த எதிர்ப்புகள் (அதன் உச்ச எல்லையாக யுத்தம் வரை அந்த எதிர்ப்பு இருக்கும்) அனைத்தையும் தாண்டித்தான் ஒரு மதத்தால் இந்த மாற்றத்தை ஏற்படுத்த முடிந்திருக்கிறது. உலக வரலாற்றில், பெரும் மதங்களுடன் மோதி இதில் தோல்வியடைந்த பல மதங்கள் அப்படியே எச்ச சொச்சம் இல்லாமல் அழிக்கப்பட்டுமுள்ளன.

**உள்நாட்டு சமூக மரபுகளை மறு ஆக்கம் செய்யும் வெளிநாட்டு மதங்கள்**

புதிதாக ஒரு மதம் அந்த மண்ணிலிருந்தே உருவாகி வரும் போது அல்லது வேறு மண்ணலிருந்து வந்து அறிமுகமாகும் போது அம்மண்ணில் வாழும் சுதேச மக்கள் அப்புதிய

மதத்தைத் தழுவிக்கொண்டாலும், அதன் பண்பாடு மற்றும் மரபுகளையும் சேர்த்து பின்பற்றுவதில்லை. காலப்போக்கில், அது திட்டமிட்டவகையில் அந்த மக்களின் பழைய நம்பிக்கைகள், வழக்காறுகள் போன்றன முற்றாக புதிய மதத்தால் களையப்பட்டு மறு ஆக்கம் செய்யப்படும். அப்புதிய மதத்தைப் பின்பற்றும் சுதேச மக்களின் மூன்றாம் நான்காம் தலைமுறையினரை அவர்களது முன்னோரின் பழைய நம்பிக்கைகள், வழக்காறுகள், கலாச்சார எச்சங்கள் போன்றவை தம்முடையவை அல்ல, அவை அழிக்கப்பட வேண்டியவை அல்லது வழிகேடானவை என புதிய மதத்தின் தூய்மைவாதிகளால் மூளைச் சலவை செய்யப்பட்டு புதிய மதத்தின் தூய்மை வாத பக்தர்களாக மாற்றப்படுகின்றனர். இப்படித்தான் தூய்மைவாதம் உருவாகிறது.

கி.பி. 6ம் நூற்றாண்டில் மக்காவில் இஸ்லாத்தை முதன் முதலில் முகம்மது நபிகளார் முன்வைத்தது பல்லிறைவாத வழிபாட்டிலிருந்த, இஸ்லாத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட மத நம்பிக்கை கொண்ட, கலாசாரத்தைக் கொண்ட அரபிகளிடம்தான். அப்போது அந்த அரபிகளின் பிரதான மதமாக அவர்களின் மூதாதையரின் மதமான பல்லிறை வழிபாடு (multitheism) விளங்கியது. அதேநேரம் அவர்களை மிக அண்டிய பகுதிகளில் கிறிஸ்வதம், யூதம் போன்ற மதங்களும் காணப்பட்டன. முகம்மது நபிகள் அரபிகளின் பாரம்பரிய மதமான பல்லிறைவாத மதத்திலிருந்தே தோன்றினார்.

ஏற்கனவே, அரபுத் தீபகற்பத்தில் ஒரு நாகரீகத்தை, வரலாற்றைத் தோற்றுவித்த அரபிகள் அரபு மொழியையும் உருவாக்கி இருந்தனர். அரபுத் தீபகற்பத்தில் பல்வேறு

மதங்கள், நம்பிக்கைகள், பண்பாடுகள், மரபுகள் உருவாகி வந்த போதிலும் வலுவானதும், உறுதியானதுமான மொழியாக அரபும், அரபுப் பண்பாடும் விளங்கியது. இதனால் தான் அந்த மக்களும், தேசமும், அரபுக்கள் என்றும் அரேபியா எனவும் அழைக்கப்படுகிறது. எனினும் இதன் மூலம் இஸ்லாம் வருவதற்கு முன்னர் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக அந்த மக்களிடமிருந்து வந்த வழக்காறுகள், மரபுகள், மொழி கலாசாரம் போன்றன இந்த புதிய மதத்தின் வருகையினால் முற்றாக அழித்தொழிக்கப்படவில்லை. கடவுள் வழிபாட்டிலும், மத நம்பிக்கையிலும்தான் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. இஸ்லாத்தின் வருகையின் பின்னரும் அரபு மொழி மாற்றியமைக்கப்படவில்லை என்பதையும், அரபிகளின் பாரம்பரியமான ஆடை,

உணவு, கலை போன்ற பண்பாட்டுக் கூறுகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை. இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னரும் இஸ்லாத்துக்கு முன்னர் இருந்த அதே மொழியும், பண்பாடும், மரபுகளும், பாரம்பரியங்களும் தான் இஸ்லாத்துக்குப் பின்னரும் தொடர்ந்தது. இதிலிருந்து இஸ்லாத்திற்காக ஒரு சமூகம் தங்கள் மொழியை, மரபுகளை, பண்பாட்டை, பாரம்பரியங்களைக் கைவிட வேண்டிய எந்த அவசியமுமில்லை என்பது புலனாகிறது.

இலங்கையிலும் இஸ்லாம் அரபு வணிகர்கள் மூலம் பரவியது. அப்போது இலங்கை முஸ்லிம்கள் இலங்கைச் சுதேச மதத்தின், பண்பாட்டின், இனத்தின் மொழியின் உறுப்பினர்களாகவே இருந்திருப்பார்கள். இஸ்லாம் இங்கு அறிமுகமானதன் பின்னர் இலங்கைச்

சுதேசிகளாக இருந்த சிலர் இஸ்லாத்தைத் தழுவி இஸ்லாம் என்ற புதிய மதத்தின் அங்கத்தவர்களாயினர். ஆனால் அவர்களின் பூர்வீக மதம் இஸ்லாமல்ல. மொழி அரபு அல்ல. அவர்களின் பண்பாடும் மரபும் கூட அரபுப் பண்பாடோ, மரபோ அல்ல. அநேகமாக அவர்களும் பல்லிறைவாத நம்பிக்கையுடைய இலங்கைக் குடிகள்தான். இவ்வாறு புதிதாக இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட இலங்கைச் சுதேசிகள் மத்தியில் பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக மாற்றம் நிகழ்ந்து வந்திருக்கும். அது மெல்ல மெல்ல நிகழ்ந்து நான்காம் ஐந்தாம் தலைமுறையாகும் போது மற்றவர்களிடமிருந்து தங்களை வேறுபட்ட ஒரு இனக்குழுமமாக உணரத் தலைப்பட்டிருப்பர். மற்ற சமூகங்களின் புதிய தலைமுறையினரும் அவர்களை ஒரு வேறு இனக்குழுமமாகவே பார்த்திருப்பார்கள்.

ஏனெனில் அவர்களது 4ம் 5ம் தலைமுறைக்கும் இவர்களின் கடந்த கால மதமாற்ற விசயங்கள் தெரிந்திருக்காது. அவர்களும் தங்களிலிருந்து சென்றவர்கள்தான் என்ற உண்மையை அவர்களால் உணரமுடியாது. காரணம், அவர்கள் சிறுபிள்ளைகளாக சமூகத்திலிருந்து உருவாகி, சமூகமயமாகி வரும் போது முஸ்லிம்களைப் புதிய இனமாக, வேறு மதமாகத் தங்களிலிருந்து வேறுபட்டவர்களாக பார்த்தே பழகி வந்திருப்பார்கள்.

இலங்கை முஸ்லிம்கள் இலங்கை எங்கிலும் பரந்து வாழ்ந்தாலும் அவர்களின் தாய் மொழி தமிழ். வரலாற்றுரீதியாகப் பார்த்தால், மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் இனம் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சிங்களவர்கள் பௌத்தம்-கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப்

பின்தொடர்பவர்கள். ஆனால் இனம் சார்ந்து அவர்கள் சிங்களவர்கள். இங்கு அவர்களின் மொழி, சமூக உளவியல், கூட்டுறவு, கலை, கலாசாரத் தளம் ஆகியவை இனப் பண்பாட்டினாலேயே இன்றளவும் தீர்மானிக்கப்படுகின்றன. சிங்களவர்கள் பவுத்த-கிறிஸ்தவ வித்தியாசங்களின்றி தங்களை சிங்கள இனமாகவே உணர்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை சிங்களவர்களில் ஒரு சொற்ப அளவினர் இடைநடுவில் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிக்கொண்டவர்கள் அவ்வளவுதான். தமிழர்களிலும் இந்துக்கள்-கிறிஸ்தவர்கள் மத வேறுபாடு இருந்தாலும் மொழியினடிப்படையில் தமிழர்களே. அவர்களது பௌதீகத் தோற்றம், சமூக உளவியல், அறிவுத் திறம் போன்றவையும் ஒரேமாதிரியானதுதான்.

அதேபோன்றுதான் அரபிகள், பாரசீகர், ஆங்கிலேயர், ஜேர்மனியர், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர், இத்தாலியர் என்போர் இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்க மதத்தவராக இருந்தாலும் அவர்களது இனம் மொழி அடிப்படையில் அமைந்ததுதான். ஏனெனில் மதத்துக்கு முன்னரே மொழியும், இனமும் உருவாகி இருக்கிறது. அதுவே இயற்கையான அளவீடாகும். தொன்றுதொட்டு ஒரு சமூகம் என்ன அடையாளத்துடன் இருந்ததோ அதுவே அதன் உண்மையான அடையாளமாகும். அவர்கள் புதிய மதத்தைத் தழுவிக்கொண்டாலும் உடல் தோற்றம், மொழி, பண்பாடு, வழக்காறு, மரபுகள், சமூக உளவியல் என்பன அதன் உண்மையான அந்த ஆதி இனக்குழுமத்தினதுடையதைப் போன்றே இருக்கும். அவர்களது உடல் தோற்றத்திலோ, நடத்தைககளிலோ,

உளவியலிலோ எந்த மாற்றமும் நிகழாது. வேண்டுமானால் புதிய மதத்தை தழுவும் போது இனக் கலப்பு ஏதும் ஏற்பட்டிருந்தால் அவர்களின் ஆதி இனக்கூறிலிருந்து சிறிது வித்தியாசம் வெளிப்படலாம். காரணம் மதத்தால் மட்டுமே ஒரு இனம் மாறுவதில்லை. இயற்கையில் அது எந்த இனமாக இருந்ததோ அந்த இனத்தின் பண்புகளையும், உளவியலையும், உடற்கூறுகளையும் தான் அது வெளிப்படுத்தும்.

இலங்கை முஸ்லிம்களும் அரபிகளிடமிருந்து இரவல் பெறாத தங்களளுக்கென தனித்துவமான அடையாளங்கள், மரபுசார்ந்த பண்பாடுகள், வழக்காறுகள், இனத்துவ அடையாளங்கள் என பல்வேறு அம்சங்களைக் கொண்ட மக்கள் குழுமமாவர். அதேநேரம் இந்த அம்சங்கள் பன்மையானதாகக்

காணப்படுகின்றன. காரணம், இலங்கை முஸ்லிம்கள் பல்வேறு இனங்களின் கூட்டாவர். இலங்கை முஸ்லிம்கள்- சோனகர், மலாயர்கள், ஜாவாக்கள், ஆப்கனியர்கள், போராக்கள், மேமன்கள், கோஜாக்கள் மற்றும் பெங்காலியர்கள் என பல்வேறு இனக் குழுக்களின் கூட்டுத் தொகுதியாவர். அவரவர் பண்பாடுகளிலிருந்தும், மரபுகளிலிருந்தும் பெற்றுக்கொண்ட பன்மையான சுய இனத்துவ அடையாளங்களை அவர்கள் கொண்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்கள் என அறியப்படும் இந்தச் சமூகங்களின் தனித்துவங்கள், மரபுகள், பண்பாடுகள் ஏன் அரபுப்பண்பாட்டுக்குள் அரைத்துக்கரைக்கப்பட வேண்டும்? அப்படியென்றால் “அரபிகள்தான் இஸ்லாம். இஸ்லாம்தான் அரபிகளா?” அங்கிருந்து இஸ்லாம் தோன்றியது என்பதால் அதன்

ஏகபோக உரிமையாளிகள் அவர்களே என்றாகிவிட்டதா? இஸ்லாம் இறைவனின் மதமா? அரபிகளின் மதமா?

**காலனித்துவப் பாணியில் அரபுப் பண்பாட்டுமயமாக்கம்**

மேற்கு, காலனித்துவத்தின் மூலம் கீழைத்தேய சமூக அமைப்பை மேற்கு மாதிரியில் மாற்றியமைத்ததை நாம் அறிவோம். அது கீழைத்தேய நாடுகளை ஆக்கிரமித்து கிறிஸ்தவ மதம், ஐரோப்பிய அரசியல் முறை, கலாசார முறை (ஆடை, உணவு), கல்வி முறை போன்றவற்றை மூன்றாம் உலகின் மீது பலாத்காரமாகத் திணித்தது. அதனையே நாம் காலனித்துவம் என்கிறோம். இப்போது மேற்கு நாடுகள் மறைமுகமாக தங்களது அரசியல் பொருளாதார பலத்தைப் பயன்படுத்தி மறைமுகமாக கீழை மற்றும் வளர்முக

நாடுகள் மீது செல்வாக்கைச் செலுத்தி மேலும் தங்களது கொள்கைகளைத் திணித்து வருகிறது. மேற்கு வடிவமைத்த கல்வித் திட்டம் அரசியல் முறை, பொருளாதார முறை போன்றவற்றையே எல்லா நாடுகளையும் பின்பற்ற வைப்பதன் மூலம் ஓர் உலகு தழுவிய முறைமை ஒன்று நிறுவப்பட முயற்சிக்கப்படுகிறது. அதற்கான கடனுதவிகள் சலுகைகள், போன்றவை வழங்கப்படுகின்றன. அல்லது எதிர் நடவடிக்கையாக பொருளாதாரத் தடைகள் போன்ற செயற்பாடுகள் மூலம் வளர்முகநாடுகள் ஒருவழிக்குக் கொண்டு வரப்படுகின்றன.

இதே பாணியில் இன்று உலகெங்கிலுமுள்ள அரபுக்கள் மற்றும் அரபு அல்லாத முஸ்லிம் என அனைவரும் அரபு மய்ய தூய்மைவாத இஸ்லாமியர்களாகவே

மாற வேண்டும் என்று சவுதியைத் தளமாகக் கொண்ட அரபு மய்ய தௌஹீத் இயக்கங்கள் விரும்புகின்றன. தன்னிடமுள்ள பணபலத்தைப் பயன்படுத்தி தௌஹீத் இயக்கங்கள் மூலம் இச்செயல்பாட்டை மிகத்தீவிரமாக சவுதி முன்னெடுத்து வருகிறது. ஒருவகையில் பார்த்தால், இது அப்பட்டமான தூய்மைவாத அரபு மதக் காலனித்துவமாகும். இச்செயல்பாடு மூலம், அரபு மரபுகள், பண்பாடுகள், நம்பிக்கை, சிந்தனை முறை மற்றும் வாழ்வியல் முறை என்பவற்றை இலங்கையின் பாரம்பரிய முஸ்லிம்கள் மத்தியிலும் ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது.

உள்ளூர் முஸ்லிம் பண்பாடுகளை, மரபுகளை, வழக்காறுகளை மதச்சாயம் பூசி அவற்றை “வழிகேடு” என்ற வார்த்தைப் பிரயோகங்கள்

மூலம் இல்லாதொழிப்பதற்கான திட்டங்கள் மிக வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதற்காக குர்ஆன், ஹதீஸ்களுக்கு ஒருதலைப்பட்சமான விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. உனது மரபை சொந்தப் பண்பாட்டை விட்டு நீ வெளியேறு. அரபுப் பண்பாட்டையும், வாழ்க்கை முறையையுமே நீ பின்பற்ற வேண்டும். உனக்கென்று ஒரு சுயமான வாழ்க்கை முறை, வழக்காறு, சிந்தனை முறை, பண்பாடு, கலைமரபு என எதுவும் இருக்கத் தேவையில்லை. தூய அரபிகள் போன்று உன் ஆடைகளை, உன் உணவுப் பழக்கத்தை, ஒட்டுமொத்த வாழ்க்கையையும் மாற்றிக்கொள் என்று அறிவிப்பதாகத்தான் இலங்கையில் செயற்படும் அரபுமய்ய இஸ்லாமிய மதக் காலனித்துவ இயக்கங்களின் செயற்பாடுகள்

அமைந்திருக்கின்றன.

இந்த மதக் காலனித்துவ செயல்பாடானது இலங்கை போன்ற நாடுகளில் உள்ளூர் முஸ்லிம்களுக்கு பாரிய நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. இஸ்லாமியத் தூய்மைவாத இயக்கங்களின் வருகைக்கு முன்னர் வேறு நாகரீகங்களின், பண்பாடுகளின் தேசங்களின் மக்கள் இஸ்லாத்தை தழுவிக்கொண்ட போது அதனை ஒரு மதமாக மட்டுமே தழுவிக்கொண்டார்கள். தங்களுக்கு எந்த விதத்திலும் பொருந்தாத அரபுத்தேச மரபுகளை, பண்பாட்டை, வழக்காறுகளை எல்லாம் இஸ்லாமாக வரித்துக்கொண்டு பின்பற்றவில்லை. அவர்கள் என்றென்றும் தங்களது பண்பாட்டு மரபுகளிலேயே அப்படியே தொடர்ந்திருந்தனர். உண்மையில், இஸ்லாம் வேறு அரேபியப் பண்பாடு வேறு என்பதை அவர்கள் நன்கு

புரிந்துகொண்டனர். அரபுப் பண்பாடு, அரபிகளின் வழக்காறுகள், மரபுகள் கலைகள் எல்லாம் சேர்ந்துதான் இஸ்லாம் என்ற தவறான புரிதல் அவர்களிடம் இருக்கவில்லை.

ஈரான், சிரியா, மலேசியா, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளில் இந்நிலைமயை சிறப்பாகக் காண முடியும். அவர்கள் தங்கள் மொழியை, நாகரீகத்தை, மரபுகளை, கலைகளை அழித்துவிட்டு அரபுப் பண்பாட்டையும் மரபுகளையும் கண்மூடித்தனமாக தழுவிக்கொள்ளவில்லை. இஸ்லாத்தை மதமாக, தங்களின் கடவுள் கொள்கையாக, வழிபாட்டுமுறையாக ஏற்றுக்கொண்டுள்ளனர். அதாவது அந்த மாற்றம் பல்லிறைவாதத்திலிருந்து ஓரிறைக் கொள்கையை நோக்கிய புலப்பெயர்வாக இடம்பெற்றுள்ளது.

அதேபோல், ஆபிரிக்க சமூகங்களிலும் இஸ்லாம் பரவிய போது பெரும்பாலான சமூகங்கள் இஸ்லாத்தை மதநெறியாக தழுவிக் கொண்டனவே ஒழிய அரபுகளின் பண்பாட்டையும் சேர்த்து தங்களது நூற்றாண்டுகால மரபுகளை, பண்பாடுகளை அப்படியே கைவிட்டு விட்டு கண்மூடித்தனமாகப் பின்பற்றவில்லை. ஆன்மீகம்தான் ஒரு மதத்தின் ஆன்மாவாகும். அதுவே பின்பற்றப்படவேண்டியது. மாறாக அதற்கு வெளியேயான அந்த மதம் தோன்றிய சமூகத்தின் மொழியையும், ஆடைகளையும், சாப்பாட்டையும் சேர்த்தே பின்பற்ற வேண்டும் என வாதிப்பது அடிமுட்டாள்த்தனமானது.

பண்பாடு என்பது ஒரு சமூகம் நூற்றாண்டு காலமாக தாம் உருவாக்கிப் பேணி வரும் ஒரு சமூகவிசையாகும். மதத்துக்காக தன் சொந்தப் பண்பாட்டை ஏன் கைவிட வேண்டும்?

எல்லா சமூகங்களிலும் மதம் பண்பாட்டின் ஒரு கூறாகவே இருந்து வருகிறது. மதத்தின் ஒரு கூறாக பண்பாடு இருப்பதில்லை.

உண்மையில், அரபு நாடுகளுக்கு வெளியில் வாழும் சுதேச சமூகங்கள் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்ட போது அந்ததந்த சமூகங்களின் மத நம்பிக்கையிலும், வழிபாட்டு முறையிலும் தான் மாற்றம் ஏற்பட்டதே ஒழிய அதைவிடுத்து மதம் சாராத பண்பாட்டு பகுதியில் மாற்றம் நிகழவில்லை. ஆனால் இலங்கை போன்ற தமிழ் இஸ்லாமியச் சூழலில் தூய்மைவாத இஸ்லாமிய இயக்கங்கள் அரபுப் பண்பாட்டையும், மரபுகளையும் கூட இஸ்லாமாக முன்நிறுத்துகிறது. இலங்கை முஸ்லிம்களின் சுய மரபுகள், பாரம்பரியங்கள், வழக்காறுகளை முற்றாக அழித்தொழித்து இலங்கைக்கு எந்த

விதத்திலும் பொருந்தாத அரபு மைய இஸ்லாத்தை திணிக்க முற்படுகின்றன. இலங்கையின் சமூக, அரசியல், பண்பாட்டுச் சூழலுக்கு இந்தத் தூய்மைவாத இஸ்லாம் எந்த விதத்திலும் உகந்ததல்ல என்பதை இலங்கையின் அண்மைக்கால அரசியல் போக்குகளும், சிறுபான்மை இஸ்லாமியர்கள் எதிர்கொள்ளும் பாரிய நெருக்கடிகளும் இதற்கு தக்க சான்றாகவுள்ளன.

இஸ்லாத்தின் பல சட்டதிட்டங்கள் தூய்மைவாதக் கருத்துகள் என்பன இஸ்லாம் ஒரு ஆதிக்க சக்தியாக உருவான பின்பு கொண்டு வரப்பட்டவை. முஸ்லிம் பெரும்பான்மை, இராணுவப் பலம், யுத்த வெற்றிகள், மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய வல்லமை உருவான பின்புதான் தூய்மைவாதக் கருத்தியல் பேசப்பட்டது. காரணம், அப்போது

முஸ்லிம்கள்தான் பெரும்பான்மை. உலகின் ஆதிக்கத்தரப்பு. ஆட்சியினர். எனவே மற்றவர்கள் அவர்களுக்குக் கீழ் இருப்பதால் அங்கு முஸ்லிம்கள் தனிமைப்படப் போவதில்லை. முஸ்லிம் அல்லாதவர்கள் தான் முஸ்லிம்களோடு ஒத்துழைத்துப் போகாவிட்டால் தனிமைப்படல் மற்றும் வேறு விதமான பாதிப்புகளுக்கும் உள்ளாக வேண்டி ஏற்படும். இதனால் வேறு வழியின்றி அவர்கள் இஸ்லாத்துக்கு வரவேண்டி இருக்கும். இந்த சூழல் இப்போது உலகத்திலும் இல்லை. இலங்கையிலுமில்லை.

ஆனால் தூய்மைவாத இஸ்லாமிய இயக்கங்கள் இன்னும் அதேநிலையில்தான் தாங்கள் இருப்பதான கற்பனையில் மிதப்பது போலவுள்ளன அவர்களது எதிர்பார்ப்புகளும், செயல்பாடுகளும்.

## பாரம்பரிய இஸ்லாம் என்றால் என்ன?

தொன்று தொட்டுப் பாரம்பரியமாக இருந்து வரும் தங்களது மரபுகள், பண்பாடுகள், கலைகள், வழக்காறுகளைத் துறக்காது அவற்றோடு இணைந்த வகையில் இஸ்லாத்தை தங்களின் மதமாக ஏற்றுக்கொண்டு வாழ்வதே பாரம்பரிய இஸ்லாம் என்பதன் மூலம் நான் கருதுகிறேன். இஸ்லாத்தை மதமாக ஏற்றுக்கொண்டு இலங்கை முஸ்லிம்கள் தங்களது சொந்த மரபுகளை, வழக்காறுகளை பேணி பிற சமூகங்களோடு நல்லிணக்கமாக வாழ்ந்து வரும் பாரம்பரியத்திலிருந்தே இந்த சிந்தனை வடிவங் கொள்கிறது.

இலங்கை முஸ்லிம்களின் சிந்தனாபூர்வமான, ஜனநாயகபூர்வமான இந்த அமைதியான வாழ்க்கை முறைக்கு மிகப்பெரும் சவால் இந்த அரபு மய்ய தூய்மைவாத இஸ்லாம்தான்.

ஒரு சமூகம் என்றால் அதற்கு வேர்கள், வரலாறு, பண்பாடு, அடையாளங்கள், மரபுகள் போன்றன இருக்க வேண்டும். அதுவும் ஒரு சமூகம் அந்நாட்டின் சிறுபான்மையாக இருக்குமாயின் இவை மிக மிக அத்தியவசியமானதாகும். அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது அந்த சமூகத்தின் மிக முக்கிய கடமையுமாகும். இலங்கை முஸ்லிம்களின் வேர் இந்த மண்ணில் உள்ளது என்றவகையில் அவர்களின் மரபும், பண்பாடும், வாழ்க்கை முறையும் இந்த மண்ணுக்குரியதாகவே இருக்க வேண்டும். மாறாக முஸ்லிம்கள் தங்களது வேர்களை சவுதியிலோ, ஈரானிலோ, எகிப்திலோ, பாக்கிஸ்தானிலோ தேடுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

இஸ்லாமிய இயக்கங்கள் முஸ்லிம்களின் பாரம்பரிய பண்பாட்டு அடையாளங்களை,

மரபுகளை அழித்துவிட்டு வேறுநாடுகளின் மாதிரிகளைப் பின்பற்ற முற்படும் போது இங்கு வேறு பிரச்சினைகளுக்கு முஸ்லிம் மக்கள் முகங்கொடுக்க வேண்டிய நிலை உருவாகிறது. பொதுபலசேன போன்ற பவுத்த அடிப்படைவாத அமைப்புகள் முஸ்லிம்களின் நாடாக சவுதியைக் கருதுவது தூய்மைவாத இஸ்லாமிய இயக்கங்கள் முஸ்லிம்களின் வேரை இலங்கையில் தேடாது சவுதியில் தேடுவதால்தான்.

உண்மையில், இஸ்லாம் வேறு அரேபியப் பண்பாடு வேறு என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அரபுப் பண்பாடு, அரபிகளின் வழக்காறுகள், மரபுகள் கலைகள் எல்லாம் சேர்ந்துதான் இஸ்லாம் என்பது தவறான புரிதலாகும்.

**இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகள்**

இலங்கை முஸ்லிம்கள் பாரம்பரிய பண்பாட்டு நடைமுறைகளோடு நெடுங்காலமாகவே இணைந்திருக்கின்றனர். இத்தகைய சில பண்பாட்டு நடைமுறைகளாக கத்தம், பராஅத் ரொட்டி பகிர்தல், ஒடுக்கத்துப் புதன், மீலாத் நபி விழா, நோன்பு கால ஸலவாத், மௌலூது, புகாரி ஓததலும் நார்சாவும், பிற மத சடங்குகளை மதித்தல் என இந்தப் பண்பாட்டுப்பட்டியல் நீளமானது. இப்படியான பாரம்பரிய மரபுகளை அழித்துவிடுவதன் மூலம் அரபு மய்ய இலாமிய இயக்கங்கள் உருவாக்க விரும்புவது எந்தவித கலாசார மரபுகளுமற்ற, வேர்களற்ற ஓர் வரண்ட, மேலோட்டமான சமூகத்தையே. மத அனுஷ்டானங்களை மட்டும் கொண்ட மக்கள் குழுமம் வெறும் பக்தர்கள் மட்டுமே. அவர்கள் சமூகமாக ஆக முடியாது என்பதை இத்தகைய இஸ்லாமிய இயக்கங்கள் புரிந்து கொள்ள

வேண்டும்.

முஸ்லிம்களின் இந்தக் கலாச்சார செயற்பாடுகள் கூட வேறு கலாசாரங்களிலிருந்து வந்திருந்தாலும் கூட அது அவர்களின் கெட்டியான கலாசார அடையாளங்களாக நூற்றாண்டுகளாகவே இங்கு நிலைபெற்றுவிட்டன. எனவே, அவை இன்று சுதேச முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்களாக நிறுவப்பட்டுள்ளன.

தூய்மைவாத தௌஹீத் இயக்கங்கள் இந்த கலாசார மரபுகள் முஸ்லிம்களின் ஈமானைச் (இஸ்லாத்தின் அடிப்படையான மதநம்பிக்கை) பலவீனப்படுத்துவதாக கூறுகின்றனர். இது கலாசாரத்தையும், மதத்தையும் அவர்கள் ஒன்றாக குழப்பிக்கொண்டதன் விளைவுதான். ஒரு சமூகத்தில் மதம் மட்டுமே அதன் ஒட்டுமொத்தப் பண்பாட்டையும்

தீர்மானிப்பதில்லை. ஒரு சமூகத்தின் மரபுகளும், பண்பாடும் மதத்தால் கட்டமைக்கப்பட்டவை அல்ல. இன்று அரபிகளிடம் காணப்படும் ஆடை, உணவு கலாசார முறைகள் இஸ்லாம் அறிமுகப்படுத்தியது அல்ல. இஸ்லாத்துக்கு முன்பிருந்தே அரபிகளின் மரபாக அவை இருந்து வருகின்றன. அத்தகைய அரபிகளின் மரபுகளையே இலங்கை முஸ்லிம்களும் ஏன் தழுவிக்கொள்ள வேண்டும்?

முஸ்லிம்கள் பின்பற்றி வரும் பாரம்பரிய மரபுகள் எதற்காக அழிக்கப்பட வேண்டும்? இந்த மரபுகளைப் பொறுத்தவரை நேரடியான தடைகள் இஸ்லாத்தின் அடிப்படைப் பிரதிகளான குர்ஆனில், ஹதீஸில் இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும். (ஆனால் சில ஹதீஸ்களையும் நம்ப முடியாது. பொய்). குறித்த ஒரு மரபு நேரடியாக இவற்றில்

பெயர் குறித்து தடைசெய்யப்படாவிட்டால் அடுத்ததாக இஸ்லாத்தின் அடிப்படைகளை அது பாதிக்கிறதா எனப் பார்க்க வேண்டும். அப்படியும் இல்லை என்றால் அதைச் செய்வதால் மனிதகுலத்துக்கோ, வேறு எவற்றுக்குமோ தீங்கு ஏற்படுகிறதா எனப் பார்க்க வேண்டும். அப்படியும் இல்லை என்றால் அந்த மரபை நாம் பின்பற்ற முடியும். அதனைப் பேணிக்கொள்வதன் மூலம் கலாசார சமூகமாக இருக்க முடியும். வேர்கள், வரலாறு, மரபுகளற்ற வரண்ட சமூகமாக குறுகி ஓர் சாதாரண அரசியல் அலையிலேயே அள்ளுண்டு போக வேண்டிய அவல நிலைக்கு ஆளாக வேண்டி ஏற்படாது.

அத்தோடு இந்த கலாசார மரபுகளில் ஆன்மீக நன்மையும் பொதிந்துள்ளது. உதாரணமாக, இலங்கை முஸ்லிம்கள் தங்களின் உறவினர்கள் யாராவது

இறந்துவிட்டால் அவர்களுக்காக அல்குர்ஆனிலிருந்து சில அத்தியாயங்களை ஓதி, சிலருக்கு உணவளிப்பார்கள். அதனைக் கத்தம் என அழைப்பார்கள்.

கத்தம் ஓதுதல் இலங்கை முஸ்லிம்களின் ஒரு கலாசார மரபாக தொன்று தொட்டு இருந்து வருகிறது. தூய்மைவாத அரபு மய்ய இஸ்லாமிஸ்ட்டுகள் இதனை அங்கீகரிப்பதில்லை. இதனை மதக் கடமையாக, மத அனுஷ்டானங்களில் ஒன்றாகக் கருதி, இது இஸ்லாத்தில் இருக்கிறதா? இல்லையா? என்ற வாதங்கள் மேற்கிளம்புகின்றன. மதத்தோடு இதனை இணைக்காமல் மதத்துக்கு வெளியேயான ஒரு கலாசார வடிவமாக அதனைப் பார்த்தால் பிரச்சினை இல்லை. ஆனால் மதத்தோடு இணைத்துப் பார்த்தாலும் அதைத் தடுத்தேயாக

வேண்டும் என்பதற்கான நியாயங்கள் எதுவும் தென்படவுமில்லை. அரபிகளிடம் இல்லாத பண்பாட்டம்சங்கள் எங்களிடமும் இருக்கக்கூடாது என்ற வாதத்தின் அடிப்படையில்தான் தௌஹீத் இயக்கங்கள் இந்த எதிர்ப்பை வெளியிடுகின்றன.

வேண்டுமானால் சீர்திருத்தங்கள் செய்ய முடியும். கத்தம் எனும் இப்பண்பாட்டை மதஅனுஷ்டானமாகவன்றி கலாசார மரபாக பார்த்தால் இதற்கு மேல் அதற்கு எந்த பதிலும் தேவையில்லை.

முதலில் கத்தம் ஓதும் மரபை குர்ஆனிலோ ஹதீஸிலோ அதன் பெயர் குறிப்பிட்டு தடுக்கப்பட்டிருக்கிறதா எனப்பார்த்தால் அப்படி இல்லை. அடுத்ததாக இஸ்லாத்தின் அடிப்படைகளோடு அது முரண்படுகிறதா எனப் பார்த்தால் அப்படியும் இல்லை. அடுத்ததாக மனித குலத்துக்கோ, சூழலுக்கோ அது தீங்கு

ஏற்படுத்துகிறதா எனப் பார்த்தால் அப்படியும் இல்லை. இதனால் அந்த மரபை அழிக்காமல் அதனைப் பேணுவதற்கு மதரீதியான தடையோ, விஞ்ஞானரீதியான தடையோ இல்லை என்பது புலனாகிறது.

இதுபோன்று பல்வேறு கலாசார மரபுகளைக் கொண்ட பாரம்பரிய சமூகமாகவும், பிற கலாசாரங்களோடு சிறந்த முறையில் இடைவினையைப் பேணி வாழ்ந்து வந்திருக்கின்றனர். அந்தப் பாரம்பரியம் இன்று தூய்மைவாத இஸ்லாமிஸ்ட்டுகளால் முற்றாக சிதைக்கப்பட்டுவிட்டன. பிற மதங்கள், கலாசாரங்கள், சடங்குகள் குறித்து ஒரு சகிப்புணர்வற்ற வரட்சியான சமூகமாக அவர்கள் உருமாற்றப்பட்டுள்ளனர். முஸ்லிம் சமூகத்துக்குள்ளும் இருந்த கலாசார மற்றும் ஆன்மீக சூழல் அரபுப் பண்பாட்டையும், தூய்மைவாதத்தையும்

முன்னிருத்தி முற்றாகவே சிதைக்கபட்டுள்ளது. நோன்பு காலங்களில் மாலை வேளையில் சிறுவர்கள் பள்ளிவாசல்களில் சொல்லும் இனிய சலாவாத்துகள் அரபுப் பண்பாட்டில் இல்லை என்பதனால் அது தூய்மைவாத இஸ்லாத்துக்கு எதிரானதாக கற்பிக்கபட்டு அந்த இனிய, இரம்மியமான சூழல் சமூகத்திலிருந்து முற்றாகத் துடைத்தழிக்கபட்டிருக்கிறது. இப்படி இலங்கை முஸ்லிம்கள் தூய்மைவாத இஸ்லாமிய இயக்கங்களின் மறுபரிசீலனையற்ற செயற்பாடுகளால் இழந்தவை அதிகமாகிக் கொண்டு செல்கின்றன. கடைசியில், அவர்கள் இலங்கையின் தேசிய அரசியலிலும், சமூக மட்டங்களிலும் கொண்டிருந்த கவுரவம், அந்தஸ்து, நன்மதிப்பு என்பவற்றையும் இழந்து நிற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

# கணியம் அறக்கட்டளை

## தொலை நோக்கு – Vision

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

## பணி இலக்கு – Mission

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

**எமது பணிகள்**

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

IFSC – UBIN0560618

Account Type : Current Account